தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஐப்பசி 17, சுக்ல — திருவள்ளுவர் ஆண்டு 2020.

1989, நவம்பர் 2, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணி யளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை.''

இயற்கையான அறிவுக் கூர்மையுடன் சிறந்த நூற்பயிற்சியும் உடையவர்க்கு முன்னால் நிற்கக்கூடிய அதிநுட்பமான சூழ்ச்சிகள் எவை உள்ளன?

1. வினாக்கள் — விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் தொடர்பாக ஓர் அறிவிப்பு. இன்று குறுகிய கால வினா ஒன்றும், உடுக் குறியிட்ட வினாக்கள் 20-ம் ஆக 21 வினாக்கள் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன. அவை போக 7 அவசரச் சட்டங்கள் இருக்கின்றன என்பதை நினைவில் கொண்டு, துணை வினாக்கள் இயன்றவரைக்கும் தொடர்புடைய வினாக்களாக மட்டும் கேட்க வேண்டும். வினாக்கள் கேட்கிற போது நன்றியறி வித்தல், பாராட்டுத் தெரிவித்தல் போன்றவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப்பணியில் சேரும் வயது வரம்பை உயர்த்துதல்

*609 **திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

அரசுப் பணியில் சேரும் வயது வரம்பை உயர்த்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர் களே, அரசுப் பணியில் சேரும் வயது வரம்பினை 28லிருந்து 30 ஆக உயர்த்தி, 27—2—1989 ஆம் நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (பணி—எஸ்) துறை, அரசாணை எண் 112-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை கிடைக்காத பட்டதாரிகள் பல லட்சக் கணக்கான பேர் தமிழகத்தில் இருந்தபோதிலும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு தேடித்தரும் அலுவலகத்தில் வாய்ப்பு இல்லாத காரணத்தால், வயது அதிகமாகிக் கொண்டே போகிறது. ஆகவே பணியில் சேரும் வயதை இன்னும் ஒரு ஐந்தாண்டுக் காலம் தளர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவரவர்களே, இப்போதே, மினிமம் ஜெனரல் எஜுகேஷனல குவாலிபிகேஷன், அதற்கு அதிகமான தகுதியைப் பெற்றுள்ள பிற்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், மற்றும் ஆதரவற்ற விதவைகள் இவர்களுக்கு லிமிட் இல்லா மலேயே, அந்த வயது வரம்பு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு லிமிட் கிடையாது. அது போலவே பொதுக் கல்வித் தகுதிக்கு மேற்படாத தகுதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பதவிகளுக்கு அந்தத் தகுதியை மட்டும் பெற்றுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உச்ச வயது வரம்பு மேலும் 5 வருஷங்களுக்கு ஏற்கெனவே அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வீஸ் கமிஷனின் குரூப் 1 சர்வீஸ் பதவிகளான டெபுடி கலெக்டர்கள், டி.எஸ்.பி.க்கள் போன்ற பதவிகளுக்குப் பரீட்சை எழுதுவதற்கு 1975 ஆம் ஆண்டு வரை வயது வரம்பு கிடையாது. 1975 ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் இந்த ஏஜ் லிமிட் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, 1975 ஆம் ஆண்டு வரை இருந்த அதே சூழ்நிலையை மீண்டும் சர்வீஸ் கமிஷன் தேர்வில் எல்லா குரூப் சர்வீஸ்களுக்குமான பரீட்சை எழுதும் அனைவருக்கும் உருவாக்கி, அந்த வாய்ப்பைத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதைப்பற்றி உடனடியாக நான் பதில் சொல்வதற்கில்லை. அது பற்றிப் பரிசீலித்துத்தான் ஆவன செய்ய முடியும்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணிகளில் சேர, தாழ்த்தப்பட்டவர்களுக்கு வயது வரம்பிலிருந்து விதிவிலக்கு தரப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அளித்த விடையில் விளக்கம் இருக்கிறது.

1989 நவம்பர் 2]

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசுப் பணியில் சேர 30 வயது என்பது வரம்பாக இருக்கிறது. ஆகவே, ஓர் அலுவலகத்தில் இன்டர்வியூவுக்காக பேனல் கேட்கிறபோது, 30 வயது முடிகிற அந்தத் தருணத்தில் இருக்கிறவர்கள்—6 மாத காலத்திற்குள்ளாக இருப்பவர்கள் அனைவரையும்—எந்த வரம்பும் இல்லாமல் அந்த இன்டர்வியூவுக்கு அனுப்புகிற அளவுக்காவது அரசு ஆணையிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 25 வயதுதான் வயது வரம்பாக இருந்தது. 1972 ஆம் ஆண்டில் 25-லிருந்து அது 26 ஆக உயர்த்தப்பட்டது. பிறகு 1979 ஆம் ஆண்டில் 26-லிருந்து 28 ஆக உயர்த்தப்பட்டது. இப்போது 28 லிருந்து 30 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதிலும் சில விதிவிலக்குகள் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்குத்தான் அளிக்கப்படுகிறது.

9.05 மணி

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாட்டிற்காகத் தியாகம் செய்து பாடுபட்டவர்கள், மொழிப் போரில் கலந்து கொண்டவர்கள், சுதந்திரப்போராட்டத்திலே கலந்துகொண்டவர்கள், அதேபோல எல்லைப் போராட்டத்திலே கலந்துகொண்டவர்கள் அப்படிப்பட்ட நாட்டிற்காகப் போராடிய தியாகிகளுடைய குழந்தைகளுக்கு அரசுப் பணிகளிலே சேருவதற்கு வயது வரம்பை உயர்த்துகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் ஏற்கெனவே சொன்ன இந்த விதிவிலக்குகளைத் தவிர வேறு விதிவிலக்கு ஏதும் இப்போது இல்லை. வேண்டுமானால் அதைப் பற்றிப் பிறகு பரிசீலிக்கலாம்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 28 வயதிலிருந்து 30 ஆக உயர்த்தி இருக்கின்ற நேரத்தில், பல ஆண்டுக் காலமாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தொடர்ந்து பதிவு செய்துகொண்டு இருப்பவர்களுடைய வயது 30 வயதைத் தாண்டிவிடுகிற சூழ்நிலை இருப்பதால் அவர்களுக்கு முன்னுரிமை, 'கிரேஸ் டைம்' வழங்குகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களுக்கும் சேர்த்துத்தான் இந்த வயது வரம்பு.

திரு. கே. சுந்தர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடத்துனர், ஓட்டுனர், பணிகளுக்கான வயது வரம்பு என்ன? அதிலேயும் கூட போக்குவரத்துக் கழகங்களிடையே மாறுபாடு இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அது உண்மையா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைப் பற்றிய விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்தி இருப்பதுபோல கிறித்தவ தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இந்த வயது வரம்பு தளர்த்தப்படுமா, தளர்த்தப்பட்டு இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, கிறித்துவ தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஏற்கெனவே பிற்படுத்தப் பட்ட வகுப்பினரில் வருகிறார்கள். எனவே பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கு உள்ள சலுகை அவர்களுக்கும் கிடைக்கும்.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே, வயது வரம்பை உயர்த்தி நிச்சயித்து இருப்பதே வேலை கிடைக் காமல் பாதிக்கப்பட்டு இருக்கின்ற இளைஞர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான். எனவே வயது வரம்பினுடைய விளிம்பில் இருக்கக்கூடியவர்கள் தேர்வு செய்யப்படுகின்ற வாய்ப்பினை இழக்கின்றபோது அவர்களுடைய வாழ்க்கையே முடிகின்ற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கின் றது. எனவே அப்படி வயது வரம்பை முடிக்கின்ற நிலையில் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்குவ தற்கு அரசு ஏதாவது செய்ய முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களே அந்தக் கேள்வியில் இளைஞர்களுக்கு என்று குறிப்பிட்டார். இளமைப் பருவம் கடந்த பிறகும் அவர்களுக்கு இந்த வாய்ப்புகளை அளிப்பது என்பது இயலாத காரியம். இருப்பினும் இதற்குமுன்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் கேட்ட கேள்வியும் நண்பர் அவர்கள் கேட்கின்ற கேள்வியும் ஒரே விதமான கேள்வி என்றாலும் கூட ஒரு 3 மாத காலம், 6 மாத காலம் அதிலே ஒரு இடிக்கின்ற தன்மை இருக்குமானால் அவற்றைப் பரிசீலிப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, அரசுப் பணியில் எல்லோராலும் சேர முடியவில்லை. There shall be equality of opportunity in matters of public employment என்று அரசியல் சட்டப் பிரிவு 16 எல்லோருக்கும் உத்திரவாதம் வழங்கி இருக்கிறது. 20 இலட்சம் பேர் இன்றைக்கு வேலை இல்லாமல் இருந்தாலும் கூட எல்லோராலும் அரசுப் பணிகளில் சேர முடியவில்லை. Right to work என்ற அளவில் அந்த உத்திரவாதத்தை மேலும் அரசியல் சட்டத்தில் புகுத்தி எல்லோருக்கும் சமமாக ஒரு வீட்டிற்கு ஒருவரையாவது அரசாங்கப் பணியில் அமர்த்தக்கூடிய அளவுக்கு அரசியல் சட்ட

உத்திரவாதத்தை வழங்குவதற்கு நம்முடைய தமிழக அரசு மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யுமா என்பதையும், இதை நாமே நேரடியாக மத்திய அரசாங்கத்தில் கேட்பதனால் தவறு கிடையாது. காரணம் ஐக்கிய நாட்டுப் பொதுச்சபையில் இந்திய அரசாங்கம் அங்கே உடன்படிக்கையில் கையெழுத்திட்டு இருக்கிறது. Right to work and right to free choice of employment கொடுப்போம் என்று கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். அது ஐக்கிய நாட்டுப் பொதுச் சபையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி தமிழக அரசு தமிழ் நாட்டிலுள்ள எல்லோரும் பொது நிறுவனங்களில், அரசாங்கப் பணிகளில் சேர்வதற்கு வாய்ப்பை பெறுவதற்கு முயற்சி எடுக்குமா, மத்திய அரசைக் கேட்குமா என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஐ. நா. சபையில் இட்டுள்ள கையெழுத்தைச் சுட்டிக்காட்டி அந்த உறுதிப்படி நடக்குமா என்று கேட்பது எப்படிப்பட்ட மத்திய அரசு அமைகிறது என்பதைப் பொறுத்து அது இருக்கிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் தொழிற்சாலை.

*1082 திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மின் விளக்குகள் மற்றும் அவற்றின் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) செங்கை அண்ணா மாவட்டம் கும்மிடிப் பூண்டி தாலூக்காவில் பெருவயல் என்ற கிராமத்தில் சுமார் ரூ. 41.25 கோடி செலவில் மின்விளக்குகள் மற்றும் மின்விளக்குகளுக்குத் தேவையான முக்கிய உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைக் கூட்டுத் துறையில் நிறுவ தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. சென்னையைச் சேர்ந்த திரு. ஒபுல் ரெட்டி மற்றும் குழுவினரை கூட்டு முனைவராகக் கொண்டு செயல்படுத்தவிருக்கும் இத்திட்டத்தை நிறைவேற்ற டைனா லேம்ப்ஸ் அண்ட் கிளாஸ் ஒர்க்ஸ் லிமிடெட் என்னும் புதிய கம்பெனி தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தமிழ்நாடு

உத்திரவாதத்தை வழங்குவதற்கு நம்முடைய தமிழக அரசு மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யுமா என்பதையும், இதை நாமே நேரடியாக மத்திய அரசாங்கத்தில் கேட்பதனால் தவறு கிடையாது. காரணம் ஐக்கிய நாட்டுப் பொதுச்சபையில் இந்திய அரசாங்கம் அங்கே உடன்படிக்கையில் கையெழுத்திட்டு இருக்கிறது. Right to work and right to free choice of employment கொடுப்போம் என்று கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். அது ஐக்கிய நாட்டுப் பொதுச் சபையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி தமிழக அரசு தமிழ் நாட்டிலுள்ள எல்லோரும் பொது நிறுவனங்களில், அரசாங்கப் பணிகளில் சேர்வதற்கு வாய்ப்பை பெறுவதற்கு முயற்சி எடுக்குமா, மத்திய அரசைக் கேட்குமா என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஐ. நா. சபையில் இட்டுள்ள கையெழுத்தைச் சுட்டிக்காட்டி அந்த உறுதிப்படி நடக்குமா என்று கேட்பது எப்படிப்பட்ட மத்திய அரசு அமைகிறது என்பதைப் பொறுத்து அது இருக்கிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் தொழிற்சாலை.

*1082 திரு. மெ. ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மின் விளக்குகள் மற்றும் அவற்றின் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) செங்கை அண்ணா மாவட்டம் கும்மிடிப் பூண்டி தாலூக்காவில் பெருவயல் என்ற கிராமத்தில் சுமார் ரூ. 41.25 கோடி செலவில் மின்விளக்குகள் மற்றும் மின்விளக்குகளுக்குத் தேவையான முக்கிய உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைக் கூட்டுத் துறையில் நிறுவ தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. சென்னையைச் சேர்ந்த திரு. ஒபுல் ரெட்டி மற்றும் குழுவினரை கூட்டு முனைவராகக் கொண்டு செயல்படுத்தவிருக்கும் இத்திட்டத்தை நிறைவேற்ற டைனா லேம்ப்ஸ் அண்ட் கிளாஸ் ஒர்க்ஸ் லிமிடெட் என்னும் புதிய கம்பெனி தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தமிழ்நாடு

தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பங்கு ரூ. 353 இலட்சமாக இருக்கும். இத்திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1990 ஆம் ஆண்டு இறுதியில் வணிக அளவிலான உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இத்திட்டத்தால் சுமார் 400 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

9-10 மணி

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்த ஸ்பேர் பார்ட்ஸ் தொழிற்சாலையை வேறு மாநிலத்திலே அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பெருமைப்படுகிறேன் . ஆனால் எனது நத்தம் தொகுதியில் எந்த விதமான தொழிற்சாலையும் இல்லை. ஆனால் முன்னாளும் முதலமைச்சர், இந்நாளும் முதலமைச்சர், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருகின்ற பொழுது ஒரு கடைக்கண்கூட பார்ப்பதில்லை. ஆகவே, எந்த தொழிற்சாலையும் இல்லை என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சரை இந்த ஆண்டு இப்பொழுதாவது ஒரு தொழிற்சாலையை அங்கே அமைத்துத்தர வேண்டுமென்று நான் கேட்க ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவர்களுடைய வினாவில் வேறு மாநிலத்தில் அமைத்திருப்பதாகச் சொன்னார்கள். அது என்னால் இயலாது. வேறு மாவட்டத்திலேதான் அது அமைக்கப்பட்டிருக்கின்றது. நத்தம் குறித்துச் சொன்னார்கள். எல்லாப் பகுதிகளிலும் தொழிற்சாலைகள் அமைய வேண்டும் என்பதுதான் இந்த அரசின் கருத்து. அதற்கு ஆவன உரிய நேரத்தில் செய்யப்படும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவரவர்களே, எனது நத்தம் தொகுதியிலே இரண்டு யூனியன்கள் இருக்கின்றன. அதிலே நத்தம் தாலுக்கா மட்டும் தொழிற்துறையிலே பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. கனம் முதலமைச்சரைக் கேட்டுக் கொள்வது. அடுத்து சாணார்பட்டி யூனியன் என்று இருக்கிறது என் தொகுதியிலே. மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்து தொழில் துறையிலே பின்தங்கிய பகுதியாக அந்தச் சாணார்பட்டி யூனியனை அறிவிக்க வேண்டுமென்ற கருத்து இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்பொழுது நத்தம் பின் தங்கிய பகுதியிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அதிக ஆசைப்படக் கூடாது.

1989 நவம்பர் 2]

திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதுககோட்டை மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம். அதிலே குறிப்பாக எனது குளத்தூர் தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதியாக இருக்கிறது. கடந்த கால ஆட்சியிலே இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியிலே 35 தாலுக்காக்களைப் பின் தங்கிய வட்டமாக அறிவித்திருந்தார்கள். ஆனால் இன்று அரசு மிகவும் கவனத்துடன் பரிசீலித்ததில் 70-ஐப் பின் தங்கிய தாலுக்காக்களாக அறிவித்திருக்கிறார்கள். அதிலே என்னுடைய குளத்தூர் தாலுக்கா விடுபட்டு இருக்கிறது. அதைப் பின் தங்கிய தாலுக்காவாக அறிவிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, காலப் போக்கில் கவனிக்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தால் தொடங்கவிருக்கின்ற இந்த நிறுவனத்தின் மூலமாக உற்பத்தியாகின்ற அனைத்து மின்சார விளக்குகளையும், மின்சார உதிரிபாகங்களையும் உள்ளாட்சித் துறையில் இருக்கின்ற ஊராட்சி மன்றங்களுக்குத் தெருவிளக்கு, அதற்கு உரிய உதிரி பாகங்களுக்கு அளிப்பதற்கு முன்னுரிமையோடு அதில் ஊராட்சி மன்றத்திற்கு அளித்தால் அப்படி அளிக்கப்படுகின்ற விளக்குகளில் எல்லாம் உள்ளாட்சி என்ற முத்திரை செய்து கொடுப்பதன் மூலமாகத் தவறு நடக்காமல் தடுப்பதற்கும் அரசு முன்னுரிமை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இது தொழில் துறையைப் பற்றிய கேள்வி. உள்ளாட்சி மன்றங்களைப் பற்றிய கேள்வியின் பொழுது இந்தக் கேள்வி எழலாம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவரவர்களே, எங்களுடைய திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் தொழில் துறையிலே மிகவும் பின் தங்கிய மாவட்டம். வானம் பார்த்த பூமிதான் அங்கே 90 சதவீதம் இருக்கின்றது. எந்த விதமான பெரிய தொழிலும் அந்த மாவட்டம் முழுவதும் கிடையாது. இந்த நிலையில் என்னுடைய பழனி தொகுதியை 1982-இல் தொழில் துறையில் பின் தங்கிய பகுதியாக அறிவித்து சலுகைகள் வழங்கிக் கொண்டு வந்ததை தற்போது இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாக நீக்கிவிட்டதாகச் சொல்கிறார்கள். அதனால் தொழில் செய்யக் கூடியவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். என்னிடத்திலே பலபேர் வந்து இதைச் சொன்னார்கள். ஆகவே, மாவட்டம் முழுவதையும் பின் தங்கிய பகுதியாக இந்த அரசு அறிவிக்குமா அல்லது நிறுத்தப்பட்ட பழனி தொகுதியை மீண்டும் எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்து இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்குமேயானால் அதுபற்றிய குறிப்பு எனக்குத் தந்தால் அதை விசாரித்து உடனடியாக மாண்புமிகு உறுப்பினருக்குப் பதில் அளிக்க வசதியாக இருக்கும்.

9-15 மணி

திரு. டி. சி. விஜயேந்திரையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் என்னுடைய தனி தொகுதியானது மிகவும் பிற்பட்ட தொகுதியாகும். அதிலே தென்கனிக்கோட்டையில் ஒரு அலுமினிய பாக்டரி ஏற்படுத்த அரசிடம் உத்தேசம் உள்ளதாக அறிகிறேன். அதனை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்கனிக்கோட்டைக்கு அருகில் உள்ள ஓசூர் பகுதி ஏற்கெனவே பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டு நல்ல தொழில் வளம் அங்கே பெருகிக் கொண்டிருக்கிறது. அதனுடைய சாயல் நிச்சயமாக தென்கனிக்கோட்டைக்கும் வரும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு உறுதிமொழியை அளித்தார்கள். நிலக்கோட்டை தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அதை என்னுடைய சொந்த தொகுதியாகப் பாவித்து உடனடியாக அங்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்ற உறுதிமொழியை அளித்தார்களே, அது நிறைவேற்றப்படுமா அல்லது அப்படியே காற்றிலே பறக்க விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் உறுதிமொழிகள் எதுவும் காற்றிலே பறக்க விடப்பட மாட்டாது. காரணம் இந்த உறுதி மொழிகள் பஞ்சோ அல்லது தூசியோ அல்ல. (சிரிப்பு)

திரு. ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஒரு உப்பு ரசாயனத் தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்கெனவே இருந்த அரசால் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டன. அதற்காக இடங்கள் எல்லாம் கூட பார்க்கப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் அரசாங்கத் தொழிற்சாலை எதுவும் இல்லை. எனவே அது போன்ற தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு அரசிடம் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

1989 நவம்பர் 2]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அமைவதற்கு முன்பு ஆளும் கட்சியின் சார்பாக வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் அந்த உப்புத் தொழிற்சாலை பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேதாரண்யம் அருகாமையிலோ அல்லது சற்று தொலைவிலோ ஒரு வசதியான இடத்தில் அந்தத் தொழிற்சாலையை அமைப்ப தற்கு இப்போது 14 கோடி ரூபாய் முதலீட்டில் ஒரு திட்டம் ஆராயப்பட்டு வருகிறது. விரைவில் அதுபற்றி அறிவிக்கப் படும்.

திரு. ஏ. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் வானூர் தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதியாகத் தமிழக அரசால் அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே 1962--67 முதல் தொடர்ந்து ஐந்து சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியிலே தொழிற் சாலை எதுவும் இல்லையென்று தமிழக அரசைக்கேட்டு வந்தார் கள். மாண்புமிகு தமிழினத் தலைவர் அவர்கள் கருணை கூர்ந்து என்னுடைய தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை உருவாக்கித் தருவார்களா என்று பணிவோடு கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப் படுவதும் அங்கே தொழில்பேட்டைகள் உருவாவதற்கு முயற்சி களை மேற்கொள்வதும் அரசினுடைய பணிகளாக இருக்க முடியும். ஆனால் அங்கே தொழில் முனைவோர்கள் அவர் களாக வந்து, அரசு தெரிவிக்கிற சலுகைகளையெல்லாம் பெற்று தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் அத்தகைய தொழில்முனை வோர்களை ஊக்கப்படுத்தி தொழில் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

குறுகிய கால வினா

தமிழ்நாடு அரசு ஹெலிகாப்டர்.

*7139 திரு. அன்பில் பொய்யாமொழி :
மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் அரசின் சார்பாக ஹெலிகாப்டர் வாங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) தற்பொழுது என்ன நிலைமையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1982-ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் பெங்களூரி லுள்ள இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் என்ற நிறுவனத்திட மிருந்து 70 லட்சம் ரூபாய் விலைக்கு ஆறு இருக்கைகள் கொண்ட சேதக் ஹெலிகாப்டர் ஒன்று வாங்கப்பட்டது.

(இ) இப்போது அந்த ஹெலிகாப்டர் விற்பனை செய்யப் படுகிற நிலைமையில் இருக்கிறது.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான அந்த ஹெலிகாப்டர் இருக்கிறபோது வாடகைக்கு ஹெலிகாப்டர் எடுக்கப்பட்டதா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிற்குரிய ஒரு ஹெலிகாப்டர் இருந்தும் கூட சில நேரங்களில் வாடகைக்கு இந்திய பாதுகாப்புப்படை யின் பிரிவான ஆகாய விமானப்படை ஹெலிகாப்டரும், மத்திய அரசுத் துறைக்குச் சொந்தமான Palam Hans Ltd., என்ற நிறுவனத்திற்குச் சொந்தமான ஹெலிகாப்டரும் இரண்டொரு முறை வாடகைக்கு எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வாடகைக்கு எடுக்கப்பட்டதன் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

1989 நவம்பர் 2]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15,91,687 ரூபாய். சுமார் 16 லட்சம் ரூபாய்.

9-20 மணி

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள ஹெலிகாப்டரை விற்ற பிறகு புதிதாக ஹெலிகாப்டரை வாங்க அரசுக்கு உத்தேசம் உண்டா? மாநில அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் இருக்கும்போது, மாநில அரசினுடைய முதலமைச்சர் தேர்தல் சமயங்களிலே அதைப் பயன்படுத்த முடியாது என்கிற தடை இருக்கிறதே, அதை நீக்குவதற்கு இந்த அரசு தேர்தல் கமிஷனுக்கு முறையீடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பயன்படுத்த முடியாத ஹெலிகாப்டர் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன என்பதற்காகத்தான் அதை விற்றுவிட முடிவு செய்தோம். அதிலே கூட ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு 1 கோடி ரூபாய்க்கு அதை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. 1.4 கோடி ரூபாய்க்கு வாங்குவதற்கு மேற்கு வங்கம் இசைவு தெரிவித்திருக்கிறது. அதை ஏற்றுக் கொண்டு இந்த ஹெலிகாப்டர் இங்கிருந்து புறப்படத் தயாராக இருக்கிறது.

அரசுத் தேர்வுகளுக்குக் கண்காணிப்பாளராகப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊதியத் தொகை.

***3030 திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆசிரியர்கள் அரசுத் தேர்வுகளுக்கு கண்காணிப்பாளராகப் பணியாற்றியமைக்கு (invigilator) ஊதியத் தொகை எவ்வளவு வழங்கப்படுகிறது?

(ஆ) காலதாமதமின்றி வழங்க ஆணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே,

1989 நவம்பர் 2]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15,91,687 ரூபாய். சுமார் 16 லட்சம் ரூபாய்.

9-20 மணி

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள ஹெலிகாப்டரை விற்ற பிறகு புதிதாக ஹெலிகாப்டரை வாங்க அரசுக்கு உத்தேசம் உண்டா? மாநில அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் இருக்கும்போது, மாநில அரசினுடைய முதலமைச்சர் தேர்தல் சமயங்களிலே அதைப் பயன்படுத்த முடியாது என்கிற தடை இருக்கிறதே, அதை நீக்குவதற்கு இந்த அரசு தேர்தல் கமிஷனுக்கு முறையீடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பயன்படுத்த முடியாத ஹெலிகாப்டர் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன என்பதற்காகத்தான் அதை விற்றுவிட முடிவு செய்தோம். அதிலே கூட ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு 1 கோடி ரூபாய்க்கு அதை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. 1.4 கோடி ரூபாய்க்கு வாங்குவதற்கு மேற்கு வங்கம் இசைவு தெரிவித்திருக்கிறது. அதை ஏற்றுக்கொண்டு இந்த ஹெலிகாப்டர் இங்கிருந்து புறப்படத் தயாராக இருக்கிறது.

அரசுத் தேர்வுகளுக்குக் கண்காணிப்பாளராகப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊதியத் தொகை.

***3030 திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆசிரியர்கள் அரசுத் தேர்வுகளுக்கு கண்காணிப்பாளராகப் பணியாற்றியமைக்கு (invigilator) ஊதியத் தொகை எவ்வளவு வழங்கப்படுகிறது?

(ஆ) காலதாமதமின்றி வழங்க ஆணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(அ) ஆசிரியர்கள் அரசுத் தேர்வுகளுக்கு உதவி கண் காணிப்பாளராக பணியாற்றுவதற்கு நாளொன்றுக்கு ரூ. 6 உழைப்பூதியமாக வழங்கப்படுகிறது.

(ஆ) இந்த உழைப்பூதியம் தேர்வு முடியும் கடைசி நாளன்று தேர்வு மையத்திலேயே ஒட்டுமொத்தமாக நேர் முகமாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதால், இதில் காலதாமதம் என்பதற்கு இடமில்லை.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் இன்விஜிலேட்டர்களாக வேலைசெய்யும்போது, அவர்களுக்கு இந்த ஊதியம் காலதாமதமின்றி கொடுக்கப்படுவதாக அறி வித்ததற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால் அதே ஆசிரியர்களை வேறு இலாக்காக்கள் வோட்டர் லிஸ்ட் தயாரிப்பதற்கும் வேறுவிதமான காரியங்களுக்கும் பயன் படுத்தி, 6 மாதங்கள், 1 வருடம் எல்லாம் ஆகியும் கூட, அவர்களுக்கு உரித்தான அந்தத் தொகை கொடுக்கப்படாமல் இருப்பதனால், அவர்களிடையே ஒரு வெறுப்பு வளர்ந்திருப் பதை இந்த அரசு உணர்ந்து அதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்க இந்த இலாக்காவின் மூலம், அமைச்சர் அவர்கள் ஏதாவது செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலை வர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. ஆனால் அப்படிப்பட்ட ஒரு கருத்து அந்தத் துறையினருக்குத் தெரி விக்கப்பட்டு, விரைவுபடுத்த முயற்சிக்கப்படும்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட பணியிலே ஈடுபடக்கூடிய ஆசிரியர்களுக்குத் தினசரி 6 ரூபாய் வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இருக்கக் கூடிய பல்வேறுவிதமான விலைவாசியில் இந்த 6 ரூபாயை வைத்துக்கொண்டு, ஒரு நாளைக்கு ஏற்படக்கூடிய சாதாரண செலவுகளைக் கூட அவர்களால் செய்ய முடியாத நிலை யிருக்கிறது. எனவே இதை 10 ரூபாயாக உயர்த்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர் களே, இப்படிப்பட்ட பணி ஆசிரியர்களுடைய கடமையிலே ஒன்றுதான். இது வேறு துறையைச் சேர்ந்த பணியல்ல. ஆசிரியர்கள் ஆண்டு முழுவதும் ஆற்றக்கூடிய பணிகளில் இந்தப் பணியும் நியாயமாக இடம் பெற வேண்டும். அவர்களுடைய போக்குவரத்துச் செலவிற்காக இன்னொரு தொகையும் வழங் கப்படுகிறது, வேறு இடத்திலேயிருந்து வந்து போகிறார்களே,

என்பதற்காக. ஆகவே இது குறைந்தபட்சமாகத் தோன்றினாலும் கூட அண்மைக் காலத்திலே சில ஆண்டுகளுக்கு முன்பு இது உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே 4 ரூபாயாக இருந்தது, இப்போது 6 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதேபோல் அவர்களுக்குத் தரப்படுகிற போக்குவரத்துச் செலவு என்ற அடிப்படையில் 20 கிலோ மீட்டர் வரை 16 ரூபாயும், 40 கிலோ மீட்டர் வரை 18 ரூபாயும் அதற்கு மேலே இருந்தால் 20 ரூபாயும் என்று அப்படியும் ஒரு தொகை வழங்கப்படுகிறது. எனவே, இதுபற்றி இப்போது உடனடியாக ஆராய்ந்து பதில் சொல்ல முடியாவிட்டாலும் தேவைப்படுகிறபோது ஆலோசிக்கப்படும்.

பொறியியல் படிப்பில் தடைமுறைக் கல்வி

*3418. திரு. கோ. வீரையன் :

திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொறியியல் (பி.இ.) படிக்கும் மாணவர்களுக்கு இடையில் புகுத்தப்பட்ட தடைமுறைக் கல்வியை நீக்கக் கோரி மாணவர்களிடமிருந்து அரசுக்கு ஏதும் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத்தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தடைமுறைக் கல்வியை நீக்குதல் என்பது பல்கலைக் கழக பாடத்திட்ட அமைப்பு குழுவின் பரிசீலனைக்கு உட்பட்டது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, உதாரணமாக பாலிடெக்னிக், ஐ.டி.ஐ.

என்பதற்காக. ஆகவே இது குறைந்தபட்சமாகத் தோன்றினாலும் கூட அண்மைக் காலத்திலே சில ஆண்டுகளுக்கு முன்பு இது உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே 4 ரூபாயாக இருந்தது, இப்போது 6 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதேபோல் அவர்களுக்குத் தரப்படுகிற போக்கு வரத்துச் செலவு என்ற அடிப்படையில் 20 கிலோ மீட்டர் வரை 16 ரூபாயும், 40 கிலோ மீட்டர் வரை 18 ரூபாயும் அதற்கு மேலே இருந்தால் 20 ரூபாயும் என்று அப்படியும் ஒரு தொகை வழங்கப்படுகிறது. எனவே, இதுபற்றி இப்போது உடனடியாக ஆராய்ந்து பதில் சொல்ல முடியாவிட்டாலும் தேவைப்படுகிறபோது ஆலோசிக்கப்படும்.

பொறியியல் படிப்பில் தடைமுறைக் கல்வி

*3418. திரு. கோ. வீரையன் :

திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொறியியல் (பி.இ.) படிக்கும் மாணவர்களுக்கு இடையில் புகுத்தப்பட்ட தடைமுறைக் கல்வியை நீக்கக் கோரி மாணவர்களிடமிருந்து அரசுக்கு ஏதும் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத்தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தடைமுறைக் கல்வியை நீக்குதல் என்பது பல்கலைக் கழக பாடத்திட்ட அமைப்பு குழுவின் பரிசீலனைக்கு உட்பட்டது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, உதாரணமாக பாலிடெக்னிக், ஐ.டி.ஐ.

மற்றும் வழக்கறிஞர்களுக்கு இப்படியெல்லாம் பல்வேறு துறைகளில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு—இந்தத் தடைக் கல்வி முறை கொண்டு வரப்பட்டு இருந்தது. அதனால் அந்த மாணவர்கள் பெருமளவு பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருந்ததால், அதையெல்லாம் பரிசீலித்து, அந்தத் தடைகள் நீக்கப்பட்டு இருக்கின்றன. இந்த அரசு வந்ததற்குப் பிறகு, அதேபோல் இந்தப் பொறியியல் கல்லூரியிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மட்டும் இந்தத் தடை இன்னும் தொடர் கிறது. மற்ற துறைகளில் அல்லது மற்ற கல்வி முறைகளில் மாற்றப்பட்டதைப் போல இந்தப் பொறியியல் கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இருக்கக்கூடிய இந்தத் தடைக் கல்வி முறையை நீக்க அரசு பரிசீலிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-25 மணி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பிரேக் சிஸ்டம் என்று சொல்லப்படுகிற இந்தத் தடை முறை என்பது படிப்பை ஊக்கப்படுத்துவதற் காகத்தான் பல்கலைக் கழக நிபுணர்களால் ஏற்கெனவே கொண்டுவரப்பட்டது. படிக்கின்ற அந்தக் காலத்திலேயே அவர்கள் தேர்ச்சி பெற வேண்டுமென்ற ஒரு ஊக்கம் அவர் களுக்கு இருக்க வேண்டுமென்றால் இரண்டு முறை மூன்று முறைதான், அதற்குப் பின்னர், தோல்வி அடைந்தால், தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டு மேல் வகுப்பிலே சேர்க்கப் பட வேண்டும் என்னும் ஒரு முறை உயர்ந்த நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டது. இருந்தாலும் கூட மாணவர்கள் தங்களுடைய இயலாமை காரணமாகவோ அல்லது சூழ் நிலை காரணமாகவோ இந்த நியாயமான தடை முறையை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அவர்களுடைய விருப்பத் தைக் கருதி, பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே 3 முறை வரையில் அவர்களுக்கு வாய்ப்பு அளிக் கப்பட வேண்டுமென்று இருந்த அந்தக் கருத்து இப்போது 4 முறை வாய்ப்பு அளித்து வெற்றி பெற அனுமதிக்கலாம் என்று நான்காவது முறையும் பல்கலைக் கழகத்தினாலே ஏற்றுக் கொள்ளப்பட்டு, அண்ணா பல்கலைக் கழகத்தினாலே அந்த விதிமுறை நடைமுறைக்கு வந்திருக்கிறது. இதை மற்ற பல்கலைக் கழகங்களும் ஏற்றுக் கொள்வதற்கு, அந்தப் பல்கலைக் கழகங்கள் ஆலோசித்து வருகின்றன.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தடைக் கல்வி முறை என்பது பல்கலைக் கழகத்தால் விதிக்கப்பட்டது. மாணவர்களுடைய நலனைக் கருதித்தான் அது கொண்டு வரப்பட்டது என்று நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஏற்கெனவே இன்றைக்கு இந்த பொறியியல் கல்லூரிகளிலே படிக்கக் கூடிய மாணவர்களுக்கு ஆரம்பத்திலே படிக்கும்போது எந்தவிதமான வசதி வாய்ப்பும் கிடையாது. இன்றைக்கு பொறியியல்

1989 நவம்பர் 2]

கல்லூரி என்பது நாட்டில் காளான் மாதிரி உற்பத்தியாகிக் கொண்டு இருக்கிறது. இது ஒரு வணிக முறை போல இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கிறது. அவர்களுக்கு போதிய ஆசிரியர்கள் மற்ற பல வசதிகள் எல்லாம் இல்லாத ஒரு சூழ்நிலையில் அவர்கள் அந்தந்த வருடத்திற்கு உரிய பாடங்களை முடிப்பது என்பது மிக சிரமமான காரியம். அத்தோடு இந்தக் கல்வியிலே சேர்ந்தவர்கள் வேறு ஒரு கல்விக்கும் போகவும் முடியாது. என்றைக்கு இருந்தாலும் அதை முடித்துத்தான் ஆக வேண்டும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா மட்டும் கேளுங்கள்.

திரு. என். பழனிவேல் : அப்படி சிரமம் இருக்கிற காரணத்தால் அதை மீண்டும் இந்த அரசு பரிசிலனை செய்து, மீண்டும் பழைய முறைப்படி அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பாஸ் செய்வதற்கு அனுமதிக்கக் கூடிய முறையில் அதை மாற்றி அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் பாஸ் செய்வதற்கு அனுமதிக்க முடியுமா என்று கேட்டார்கள். அந்தத் தடை முறையே குறிப்பிட்ட காலத்திற்குள் பாஸ் செய்வதற்காகத்தான் முதலிலே கொண்டு வரப்பட்டது. இப்போது இருக்கிற பிரச்சினை, குறிப்பிட்ட காலத்திற்குள் பாஸ் செய்ய முடியாது என்று மாணவர்கள் சொல்லுகிறார்கள். அதற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி பொறியியல் கல்லூரிகள் எல்லாம் தரமாக நடத்தப்படவில்லை என்றும், பல கல்லூரிகளில் தரம் குறைந்து இருக்கிறது—அதுவும் சுய நிதிக் கல்லூரிகளில்—என்று தெரிவித்தார்கள். இவற்றைப் பற்றி நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டு, அண்ணா பல்கலைக் கழக துணை வேந்தராக இருக்கிற டாக்டர் குழந்தைசாமி அவர்களுடைய தலைமையில் இந்த சுய நிதிக் கல்லூரிகள் எல்லாம் பார்வை இடப்பட்டு, அந்த அறிக்கை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்ட நேரத்திலேதான் அகில இந்திய பொறியியல் ஆலோசனைக் குழுவாக அமைந்த ஒரு குழு தங்களுக்குத்தான் எல்லா அதிகாரங்களும் இருக்கின்றன என்று நீதிமன்றத்திலே வாதாடி, அவற்றை அனுமதிக்கிற அதிகாரமும், நிறுத்துகிற அதிகாரமும் தங்களுக்குத்தான் என்ற ஒரு தீர்ப்பையும் பெற்றிருக்கிறார்கள். எனவே மாநில அரசு நியாயமான சில நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்குக் கூட தடை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட மாணவர்களுக்கு அந்தத் தடை முறை மூலமாக இடர்ப்பாடு இருக்கிறது என்ற வேண்டுகோள் வந்த காரணத்தால் 3 முறை அனுமதிக்கப்பட்டவர்கள் இனி 4 முறை அனுமதிக்கப்பட்டு தேர்வு எழு

தலாம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக பல்கலைக் கழகங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மூன்று முறை என்றால் $1\frac{1}{2}$ ஆண்டு, நான்கு முறை என்றால் 2 ஆண்டு. முதல் வகுப்பிலேயே தேறாமல் 3வது வகுப்பில் படித்துக் கொண்டு தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறது. அதற்கு மேல் அனுமதிக்க வேண்டுமானால், அதை விட அவர்கள் எல்லாம் தேர்விலே வெற்றி பெற்றதாக அறிவித்து விடலாம். அப்படியும் ஒரு முறை எதிர்காலத்திலே வந்தாலும் வரும்.

9-30 மணி

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாணபுமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லும் போது மாணவர்களுக்கு இந்த தனியார் சுய நிதிக் கல்லூரி யிலே ஏற்பட்டிருக்கின்ற இடர்ப்பாடுகளைப் பற்றி, நீக்குவது பற்றிச் சொன்னார்கள். சமீபத்திலே ஒசூரிலே உள்ள அதியமான் தனியார் பொறியியல் கல்லூரியிலே 2 ஆண்டுகள் படித்து முடித்த 109 மாணவர்கள் வரை சேர முடியாமலும் போக முடியாமலும் ஏதோ தடங்கல் ஏற்பட்டு அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி கோர்ட் மூலமாகத்தடங்கல் ஏற் பட்டு விலகியிருக்கிறார்களே, அந்த மாணவர்களுடைய படிப்பு எல்லாம் வீணாகிக் கொண்டிருக்கிறதே, அதற்கு வேறு ஏதாவது ஏற்பாடு செய்து வேறு கல்லூரியிலே சேர் வதற்குண்டான ஏற்பாடாவது செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர் களே, இது நீதிமன்றத்தோடு தொடர்புடைய ஒரு பிரச் சினையாக அண்மையிலே ஆக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட மாணவர்களை வேறு கல்லூரியிலே சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு விண்ணப்பம் போடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் அந்த கல்லூரி இயங்கலாம் என்ற ஒரு கருத்தும் தெரிவிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படி ஒரு நிலைமை எதிர்பாராத விதமாக உருவாக்கப் பட்டு இருக்கிற காரணத்தால் தேவைப்படுகிற போது அரசு அதுகுறித்து பரிசீலனை செய்ய முடியுமே தவிர உடனடியாக ஒரு முடிவிற்கு வரக்கூடிய வாய்ப்பு இல்லை.

பல்கலைக் கழகங்களுக்கு ஒரே மாதிரியான சட்டங்கள்.

*5328. திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

தலாம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக பல்கலைக் கழகங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மூன்று முறை என்றால் $1\frac{1}{2}$ ஆண்டு, நான்கு முறை என்றால் 2 ஆண்டு. முதல் வகுப்பிலேயே தேறாமல் 3வது வகுப்பில் படித்துக் கொண்டு தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறது. அதற்கு மேல் அனுமதிக்க வேண்டுமானால், அதை விட அவர்கள் எல்லாம் தேர்விலே வெற்றி பெற்றதாக அறிவித்து விடலாம். அப்படியும் ஒரு முறை எதிர்காலத்திலே வந்தாலும் வரும்.

9-30 மணி

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாணபுமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லும் போது மாணவர்களுக்கு இந்த தனியார் சுய நிதிக் கல்லூரி யிலே ஏற்பட்டிருக்கின்ற இடர்ப்பாடுகளைப் பற்றி, நீக்குவது பற்றிச் சொன்னார்கள். சமீபத்திலே ஓசூரிலே உள்ள அதியமான் தனியார் பொறியியல் கல்லூரியிலே 2 ஆண்டுகள் படித்து முடித்த 109 மாணவர்கள் வரை சேர முடியாமலும் போக முடியாமலும் ஏதோ தடங்கல் ஏற்பட்டு அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி கோர்ட் மூலமாகத்தடங்கல் ஏற் பட்டு விலகியிருக்கிறார்களே, அந்த மாணவர்களுடைய படிப்பு எல்லாம் வீணாகிக் கொண்டிருக்கிறதே, அதற்கு வேறு ஏதாவது ஏற்பாடு செய்து வேறு கல்லூரியிலே சேர் வதற்குண்டான ஏற்பாடாவது செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர் களே, இது நீதிமன்றத்தோடு தொடர்புடைய ஒரு பிரச் சினையாக அண்மையிலே ஆக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட மாணவர்களை வேறு கல்லூரியிலே சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு விண்ணப்பம் போடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் அந்த கல்லூரி இயங்கலாம் என்ற ஒரு கருத்தும் தெரிவிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படி ஒரு நிலைமை எதிர்பாராத விதமாக உருவாக்கப் பட்டு இருக்கிற காரணத்தால் தேவைப்படுகிற போது அரசு அதுகுறித்து பரிசீலனை செய்ய முடியுமே தவிர உடனடியாக ஒரு முடிவிற்கு வரக்கூடிய வாய்ப்பு இல்லை.

பல்கலைக் கழகங்களுக்கு ஒரே மாதிரியான சட்டங்கள்.

*5328. திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

1989 நவம்பர் 2]

(அ) தமிழ்நாட்டில் உள்ள 11 பல்கலைக்கழகங்களிலும் ஒரே மாதிரியான சட்டங்கள் (ஆட்சிமன்றக் குழு-செனட்) இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு இதனை அறியும்.

(ஆ) பழைய பல்கலைக்கழகச் சட்டங்களான சென்னை, மதுரை-காமராசர் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டங்களில் செனட் அமைப்பு ஏறத்தாழ ஒரே மாதிரியாக உள்ளது. புதிய பல்கலைக்கழகச் சட்டங்களில் சற்று வேறு பட்டு உள்ளன. சில பல்கலைக்கழகங்களில் செனட் இல்லை. சில பல்கலைக்கழகச் சட்டங்களில் அந்த அமைப்பு வேறு பெயரில் அமைந்திருக்கின்றன. பல்கலைக்கழகச் சட்டங்களின் படி, சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் அப்பல்கலைக் கழகங்களின் செனட் உறுப்பினர்களாகிறார்கள். வேறு பல்கலைக்கழகங்களில் சிண்டிகேட் உறுப்பினர் பதவி வகிக்க வகை செய்யப்பட் டுள்ளது. இந்தப் பழைய பல்கலைக்கழகச் சட்டங்கள் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களுக்குக் கூட இடம் அமைத்து இருக்கின்றன. இவை எல்லாம் அரசாங்கத்தால் ஆராயப் பட்டு வருகின்றன.

திரு. வ. முல்லைவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர்கள் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்கின்ற ஒரு வாய்ப்பைப் பெற்றிருக் கிறார்கள். ஆனால் பேராசிரியர்கள் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் தேர்தலிலே போட்டியிட்டு ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களாக வருவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக் கிறது. நீங்களும் பேராசிரியராக இருந்தவர்கள், நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களும் பேராசிரியராக இருந்து வந்த வர்கள். ஆகவே பேராசிரியர்களாகிய உங்களால் புதியதாக ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்ற பாரதிதாசன், பாரதியார் போன்ற பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்கள் ஆட்சி மன்றக் குழுவில் இடம் பெறுவதைப் போல சென்னை உள்ளிட்ட மற்ற பல்கலைக்கழகங்களில் அவர்கள் இடம் பெறுவதற்கான வகையில் சட்டம் திருத்தப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதுவும் ஆராயப்பட்டு வருகிறது.

திரு. வ. முல்லைவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாவேந்தர் பாரதிதாசன், பாரதியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்களுடைய பெயராலே பல்கலைக்கழகங்கள் இந்த நாட்டில் இருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டினுடைய பகுத்தறிவுப்பகலவனாக இருந்த தந்தை பெரியாருடைய பெயரிலே பல்கலைக்கழகமே இல்லாமல் இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்க சென்னையிலிருந்து ஈரோடு வரையில் பரவியிருக்கின்ற சென்னை பல்கலைக்கழகத்தினுடைய எல்லையைக் குறுக்கி சேலம் அல்லது ஈரோடு பகுதியில் ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கி அதற்குத் தந்தை பெரியார் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தந்தை பெரியாருடைய பெயர் பகுத்தறிவோடு மிக அதிகமாக சம்பந்தப்பட்டு இருக்கிற காரணத்தால் தான் பல்கலைக்கழகங்கள் அப்படிப்பட்ட அந்த லட்சிய உணர்வோடு நடைபெற முடியாத ஒரு நிலைமை இருப்பதை உணர்கிற இந்த அரசு அதில் அவசரப்படவில்லை. ஆனால் கல்வியினுடைய தேவை, காலத்தைக் கருதி, தேவைப்படுகிற போது போதுமான நிதி கிடைக்குமேயானால் அந்த முயற்சியிலே ஈடுபடும்.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : பேரவைத்தலைவர் அவர்களே, மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுக்காலம் சிண்டிகேட்டினுடைய ஆட்சி மன்றக் குழுவே இல்லாமல் இருக்கிறதே, அரசாங்கம் ஏற்கெனவே நீதிமன்றத்திற்குச் சென்று அது தடைப்பட்டதாகப் பேசப்படுகிறது. சிண்டிகேட்டினுடைய ஆட்சி மன்றக் குழு உருவாக்குகின்ற கருத்து இந்த அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஏதேனும் தேர்தல் பற்றித்தான் அப்படி ஒன்று இருக்க முடியுமே தவிர சிண்டிகேட் இல்லாமல் பல்கலைக் கழகம் நடைபெற்றுக் கொண்டிருக்காது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்து பற்றி இப்போது விவரம் இல்லாத காரணத்தால் அதுபற்றி நான் அறிய முயற்சிப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Senate, Academic Council —முறையாகத் தேர்ந்தெடுக்கப்படாத உறுப்பினர்களைக் கொண்டவையாக இப்போது இருப்பதாக அவர் சுட்டிக்காட்டுகிறார். அதாவது ஆட்சிப் பேரவை, கல்விப் பேரவை.

1989 நவம்பர் 2]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒருவர் இருவர் தேர்ந்தெடுக்கப்படாத நிலைமை இருக்கக் கூடும். அதுபற்றி அரசு கேட்டறியும்.

9-35 மணி

திரு.. இரா. மோகன் : தலைவர் அவர்களே, இந்த அவையின் சார்பாக என்னையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களையும் பாரதியார் பல்கலைக்கழகத்தினுடைய செனட் உறுப்பினர்களாக நியமித்து இருக்கின்றீர்கள். சென்னைப் பல்கலைக்கழகத்திலே செனட்டிற்கு இருக்கக்கூடிய அதிகாரத்தில் எந்த அதிகாரமும் இல்லாத ஒரு செனட் அங்கே பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. காரணம், நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, மிகப் பெரிய வேறுபாடு சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய செனட்டிற்கும், பாரதியார் பல்கலைக்கழகத்தினுடைய செனட்டிற்கும் இருக்கின்றது. அங்கே ஆறு மாதத்திற்கு ஒரு முறை செனட் கூட்டம் நடைபெற்று, அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டு கருத்துக்களைச் சொல்கின்ற அந்த அதிகாரம் மட்டும்தான் செனட் உறுப்பினர்களுக்கு இருக்கிறதே தவிர, சென்னைப் பல்கலைக்கழக செனட் உறுப்பினர்களுக்கு இருப்பதைப் போல, முடிவு எடுக்கின்ற அல்லது முடிவுகளுக்கு ஆலோசனை சொல்கின்ற அதிகாரங்கள், பாரதியார் பல்கலைக் கழகத்திலே இல்லை. இப்படிப்பட்ட வேறுபாடுகள் அறவே நீக்கப்பட வேண்டும். எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் இருக்கின்ற செனட்கள், ஒரே மாதிரியான அதிகாரம் கொண்ட செனட்களாக அங்கே விளங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்கள் பல்வேறு கால கட்டங்களில் உருவான காரணத்தால் அவ்வப்போது கல்வித் துறையைச் சார்ந்தவர்கள் தருகிற ஆலோசனையின்படி, அந்தந்த சூழ்நிலைக்கேற்ப சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. பழைய பல்கலைக்கழகங்களிலே உள்ள சட்டங்கள் புதிய பல்கலைக்கழகங்களைப் போல் திருத்தப்படவேண்டும் என்ற ஒரு அழுத்தமான கருத்து இருக்கிறது. மற்றுமொரு கருத்து, எனக்குத் தோன்றுகிற கருத்து, ஒருவேளை புதிய பல்கலைக்கழகச் சட்டங்களை, பழைய பல்கலைக்கழகச் சட்டங்களைப் போல் மாற்றினால் நன்றாக இருக்குமா என்ற ஒரு எண்ணம் கூட இருக்கிறது. என்ன காரணம் என்றால், கல்வித் துறையினுடைய இப்படிப்பட்ட மிகப் பெரிய அமைப்புகள் செயல்படுவதிலே இருந்துதான் அவற்றைச் சீர்திருத்த முடியுமே தவிர. சட்ட அமைப்புகளாலே

மட்டும் அல்ல. ஏனென்றால், சிறந்த சட்டம் உள்ள பல் கலைக்கழகங்களிலே கூட முறைகேடுகளோ, குறைகளோ ஏற்பட்டு இருப்பதாக அறிந்து, அவற்றுக்கான நடவடிக்கை யும் எடுக்கவேண்டிய நிலையும் இருக்கத்தான் செய்கிறது. மேலும் பல்கலைக்கழகத்தினுடைய தனி உரிமைகள் மதிக்கப் பட்டு ஆகவேண்டும், கல்வி வளர்ச்சிக்காக. எனவே, பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றும் அவை பெற்றிருக்கிற அமைப்பில், சட்டத்தில் எந்த வகைச் சீர்திருத்தத்தைப் பெறுவது, அந்தந்தப் பல்கலைக்கழகத்திற்கு ஏற்றதோ, அந்தக் கோணத் தில் ஆராயவேண்டுமே தவிர. ரிஜிமென்டட் பாலிசி என்ற முறையில் ஒரே வகையான சட்டம் உலகம் முழுவதற்கும் என்பதைப் போல எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் இருக்க வேண்டும் என்பது அவ்வளவு நியாயமாகத் தோன்றவில்லை. ஏனென்றால் அதனுடைய தனித் தன்மைகள், சில சிறந்த கூறுகள், அது அதற்கு ஏற்ப காப்பாற்றப்படவேண்டும் என்பது என்னுடைய எண்ணமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக்கழகங்களிலே உணவு விடுதிகளில் பணி புரியும் ஊழியர்கள் பல ஆண்டுக் காலம் பணி புரிந்தாலும் கூட அவர்கள் நிரந்தரம் இல்லாமல் இருக் கிறார்கள். அவர்கள் பல்கலைக்கழக ஊழியர்களாகக் கருதப் படாமல், குறைந்தபட்சம் நாலாம்தர சிப்பந்திகளாகக் கூடகரு தப்படாமல் இருக்கிறார்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூல வினாவிற்குத் தொடர்புடையது அல்ல,

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானலில் இயங்கி வருகின்ற அன்னை தெரசா பல்கலைக்கழகம் இன்னும் செம்மையாக நடைபெறுவதற்கு சென்னைக்கு மாற்றப்படும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் பல்கலைக்கழகம் அங்கே வளரு வதற்கான சூழ்நிலை போதுமான அளவிற்கு இல்லை. தகுந்த இட வசதி, நீர் வசதி, ஏராளமானவர்கள் சென்று தங்கிப்பயில, ஆய்வு நடத்த, இவைகளுக்கான கட்டிட வசதிகளைக் கொடைக் கானலில் உருவாக்க முடியவில்லை. அதற்காக சென்னைக்கு மாற்றுவது என்ற முடிவும் இந்த அரசால் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பரிசீலனைக் கட்டத்திலேதான் அது இருந்து வருகிறது.

1989 நவம்பர் 2]

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, பல்கலைக் கழகங்களுடைய சட்டங்களிலே மாற்றங்கள் கொண்டு வரவேண்டிய ஒரு காலம் ஏற்பட்டு இருக்கிறது என்பதுதான் எங்களுடைய அனுபவம். பாரதியார் பல்கலைக் கழகத்தினுடைய செனட் கூட்டத்திலே நானும் திரு. மோகன் அவர்களும் பங்கெடுத்து, நாங்கள் எங்களுடைய சில ஆலோசனைகளை அங்கே குறிப்பிட்டு இருக்கிறோம். ஆனால் சிண்டிகேட் தான் எல்லாவித மான காரியங்களுக்கும் இருக்கும்படியான ஒரே அதிகார ஊற்று மையமாக இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. செனட் கூட்டம் ஆறுமாதத்திற்கு ஒரு தடவை— நம்முடைய சட்டமன்றம் ஆறுமாதத்திற்குள்ளாக, ஒரு தடவை கூடித் தீரவேண்டும் என்ற அதே முறையில்— நடப்பது என்பது சரியல்ல. கல்வித் துறையிலும், அதனுடைய அமைப்புத் துறையிலும், பயிற்சித் துறையிலும் பல விவரங்களைச் சொல்லி விவாதிக்கவேண்டிய அந்தப் பெரும் சபையினுடைய கூட்டத்தை குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட்டும்படியான ஒரு திருத்தத்தை நமது அரசாங்கம் கொண்டு வருவதற்கு ஏதாவது தடை இருக்கிறதா ? அதைச் செய்யவேண்டும் என்பதுதான் எங்களுடைய கேள்வி, செய்யப்படுமா ?

9-40 மணி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொன்னதைப் போல செனட் கூட்டத்தை 3 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டுவது பற்றி அரசு பரிசீலிக்கும். சட்டத் திருத்தம் வருகிறபோது அதை இடம் பெறச் செய்ய முடியுமா என்பது நிச்சயமாகக் கருதப்படும். ஆனால் செனட் என்பது ஆலோசனைக் குழுதான். சிண்டிகேட் என்பதுதான் ஆட்சிக் குழு. சிண்டிகேட்— ஆட்சிக் குழு என்பது அமைச்சரவையைப் போல; செனட் என்பது சட்டமன்றம் போல, சில நேரங்களில் சட்டமன்றத்தினுடைய குரல் அதிகமாகி அமைச்சரவை வேலை தடைப்படுவதும் உண்டு. எனவே, அவற்றைப் பொறுத்து எந்த வகையில் செயல்படுத்த முடியும் என்பது மேலும் மேலும்—கல்வித் துறையைப் பொறுத்தவரையில் it is always in an experimental stage என்பதால் மேலும் மேலும்— ஆராயப்பட வேண்டிய ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆராய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது.

விராலிமலை சுப்பிரமணிய சுவாமி ஆலயத் தேர்.

*948. **திரு. வெ. இராசு :** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

1989 நவம்பர் 2]

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, பல்கலைக் கழகங்களுடைய சட்டங்களிலே மாற்றங்கள் கொண்டு வரவேண்டிய ஒரு காலம் ஏற்பட்டு இருக்கிறது என்பதுதான் எங்களுடைய அனுபவம். பாரதியார் பல்கலைக் கழகத்தினுடைய செனட் கூட்டத்திலே நானும் திரு. மோகன் அவர்களும் பங்கெடுத்து, நாங்கள் எங்களுடைய சில ஆலோசனைகளை அங்கே குறிப்பிட்டு இருக்கிறோம். ஆனால் சிண்டிகேட் தான் எல்லாவிதமான காரியங்களுக்கும் இருக்கும்படியான ஒரே அதிகார ஊற்று மையமாக இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. செனட் கூட்டம் ஆறுமாதத்திற்கு ஒரு தடவை— நம்முடைய சட்டமன்றம் ஆறுமாதத்திற்குள்ளாக, ஒரு தடவை கூடித் தீரவேண்டும் என்ற அதே முறையில்— நடப்பது என்பது சரியல்ல. கல்வித் துறையிலும், அதனுடைய அமைப்புத் துறையிலும், பயிற்சித் துறையிலும் பல விவரங்களைச் சொல்லி விவாதிக்கவேண்டிய அந்தப் பெரும் சபையினுடைய கூட்டத்தை குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட்டும்படியான ஒரு திருத்தத்தை நமது அரசாங்கம் கொண்டு வருவதற்கு ஏதாவது தடை இருக்கிறதா ? அதைச் செய்யவேண்டும் என்பதுதான் எங்களுடைய கேள்வி, செய்யப்படுமா ?

9-40 மணி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொன்னதைப் போல செனட் கூட்டத்தை 3 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டுவது பற்றி அரசு பரிசீலிக்கும். சட்டத் திருத்தம் வருகிறபோது அதை இடம் பெறச் செய்ய முடியுமா என்பது நிச்சயமாகக் கருதப்படும். ஆனால் செனட் என்பது ஆலோசனைக் குழுதான். சிண்டிகேட் என்பதுதான் ஆட்சிக் குழு. சிண்டிகேட்— ஆட்சிக் குழு என்பது அமைச்சரவையைப் போல ; செனட் என்பது சட்டமன்றம் போல. சில நேரங்களில் சட்டமன்றத்தினுடைய குரல் அதிகமாகி அமைச்சரவை வேலை தடைப்படுவதும் உண்டு. எனவே, அவற்றைப் பொறுத்து எந்த வகையில் செயல்படுத்த முடியும் என்பது மேலும் மேலும்—கல்வித் துறையைப் பொறுத்தவரையில் it is always in an experimental stage என்பதால் மேலும் மேலும்— ஆராயப்பட வேண்டிய ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆராய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது.

விராலிமலை சுப்பிரமணிய சுவாமி ஆலயத் தேர்.

*948. **திரு. வெ. இராசு :** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலையில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு சொந்தமான தேர் பழுது அடைந்துள்ளதை சீர் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விராலிமலை திருக்கோவிலுக்குச் சொந்தமான தேரினைத் திருப்பணி செய்வதற்கு செயல் திட்டம் அரசிடம் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட ஒரு திட்டம் நீண்ட நெடுங்காலமாக 1985ஆம் ஆண்டிலிருந்து அறநிலையத் துறை ஆணையரின் கோப்பிலே இருக்கிறது.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், விராலிமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக் கோவிலுக்குச் சொந்தமான தேரினைப் பழுதுபார்க்க திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு ரூ. 1,50,000-க்கு நிர்வாக அனுமதி 1987 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வெ. இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் தொகுதியிலுள்ள விராலிமலையில் அமைந்துள்ள சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் அந்த வட்டாரத்திலுள்ள மக்களால் வழிபடும் ஆலயங்களில் ஒன்றாக இருக்கின்ற காரணத்தால் அந்தத் தேரினை வருகின்ற திருவிழாக் காலங்களிலே சீர் செய்து ஓட்டுவதற்கு விரைவில் திட்டத்தை அமல் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

(பதில் இல்லை).

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அமெரிக்க வேளாண்மைத்துறை நிதி.

***2557. திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு வேளாண்மைத்-துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அமெரிக்க வேளாண்மைத்துறை நிதி அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலையில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு சொந்தமான தேர் பழுது அடைந்துள்ளதை சீர் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விராலிமலை திருக்கோவிலுக்குச் சொந்தமான தேரினைத் திருப்பணி செய்வதற்கு செயல் திட்டம் அரசிடம் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட ஒரு திட்டம் நீண்ட நெடுங்காலமாக 1985ஆம் ஆண்டிலிருந்து அறநிலையத் துறை ஆணையரின் கோப்பிலே இருக்கிறது.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், விராலிமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக் கோவிலுக்குச் சொந்தமான தேரினைப் பழுதுபார்க்க திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு ரூ. 1,50,000-க்கு நிர்வாக அனுமதி 1987 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் தொகுதியிலுள்ள விராலிமலையில் அமைந்துள்ள சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் அந்த வட்டாரத்திலுள்ள மக்களால் வழிபடும் ஆலயங்களில் ஒன்றாக இருக்கின்ற காரணத்தால் அந்தத் தேரினை வருகின்ற திருவிழாக் காலங்களிலே சீர் செய்து ஓட்டுவதற்கு விரைவில் திட்டத்தை அமல் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பதில் இல்லை).

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அமெரிக்க வேளாண்மைத்துறை நிதி.

***2557. திரு. பெ. சு. திருவேங்கடம்**: மாண்புமிகு வேளாண்மைத்-துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அமெரிக்க வேளாண்மைத்துறை நிதி அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பயிர்களை அதிக அளவில் சேதப்படுத்தும் காய்ப் புழு, புகையிலைப்புழு போன்றவற்றைக் கட்டுப்படுத்த நுண்வுயிர்க் கிருமிகளை உபயோகிக்கும் திட்டம் ஒன்றினை 24-2-1989 முதல் அமெரிக்க நிதி உதவியுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அதன் கீழ் செயல்படும் பயிர் பாதுகாப்பு ஆய்வு மையத்தில் செயல்படுத்தி வரு கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்கா உதவி செய்கிறது என்று சொல்லுகிறார்கள். அது பல்கலைக் கழகத்தில ஆய்வு மட்டத்தில் உள்ளதா? அல்லது அது விவசாயிகளுக்கு உணர்த்துகின்ற வகையில் அது செயல்படுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அது வேளாண்மைப் பல் கலைக் கழகத்தின் மூலம்தான் பயன்படுத்தப்பட்டு வரு கிறது. ஆனால் அங்கே இருக்கின்ற பண்ணைகளிலும் வயல்வெளிகளிலும் பரிட்சார்த்தமாக அது செய்யப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு உதவி நம்முடைய அரசு கேட்டது? அல்லது அமெரிக்கா அரசு ஏதாவது உதவி செய்துள்ளதா? அல்லது கடனாக வழங் கப்பட உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்கா நிதி உதவிதான் செய்து இருக்கிறது. சென்ற ஆண்டு 24-2-1989 முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. முதல் 5 ஆண்டுகளுக்கு ரூ. 34.97 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்திலே பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு அரசு எந்தவகையில் மானியமாக ஒதுக்கு கின்றது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வி யோடு தொடர்பு இல்லாதது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் விருத்தாச்சலத்தில் உள்ள முந்திரி ஆராய்ச்சிப் பண்ணைக்கு இந்த அமெரிக்க நிறுவனம் ஏதாவது உதவி அளித்து இருக்கிறதா ? அரசிடம் அதை மேலும் விரிவுபடுத்துவதற்கு திட்டம் ஏதாவது உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தொடர்புடைய கேள்வி அல்ல.

பருவ நிலையை முன்கூட்டி அறிய புதிய சாதனம்.

***3464. திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பருவ நிலையை முன்கூட்டி அறிய உதவும் வகையில் கோவை விவசாயப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்துள்ள புதிய சாதனத்தை அரசு எந்தெந்த இடங்களில் அமைக்க உத்தேசித் துள்ளது ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் அமைக்க உத்தேசித்துள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பருவ நிலையை முன்கூட்டி அறிய முடியாத காரணங்களினால் அதிகமான பணத்தைக் கொடுத்து வீரிய வித்துக்களை வாங்கி விவசாயிகள் மானாவாரி பகுதிகளிலே போடு கிறார்கள். குறிப்பிட்ட நேரத்திலே ஒரு வார காலத்திற்குள் மழை பெய்யும் என்று சொன்னால், அந்த விதை கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, கோவில் பட்டி, சங்கரன்கோயில் போன்ற மானாவாரி பகுதிகளில் பருவ நிலையை முன்கூட்டியே தெரிவிக்கக்கூடிய கருவியைப் பொருத்தி, விவசாயிகளுக்கு அவ்வப்போது பருவ நிலைகளைச் சொல்வதற் கான ஏற்பாட்டை செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டுகளில் மேலும் 5 மையங்கள் உருவாக்கப்பட உள்ளன. இவை தமிழகத்தில் 7 வேளாண்மை கால நிலைப் பகுதிகளில் அமையவுள்ளன. இந்தத் திட்டத்திற் கான நிலைகள் விரைவில் அறிவிக்கப்படும்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் விருத்தாச்சலத்தில் உள்ள முந்திரி ஆராய்ச்சிப் பண்ணைக்கு இந்த அமெரிக்க நிறுவனம் ஏதாவது உதவி அளித்து இருக்கிறதா ? அரசிடம் அதை மேலும் விரிவுபடுத்துவதற்கு திட்டம் ஏதாவது உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தொடர்புடைய கேள்வி அல்ல.

பருவ நிலையை முன்கூட்டி அறிய புதிய சாதனம்.

***3464. திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பருவ நிலையை முன்கூட்டி அறிய உதவும் வகையில் கோவை விவசாயப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்துள்ள புதிய சாதனத்தை அரசு எந்தெந்த இடங்களில் அமைக்க உத்தேசித் துள்ளது ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் அமைக்க உத்தேசித்துள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பருவ நிலையை முன்கூட்டி அறிய முடியாத காரணங்களினால் அதிகமான பணத்தைக் கொடுத்து வீரிய வித்துக்களை வாங்கி விவசாயிகள் மானாவாரி பகுதிகளிலே போடுகிறார்கள். குறிப்பிட்ட நேரத்திலே ஒரு வார காலத்திற்குள் மழை பெய்யும் என்று சொன்னால், அந்த விதை கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, கோவில் பட்டி, சங்கரன்கோயில் போன்ற மானாவாரி பகுதிகளில் பருவ நிலையை முன்கூட்டியே தெரிவிக்கக்கூடிய கருவியைப் பொருத்தி, விவசாயிகளுக்கு அவ்வப்போது பருவ நிலைகளைச் சொல்வதற்கான ஏற்பாட்டை செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டுகளில் மேலும் 5 மையங்கள் உருவாக்கப்பட உள்ளன. இவை தமிழகத்தில் 7 வேளாண்மை கால நிலைப் பகுதிகளில் அமையவுள்ளன. இந்தத் திட்டத்திற்கான நிலைகள் விரைவில் அறிவிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய சாதனம் கண்டுபிடிக்கப்பட்டதாக பத்திரிகையிலே பார்த்தேன். இந்தப் புதிய சாதனம் முன்கூட்டியே என்னென்ன பருவ நிலைகளை அறிந்து சொல்லக்கூடிய திறம் படைத்ததாக இருக்கும் என்பதைத் தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 50 ஆண்டுக் காலங்களில் பெய்த மழையின் அளவை சராசரியாகக் கணக்கிட்டுப் பார்த்து, அது வார அளவு வரை கணக்கிடப்பட்டு கொண்டுவரப் பட்டிருக்கிறது. கூடுமானவரை, மழை பெய்யும் அல்லது வேறு இதர பருவ நிலைகளை 10 நாட்களுக்கு முன்பு அறிவிக்கிற நிலை தற்போது உள்ளது.

உணவு வழங்கல் துறையின் பறக்கும் படை.

*330. திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழக அரசின் உணவு வழங்கல் துறைக்கு உதவியாக பறக்கும் படை என்ற பெயரில் (விஜிலன்ஸ் போலீஸ் படைப் பிரிவு) ஒரு படைப் பிரிவு பணிபுரிவது உண்மையா ?

(ஆ) அவர்களுக்கு அரசு வழங்கியுள்ள அதிகாரம் என்னென்ன ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பறக்கும் படை என்ற பெயரில் இல்லையென்றாலும் ஒரு காவல் ஆய்வாளர், ஒரு சார் காவல் ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் 6 அல்லது 7 காவலர்களைக் கொண்டு ஒரு காவல் படைப் பிரிவு (Police Squad) தொலை பேசிச் செய்தி மற்றும் ஈட்டு வசதிகளுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கி வருகிறது. அத்தியாவசியப் பண்டங்களை பதுக்கி வைத்தல், கடத்தல், அத்தியாவசியப் பண்டங்களில் கலப்படம் செய்தல் மற்றும் நியாயவிலைக் கடைகளில் நடக்கும் முறைகேடுகள் குறித்து ஏதேனும் புகார்கள் வந்தால், இப்பிரிவு உடனே அந்த இடத்திற்குச் சென்று நடவடிக்கை எடுக்கிறது. சென்னையில் மட்டும் மூன்று படைப்பிரிவுகள் உள்ளன. வாய்மொழியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ வரும் புகார்கள் மீதும் இப் பிரிவுகள் உடனடி நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் சுமார் 200 வழக்குகளைக் கண்டுபிடித்து சுமார் ரூபாய் 25 இலட்சம் மதிப்புள்ள அத்தியாவசியப் பண்டங்களைக் கைப்பற்றி, குற்றவாளிகள்மீது குற்ற வழக்குகள் தொடர்கின்றன.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய சாதனம் கண்டுபிடிக்கப்பட்டதாக பத்திரிகையிலே பார்த்தேன். இந்தப் புதிய சாதனம் முன்கூட்டியே என்னென்ன பருவ நிலைகளை அறிந்து சொல்லக்கூடிய திறம் படைத்ததாக இருக்கும் என்பதைத் தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 50 ஆண்டுக் காலங்களில் பெய்த மழையின் அளவை சராசரியாகக் கணக்கிட்டுப் பார்த்து, அது வார அளவு வரை கணக்கிடப்பட்டு கொண்டுவரப் பட்டிருக்கிறது. கூடுமானவரை, மழை பெய்யும் அல்லது வேறு இதர பருவ நிலைகளை 10 நாட்களுக்கு முன்பு அறிவிக்கிற நிலை தற்போது உள்ளது.

உணவு வழங்கல் துறையின் பறக்கும் படை.

*330. **திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழக அரசின் உணவு வழங்கல் துறைக்கு உதவியாக பறக்கும் படை என்ற பெயரில் (விஜிலன்ஸ் போலீஸ் படைப் பிரிவு) ஒரு படைப் பிரிவு பணிபுரிவது உண்மையா ?

(ஆ) அவர்களுக்கு அரசு வழங்கியுள்ள அதிகாரம் என்னென்ன ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பறக்கும் படை என்ற பெயரில் இல்லையென்றாலும் ஒரு காவல் ஆய்வாளர், ஒரு சார் காவல் ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் 6 அல்லது 7 காவலர்களைக் கொண்டு ஒரு காவல் படைப் பிரிவு (Police Squad) தொலைபேசிச் செய்தி மற்றும் ஈட்பு வசதிகளுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கி வருகிறது. அத்தியாவசியப் பண்டங்களை பதுக்கி வைத்தல், கடத்தல், அத்தியாவசியப் பண்டங்களில் கலப்படம் செய்தல் மற்றும் நியாயவிலைக் கடைகளில் நடக்கும் முறைகேடுகள் குறித்து ஏதேனும் புகார்கள் வந்தால், இப்பிரிவு உடனே அந்த இடத்திற்குச் சென்று நடவடிக்கை எடுக்கிறது. சென்னையில் மட்டும் மூன்று படைப்பிரிவுகள் உள்ளன. வாய்மொழியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ வரும் புகார்கள் மீதும் இப் பிரிவுகள் உடனடி நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் சுமார் 200 வழக்குகளைக் கண்டுபிடித்து சுமார் ரூபாய் 25 இலட்சம் மதிப்புள்ள அத்தியாவசியப் பண்டங்களைக் கைப்பற்றி, குற்றவாளிகள்மீது குற்ற வழக்குகள் தொடர்கின்றன.

(ஆ) எந்த வளாகத்தையும் சோதனை செய்யவும், பதுக்கி வைக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பண்டங்களைக் கைப்பற்றவும் குற்றவாளிகளைக் கைது செய்து வழக்கு விசாரணைக்கு அனுப்பவும், தனி வழக்கு மன்றங்களில, குற்ற அறிக்கை தாக்கல் செய்து வழக்கு தொடரவும், மற்றும் கைப்பற்றிய பொருள்களைப் பறிமுதல் செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிக்கை அனுப்பவும் இப்பிரிவுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளன.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஜிலன்ஸ் போலீஸ் படைப்பிரிவு என்று இருக்கின்ற இந்தப் படைப்பிரிவு ஒரு குறிப்பிட்ட எல்லைப் பகுதியிலே மட்டுமிருந்து உணவுக் கட்டுப்பாட்டுக் காரியங்களைக் கவனிக்கின்ற அளவுக்கு அதனுடைய அதிகார வரம்பை மாற்றியமைக்கின்ற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா? ஏற்கெனவே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்கின்ற கழகத்திலே ரெவின்யூ அத்தாரிட்டீஸ் என்று சொல்லக்கூடிய வருவாய்த்துறை அதிகாரிகள் இருக்கும்போது அவர்கள் கவனிக்காத புதிய என்ன கண்டுபிடிப்பை இந்த விஜிலன்ஸ் போலீஸ் படைப்பிரிவு கண்டுபிடிக்க அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற இந்தக் கருத்தை அரசு பரிசீலனை செய்தது. பொது மக்களிடத்திலிருந்தும், வியாபாரிகளிடத்திலேயிருந்தும், மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்தும் பல புகார்கள் வந்தன. குறிப்பாக, ஃபுட் செல் என்ற பிரிவு பல தவறுகளைச் செய்யக்கூடியதாகவும் பல இடங்களிலே வியாபாரிகளையும், விவசாயிகளையும் மிரட்டி பணம் பறிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை தமிழகத்திலே இருப்பதாகவும் வந்த புகார்களை ஆய்வு செய்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடத்திய ஒரு ஆய்வு கூட்டத்தில் இனிமேல் ஃபுட் செல் தமிழகத்திலே தேவையில்லை என்றும், எல்லையைப் பாதுகாப்பதற்காக, குறிப்பாக கேரளா பார்டர் போன்ற இடங்களிலே, கோவைக்கு அருகில், அதைப்போலவே மொனாபொலி ஏரியாவாக இருக்கக்கூடிய தஞ்சை மாவட்டத்தில் மட்டும் ஃபுட் செல் இருந்தால் போதும்; மாவட்டத் தலைநகரங்களில் தேவையில்லை என்ற ஒரு முடிவை அரசு எடுத்திருக்கிறது. விரைவில் அது அமல்படுத்தப்படும்.

9-50 மணி

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாடு வழியாக பிற மாநிலங்களுக்கு உணவுப் பொருட்கள் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே இப்போது அமைக்கப்பட்டிருக்கின்ற

இதுபோன்ற விஜிலன்ஸ் படைப் பிரிவினரால் திடீர் என்று ஒரு நாள் சுமார் ரூ. 50 ஆயிரம் மதிப்புள்ள சரக்குகள் கைப்பற்றப் பட்டுள்ளன என்று செய்திகள் அறிவிக்கப்படுகின்றன. ஆய்ந்து பார்க்கும்போது, அது முறைப்படி பிற மாநிலங்களில் இருந்து தமிழ்நாடு வழியாக இன்னொரு மாநிலத்திற்குச் செல்லக்கூடிய ஆதாரபூர்வமானதாக இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டு, பிறகு அது ரிலீஸ் செய்யப்படுகிறது. இதற்குப் பிரதான காரணம் என்னவென்றால், தமிழ்நாட்டு அதிகாரிகளுக்குத் தெரிந்த ஆங்கிலம், அல்லது தமிழில் அவர்களது பில்கள் இல்லாத நிலையில் கொண்டுவரப்படுகிறபோது இதுபோல் குழப்பம் ஏற்படுகிறது என்று தெரிய வருகிறது. ஆகவே இவற்றை ஒரு சீராக்க, வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாடு வழியாக பிற மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிற பொருளாக இருந்தாலும் அதைப் பொது மொழி என்று சொல்லப்படுகின்ற ஆங்கிலத்திலோ அல்லது சம்பந்தப்பட்ட மாநில மொழியிலோ அந்த பொருள் களுடைய பில்கள் போடப்பட வேண்டும் என்பதை அரசு அவர் களுக்கு அறிவுறுத்துமா, அதற்கு போதிய ஆலோசனை வழங்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : உணவு இலாக்கா வில் மொழிப் பிரச்சினை பற்றி வற்புறுத்த முடியாது. குஜராத் போன்ற மாநிலங்களில் இருந்தும் பல்வேறு மாநிலங்களில் இருந் தும் உணவுப் பொருள்கள், அத்தியாவசியப் பொருட்கள், கேரளா போன்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு வழியாகத்தான் கொண்டு செல்லப்படுகின்றன. அப்படிச் செல்கின்ற நேரத்தில் சில பில்கள் இந்தி மொழியில் எழுதப்பட்டு இருக்கின்றன. சில பில்கள் தெலுங்கில் எழுதப்படுகின்றன. சில பில்கள் கர்நாடக மொழி யில் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் நமது அதிகாரிகள் உடனடியாகப் படித்துத் தெரிந்து கொள்ள முடியா விட்டாலும் அது போலி பில்களா அல்லது உண்மையான பில்களா என்பதை ஆய்ந்துதான் வழக்குகளைப் பதிவு செய்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இந்தக் கருத்தை அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுக் கட்டுப்பாட்டிலிருக்கும் பொருட் களைக் கடத்தல் செய்வதைப் போன்று நியாய விலைக் கடைகளி லிருந்தும் உணவுப் பொருட்கள் கடத்தல் செய்யப்படுவதைத் தடுப்பதும் அரசின் ஆய்விலிருந்து வருவதாக ஏற்கெனவே அறிவிக் கப்பட்டது. அதற்கான செயற்குறிப்பு ஏதும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: நியாய விலைக் கடைகளில் இருந்து உணவுப் பொருட்கள் எங்காவது கடத்தப் பட்டால் அரசினுடைய கவனத்திற்கு அது கொண்டுவரப்பட்ட

24 மணி நேரத்தில் அவற்றைப் பறிமுதல் செய்தும், சம்பந்தப் பட்டவர்களைக் கைது செய்தும் வழக்குகள் தொடரப்பட்டு வரு கின்றன. நான்கு தினங்களுக்கு முன்னால் கூட வட சென்னை யில், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொகுதியி லிருந்து 7 மூட்டை அரிசி, ரிக்ஷாவில் கடத்தப்படுகிறது என்ற செய்தி வந்தவுடன், அங்கு உடனடியாகச் சென்று அதைப் பறி முதல் செய்து அதைக் கொண்டு சென்ற ஊழியரைக் கைதுசெய்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

புதிய நியாய விலைக்கடைகள் திறக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம்.

*1349. திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் உள்ள பகுதியில் புதிய நியாய விலைக் கடைகள் திறப்பதற்கான அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர் களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் குடும்ப கார்டுகள் உள்ள பகுதிகளை இரண் டாகப் பிரிப்பதற்கு வழியில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் ஆயிரம் குடும்பக் கார்டுகள் உள்ள கடைகள், பல்வேறு கிராமப் பகுதிகளை அடக்கியிருக்கின்ற காரணத்தால், ஒரு கடையைச் சேர்ந்த கிராமங்கள் 4 அல்லது 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற காரணத்தால், அந்தக் கடைகளுக்குக் குறைந்த அளவுக்குக் கார்டு கள் இருந்தாலும் மக்களுடைய வசதியை உத்தேசித்து தனி கடை களாகவோ அல்லது இருக்கின்ற ஊழியர்களைச் சில நாட்களுக்கு ஒரு கிராமப் பகுதிக்கும் இன்னொரு நாட்களுக்கு இன்னொரு பகுதிக்கும் பணிக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்வதற்கு அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர் களே, 1978ஆம் ஆண்டு வருவாய் கிராமத்திற்கு ஒரு நியாயவிலைக் கடை என்ற முறையில், கிராமப் பகுதிகளில் இன்றைய தினம் 17,382 கடைகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல 3 கி. மீட்டர் அல்லது 5 கி. மீட்டர்

24 மணி நேரத்தில் அவற்றைப் பறிமுதல் செய்தும், சம்பந்தப் பட்டவர்களைக் கைது செய்தும் வழக்குகள் தொடரப்பட்டு வரு கின்றன. நான்கு தினங்களுக்கு முன்னால் கூட வட சென்னை யில், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொகுதியி லிருந்து 7 மூட்டை அரிசி, ரிக்ஷாவில் கடத்தப்படுகிறது என்ற செய்தி வந்தவுடன், அங்கு உடனடியாகச் சென்று அதைப் பறி முதல் செய்து அதைக் கொண்டு சென்ற ஊழியரைக் கைதுசெய்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

புதிய நியாய விலைக்கடைகள் திறக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம்.

*1349. **திருமதி பாப்பா உமாநாத்**: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் உள்ள பகுதியில் புதிய நியாய விலைக் கடைகள் திறப்பதற்கான அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர் களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் குடும்ப கார்டுகள் உள்ள பகுதிகளை இரண் டாகப் பிரிப்பதற்கு வழியில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் ஆயிரம் குடும்பக் கார்டுகள் உள்ள கடைகள், பல்வேறு கிராமப் பகுதிகளை அடக்கியிருக்கின்ற காரணத்தால், ஒரு கடையைச் சேர்ந்த கிராமங்கள் 4 அல்லது 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற காரணத்தால், அந்தக் கடைகளுக்குக் குறைந்த அளவுக்குக் கார்டு கள் இருந்தாலும் மக்களுடைய வசதியை உத்தேசித்து தனி கடை களாகவோ அல்லது இருக்கின்ற ஊழியர்களைச் சில நாட்களுக்கு ஒரு கிராமப் பகுதிக்கும் இன்னொரு நாட்களுக்கு இன்னொரு பகுதிக்கும் பணிக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்வதற்கு அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர் களே, 1978ஆம் ஆண்டு வருவாய் கிராமத்திற்கு ஒரு நியாயவிலைக் கடை என்ற முறையில், கிராமப் பகுதிகளில் இன்றைய தினம் 17,382 கடைகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல 3 கி. மீட்டர் அல்லது 5 கி. மீட்டர்

இடைவெளி இருக்குமானால் கார்டுகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அல்ல—இருக்கின்ற எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு புதிய கடைகளைத் தொடங்குவதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை இதுவரையில் எடுத்து வந்திருக்கிறது. இருக்கின்ற பிரச்சினை என்ன என்பதைச் சொல்கிறேன். இப்போது 21,134 கடைகள் இயங்கிக் கொண்டு வருகின்றன. புதிய கடை ஒன்றைத் தொடங்குவது என்று சொன்னால் அரசாங்கம் 4,200 ரூபாய் மானியம் கொடுக்க வேண்டி இருக்கிறது. எனவே தான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இப்படிப் பல முறையீடுகள் வந்த காரணத்தால் 19–10–1989 அன்று, எங்கெல்லாம் பகுதி நேரக் கடைகள் வேண்டும் என்று கோரிக்கைகள் வருகின்றனவோ அந்தக் கிராமங்களில் இடத்தை மட்டும் வாடகை இல்லாமல் இலவசமாகக் கொடுப்பார்களேயானால் அந்த இடங்களில் பகுதி நேரக் கடைகளைத் திறக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன.

9-55 மணி

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களைப் போல் சென்னையிலும் பெரும்பாலான இடங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரேஷன் கார்டுகளை வைத்து பொருட்களை வினியோகம் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அது மாற்றியமைக்கப்படுமா ? அதே நேரத்தில் 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தூரம் தள்ளிப் போய் ரேஷன் பொருட்களை வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு—புதிய ரேஷன் கடைகளை ஆங்காங்கு அமைப்பதற்கான விண்ணப்பங்கள் ஏராளமாக வந்திருக்கின்றன. அமைச்சர் அவர்கள் முறைப்படி ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஆயிரம் கார்டுகளுக்கு மேலே இருக்கக்கூடிய கடைகள் இப்போது தமிழ்நாட்டில் 2,855 கடைகள் இருக்கின்றன. அங்கெல்லாம் அதிகமான மக்கள் உணவுப் பொருட்களை வாங்குகிறபோது மிகுந்த அல்லல்படுகிறார்கள். அதைப் பிரிக்க வேண்டுமென்று அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. ஜனவரி மாதத்திற்குப் பிறகு ஆயிரம் கார்டுகளுக்கு மேலே இருக்கக்கூடிய கடைகள் இரண்டாகப் பிரிக்கப்படும். அது மட்டுமல்ல. ஓடைகள், மலைகள் போன்ற பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு வசதியாகக் கடைகள் அமைத்துத் தரவேண்டும் என்ற அடிப்படையில் 100 கார்டுகள் இருந்தால் கூட அவர்களுக்காக ஒரு கடை திறக்கப்பட்டு இருக்கிறது. அப்படி 100 கார்டுகளுக்குக் கீழே உள்ள கடைகள் மொத்தம் 780. 100 கார்டுகளிலிருந்து 200 கார்டுகள் வரையுள்ள கடைகள் 2,287. 201 கார்டுகளுக்கும், 300 கார்டுகளுக்கும் இடையே உள்ள கடைகள் 2,480. இப்படி 100 கார்டுகளுக்குக் கீழே இருந்தாலும் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரம் கார்டுகளுக்கு மேலே இருக்கின்ற கடைகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றை இரண்டாகப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேரக் கடைகளைத் திறப்பதற்கு அரசு முன் வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பகுதி நேரக் கடைகளைத் திறப்பதைப் பொறுத்தவரையில் அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற துணைப்பதிவாளர்களுக்கே அதிகாரம் தந்தால் காலதாமதம் தவிர்க்கப்படும். எனவே துணைப் பதிவாளருக்கு அது குறித்து அதிகாரம் அளிக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்போது அரசு எடுத்திருக்கிற முடிவு அரசாங்கத்திற்குச் செலவு இல்லாமல் இலவசமாகக் கட்டிடங்கள் கொடுத்தால் அந்த இடங்களில் பகுதி நேரக் கடைகளுக்கு அனுமதிக்கப்படும் என்பது தான். அவ்வாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது. காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர் கூட்டுறவு சங்க முறைகேடுகள்.

*3360 **திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களின் கூட்டுறவு நாணய சங்கத்தின் வைப்பு மற்றும் ஊழியர்களுக்கு கடன் வழங்குவதில் ரூ. 5.41 இலட்சம் முறைகேடுகள் நடந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே,

(அ) ஆம். தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிப் பணியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ. 3.48 இலட்சம் மட்டும் கையாடல் நடைபெற்றுள்ளது. இந்த கையாடல் 1980-81 முதல் 1984-85-ம் ஆண்டு வரை நடந்துள்ளது.

(ஆ) கையாடலில் சம்பந்தப்பட்டவர்கள் மீது காவல் துறையில் புகார் செய்யப்பட்டு புலன் விசாரணைக்குப் பின் சென்னை ஜார்ஜ் டவுன் குற்றவியல் நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு தற்போது விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. கையாடல் செய்யப்பட்ட தொகையை வசூலிக்க தண்டத் தீர்வை நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேரக் கடைகளைத் திறப்பதற்கு அரசு முன் வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பகுதி நேரக் கடைகளைத் திறப்பதைப் பொறுத்தவரையில் அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற துணைப்பதிவாளர்களுக்கே அதிகாரம் தந்தால் காலதாமதம் தவிர்க்கப்படும். எனவே துணைப் பதிவாளருக்கு அது குறித்து அதிகாரம் அளிக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்போது அரசு எடுத்திருக்கிற முடிவு அரசாங்கத்திற்குச் செலவு இல்லாமல் இலவசமாகக் கட்டிடங்கள் கொடுத்தால் அந்த இடங்களில் பகுதி நேரக் கடைகளுக்கு அனுமதிக்கப்படும் என்பது தான். அவ்வாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது. காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர் கூட்டுறவு சங்க முறைகேடுகள்.

***3360 திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களின் கூட்டுறவு நாணய சங்கத்தின் வைப்பு மற்றும் ஊழியர்களுக்கு கடன் வழங்குவதில் ரூ. 5.41 இலட்சம் முறைகேடுகள் நடந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே,

(அ) ஆம். தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிப் பணியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ. 3.48 இலட்சம் மட்டும் கையாடல் நடைபெற்றுள்ளது. இந்த கையாடல் 1980-81 முதல் 1984-85-ம் ஆண்டு வரை நடந்துள்ளது.

(ஆ) கையாடலில் சம்பந்தப்பட்டவர்கள் மீது காவல் துறையில் புகார் செய்யப்பட்டு புலன் விசாரணைக்குப் பின் சென்னை ஜார்ஜ் டவுன் குற்றவியல் நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு தற்போது விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. கையாடல் செய்யப்பட்ட தொகையை வசூலிக்க தண்டத் தீர்வை நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

1989 நவம்பர் 2]

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, இந்த முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் யார், யார்? அவர்கள் மீது குற்றவியல் வழக்கு தொடரப்பட்டதோடு அல்லாமல் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கச் செயல்பாடு குறித்து 1986-87ஆம் ஆண்டில் விசாரணை மேற்கொண்டு மூன்று இலட்சத்து நாற்பத்தெட்டாயிரம் ரூபாய் சங்க நிதி கையாடல செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கையாடலிலே ஈடுபட்டவர்கள் அந்தச் சங்கத்தின் நிர்வாகிகள், அந்த போர்டு கலைக்கப்பட்டு இப்போது தனி அலுவலர் நியமிக்கப்பட்டு அவர்கள் மீது நான் சொன்ன இந்த நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படிக் கையாடல் செய்த நேரத்தில் ஒரே நேரத்தில் கையாடல் செய்யாமல் சென்னை மத்திய கூட்டுறவு வங்கிக் கணக்கிலிருந்து பெற்ற தொகைகளைச் சரியாகக் கணக்கில் கொண்டு வராமல் கையாடல் செய்த வகையில் மோசடி செய்தது 2 லட்சத்து 17 ஆயிரத்து 590 ரூபாய். அலங்கார் பிரிண்டர்ஸ் என்கிற பெயரில் செலவு செய்ததாக பொய்யாக கணக்கு எழுதி மோசடி செய்தது 2 ஆயிரத்து 525 ரூபாய். முன் பணத் தொகைகளை வேறு செலவினங்களுக்குச் செய்ததாக பொய்க் கணக்கு எழுதி மோசடி செய்தது 22 ஆயிரத்து 845 ரூபாய். அதுபோல் நுகர்வோர் கடன் தொகைகளைப் பற்று எழுதாமல் மோசடி செய்தது 31 ஆயிரம் ரூபாய். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கன சேமிப்பு நிதி வட்டி பட்டுவாடாவில் மோசடி செய்து கையாடல் செய்த தொகை 56 ஆயிரத்து 397 ரூபாய். அதுபோல பொய் கணக்கு எழுதி மோசடி செய்தது 17 ஆயிரத்து 800 ரூபாய் ஆகும். இப்படிப் பல்வேறு தலைப்புகளில் இந்த மோசடிகள் நடைபெற்றிருக்கின்றன. அவர்கள் எல்லோர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இச்சங்க நிர்வாகக் குழு 7—8—1986 அன்று கலைக்கப்பட்டு துறை அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

திரு. உ. ரா. வரதரர்சன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கையாடல்கள் எல்லாம் 3 அல்லது 4 ஆண்டுக் காலம் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. இந்த முறைகேடுகளைக் காலத்தே கண்டு பிடிக்கவும், தடுத்து நிறுத்தவும் தவறிய கூட்டுறவுத் துறை அதிகாரிகள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதனுடைய முழு விவரம்—தீர்ப்பு கிடைத்த பிறகு, இதற்கு யார் யார் பொறுப்போ அவர்களைப் பற்றிய தகவல்—அரசுக்குக் கிடைக்குமேயானால் நிச்சயமாக யார், எந்த அதிகாரியாக இருந்தாலும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை நகரில் வைகை ஆற்றின் குறுக்கே உள்ள கல்பாலம்.

*3200. திரு. ஆர். சாமிநாதன் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) மதுரை நகரில் வைகை ஆற்றின் குறுக்கே உள்ள கல்பாலம் சீர்செய்யப்படாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர்செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எதிர்வரும் ஆண்டுகளில் பராமரிப்பு நிதிகளைக் கொண்டு கட்டம்கட்டமாக சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கல்பாக்கத்தில் ஏற்கெனவே சைக்கிள் ரிக்சா, மாட்டு வண்டி, லாரிகள் போன்றவை சென்று கொண்டிருந்தன. இப்போது தினமும் காலையிலும், மாலையிலும் நகரப் பேருந்துகளும் அந்தப் பகுதியில் திருப்பி விடப்படுகின்றன. எனவே மக்கள் அவசரமாக மருத்துவ மனைக்கோ அல்லது நீதிமன்றங்களுக்கோ செல்ல போக்குவரத்து நெரிசல் அங்கே இடைஞ்சலாக இருக்கிறது. இந்தப் போக்குவரத்து இடைஞ்சலைத் தவிர்க்க மதுரை கல்பாலத்திற்கு அருகே, கிழக்கே அமைந்துள்ள ஆல்பர்ட் விக்டர் மேம்பாலத்தை விரிவுபடுத்தியோ அல்லது மதுரை கல்பாலத்திலிருந்து மேற்கே 4 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள காமராஜ் மேம்பாலத்திற்கு இடைப்பட்ட இடத்தில், மதுரை தெற்குப் பாகத்தில் இருந்து வடகரைக்குச் செல்ல தனியாக ஒரு தரைப் பாலத்தையோ அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு பதிவு செய்யப் பட்டிருக்கிறது. இதனுடைய முழு விவரம்—தீர்ப்பு கிடைத்த பிறகு, இதற்கு யார் யார் பொறுப்போ அவர்களைப் பற்றிய தகவல்—அரசுக்குக் கிடைக்குமேயானால் நிச்சயமாக யார், எந்த அதிகாரியாக இருந்தாலும் தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை நகரில் வைகை ஆற்றின் குறுக்கே உள்ள கல்பாலம்.

*3200. **திரு. ஆர். சாமிநாதன் :**

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) மதுரை நகரில் வைகை ஆற்றின் குறுக்கே உள்ள கல்பாலம் சீர்செய்யப்படாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர்செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எதிர்வரும் ஆண்டுகளில் பராமரிப்பு நிதிகளைக் கொண்டு கட்டம்கட்டமாக சீரமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கல்பாலத்தில் ஏற்கெனவே சைக்கிள் ரிக்சா, மாட்டு வண்டி, லாரிகள் போன்றவை சென்று கொண்டிருந்தன. இப்போது தினமும் காலையிலும், மாலையிலும் நகரப் பேருந்துகளும் அந்தப் பகுதியில் திருப்பி விடப்படுகின்றன. எனவே மக்கள் அவசரமாக மருத்துவ மனைக்கோ அல்லது நீதிமன்றங்களுக்கோ செல்ல போக்கு வரத்து நெரிசல் அங்கே இடைஞ்சலாக இருக்கிறது. இந்தப் போக்குவரத்து இடைஞ்சலைத் தவிர்க்க மதுரை கல்பாலத் திற்கு அருகே, கிழக்கே அமைந்துள்ள ஆல்பர்ட் விக்டர் மேம்பாலத்தை விரிவுபடுத்தியோ அல்லது மதுரை கல்பாலத் திலிருந்து மேற்கே 4 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள காமராஜ் மேம்பாலத்திற்கு இடைப்பட்ட இடத்தில், மதுரை தெற்குப் பாகத்தில் இருந்து வடகரைக்குச் செல்ல தனியாக ஒரு தரைப் பாலத்தையோ அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1989 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் இந்தப் பாலத்தை சீர்படுத்த வேண்டும் என்பதை அரசு உணர்கிறது. அதைச் சீர்செய்வதற்குச் சுமார் 4 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்று அரசு அனுமதி கேட்டு பொறியாளர்கள் எழுதியிருக்கிறார்கள். அதற்கு இடையில் மேடு பள்ளங்களை, குண்டு குழிகளாக இருப்ப வற்றை உடனடியாகச் செப்பனிட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு அப்பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அடுத்து, மாற்று வழிகளைப் பற்றி உறுப்பினர் சொன்ன கருத்துக்களை இந்த அரசு பின்னர் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கல்பாலத்தில் ஏற்கெனவே ஆக்கிரமிப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதில் அதிகமாக ஆட்களும், லாரிகளும் ஆக்கிரமிக்கும் நிலை இருக்கிறது. அங்கே, அந்தக் கல்பாலத்தில் லாரிகளை நிறுத்திக்கொண்டு சுத்தம்செய்கிறார்கள். எனவே, விரைவில் அரசு அங்குள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நல்ல முடிவை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஏரி, குளம், குட்டைகளை ஆக்கிரமிப்பு செய்வதைப்பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது பாலத்தையும் ஆக்கிரமிக்கிறார்கள் என்ற செய்தியை உறுப்பினர் தெரிவித்திருக்கிறார். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து விடப்படும் நீரை வெள்ளாறு இராஜன் கால்வாயில் விடுதல்.

*3256. டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி ;
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பரவனாற்றுக் கரை களைச் சீர்படுத்தி, ஆக்கிரமிப்புகளை அகற்றி மராமத்து எடுத்து நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து விடப்படும் நீரை வெள்ளாறு இராஜன் கால்வாயில் விட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி ஒரே மாத்திரையில் பல வைட்டமின்களை உள்ளடக்குவது போல பல கேள்விகளை உள்ளடக்கி ஒரே கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள்.

1989 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் இந்தப் பாலத்தை சீர்படுத்த வேண்டும் என்பதை அரசு உணர்கிறது. அதைச் சீர்செய்வதற்குச் சுமார் 4 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்று அரசு அனுமதி கேட்டு பொறியாளர்கள் எழுதியிருக்கிறார்கள். அதற்கு இடையில் மேடு பள்ளங்களை, குண்டு குழிகளாக இருப்ப வற்றை உடனடியாகச் செப்பனிட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு அப்பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அடுத்து, மாற்று வழிகளைப் பற்றி உறுப்பினர் சொன்ன கருத்துக்களை இந்த அரசு பின்னர் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ஆர். சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கல்பாலத்தில் ஏற்கெனவே ஆக்கிரமிப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதில் அதிகமாக ஆட்களும், லாரிகளும் ஆக்கிரமிக்கும் நிலை இருக்கிறது. அங்கே, அந்தக் கல்பாலத்தில் லாரிகளை நிறுத்திக்கொண்டு சுத்தம்செய்கிறார்கள். எனவே, விரைவில் அரசு அங்குள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நல்ல முடிவை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஏரி, குளம், குட்டைகளை ஆக்கிரமிப்பு செய்வதைப்பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது பாலத்தையும் ஆக்கிரமிக்கிறார்கள் என்ற செய்தியை உறுப்பினர் தெரிவித்திருக்கிறார். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து விடப்படும் நீரை வெள்ளாறு இராஜன் கால்வாயில் விடுதல்.

*3256. டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி ;
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பரவனாற்றுக் கரை களைச் சீர்படுத்தி, ஆக்கிரமிப்புகளை அகற்றி மராமத்து எடுத்து நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து விடப்படும் நீரை வெள்ளாறு இராஜன் கால்வாயில் விட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி ஒரே மாத்திரையில் பல வைட்டமின்களை உள்ளடக்குவது போல பல கேள்விகளை உள்ளடக்கி ஒரே கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள்.

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பரவனாற்றுக் கரைகளை சீரமைப்பது, ஆக்கிரமிப்புகளை அகற்றி மராமத்து செய்வது, அடுத்து நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து விடப்படும் நீரை வெள்ளாறு இராஜன் கால்வாயில் விடுவதற்குத் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று 3,4 கேள்விகளை உள்ளடக்கி ஒரே கேள்வியாக இங்கே கேட்டிருக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் பரவனாற்று கரைகளை பலப்படுத்துவதைப் பொறுத்தவரையில் பரவனாற்றின் வலது கரையின் ஒரு பகுதியை பலப்படுத்துவதற்காக ஆக்சன் ஸ்கீம், செயலாற்றும் திட்டத்தின் கீழ் அந்தப் பணி செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

10-05 மணி

ஆற்றின் இடது கரையைச் சீரமைக்க நேஷனல் வாட்டர் மேனேஜ்மெண்ட் பிராஜக்ட்டின் மூலமாக ஒரு திட்டம் தீட்டப் பட்டு, அந்தத் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. ஆற்றில் ஆக்கிரமிப்புகளைப் பற்றிக் கேள்வி கேட்டிருக்கிறார். நீர் போக்குக்குத் தடையாக உள்ள ஆக்கிரமிப்புகள் இரண்டு வகைப்படும். ஒன்று, மனிதர்களால் ஏற்படுகின்ற ஆக்கிரமிப்பு கள். இன்னும் ஒன்று, இயற்கையாக ஏற்படுவது. இயற்கையாக ஏற்படுவதற்குச் சீமைக் காட்டாமணி, கருவேல மரங்கள் காரண மாகும். சீமைக் காட்டாமணி ஆற்றுப் படுகைகளிலும், ஏரிகளிலும் நிறைய வளர்ந்து, நீர் போக்குவரத்தைத் தடை செய்கிறது. எனவே சீமைக் காட்டாமணியை அகற்றுவதற்கு அரசு விரைவாக எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆடூர் அகரம் பக்கத்திலே இருக்கிற பாலத்திற்கு மேற்கேயும், கிழக்கே யும் கூட ஒரு பர்லாங் தூரத்திற்கு இத்தகைய காட்டாமணியை அழிக்கின்ற வேலையை அரசு நடத்தி இருக்கிறது. மேற்கொண்டு சீமைக் காட்டாமணியை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்கும். அடுத்து, கருவேல மரங்கள். கருவேல மரங்களும் நீர் போக்கு வரத்திற்குத் தடையாக இருக்கின்றன. இது வனத் துறையாலே நடப்பட்ட ஒன்றாகும். எனவே இவற்றை முழுவதுமாக எடுக்க வேண்டுமென்று வனத் துறையை நாங்கள் கேட்டுக் கொண்டிருக் கிறோம். அடுத்து மனிதர்களால் ஏற்படுகின்ற ஆக்கிரமிப்புகள். கரையினுடைய எல்லை எவ்வளவு என்று தெரிந்தால்தான் அவர் கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்களா, இல்லையா என்பது தெரியும். எனவே கரையினுடைய எல்லையை நிர்ணயிக்க வரு வாய்த்துறை சர்வே குழுவினிடம் அந்தப் பணி ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. எங்களுக்கு அந்த முடிவு தெரிந்த பிறகு, அவற்றை எடுக்க, ஆக்கிரமிப்பு இருந்தால் அகற்றுவதற்கு வேண்டிய நட வடிக்கைகள் எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, நெய்வேலியிலிருந்து தண்ணீர் இரண்டாவது சுரங்கத் திலே இருக்கிற மிகை நீர் இந்தக் கால்வாயிலே, அதாவது வெள் ளாற்று ராஜன் கால்வாயிலே விடப்படுமா என்று ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலே இருக்கிற மிகை நீர் இந்திரா காந்தி கால்வாய் மூலம் வடக்குப்

1989 நவம்பர் 2]

பிரதான கால்வாயிலே விடப்பட்டு, பிறகு அதன்மூலம் விருத்தாசலம் அணைக்கட்டு பாசன அமைப்பின் கீழ் 3,250 ஏக்கரும், சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசனமாக 3,250 ஏக்கரும் இப்போது பாசனம் பெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் மிகை நீரை நெய்வேலி நிலக்கரி நிறுவனம் விடுமானால், அவற்றைத் தாங்குவதற்கு, அந்தக் கொள்ளளவை ஏற்றுக்கொள்வதற்கு இந்திரா காந்தி கால்வாயால் முடியுமா என்று அரசு ஆய்ந்திருக்கிறது. இந்திரா காந்தி கால்வாயைப் பலப்படுத்துவதற்கு அரசு 45 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைத் தீட்டி அது அரசினுடைய ஒப்புதலுக்காக வந்திருக்கிறது.

மதியுள்ளான் பாலத்தைத் திருப்பிக் கட்டுதல்.

*3480. திரு. வி. தம்புசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கச்சனத்தில் இருந்து வலிவலம் கீவளூர் வழியாக நாகை செல்லும் மார்க்கத்தில் வலிவலம் அருகில் மதியுள்ளான் பாலம் இடிந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதை சீர்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீவளூர் கச்சனம் சாலையில் அமைந்துள்ள மதியுள்ளான் பாலம் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட பாலமாகும். 7—1—1981 அன்று ஓ.என்.ஜி.சி.-க்குச் சொந்தமான ஒரு கனரக வண்டி அந்தப் பாலத்தின் மீது செல்லும் போது பாலத்தின் வளைவுப் பகுதி பழுது அடைந்துவிட்டது. இதனால் அந்தச் சாலையில் போக்குவரத்து தடைப்பட்டது. சாலையில் போக்குவரத்து தடையின்றிச் செல்வதற்காக ஒரு வார காலத்திற்குள் தற்காலிகமாக ஆர்.சி.சி. குழாய் அமைத்து, மாற்றுப் பாதை அமைக்கப்பட்டு, மாற்றுப் பாதையில் போக்குவரத்துத் திருப்பி விடப்பட்டது. இவற்றைச் சீர் செய்ய வேண்டுமென்று ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அந்த மதிப்பீடு. எனவே, அந்தப் பணியைச் செய்வதற்காக 26—7—1989 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன. ஒப்பந்தப் புள்ளிகள் மதிப்பீடு 9.38 பர்சன்ட்டுக்கு மேல் வரப்பெற்றதால், மறு ஒப்பந்தப் புள்ளி 8—11—1989-க்குள் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளி இறுதியாக்கப்பட்டதற்குப் பிறகு பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

10-10 மணி

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிட்டிருக்கிற பாலத்தைச் சீரமைக்கும் வேலை காலம் கடந்து வருவதால், அதன் மூலம் பாசனத்திற்சாகச் செல்கிற நீர் தடைப்படுகிறது. ஆற்றினுடைய பாலத்தின் அகலத்தைக் குறைத்து குறுகிய குழாய் போடப்பட்டிருப்பதால், அதன் மூலமாகச் செல்கிற நீர் தடைப்பட்டு அதன் காரணமாக சரியான

1989 நவம்பர் 2]

பிரதான கால்வாயிலே விடப்பட்டு, பிறகு அதன்மூலம் விருத்தாசலம் அணைக்கட்டு பாசன அமைப்பின் கீழ் 3,250 ஏக்கரும், சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசனமாக 3,250 ஏக்கரும் இப்போது பாசனம் பெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் மிகை நீரை நெய்வேலி நிலக்கரி நிறுவனம் விடுமானால், அவற்றைத் தாங்குவதற்கு, அந்தக் கொள்ளளவை ஏற்றுக்கொள்வதற்கு இந்திரா காந்தி கால்வாயால் முடியுமா என்று அரசு ஆய்ந்திருக்கிறது. இந்திரா காந்தி கால்வாயைப் பலப்படுத்துவதற்கு அரசு 45 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைத் தீட்டி அது அரசினுடைய ஒப்புதலுக்காக வந்திருக்கிறது.

மதியுள்ளான் பாலத்தைத் திருப்பிக் கட்டுதல்.

*3480. திரு. வி. தம்புசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கச்சனத்தில் இருந்து வலிவலம் கீவளூர் வழியாக நாகை செல்லும் மார்க்கத்தில் வலிவலம் அருகில் மதியுள்ளான் பாலம் இடிந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதை சீர்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீவளூர் கச்சனம் சாலையில் அமைந்துள்ள மதியுள்ளான் பாலம் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட பாலமாகும். 7—1—1981 அன்று ஓ.என்.ஜி.சி.-க்குச் சொந்தமான ஒரு கனரக வண்டி அந்தப் பாலத்தின் மீது செல்லும் போது பாலத்தின் வளைவுப் பகுதி பழுது அடைந்துவிட்டது. இதனால் அந்தச் சாலையில் போக்குவரத்து தடைப்பட்டது. சாலையில் போக்குவரத்து தடையின்றிச் செல்வதற்காக ஒரு வார காலத்திற்குள் தற்காலிகமாக ஆர்.சி.சி. குழாய் அமைத்து, மாற்றுப் பாதை அமைக்கப்பட்டு, மாற்றுப் பாதையில் போக்குவரத்துத் திருப்பி விடப்பட்டது. இவற்றைச் சீர் செய்ய வேண்டுமென்று ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அந்த மதிப்பீடு. எனவே, அந்தப் பணியைச் செய்வதற்காக 26—7—1989 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன. ஒப்பந்தப் புள்ளிகள் மதிப்பீடு 9.38 பர்சன்ட்டுக்கு மேல் வரப்பெற்றதால், மறு ஒப்பந்தப் புள்ளி 8—11—1989-க்குள் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளி இறுதியாக்கப்பட்டதற்குப் பிறகு பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

10-10 மணி

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிட்டிருக்கிற பாலத்தைச் சீரமைக்கும் வேலை காலம் கடந்து வருவதால், அதன் மூலம் பாசனத்திற்சாகச் செல்கிற நீர் தடைப்படுகிறது. ஆற்றினுடைய பாலத்தின் அகலத்தைக் குறைத்து குறுகிய குழாய் போடப்பட்டிருப்பதால், அதன் மூலமாகச் செல்கிற நீர் தடைப்பட்டு அதன் காரணமாக சரியான

அளவுக்குத் தண்ணீர் செல்ல முடியாமல், விவசாயம் பாதிக்கப் படுகிறது. எனவே இந்த வேலையை விரைவாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு கருத்தில் கொள் ளும். அதே நேரத்தில் விரைந்து பணியாற்ற அரசு நடவடிக்கை யும் எடுக்கும்.

ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம்.

*974. **திரு. ஏ. ஜி. சம்பத் :**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஒன்றியம், கண்டாச்சி புரம் மேல்நிலைப் பள்ளியில் உள்ள அரசு இலவச ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், கண்டாச்சிபுரம் ஆதிதிராவிடர் நலவிடுதி ஊராட்சி ஒன்றியத் திற்குச் சொந்தமான கட்டிடத்தில் தற்போது இயங்கி வருகிறது. இந்த விடுதிக்கு கட்டிடம் கட்ட தேவையான இடவசதி உள்ளது. இருந்தபோதிலும் நிதிவசதிக்கேற்ப வரும் நிதியாண்டில் இவ் விடுதிக்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆதிதிராவிடர் நல ஆலோசணைக்குழு.

*1564. **திரு. ஆர். அண்ணாநம்பி :**

திரு. ஏ. தங்கராஜு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதி திராவிடர் நல ஆலோசனைக் குழு மீண்டும் அமைக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

அளவுக்குத் தண்ணீர் செல்ல முடியாமல், விவசாயம் பாதிக்கப் படுகிறது. எனவே இந்த வேலையை விரைவாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு கருத்தில் கொள்ளும். அதே நேரத்தில் விரைந்து பணியாற்ற அரசு நடவடிக்கையும் எடுக்கும்.

ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம்.

*974. **திரு. ஏ. ஜி. சம்பத் :**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஒன்றியம், கண்டாச்சி புரம் மேல்நிலைப் பள்ளியில் உள்ள அரசு இலவச ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், கண்டாச்சிபுரம் ஆதிதிராவிடர் நலவிடுதி ஊராட்சி ஒன்றியத் திற்குச் சொந்தமான கட்டிடத்தில் தற்போது இயங்கி வருகிறது. இந்த விடுதிக்கு கட்டிடம் கட்ட தேவையான இடவசதி உள்ளது. இருந்தபோதிலும் நிதிவசதிக்கேற்ப வரும் நிதியாண்டில் இவ் விடுதிக்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆதிதிராவிடர் நல ஆலோசனைக்குழு.

*1564. **திரு. ஆர். அண்ணாநம்பி :**

திரு. ஏ. தங்கராஜு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதி திராவிடர் நல ஆலோசனைக் குழு மீண்டும் அமைக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

அளவுக்குத் தண்ணீர் செல்ல முடியாமல், விவசாயம் பாதிக்கப் படுகிறது. எனவே இந்த வேலையை விரைவாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு கருத்தில் கொள் ளும். அதே நேரத்தில் விரைந்து பணியாற்ற அரசு நடவடிக்கை யும் எடுக்கும்.

ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம்.

*974. **திரு. ஏ. ஜி. சம்பத் :**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஒன்றியம், கண்டாச்சி புரம் மேல்நிலைப் பள்ளியில் உள்ள அரசு இலவச ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், கண்டாச்சிபுரம் ஆதிதிராவிடர் நலவிடுதி ஊராட்சி ஒன்றியத் திற்குச் சொந்தமான கட்டிடத்தில் தற்போது இயங்கி வருகிறது. இந்த விடுதிக்கு கட்டிடம் கட்ட தேவையான இடவசதி உள்ளது. இருந்தபோதிலும் நிதிவசதிக்கேற்ப வரும் நிதியாண்டில் இவ் விடுதிக்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆதிதிராவிடர் நல ஆலோசணைக்குழு.

*1564. **திரு. ஆர். அண்ணாநம்பி :**

திரு. ஏ. தங்கராஜு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதி திராவிடர் நல ஆலோசனைக் குழு மீண்டும் அமைக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

1989 நவம்பர் 2]

(ஆ) மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பது குறித்து நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் ஆதி திராவிட மக்களுக்குப் புதிய சலுகை அளிக்க வேண்டுகிறேன். சமீபத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவீத ஒதுக்கீடு என்றும் இன்னும் பல்வேறு சலுகைகளை அரசு அறிவித்தது. அதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. மகிழ்ச்சிதான். ஆனால் அதே நேரத்தில் ஆதிதிராவிட மக்களுக்கான ஒதுக்கீட்டை 25 சதவீதமாக உயர்த்திடும் சலுகையை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆதி திராவிடர்களுக்கு 16 சதவீதம் என்றுதான் இருந்தது. அதை முன்பிருந்த கழக ஆட்சி, முன்பே 18 சதவீதமாக உயர்த்தியிருக்கிறது. எனவே, இந்தியா முழுவதும் அதே சதவீதத்தில்தான் இப்போது ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்படுகிறது.

திரு. ஏ. தங்கராஜு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே 15 ஆண்டுக் காலமாக வேண்டுகோள் விடுத்தும் செயல்படாமல் இருப்பது உண்மைதானா? இனியாவது இதை நிறைவேற்றும் என்று நம்பலாமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கேள்வியை விளக்கமாகக் கேட்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கமாகவா? உங்களுக்குக் காதில் கேட்கும்படியா? திரு. தங்கராஜு அவர்கள் மீண்டும் கேட்கலாம்.

திரு. ஏ. தங்கராஜு : மாண்புமிகு தலைவர் அவர்களே, 15 ஆண்டுக் காலமாக இந்த மாமன்றத்திலே இந்த வேண்டுகோள் விடுத்தும், செயல்படாமல் இருப்பது உண்மைதானா? இனியாவது இம்மாமன்றம் நிறைவேற்றும் என்று நம்பலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைத் தலைவர் மொழி பெயர்க்கிறார். 15 ஆண்டுக் காலமாக இதுபோன்ற குறிப்புக் கொடுத்தும் இதுவரை செயல்படுத்தப்படாமல் இருக்கிறதே, இனியாவது செயல்படுத்தப்படுமா என்று கேட்கிறார்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதிலே 14 ஆண்டு காலத்திற்கு நாங்கள் பொறுப்பல்ல. (சிரிப்பு).

மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு வேலை.

*455. **திரு. எம். சீரங்கன் :**

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு வேலை வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வேலை வழங்கப்பட்டுள்ள குடும்பங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு இதுவரை நிலம் கொடுத்த நபர்களில் 289 குடும்பங்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

10-15 மணி

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேட்டூரில் அனல் மின்சார நிலையம் கட்டுவதற்காக அங்கு சாகுபடி செய்து கொண்டிருந்த விவசாயிகளிடத்திலிருந்து நிலங்களை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு பட்டாதாரருக்கும், அதாவது யார் சாகுபடி செய்து கொண்டு இருந்தார்களோ அவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை கொடுப்பது என்ற ஒப்பந்தத்தின் பேரில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் நிலம் எடுக்கப்பட்டவர்களில் 315 பேர்களுக்குக் கடைசியாக வேலை கொடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு முதல்வர் மேட்டூர் வந்தபோது தெரிவிக்கப்பட்டது. முதல்வரவர்கள் அவர்களுக்கும் வேலை கொடுப்பதாக அறிவித்தார்கள். அதன் பிறகு இன்று வரை 80 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டு இருக்கின்றது. மீதிப் பேர்களுக்கு பல்வேறு காரணங்களைச் சொல்லி காலம் கடத்திக்கொண்டு இருக்கின்றார்கள். அரசினிடத்தும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் பல்வேறு முறைகள் இது சம்பந்தமாக விளக்கங்கள் சொல்லி ஆகிவிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த விவரங்களோடு யார் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர் என்ற பட்டியல் அனுப்பி இருக்கிறார். அந்தப் பட்டியலின் அடிப்படையில் யார் உரிமையாளர்கள் என்பதைப் பார்த்து வேலை கொடுப்பதற்குப் பதிலாக, அந்தப்

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதிலே 14 ஆண்டு காலத்திற்கு நாங்கள் பொறுப்பல்ல. (சிரிப்பு).

மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு வேலை.

*455. திரு. எம். சீரங்கன் :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு வேலை வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வேலை வழங்கப்பட்டுள்ள குடும்பங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு இதுவரை நிலம் கொடுத்த நபர்களில் 289 குடும்பங்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

10-15 மணி

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேட்டூரில் அனல் மின்சார நிலையம் கட்டுவதற்காக அங்கு சாகுபடி செய்து கொண்டிருந்த விவசாயிகளிடத்திலிருந்து நிலங்களை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு பட்டாதாரருக்கும், அதாவது யார் சாகுபடி செய்து கொண்டு இருந்தார்களோ அவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை கொடுப்பது என்ற ஒப்பந்தத்தின் பேரில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் நிலம் எடுக்கப்பட்டவர்களில் 315 பேர்களுக்குக் கடைசியாக வேலை கொடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு முதல்வர் மேட்டூர் வந்தபோது தெரிவிக்கப்பட்டது. முதல்வரவர்கள் அவர்களுக்கும் வேலை கொடுப்பதாக அறிவித்தார்கள். அதன் பிறகு இன்று வரை 80 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டு இருக்கின்றது. மீதிப் பேர்களுக்கு பல்வேறு காரணங்களைச் சொல்லி காலம் கடத்திக்கொண்டு இருக்கின்றார்கள். அரசினிடத்தும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் பல்வேறு முறைகள் இது சம்பந்தமாக விளக்கங்கள் சொல்லி ஆகிவிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த விவரங்களோடு யார் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர் என்ற பட்டியல் அனுப்பி இருக்கிறார். அந்தப் பட்டியலின் அடிப்படையில் யார் உரிமையாளர்கள் என்பதைப் பார்த்து வேலை கொடுப்பதற்குப் பதிலாக, அந்தப்

பட்டியலில் உன்னுடைய பெயர் கிடையாது; இதனால் உனக்கு வேலை இல்லை, என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பல் வேறு காரணங்களைச் சொல்லி அந்த விவசாயிகளை.... (மணி யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வினாவா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவ ரவர்களே, வருவாய்த்துறை அதிகாரிகள் மூலமாக யார் யாருடைய நிலம் என்று பேர் கொடுக்கப்பட்ட 541 குடும்பங் கள் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் என்று தெரிவிக்கப்பட்டு இதுவரை முதல்வர் கலைஞர் அவர்கள் மேட்டூர் அனல் மின் நிலையத் துவக்க விழாவின்போது, அவர்கள் கோரிக்கை வைத்ததையொட்டி 353 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 188 குடும்பங்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்புத்தர முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த 188 குடும்பங்களில் தகுதியான படித்த இளைஞர்கள் இல்லாத காரணத்தால் ஒவ்வொருவருக்கும் கூட்டுகின்ற வேலை அல்லது பெருக்குகின்ற வேலை தரவேண்டி இருக்கின்ற காரணத்தால் அந்த வேலை இப்போது காலியாக இல்லாத சூழ்நிலையில் அவர்களுக்கு வேலை கொடுப்பதில் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டு இருக்கிறது. இருந்தாலும் வெகு விரை விலே பாதிக்கப்பட்ட அத்தனை குடும்பங்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோன்று படித்தவர்களுக்கு வேலை என்பது, விவசாயக் குடும்பத்தில் இருப்பவர்கள் அப்படிப்பட்ட பட்டதாரிகளாக இருக்க முடியாது; சாதாரணப் படிப்பு இருந்தாலும் கூட அவர்களுக்கு வேலை கொடுப்பதாகத் தான் ஒப்பந்தம். அவர்களுக்கும் வேலை கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பதில் இல்லை).

நாசியம்பட்டியில் துணை மின் நிலையம் அமைத்தல்.

*3414. **திரு. எஸ். குணசேகரன் :**

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாசியம்பட்டியில் துணை நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

1989 நவம்பர் 2]

பட்டியலில் உன்னுடைய பெயர் கிடையாது; இதனால் உனக்கு வேலை இல்லை, என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பல் வேறு காரணங்களைச் சொல்லி அந்த விவசாயிகளை.... (மணி யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வினாவா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவ ரவர்களே, வருவாய்த்துறை அதிகாரிகள் மூலமாக யார் யாருடைய நிலம் என்று பேர் கொடுக்கப்பட்ட 541 குடும்பங் கள் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் என்று தெரிவிக்கப்பட்டு இதுவரை முதல்வர் கலைஞர் அவர்கள் மேட்டூர் அனல் மின் நிலையத் துவக்க விழாவின்போது, அவர்கள் கோரிக்கை வைத்ததையொட்டி 353 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 188 குடும்பங்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்புத்தர முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த 188 குடும்பங்களில் தகுதியான படித்த இளைஞர்கள் இல்லாத காரணத்தால் ஒவ்வொருவருக்கும் கூட்டுகின்ற வேலை அல்லது பெருக்குகின்ற வேலை தரவேண்டி இருக்கின்ற காரணத்தால் அந்த வேலை இப்போது காலியாக இல்லாத சூழ்நிலையில் அவர்களுக்கு வேலை கொடுப்பதில் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டு இருக்கிறது. இருந்தாலும் வெகு விரை விலே பாதிக்கப்பட்ட அத்தனை குடும்பங்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோன்று படித்தவர்களுக்கு வேலை என்பது, விவசாயக் குடும்பத்தில் இருப்பவர்கள் அப்படிப்பட்ட பட்டதாரிகளாக இருக்க முடியாது; சாதாரணப் படிப்பு இருந்தாலும் கூட அவர்களுக்கு வேலை கொடுப்பதாகத் தான் ஒப்பந்தம். அவர்களுக்கும் வேலை கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பதில் இல்லை).

நாசியம்பட்டியில் துணை மின் நிலையம் அமைத்தல்.

*3414. திரு. எஸ். குணசேகரன் :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாசியம்பட்டியில் துணை நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தம்மம்பட்டி கிராமத்தில் 110/22 கி.வோ. மின் அழுத்தமுள்ள துணை மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத்துணைமின் நிலையம் அமைப்பதற்கு தம்மம்பட்டிக்கு அருகில் உள்ள நாகையம்பட்டி கிராமத்தில் நிலம் தெரிவு செய்யப்பட்டு, நிலத்திற்குரிய மதிப்பீட்டுத் தொகை தமிழ்நாடு வருவாய்த் துறைக்குச் செலுத்தப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப் பட்டவுடன், 1990-91 ஆம் ஆண்டில் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டு அவ்வாண்டே முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. எஸ். குணசேகரன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறியதற்கு நன்றி. இந்தத் திட்டத்தின் மதிப்பு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாதான் கேட்க வேண்டு மென்று முதலிலேயே சொல்லி இருக்கிறேன்.

திரு. எஸ். குணசேகரன் : திட்டத்தின் மதிப்பு எவ்வளவு? விரைவில் தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பு ரூபாய் 196.95 இலட்சம் ஆகும். இது 1990 ஆம் ஆண்டில் தொடங்கி அந்த ஆண்டிலே முடிவுறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

தமிழ்நாடு இறைச்சிக் கழகம்.

***4885. திரு. துரை சந்திரசேகரன் :**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு இறைச்சிக் கழகம் அமைத்துள்ள நோயற்ற மண்டலங்களிலிருந்து வரும் பிராணிகளிலிருந்து கிடைக்கும் இறைச்சி எந்தெந்த நிறுவனங்கள் மூலம் ஏற்றுமதி செய்யப் படுகிறது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தம்மம்பட்டி கிராமத்தில் 110/22 கி.வோ. மின் அழுத்தமுள்ள துணை மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத்துணைமின் நிலையம் அமைப்பதற்கு தம்மம்பட்டிக்கு அருகில் உள்ள நாகையம்பட்டி கிராமத்தில் நிலம் தெரிவு செய்யப்பட்டு, நிலத்திற்குரிய மதிப்பீட்டுத் தொகை தமிழ்நாடு வருவாய்த் துறைக்குச் செலுத்தப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப் பட்டவுடன், 1990-91 ஆம் ஆண்டில் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டு அவ்வாண்டே முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. எஸ். குணசேகரன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறியதற்கு நன்றி. இந்தத் திட்டத்தின் மதிப்பு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாதான் கேட்க வேண்டு மென்று முதலிலேயே சொல்லி இருக்கிறேன்.

திரு. எஸ். குணசேகரன் : திட்டத்தின் மதிப்பு எவ்வளவு? விரைவில் தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பு ரூபாய் 196.95 இலட்சம் ஆகும். இது 1990 ஆம் ஆண்டில் தொடங்கி அந்த ஆண்டிலே முடிவுறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

தமிழ்நாடு இறைச்சிக் கழகம்.

***4885. திரு. துரை சந்திரசேகரன் :**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு இறைச்சிக் கழகம் அமைத்துள்ள நோயற்ற மண்டலங்களிலிருந்து வரும் பிராணிகளிலிருந்து கிடைக்கும் இறைச்சி எந்தெந்த நிறுவனங்கள் மூலம் ஏற்றுமதி செய்யப் படுகிறது?

1989 நவம்பர் 2]

(ஆ) அரசு மருத்துவமனைகள், பள்ளி, கல்லூரி விடுதிகள் ஆகியவற்றிற்கு இறைச்சிக் கழகம் மூலம் இறைச்சி வாங்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் நோயற்ற மண்டலங்கள் ஏதும் அமைக்கவில்லை. அரசுக்குச் சொந்தமான எந்த நிறுவனமும் இறைச்சி ஏற்றுமதியில் இன்னமும் ஈடுபடவில்லை. இறைச்சி ஏற்றுமதி தற்போது தனியார் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஆ) அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளுக்கு இறைச்சி நிறுவனம் மூலம் இறைச்சி வழங்க முடிவு செய்துள்ளது. கூடிய விரைவில் இவ்விடுதிகளுக்கு இறைச்சி நிறுவனம் மூலம் இறைச்சி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-20 மணி

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இறைச்சிக் கழகத்தின் மூலம் உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அன்னியச் செலாவாணியைப் பெறுகின்ற வகையில் வெளிநாடுகளுக்கு இறைச்சி ஏற்றுமதி செய்யவும் திட்டம் அரசிடம் உள்ளதா? அரசு அதற்கு விலை நிர்ணயம் செய்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவரவர்களே, இறைச்சி ஏற்றுமதி செய்யும் திட்டம் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன்: தலைவரவர்களே, நட்சத்திர உணவு விடுதிகள், அரசு சுற்றுலா மையவிடுதிகள் போன்றவற்றில் தமிழ்நாடு கோழி வளர்ப்புக் கழகம் விற்பனை செய்வதைப் போல தமிழ்நாடு இறைச்சிக் கழகமும் விற்பனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவரவர்களே, தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் மூலமாகத் தற்சமயம் நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் பல்வேறு வகையான எல்லா ஹோட்டல்கள் இறைச்சி பெறுவதற்கு வருவார்களேயானால் அவர்களுக்கு விநியோகிப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து மாநிலங்களிலும் தமிழக கைத்தறி ஆடைகள் விற்பனை.

* 711. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நம் நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் தமிழக கைத்தறி ஆடைகள் விற்பனைக்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு மற்றும் 15 வெளி மாநிலங் களில் கோ-ஆப்டெக்ஸ், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங் கள், கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டம், கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம், விற்பனை நிலையங்கள் மற்றும் முகவர் விற்பனை நிலையங்கள் மூலமாக கைத்தறி ஆடைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, தமிழ்நாட்டில் உற்பத்தியாகக்கூடிய கைத்தறி ஆடைகள் 15 மாநிலங்களில் விற்பனை செய்யப்படுவதாக அமைச்சர் சொன்னார். அப்படியானால் அவற்றினுடைய மொத்த மதிப்பீடு எவ்வளவு? அதனால் இலாபமா அல்லது நஷ்டமா என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 15 மாநிலங்களில் ஒட்டுமொத்தமாக 205 விற்பனை நிலையங்கள் தற்போது இருக்கின்றன. இதில் சில கடைகள் நிரந்தரமாக நஷ்டத்தில் இயங்குவதாக இங்கே குறிப்பு இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அதிகாரிகள் மூலமாக நஷ்டமாக உள்ள கடைகளை நிரந்தரமாக மூடுவதற்கும் இலாபமாக உள்ள கடைகளை மேலும் விற்பனையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, அமைச்சர வர்கள் 200-க்கும் மேற்பட்ட மையங்களில் விற்பனை செய்யப் படுகிறது, அதிலே சில நஷ்டமாகின்றன என்று பொதுவாகச் சொல்கிறார்கள். தெளிவாக எவ்வளவு நஷ்டமாகிறது என்ப

1989 நவம்பர் 2]

தைத் தெரிவிப்பதோடு ஏழை எளியவர்களுக்கு இலவசமாக வழங்கக்கூடிய இலவச வேட்டி சேலைகளை இந்தக் கைத்தறித் துறையின் மூலமாக எடுத்து வினியோகிப்பதற்கு ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் வெளி மாகாணக் கடைகள் நஷ்டத்தில் இயங்குவதைக் கணக்கில் எடுத்து, அதிகாரிகள் மூலமாக உத்தரவு வழங்கப்பட்டிருக்கின்றது. அதனுடைய முடிவு வந்ததற்கு பின்னால் எவ்வளவு தொகை வெளி மாகாணத்தில் நஷ்டம் இருப்பது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இலவச சேலை வேட்டி மூலமாக இந்தத் துணிகளை உற்பத்தி செய்வதற்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகச் சுமார் 600 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இந்தத் துணியை உற்பத்தி செய்து கொடுத்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலிலே பொதுவாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அது பற்றி அரசுத் துறை ஆய்ந்து கொண்டிருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். தங்கள் மூலமாக அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்வது, தமிழகத்திலேயும் சரி, வெளி மாநிலங்களிலேயும் சரி, இவ்வாறு நஷ்டம் ஏற்படுவதற்கு என்ன காரணம்? அந்தக் காரணத்தை அறிவதற்கு அமைச்சரவர்களிடத்தில் ஏதேனும் குறிப்பு கிடைத்திருக்கிறதா? அப்படியானால் அதுபற்றிய முழு விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள கோ-ஆப்டெக்ஸ் நிறுவன விற்பனை நிலையத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் முதல் கட்டமாகச் சென்னையிலுள்ள சிலம்பு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தைத் துணியிருப்பு கணக்கு இருப்பதாக அதிகாரிகள் மூலமாகக் கணக்கிடச் செய்தோம். அந்தவொரு கோ-ஆப்டெக்சில் மட்டும் சுமார் நாற்பது இலட்சத்திற்கும் மேற்பட்ட துணிகள் அங்கே இல்லாமல் இருக்கிறது. அது சம்பந்தமாக அதிகாரிகள் மூலமாக மேலும் பல்வேறு கடைகளிலுள்ள இந்த நஷ்டத்தை, எவ்வளவு துணி இருப்புக் குறைவு என்பதைக் கடைகள் மூலமாக இன்றைக்கு நாங்கள் ஆய்வு நடத்திக்கொண்டு இருக்கிறோம். அதே போல இந்தக் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு வருகின்ற அந்த ஜவுளிக் கிடங்குகளில் பல ஆண்டுக் காலமாக அங்கே இருப்புக் கணக்கு சரியான கணக்கு இல்லை. இதிலே ஒட்டு மொத்தமாக பல கோடி ரூபாய்க்கு துணிகள் அங்கே இருப்பு குறைவதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் மூலமாக தமிழகத்திலேயுள்ள 10 துணி இருப்புக் கிடங்குகளிலும்

துணி இருப்பு எவ்வளவு இருக்கிறது என்பதை இன்றைக்கு ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறோம். இன்னும் சில மாதங்களில் முடிவான விவரங்களை இந்த அவையில் வைக்க நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்.

1. **திரு. பெ. சு. திருவேங்கடம் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் 1980-க்குப் பிறகு தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டப்படி, புதியதாக பள்ளிகள் திறப்பதற்கு இலாக்காவின் முன் அனுமதியினை சிறுபான்மை அல்லாத நிறுவனத்தினர் பெறவேண்டும். இப்பிரிவினரிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் மறுக்கப்பட்டுள்ளதால், சிறுபான்மையற்ற நிறுவனங்கள் ஏதும் புதியதாக 1980-க்குப் பிறகு இன்றுவரை தமிழ்நாட்டில் திறக்கப்படவில்லை. ஆனால் சிறுபான்மை உரிமை அடிப்படையில் 15 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு நிதி உதவியின்றி தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட்டு அவை செயல்பட்டு வருகின்றன.

(ஆ) அதன் விபரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

இணைப்பு.

நிதி உதவியின்றி தற்காலிக அங்கீகாரத்துடன் செயல்பட்டு வரும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் :—

1. ஏ.எல்.சி. ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (மகளிர்), திருவண்ணாமலை.

துணி இருப்பு எவ்வளவு இருக்கிறது என்பதை இன்றைக்கு ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறோம். இன்னும் சில மாதங்களில் முடிவான விவரங்களை இந்த அவையில் வைக்க நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்.

1. திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் 1980-க்குப் பிறகு தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டப்படி, புதியதாக பள்ளிகள் திறப்பதற்கு இலாக்காவின் முன் அனுமதியினை சிறுபான்மை அல்லாத நிறுவனத்தினர் பெறவேண்டும். இப்பிரிவினரிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் மறுக்கப்பட்டுள்ளதால், சிறுபான்மையற்ற நிறுவனங்கள் ஏதும் புதியதாக 1980-க்குப் பிறகு இன்றுவரை தமிழ்நாட்டில் திறக்கப்படவில்லை. ஆனால் சிறுபான்மை உரிமை அடிப்படையில் 15 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு நிதி உதவியின்றி தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட்டு அவை செயல்பட்டு வருகின்றன.

(ஆ) அதன் விபரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

இணைப்பு.

நிதி உதவியின்றி தற்காலிக அங்கீகாரத்துடன் செயல்பட்டு வரும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் :—

1. ஏ.எல்.சி. ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (மகளிர்), திருவண்ணாமலை.

2. புனித ஜோசப் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (மகளிர்), வேலாயுத நகர், கன்னியாகுமரி.

3. ஆசிரியர் பயிற்சி நிறுவனம், கீழமூங்கிலடி, தென் ஆற்காடு.

4. பிஷப் அந்தோணி முத்து நினைவு புனித ஜோசப் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அத்திப்பட்டு, வடாற்காடு.

5. புனித ஜோசப் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், ஆவிடையார் கோவில், புதுக்கோட்டை.

6. பிஷப் பீட்டர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், கடலூர்.

7. லிட்டில் பிளவர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (மகளிர்), சின்னசேலம், தென்னாற்காடு.

8. ஜான் டி பிரிட்டோ ஆசிரியர் பயிற்சி நிறுவனம், தஞ்சாவூர்.

9. அண்ணா ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (மகளிர்), வீரகேரளம்புதூர், நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்.

10. ரோசம்மாள் நினைவு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், தூத்துக்குடி.

11. எபனேசர் மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், தூத்துக்குடி.

12. புனித ஜான் மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், வீரவநல்லூர்.

13. குமரகுருபரர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (ஆண்), திருப்பனந்தாள், தஞ்சாவூர் மற்றும் குமரகுருபரர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (பெண்கள்), திருப்பனந்தாள், தஞ்சாவூர்.

14. புனித அந்தோணி மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், பணகுடி.

15. அமீன் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (மகளிர்), கீழ்பெண்ணத்தூர் மற்றும் அமீன் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (ஆண்கள்) கீழ்பெண்ணத்தூர்.

குத்தாலத்தில் காவலர் குடியிருப்பு.

2. திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கீழ்த் தஞ்சை மாவட்டம், குத்தாலம் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்களுக்கு குடியிருப்பு கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டப்படும்?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினா எழவில்லை.

நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்.

3. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் எத்தனை நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த மனுச் செய்து அரசுக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகையும் கட்டியுள்ளன?

(ஆ) அவற்றில் எத்தனை மனுக்கள் நிலுவையில் உள்ளன?

(இ) அவைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) 216.

(ஆ) 174.

(இ) இவை அனைத்தும் உயர்மட்டக் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு தகுந்த மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

1989 நவம்பர் 2]

நெரும்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம்.

4. திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருக்கழுக்குன்றம் அருகே நெரும்பூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டித் தரப்படுமா?

விடை—

நடப்பு ஆண்டிலேயே நெரும்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருப்பத்தூர்—ஆலங்காயம் நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்.

5. திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா:

வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரிலிருந்து ஆலங்காயம் வரை உள்ள நெடுஞ்சாலையை அகலப்படுத்தி தார் போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

இணைப்புச் சாலை அமைத்தல்.

6. திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சின்ன கம்மியம்பட்டியில் இருந்து நாட்ராம்பள்ளி நெடுஞ்சாலைக்கு இணைப்பு சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பாலம் கட்டுதல்.

7. திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதியில் அருணாசலப்பேரிக்கும் சீதக்குறிச்சிக்கும் இடையில் மானூர் வட்டார மக்களுக்கு போக்குவரத்து வசதி கிடைக்க பாலம் கட்டும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) பணி எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

குருந்தன்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம்.

8. திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குருந்தன்கோட்டில் அமைந்திருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

நடப்பு ஆண்டில் குருந்தன்கோட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் திட்டம் இல்லை.

புதிய பேருந்துத் தடம் ஏற்படுத்துதல்.

9. திரு. கே. சுந்தர் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காஞ்சிபுரத்தில் இருந்து மேல்மருவத்தூர், சாலவாக்கம் வழியாக புதிய பேருந்துத்தடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்.

விடை—

(அ) ஆம்.

(ஆ) போக்குவரத்து அலுவலரிடமிருந்து அனுமதி பெற்ற உடன் குறிப்பிட்ட தடத்தில் பேருந்து இயக்கப்படும்.

தர்மபுரி மாவட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவ, மாணவிகளின் விடுதிகள்.

10. திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவ, மாணவிகளின் விடுதிகள் எண்ணிக்கை எத்தனை ?

விடை—

தர்மபுரி மாவட்டத்தில் இரண்டு ஆதி திராவிட நல கல்லூரி மாணவர் விடுதிகளும் இருபது பள்ளி மாணவர் விடுதி களும் ஆறு பள்ளி மாணவியர் விடுதிகளும் ஆக மொத்தம் 28 விடுதிகள் உள்ளன. பழங்குடியினர் மாணவ, மாணவியர் விடுதிகள் இல்லை.

வெலகல்நத்தம்—வாணியம்பாடி நகரப் பேருந்து.

11. திரு. ஆர். மகேந்திரன்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாட்ராம்பள்ளி தொகுதியில் வெலகல்நத்தம்—வாணியம் பாடி நகர பேருந்து விடப்படுமா?

விடை—

வெலகல்நத்தம்—வாணியம்பாடி தடத்தில் நகரப் பேருந்து விட தக்க நடவடிக்கை பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.

கொடையாஞ்சி கிராமத்திற்குப் பேருந்து.

12. திரு. ஆர். மகேந்திரன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

நாட்ராம்பள்ளி தொகுதி கொடையாஞ்சி கிராமத்திற்கு பேருந்து விட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

வாணியம்பாடி—கொடையாஞ்சி தடத்தின் தூரம்14.00 கி.மீ. திருப்பத்தூர்—கொடையாஞ்சி தடத்தின் தூரம் 27.00 கி.மீ. அம்பலூர் மற்றும் கொடையாஞ்சி கிராமத்தில் உள்ள சாலையில் கட்டப்பட்டுள்ள வீடுகளை அப்புறப்படுத்தவும் சாலைகளை செப்பனிடவும் வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரும் வேலூர் நெடுஞ்சாலைத்துறை தோட்டப் பொறியாளரும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். மேற்கூறிய குறைகள் சரிசெய்யப்பட்டவுடன் வாணியம்பாடியிலிருந்தோ அல்லது திருப்பத்தூரிலிருந்தோ கொடையாஞ்சி கிராமத்திற்கு பேருந்து வசதிசெய்து கொடுப்பது சம்பந்தமாக பரிசீலிக்கப்படும்.

பாலம் கட்ட கோரிக்கை.

13. திரு. வி. தம்புசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாகை வட்டம், இறையாங்குடியையும் திருவாரூர் வட்டம் வடக்கு பனையூரையும் இணைக்க ஏடையாற்றில் பாலம் கட்ட கோரி ஏதேனும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1989 நவம்பர் 2]

வெள்ளையாற்றில் பாலம் கட்டுதல்.

14. திரு. வி. தம்புசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகப்பட்டினம் தாலுக்கா மேலவாழக்கரையும் திருவாரூர் தாலுக்கா வல்லவிநாயகம் கோட்டத்தையும் இணைக்கும் வகையில் வெள்ளையாற்றில் பாலம் கட்ட அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வெட்டாற்றில் பாலம் கட்டுதல்.

15. திரு. வி. தம்புசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் அருகாமையில் உள்ள பழைய வலத்திற்கு செல்வதற்கு வெட்டாற்றில் பாலம் கட்டக் கோரி ஏதேனும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ரோடு போடுதல்.

16. திரு. ஆர். ஈஸ்வரன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தேவிபட்டணம்—மேற்குத் தொடர்ச்சி மலை, சிவகிரி —கோம்பை ஆறு பாரஸ்ட்டு, இராயகிரி, வாசுதேவநல்லூர் டி.பி. புளியங்குடி ஆகிய இடங்களிலிருந்து மேற்குத் தொடர்ச்சி மலை பாரஸ்ட்டு, அச்சந்திகாடு வெட்டிக்காடு பாரஸ்ட்டு ஆகிய ஆறு சாலைகளுக்கும் ரோடு போடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

கூடலூரில் கலைக்கல்லூரி அல்லது பாலிடெக்னிக் தொடங்குதல்.

17. திரு. எம். கே. கரிம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீலகிரி மாவட்டம் கூடலூரில் கலைக்கல்லூரி அல்லது பாலிடெக்னிக் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

அவ்வாறான கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை

மாநில அரசின் வேளாண்மைப் பண்ணைகள்.

18. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாநில அரசின் வேளாண்மைப் பண்ணைகள் எங்கெங்கு உள்ளன?

(ஆ) அவைகள் இலாபத்தில் இயங்குகின்றனவா?

1989 நவம்பர் 2]

விடை—

(அ) மற்றும் (ஆ) அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசு வேளாண்மை விதைப்பண்ணைகள் விவரம்.

வரிசை எண்ணும் மாவட்டமும்.		அரசு விதைப் பண்ணைகளின் பெயர்கள்.	ஆரம்பிக்கப் பட்ட தேதி.	மொத்த பரப்பளவு (ஏக்கரில்).
(1) & (2)		(3)	(4)	(5)
1.	செங்கை அண்ணா.	காஞ்சிபுரம்	2—2—1962	58.76
2.	ஷை	கொளந்தலூர்	1—4—1958	50.72
3.	வட ஆற்காடு	அத்தியந்தல்	1—9—1957	53.23
4.	ஷை	வாழவச்சனூர்	16—3—1960	191.05
5.	தென்னாற்காடு.	மீர்ராலூர்	2—2—1958	46.98
6.	ஷை	வன்ராயன்பட்டு	4—1—1958	50.99
7.	ஷை	இருவேல்பட்டு	14—8—1961	52.09
8.	ஷை	காகுப்பம்	1—1—1957	70.84
9.	ஷை	வானூர்	31—12—1957	60.53
10.	ஷை	வடகநந்தல்	3—10—1957	47.06
11.	தஞ்சாவூர்	சாக்கோட்டை	11—10—1956	98.59
12.	ஷை	நாகமங்கலம்	4—8—1957	93.91
13.	ஷை	திருக்கடையூர்	17—3—1958	48.04
14.	ஷை	ஒரத்தூர்	13—10—1950	49.93

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1) & (2)	(3)	(4)	(5)
15. தஞ்சாவூர்	தீவாம்பாள் பட்டினம்.	19— 3—1957	92.72
16. ஷை	காஞ்சிக்குடிகாடு	1—6—1957	53.70
17. ஷை	கீராந்தி	20—10—1956	55.70
18. ஷை	மூங்கில்குடி	21— 6—1961	47.63
19. ஷை	சிக்கல்	15— 7—1960	36.50
20. ஷை	நெடும்பாலம்	5—10—1956	63.22
21. ஷை	தியாகராயபுரம்	10— 9—1982	212.68
22. ஷை	சக்கரமங்கலம்	11— 9—1982	111.49
23. ஷை	செல்லூர்	12— 9—1982	268.10
24. திருச்சி	நெய்குப்பை புதூர்.	1— 7—1963	38.57
25. ஷை	புதூர் பாளையம்.	3— 5—1960	75.97
26. ஷை	இனுங்கூர்	8—3—1963	205.44
27. புதுக் கோட்டை.	அண்ணா பண்ணை.	29— 8—1967	636.39
28. மதுரை	விநாயகபுரம்	6—11—1963	45.52
29. ஷை	கீலகடலூர்	29— 5—1963	47.86
30. ஷை	வைகை அணை	14— 6—1962	53.70
31. ஷை	வைகை அணை	17— 4—1964	105.00
32. காமராஜர்	தேவதானம்	15— 7—1957	52.07
33. திருநெல் வேலி கட்ட பொம்மன்.	கரையிருப்பு	1—10—1957	83.59

1989 நவம்பர் 2]

(1)	(2)	(3)	(4)	(5)
34.	திருநெல்வேலி	மேலகரம் கட்டபொம்மன்.	10— 9—1963	40.52
35.	கன்னியாகுமரி	திருப்பதிசாரம்	1914***	59.63
36.	கோவை	கண்ணம் பாளையம்.	25— 9—1957	50.66
37.	ஷை	பாப்பான்குளம்	22— 7—1961	46.36
38.	..	பொங்கலூர்	6—10—1956	39.05
39.	பெரியார்	பவானிசாகர்	1— 3—1960	50.82
40.	ஷை	சத்தியமங்கலம்	1— 3—1960	42.39
41.	ஷை	பவானி	23— 9—1957	86.86
42.	சேலம்	டேனிஷ்பேட்	18— 3—1960	86.45
43.	ஷை	மேட்டூர் அணை	30— 5—1963	57.90
44.	தர்மபுரி	பாப்பாரப்பட்டி	1— 7—1957	55.20

***இப்பண்ணை கேரளா அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு மாநிலங்கள் திருத்தி அமைக்கும்பொழுது மாற்றப்பட்டது.

2. தமிழகத்தில் 44 அரசு விதைப்பண்ணைகள் தணிக்கை கணக்குப்படி 1985—86, 1986—87 மற்றும் 1987—88 ஆண்டுகளில் கீழ்குறித்தவாறு லாபம் ஈட்டியுள்ளன.

வருடம்.	லாபம் (ரூபாய் இலட்சத்தில்.)
(1)	(2)
1985—86..	9.60
1986—87..	10.48
1987—88..	9.26

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பழனி நகரில் ஆதி திராவிட மாணவர் விடுதிக்குப் புதிய கட்டிடம்.

19. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், பழனி நகரில் இருக்கும் ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டம், பழனி நகரில் இருக்கும் ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்.

20. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் மாநில அரசு நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) தனியார் நடத்தும் பயிற்சிப் பள்ளிகள் எவ்வளவு?

(இ) பழனி நகரில் அரசின் சார்பாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

விடை—

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் மாநில அரசு நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஏதும் இல்லை.

(ஆ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் அரசால் அங்கீகரிக்கப்பட்டு நடைபெற்று வரும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்.

ஆண்களுக்கு :

(1) சி.எஸ்.ஐ. ஆசிரியர் பயிற்சி நிறுவனம், வத்தலக் குண்டு.

மகளிருக்கு :

(1) சாங்க்தா பாத்திமா ஆசிரியர் பயிற்சி நிறுவனம், திண்டுக்கல்.

(2) அவர் லேடி ஆப் பாலர்ஸ் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், திண்டுக்கல்.

(3) புனித மைக்கேல் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், பழனி.

(இ) பழனி நகரில் அரசின் சார்பாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் இல்லை.

ஆனால் புதிய கல்விக் கொள்கையின்படி, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (District Institute of Education and Training) அமைக்கும் திட்டத்தின் கீழ் மூன்றாம் நிலையில் எங்கெங்கு அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இல்லையோ அங்கு புதியதாகவே மாவட்டக் கல்விப் பயிற்சி நிலையம் நிறுவ முடிவு செய்யப்பட்டு 1989-90-ல் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் ஒட்டன்சத்திரம் என்ற இடத்தில் மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு பெறப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது.

பி. கே. மூக்கையாத் தேவர் சமாதியில் மணிமண்டபம் கட்டுதல்.

21. திரு. பி. என். வல்லரசு :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

உசிலம்பட்டி பசும்பொன் தேவர் கல்லூரியில் அமைந்துள்ள பி. கே. மூக்கையாத்தேவர் சமாதியில் மணிமண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

திரு. பி. கே. மூக்கைதயாத்தேவர் சமாதியில் மனிமண்டபம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

பண்ணைப்புரம்— வில்லாணி-வி. பெருமாள்பட்டு நெடுஞ்சாலை.

22. திரு. பி. என். வல்லரசு :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உசிலம்பட்டி ஒன்றியம், பண்ணைப்புரம்—வில்லாணி-வி. பெருமாள்பட்டி நெடுஞ்சாலையை சீர்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் நிறைவேற்றப் படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது கீழ்க்காணும் மூன்று சாலைகள் அடங்கியதாகும். இச் சாலை வத்தலக்குண்டு பேரையூர் சாலை கி.மீ. 26/6-ல் பிரிந்து செல்கிறது.

1. வத்தலக்குண்டு பேரையூர் சாலையிலிருந்து 0.6 கி.மீ. பண்ணைப்பட்டி சாலை கி.மீ. 0/0-0/6 (உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த ஊராட்சி மண் சாலையாகும்.)

2. பண்ணைப்பட்டி ஒத்தப்பட்டி சாலை கி.மீ. 1.6 கி.மீ. 0/0-1/6 (உசிலம்பட்டி ஒன்றியத்தை சார்ந்த பஞ்சாயத்து மண் சாலையாகும்.)

3. ஒத்தப்பட்டி-வி. பெருமாள்பட்டி சாலை 0.8 கி.மீ. கி.மீ. 0/0/0/8 (உசிலம்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த பஞ்சாயத்து கற்சாலையாகும்).

மொத்த நீளம் .. 3.00 கி.மீ.

இந்த மூன்று சாலைகளும் ரூ. 6.00 இலட்சம் செலவு அளவில் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் மூலம் மேம்பாடு செய்ய தக்க பிரேரணைகள் மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இம்மூன்று பணிகளை இந்த நிதியாண்டில் நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்ட பிரேரணையில் நிதி நிலைமைக் கேற்ப சேர்க்கப்படும்.

1989 நவம்பர் 21]

ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்.

23. திரு. எம். முத்தையா :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில் தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விளக்குகள் எரிய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 15 கிராமங்களில் 219 தெரு விளக்குகள் வேண்டி மனுக்கள் வந்தன. இவற்றில் 31-3-1989 முடிய ஆறு(6) கிராமங்களில் 139 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒன்பது (9) கிராமங்களில் 80 தெரு விளக்குகள் அமைக்கப்பட உள்ளன. இப்பணி கூடிய விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பர்கூர் மலைப் பகுதியில் கிணறுகளுக்கு மின் இணைப்பு.

24. திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அந்தியூர் தொகுதியில் பர்கூர் மலைப்பகுதியில் உள்ள விவசாயிகள் வெட்டியுள்ள கிணறுகளுக்கு முன்னுரிமை கொடுத்து மின் இணைப்பு வழங்கப்படுமா?

விடை—

பர்கூர் மலைப்பகுதியில் உள்ள கிணறுகளுக்கு சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்குவதற்கு செயற்குறிப்பு ஏதுமில்லை.

அரசு உறைவிடப் பள்ளி.

25. திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அந்தியூர் தொகுதியிலுள்ள ஆதிவாசிகள் வசிக்கும் பகுதியில் அரசு உறைவிடப்பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

விழுப்புரம் அல்லது திருக்கோவிலூரில் பெண்கள் கலைக்கல்லூரி.

26. திரு. ஏ. ஜி. சம்பத் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம் அல்லது திருக் கோவிலூரில் பெண்கள்கலைக்கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

அவ்வாறான கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

பூங்கா நகர் தொகுதியில் மாநகராட்சி நூலகம்.

27. திரு. அ. இரகுமான்கான் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, பூங்கா நகர் தொகுதி 57-வது வட்டம் நம்பலய்யர் தெருவில் உள்ள மாநகராட்சி நூலகம் மூடப்பட்டு கிடப்பது அரசுக்குத்தெரியுமா?

1989 நவம்பர் 2]

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) பழைய நூலகக் கட்டிடம் பழுதடைந்த நிலையில் இருந்ததால் சீர்பணி செய்யும் பொருட்டு புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கரும்பின் கொள்முதல் விலை.

28. திரு. வ. முல்லைவேந்தன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கரும்பின் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் வழங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழாது.

அரசு வனவிலங்கு சரணாலயம்.

29. திரு. பெ. சு. திருவேங்கடம்:

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை, காமராஜர் மாவட்டங்களைச் சேர்ந்த நிலப்பரப்பில் அரசு வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதற்கு அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

விடை—

(அ) மதுரை, காமராஜர் மாவட்டங்களில் ஸ்ரீவில்லி புத்தூர் நரைமுடியுடைய அணில் வன உயிரின உய்விடம் (Grizzled Squirel Wild Life Sanctuary) உருவாக்கப்பட்டு 1—4—1989-லிருந்து செயல்பட்டு வருகிறது.

(ஆ) இச்சரணாலயம் மதுரை மாவட்டத்தில் 22,042.98 ஹெக்டேர் பரப்பிலும், காமராஜர் மாவட்டத்தில் 26,477.24 ஹெக்டேர் பரப்பிலும் அமைந்துள்ளது. இச்சரணாலயத்தின் மொத்த பரப்பு 48,520.22 ஹெக்டேர் ஆகும்.

இச்சரணாலயம் 4 சரகங்களைக் கொண்டுள்ளது. சரகங்களின் பெயர் விவரம் வருமாறு :—

1. சப்தூர் சரகம்.
2. வாட்ரேப் சரகம்.
3. ஸ்ரீவில்லிபுத்தூர் சரகம்.
4. இராஜபாளையம் சரகம்.

இச்சரணாலயம் இராஜபாளையம் வன உயிரின தென்மண்டல வனப்பாதுகாவலரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

(இ) 1—4—1989 முதல் இயங்கும் இச்சரணாலயத்திற்கு தனியாக இதுவரை நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை. நிதி ஒதுக்க கருத்துரு வந்ததும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வெண்பாக்கம் ஒன்றிய உயர் துவக்கப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுதல்.

30. **திரு. வ. அன்பழகன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யாறு தொகுதி வெங்களத்தூர் ஒன்றியம் வெண்பாக்கம் ஒன்றிய உயர் துவக்கப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றுவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

கருத்துரு பெறப்பட்டுள்ளது. உயர்மட்டக் குழுவின் பரிந்துரைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

1989 நவம்பர் 2]

திண்டுக்கல் பூசாரிப்பட்டி வழித்தடத்தில் பேருந்து.

31. திரு. ப. முத்துசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திண்டுக்கல்—அய்யலூர் வழித்தடத்தில் இயங்கும் இராணி மங்கம்மாள் நகரப் பேருந்து பூசாரிப்பட்டி வரை சென்றுவர ஏற்பாடு செய்யப்படுமா?

விடை—

திண்டுக்கல்—பூசாரிப்பட்டி என்ற வழித்தடத்தின் மொத்த நீளம் 30.4 கி.மீ. மோட்டார் வாகன விதிப்படி வழித்தடத்தின் தூரம் 30.00 கி.மீ. அளவிற்கு மட்டுமே நகரப் பேருந்து விடவேண்டும். அதற்கு அதிகமாக இருப்பின் நகரப் பேருந்து இயக்க இயலாது. எனவே, பூசாரிப்பட்டிக்கு நகரப் பேருந்து இயக்க இயலாத நிலையிலுள்ளது. பொதுவாக பேருந்து வசதி உள்ள பகுதியிலிருந்து 1.5 கி. மீட்டருக்கு உட்பட்ட பகுதியில் உள்ள கிராமங்கள் பேருந்து வசதி பெற்றுள்ளதாகக் கருதப்படுகிறது.

வசந்த கதிர்பாளையம் வழியாக நகரப் பேருந்து.

32. திரு. ப. முத்துசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குஜிலியம்பாறை—ஆத்துமேடு நகரப் பேருந்து வசந்த கதிர்பாளையம் வழியாகச் சென்று வர ஏற்பாடு செய்யப்படுமா?

விடை—

இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தடத்தில் பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

வேடசந்தூர் வடமதுரை (வழி) எரியோடு தடத்தில் நகரப் பேருந்து.

33. திரு. ப. முத்துசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேடசந்தூர் வடமதுரை(வழி)எரியோடு தடத்தில் புதியதாக இராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து விடப்படுமா?

விடை—

வேடசந்தூர்—வடமதுரை (வழி) எரியோடு தடத்தில் நகரப் பேருந்தினை இயக்க திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் உரிமம் கோரி இராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தாரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. உரிமம் கிடைக்கப்பெற்றபின் நகரப் பேருந்து இயக்கப்படும்.

புதிய நகரப் பேருந்து விடுதல்.

34. திரு. ப. முத்துசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திண்டுக்கல்—வடமதுரை (வழி) பாடியூர், குளத்தூர் திருக்கண்குசவப்பட்டி, தும்மளக்குண்டு வழித்தடத்தில் புதிய நகரப் பேருந்து விடப்படுமா?

விடை—

திண்டுக்கல்—வடமதுரை (வழி) பாடியூர், குளத்தூர், திருக்கண்குசவபட்டி தும்மளக்குண்டு வழித்தடத்தின் நீளம் 27.2 கி.மீ. பாடியூர்—சந்திரபுரிசாலை குறுகலான மண் சாலையாகும். காமாட்சிபுரம் சந்திர புரி இடையில் காட்டு ஓடை ஒன்று உள்ளது. மழைக் காலங்களில் இதை கடப்பது கடினம். எனவே, இச்சாலையில் பேருந்து விட திண்டுக்கல் நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளரிடம் தகுதி சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. தகுதி சான்றிதழ் கிடைக்கப்பெற்றபின் இத்தடத்தில் பேருந்துவிட மேல் நடவடிக்கை எடுக்கப்படும்,

செய்யூர் தேவராஜபுரத்தில் ஆதி திராவிடர் சமுதாய நலக் கூடமும் திருமண மண்டபமும் கட்டுதல்.

35. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்ட செய்யூர் வட்டம், செய்யூர் தேவராஜபுரத்தில் ஆதி திராவிடர் சமுதாய நலக் கூடமும் திருமண மண்டபமும் கட்ட கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், செய்யூர் தேவராஜபுரத்தில் ஆதி திராவிடர் சமுதாய நலக் கூடமும், திருமண மண்டபமும் கட்ட கோரிக்கை வந்துள்ளது.

(ஆ) இக்கோரிக்கை அரசின் பரிசீலனையிலுள்ளது.

அணைக்கட்டு கிராமத்திலிருந்து சென்னைக்கு பேருந்து.

36. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், லத்தூர் ஒன்றியம் அணைக்கட்டு கிராமத்திலிருந்து கல்பாக்கம் வழியாக சென்னைக்கு தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகம் மூலம் பஸ் விட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் பஸ் விடப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கல்குளம் கிராமத்திலிருந்து மதுராந்தகத்திற்கு நகரப் பேருந்து.

37. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், லத்தூர் ஒன்றியம் கல்குளம் கிராமத்திலிருந்து பவுஞ்சூர் வழியாக மதுராந்தகம் நகரத்திற்கு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நகரப் பேருந்து விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்தடத்தில் நடப்பு நிதியாண்டில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தினரால் பேருந்து இயக்கப்படும்.

வாழைப்பட்டு ஏரிக்கு வரும் நீர்.

38. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், வாழைப்பட்டு ஏரிக்கு வரும் நீர் தடுக்கப்பட்டதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், சீர் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

விடை—

(அ) வாழைப்பட்டு ஏரிக்கு வரும் நீர் தடுக்கப்படவில்லை.

(ஆ) வாழைப்பட்டு ஏரி மதுராந்தகம் வட்டம், வாழைப் பட்டு கிராமத்தில் உள்ளது. ஏரியின் கொள்ளளவு 11.80 மில்லியன் கன அடிகள். ஏரியின் கீழ் பாசனப் பரப்பு 178.39 ஏக்கர். வாழைப்பட்டு ஏரியின் மேல் புறம் இரும்பேடு ஏரி உள்ளது. இரும்பேடு ஏரிக்கு இரண்டு கலங்குகள் உள்ளன.

1989 நவம்பர் 2]

ஒன்று இடது கோடியிலும் மற்றது வலது கோடியிலும் உள்ளது. இதன் இடதுபுறமுள்ள கலங்கல் வழியாக செல்லும் மிகுதி நீர் வாழைப்பட்டு ஏரிக்குச் செல்லும். வலபுறமுள்ள கலங்கல் மூலம் செல்லும் மிகுதி நீர் ஓடை மூலம் கடலுக்குச் செல்லும் வலது புறம் உள்ள கலங்கல் பழுதடைந்துள்ளதால் அதன் மூலம் மிகுதி நீர் சென்று விடுகிறது. ஆகவே இடதுபுறமுள்ள கலங்கல் மூலம் செல்ல வேண்டிய மிகுதி நீர் வாழைப்பட்டு ஏரிக்குச் செல்லவில்லை. மேற்கண்ட இவ்விரு கலங்கலை சீர் செய்யவும் வாழைப்பட்டு ஏரி வரத்துக் கால்வாயை தூர் எடுக்கவும் பொதுப்பணித் துறை ஆய்வுக் கோட்டம், வேலூர் மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாசன பரப்பு ஏதும் பாதிக்கப்படவில்லை.

செய்யூர் ஏரிக்கு வரும் நீர்.

39. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், செய்யூர் ஏரிக்கு வரும் நீர் தடுக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) செய்யூர் ஏரிக்கு வரும் நீர் முழுவதும் தடுக்கப்படவில்லை. ஆனால் வரத்துக் கால்வாயில் சில இடங்களில் தனியாரின் நில ஆக்கிரமிப்பினால் செய்யூர் ஏரிக்கு வரும் நீர் பாதிக்கப்படுகிறது. தனியாரின் நில ஆக்கிரமிப்பினை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அணைக்கட்டு— சென்னை (வழி) கல்பாக்கம் பேருந்து விடுதல்.

40. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், அணைக்கட்டு—சென்னை (வழி) கல்பாக்கம் பேருந்து விட கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

செங்கற்பட்டு வட்டத்தில் பேருந்து விடுதல்.

41. **திரு. எஸ். டி. உகம்சந்த் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், செங்கற்பட்டு வல்லக்கோட்டை (வழி) பாலூர், எழிச்சூர் பேருந்துவிட கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தாம்பரம்—பாலூர் (வழி) எழிச்சூர் பேருந்து விடுதல்.

42. **திரு. எஸ். டி. உகம்சந்த் :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செங்கற்பட்டு தாலுகா தாம்பரம்—பாலூர் (வழி) எழிச்சூர் பேருந்து விட பொது மக்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

1989 நவம்பர் 2]

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

நூல் நிலையம் அமைத்தல்.

43. திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவெறும்பூர் ஒன்றியம் துவாக்குடி மலைப் பகுதியில் நூல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

கல்லூரி ஏற்படுத்துதல்.

44. திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கலைக்கல்லூரி ஒன்று ஆலங்குளத்தில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) தொழிற்கல்லூரி ஒன்றை ரெட்டியார்பட்டியில் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) அவ்வாறான செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

[1989 நவம்பர் 2

திண்டுக்கல் மலைக்கோட்டை மைதானத்தில் விளையாட்டு அரங்கம்.

45. திரு. எஸ். ஏ. தங்கராஜன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திண்டுக்கல் மலைக்கோட்டை மைதானத்தில் மாவட்ட ஸ்டேடியம் கட்ட அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—

விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

செய்யூர் தாசில்தார் அலுவலகத்திற்குக் கட்டிடம்.

46. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கை - அண்ணா மாவட்டம் செய்யூர் தாசில்தார் அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டித்தர அரசால் நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

அரசின் நிதிநிலைக்கேற்ப உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

செவிலியர்களுக்கு குடியிருப்புகள்.

47. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

விடை—

செவிலியர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தரும் திட்டம் ஏதும் இல்லை.

கோயில் திருப்பணி.

48. திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாமல்லபுரத்தில் அருள்மிகு ஸ்தலசயனப்பெருமாள் திருக்கோயில் திருப்பணி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?

(ஆ) எப்பொழுது முடிக்கப்படும்?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) இத்திருக்கோயிலின் திருப்பணி 1981-ஆம் ஆண்டில் முதன் முதல் துவக்கப்பட்டது.

(ஆ) 30—6—1990-க்குள் முடிக்கப்பட உள்ளது.

(இ) திட்ட மதிப்பீடு மொத்தம் ரூ. 7,21,850.00

மேட்டூர் நகரியத்தை நகராட்சியாக மாற்றுதல்.

49. திரு. எம். சீரங்கன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சேலம் மாவட்டம், மேட்டூர் நகரம் நகரியக் குழுவாக இருப்பதை மாற்றி நகராட்சியாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

சேலம் மாவட்டம், மேட்டூர் நகரம் நகரியக் குழுவாக இருப்பதை மாற்றி நகராட்சியாக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[1989 நவம்பர் 2

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

50. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை - அண்ணா மாவட்டத்தில் எத்தனை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன?

(ஆ) அவைகளில் எத்தனை சங்கங்கள் இயங்காமல் உள்ளன?

விடை—

(அ) செங்கை - அண்ணா மாவட்டத்தில் 31—3—1989-ல் உள்ளபடி மொத்தம் 537 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

(ஆ) மேற்படி சங்கங்களில் 90 சங்கங்கள் இயங்காமல் உள்ளன.

நெல்லிவாசல் நாடு வழியாக புதுவூர் நாட்டிற்கு சாலை போடும் திட்டம்.

51. திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தருமபுரி மாவட்டம், சிங்காரப்பேட்டையில் இருந்து வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் உள்ள நெல்லிவாசல் நாடு வழியாக புதுவூர் நாட்டிற்கு தார் சாலை போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இச்சாலைப்பணி, மலைவாழ் பழங்குடியினர் திட்டத்தில் வரும் எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் செயல்படுத்தப்பட உள்ள திருத்திய சாலைப்பணி பட்டியலில் (Revised Master list of Roads) சேர்க்கப்பட உள்ளது.

1989 நவம்பர் 2]

திருப்பத்தூர் நகரப் பேருந்து நிலையத்தைப் புதுப்பிக்கும் திட்டம்

52. திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் நகரப் பேருந்து நிலையத்தைப் புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்தத் திட்டம் செயல் படுத்தப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் நகராட்சியில் தற்போதுள்ள பேருந்துநிலையத்தைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

சுற்றுலாப் பயணிகள் விடுதிகள்.

53. திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் புதுலூர் நாட்டில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கென விடுதிகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

வடஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலை புதுலூர் நாட்டில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கென விடுதிகள் கட்டும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

ஏலகிரி மலையில் அத்தனாவூர் என்ற இடத்தில் சுற்றுலாப் பயணிகள் விடுதிகள் கட்டுதல்.

54. திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏலகிரி மலையில் அத்தனாவூர் என்னும் இடத்தில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கென விடுதிகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஏலகிரி மலையில் அத்தனாவூர் என்னும் இடத்தில் தமிழக அரசு 1986-87.இல் ஆறு லட்சம் ரூபாய் செலவில் இளைஞர் விடுதி ஒன்று கட்டியுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இவ்விடுதியை ஏற்று நடத்தி வருகிறது.

திருவையாறு அரசர் கல்லூரிக்கு புதிதாக கட்டிடங்கள், விடுதிகள் அமைத்தல்.

55. **திரு. துரை சந்திரசேகரன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவையாறு அரசர் கல்லூரிக்கு புதிதாக கட்டிடங்கள், விடுதி அமைப்பதற்கான நிலம் இன்னும் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருவையாறு அரசர் கல்லூரிக்கு 20.85 ஏக்கர் நிலம் நில உரிமை பெறும் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டு அக்கல்லூரியின் சத்திரம் நிர்வாகியிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

திருப்பத்துருத்தி பேரூராட்சியில் புறக்காவல் நிலையம்.

56. **திரு. துரைசந்திரசேகரன் :**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மேற்கு திருவையாறு சரகம் திருப்பத்துருத்தி பேரூராட்சியில் புறக்காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்பெறும்.

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

ரிநப்பள்ளி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலத்தை நெடுஞ்சாலையுடன் இணைக்கும் வேலை.

57. திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரூர் வட்டம் நரிப்பள்ளி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலத்தை நெடுஞ்சாலையுடன் இணைக்கும் வேலை பூர்த்தி ஆகாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பாலத்திற்கு அணுகு சாலை அமைக்கும் பணியானது நில ஆர்ஜிதப் பணிகள் நிறைவு பெற்றவுடன் மேற்கொள்ளப்படும்.

காரோடு என்ற இடத்தில் ஆதி திராவிடர்களுக்காக நடத்தப்படும் பள்ளி.

58. திரு. செ. நூர்முகமது :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குமரி மாவட்டம், விலவங்கோடு தாலுகா, காரோடு என்ற இடத்தில் ஆதி திராவிடர்களுக்காக நடத்தப்படும் பள்ளிக்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமென்று அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கொல்லிமலை அடிவாரத்தில் நீர்த்தேக்க குட்டை கட்டுதல்.

59. திரு ஏ. சுப்பு:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், கொல்லி மலை அடிவாரத்தில் நீர்த்தேக்க குட்டை கட்ட அரசு திட்ட மிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மேற்கண்ட திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திருவாவடுதுறை, புதூர் வடமட்டம் வழியாக கூந்தலூர் செல்லும் சாலைக்கு கப்பி போடுதல்.

60. திரு. இரெ. இராசமாணிக்கம்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம், திருவிடைமருதூர், குடவாசல் ஒன்றியங்களை இணைக்கும் திருவாவடுதுறை, புதூர் வடமட்டம் வழியாக கூந்தலூர் செல்லும் சாலையை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை மூலமாக கப்பி போட்டு கொடுக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள்

61. திரு. என். பழனிவேல்:

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1989 நவம்பர் 2]

குடிசைமாற்று வாரியத்தின் மூலம் நடப்பு ஆண்டில் கட்ட உத்தேசித்துள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

குடிசைமாற்று வாரியத்தின் மூலம் 1988-89 ஆண்டில் 1,000 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கயத்தாறில் சிவன் கோவிலை பழுதுபார்க்கும் திட்டம்.

62. திரு. எம் முத்தையா :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவில்பட்டி தாலுகா, கயத்தாறில் உள்ள சிவன் கோவிலை பழுதுபார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

கோவில்பட்டி தாலுகா, கயத்தாறில் உள்ள சிவன் கோவிலை பழுதுபார்த்தல் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிரதாரமபுரம்—மாங்குடி சாலையினை அபிவிருத்தி செய்தல்.

63. திரு. வி. தம்புசாமி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாகை, திருவாரூர் தாலுகாக்களை மையமாக இணைக்கும் வகையில் பிரதாரமபுரம் முதல் மாங்குடி வரையுள்ள சாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

எட்டுக்குடி-திருத்துறைப்பூண்டி சாலையில் தெற்கு வட்டாரத்தில் பாலம் கட்டுதல்.

64. திரு. வி. தம்புசாமி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) எட்டுக்குடியில் இருந்து சித்தாய்மூர், ஆலத்தம்பாடி வழியாக திருத்துறைப்பூண்டி செல்லும் சாலையில் தெற்கு வட்டாரத்தில் பாலம் கட்டும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், பாலம் கட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பனையம்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளிக்கு வகுப்பறைகள் கட்டுதல்.

65. **திரு. வி. கே சின்னசாமி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் ஒன்றியம் பனையம்பள்ளியில் புதியதாக துவக்கப்பட்டுள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக்கு வகுப்பறைகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

கொடிவேரி அணைப் பகுதியில் பாலம் கட்டுதல்.

66. **திரு. வி. கே.சின்னசாமி:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், பவானி ஆற்றினை கடந்து செல்ல கொடிவேரி அணைப்பகுதியில் பாலம் கட்டுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 நவம்பர் 2]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பெரியார் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் நடைபெறும் பள்ளிகள், அரசு உறைவிடப் பள்ளிகள் ஆகியவைகளுக்கு ஆசிரியர்கள் நியமனம்.

67. திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டத்தில் ஆதி திராவிடர் நலத் துறை மூலம் நடைபெறும் பள்ளிகள், அரசு உறைவிடங்கள் பள்ளிகள் ஆகியவற்றில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு தக்க படி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் ஆசிரியர்களை நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் 150 இடைநிலை ஆசிரியர் பணி யிடங்கள் ஏற்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவை களிலிருந்து பெரியார் மாவட்டத்தின் ஆசிரியர் தேவையைப் பூர்த்தி செய்வது கவனிக்கப்படும்.

பர்கூர், அரசு உறைவிடப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்.

68. திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அந்தியூர் தொகுதியில் பர்கூர் அரசு உறைவிடப் பள்ளி யினை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

அந்தியூர் தொகுதியில் பர்கூர் அரசு உறைவிடப் பள்ளி யினை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 நவம்பர் 2

பேராம்பூர்-வெம்மணிக்கு நகரப் பேருந்து இயக்குதல்.

69. திரு. வெ. இராசு:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம் பேராம்பூர்-வெம்மணிக்கு நகரப் பேருந்து இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேறும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மணப்பாறையில் இருந்து கொடும்பாலூர் வழியாக விரா்லிமலைக்கு நகரப் பேருந்து.

70. திரு. வெ. இராசு:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம் மணப்பாறையில் இருந்து கொடும்பாலூர் வழியாக விராலிமலைக்கு நகரப்பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் நிறைவேறும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தேங்காய் தின்னிப்பட்டியில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றுதல்.

71. திரு. வெ. இராசு:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

1989 நவம்பர் 2]

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலி மலை கல்விச்சரகம், தேங்காய் தின்னிப்பட்டியில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திருமயத்தை சுற்றுலா மையமாக்குதல்.

72. **திரு. ஆலவாயல் சுப்பையா :**

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருமயத்தை சுற்றுலா மையமாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

ஏதும் இல்லை.

திருமயம் தொகுதியில் கடன், நிலவரி, தள்ளுபடி செய்யவோ, தள்ளி வைக்கவோ் நடவடிக்கை.

73. **திரு. ஆலவயல் சுப்பையா:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?—

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம தொகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டு உள்ளதால் அரசுக் கடன் மற்றும் நிலவரி, கூட்டுறவுக் கடன் முதலியவைகளை தள்ளுபடி செய்யவோ, தள்ளி வைக்கவோ அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயம் உள்பட ஏழு வட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு (50 சதவீதமும் அதற்கு குறைவாக விளைச்சல் உள்ள) 1398 பசலி ஆண்டுக்கு நிலவரி முதலியவற்றைத் தள்ளுபடி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

செய்தும், அரசுக்கு சேரவேண்டிய அனைத்து கடன்களையும், நிலவரி பாக்கிகளையும் அடுத்த பசலி ஆண்டுக்கு தள்ளி வைத்தும், அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

குஜிலியம்பாறை-குவாரி புதிய நகரப் பேருந்து.

74. திரு. ப. முத்துசாமி:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கவுண்டலூர்-புதூர், கரிக்காலி, மச்சக் கவுண்டலூர் வசவநாய்க்கன்பட்டி, சுப்பிரமணி கவுண்டலூர் வழியாக குஜிலியம்பாறை-குவாரி செல்லுவதற்கு புதிய நகரப்பேருந்து விட கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நகரப்பேருந்து விட ஏற்பாடு செய்யப் படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ)

இராணிமங்கம்மாள் போக்குவரத்துக்கழகம் இத்தடத்தில் நகரப் பேருந்துகளை இயக்க நடவடிக்கைகளை மேற் கொள்கிறது.

வரட்டாற்றின் குறுக்கே பாலம்.

75. திரு. ப. முத்துசாமி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திண்டுக்கல்-கரூர் குஜிலியம்பாறை நெடுஞ்சாலை யில் கோவிலூருக்கு வடபுறம் உள்ள வரட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1989 நவம்பர் 2]

ஓடையில் பாலம் அமைத்தல்.

76. திரு. ப. முத்துசாமி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேடசந்தூர்-கரூர் பாதையில் வள்ளிப்பட்டிக்குத் தென்புறம் உள்ள ஓடையில் பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

வள்ளிப்பட்டிக்கு வடபுறம் உள்ள ஓடையில் பாலம் அமைத்தல்.

77. திரு. ப. முத்துசாமி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேடசந்தூர்-கரூர் (வழி) ஆர். வெள்ளோடு நெடுஞ்சாலையில் வள்ளிப்பட்டிக்கு வடபுறம் உள்ள ஓடையில் பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

குஜிலியம்பாறை-அழகாபுரி வழித்தடத்தில் புதிய நகரப் பேருந்து.

78. திரு. ப. முத்துசாமி:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குஜிலியம்பாறை-அழகாபுரி (வழி) புளியம்பட்டி, பில்லம நாயக்கன்பட்டி, கூம்பூர் வழித்தடத்தில் புதிய நகரப்பேருந்து விடப்படுமா?

விடை—

குஜிலியம்பாறை-அழகாபுரி (வழி) புளியம்பட்டி, பில்லம நாயக்கன்பட்டி, கூம்பூர் வழித்தடத்தின் மொத்த நீளம் 26.6 கி.மீ. இவ்வழித்தடத்தில் அமைந்துள்ள அனைத்து கிராமங்களும் பேருந்து வசதி பெற்ற கிராமங்கள். வேடசந்தூர்-கரூர் (வழி) அழகாபுரி, கூம்பூர் வழித்தடத்தில் 6 புற நகர் பேருந்துகள் 34 தனி நடைகளையும், 3 நகரப் பேருந்துகள் 22 தனி நடைகளையும் இயக்கிக் கொண்டிருப்பதால் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானது எனக் கருதப்படுகிறது.

மதுராந்தகம் கோதண்டராமர் கோவில்.

79. திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுராந்தகம்—கோதண்டராமர் கோவிலுக்கு அரசு நிதி உதவி செய்து கடன்களையும் நிலுவையில் உள்ள குத்தகைகளையும் வசூலிக்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

நிலுவையில் உள்ள குத்தகைகளை வசூல் செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடலூர் கிராமத்தில் மீனவ குப்பங்களுக்கு தனியாக டிரான்ஸ்பார்மர் அமைத்தல்.

80. திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணா மாவட்டம் லத்தூர் ஒன்றியம் கடலூர் கிராமத்தில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால் தனியாக மீனவ குப்பங்களுக்கு டிரான்ஸ்பார்மர் அமைக்க கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

1989 நவம்பர் 2]

விடை—

(அ) கோரிக்கை ஏதும் வரவில்லை.

(ஆ) எழவில்லை.

மழுகெட்டான் கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வருதல்.

81. திரு. எஸ். எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் தொகுதியில் மானூர் குளத்திற்கு மதிகெட்டான் கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டுவர திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

பழனி தொகுதியில் ரோடு வேலை.

82. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பழனி தொகுதியில் புது ஆயக்குடி-வரதாபட்டணம் (வழி) பெரியகுளத்துக்கரை ரோடு வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) பழைய ஆயக்குடி ஆர்க்-அமரபண்டி, வேப்பன் வலசு ரோட்டிற்கு பழுதுபார்க்க சாங்ஷன் செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

(அ) 1—2—1989 முதல் பணி தொடங்கப்பட்டு நடை பெற்று வருகிறது.

(ஆ) ரூ. 1.50 இலட்சங்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1989 நவம்பர் 2

செய்யூர் சார்நிலைக் கருவூலத்திற்கு கட்டிடம்.

83. திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கை அண்ணா மாவட்டம் செய்யூர் சார்நிலைக் கருவூலத்திற்கு கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

அரசின் பரிசீலனையில் இல்லை.

மதுராந்தகம் தொகுதியில் புதியதாக ஆதி திராவிடர் நலப்பள்ளி.

84. திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுராந்தகம் தொகுதியில் புதியதாக ஆதி திராவிடர் நலப்பள்ளி துவக்க கொடுக்கப்பட்டுள்ள மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

மதுராந்தகம் தொகுதியில் புதியதாக ஆதி திராவிடர் நலப்பள்ளி துவக்க எந்த மனுவும் இதுவரை பெறப்படவில்லை.

மலைப்பாளையம் பகுதியில் புதியதாக ஆதி திராவிடர் நலப்பள்ளி.

85. திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கருங்குழி பேரூராட்சி மலைப்பாளையம் பகுதியில் புதியதாக ஆதி திராவிடர் நலப்பள்ளி துவக்க கோரிக்கை வந்துள்ளதா?

1989 நவம்பர் 2]

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கருங்குழி பேரூராட்சி மலைப்பாளையம் பகுதியில் புதியதாக ஆதி திராவிடர் நலப்பள்ளி துவங்க கோரிக்கை எதுவும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மேலூரில் புறவழிச்சாலை.

86. திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் மேலூர் தொகுதி மேலூரில் புறவழிச்சாலை (By-pass Road) அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

ஜோலார்பேட்டை கால்நடை மருந்தகத்திற்கு சொந்தக் கட்டிடம்.

87. திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடஆற்காடு மாவட்டம், ஜோலார்பேட்டையில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு சொந்தமாகக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உடன் கட்டி முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆலடியூர் வைராவிகுளம் கிராமங்களை இணைக்க மணிமுத்தாறு நதியில் தாம்போதி அமைத்தல்.

88. திரு. ரவி அருணன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், ஆலடியூர் கிராமத்தையும் வைராவிகுளம் கிராமத்தையும் இணைக்கும் வகையில் மணிமுத்தாறு நதியில் தாம்போதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

திட்டம் எதுவும் இல்லை.

ஆதி திராவிடர்களுக்கென கிராமங்களில் கட்டப்படும் வீடுகள், சத்துணவுக் கூடங்கள் போன்ற பணிகளை பொதுப் பணித்துறை மூலம் கட்டுதல்.

89. திரு. ஆர். அண்ணாநம்பி:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆதி திராவிடர்களுக்கென கிராமங்களில் கட்டப்படும் வீடுகள், சத்துணவுக்கூடங்கள் போன்ற பணிகளை பொதுப்பணித்துறை மூலம் கட்டும் நோக்கம் இந்த அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து செயல்படும்?

விடை—

(அ) ஆதி திராவிடர்களுக்காக கிராமங்களில் கட்டப்படும் வீடுகள், சத்துணவுக்கூடங்கள் போன்ற பணிகள் இத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும். வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்வதால் அதனை மேற்படி

1989 நவம்பர் 2]

திட்டங்கள் செயல்படுத்தும் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் வாயிலாக மட்டுமே கட்டிக் கொடுக்கப்படுகின்றன. பொதுப்பணித்துறை மூலம் செயல்படுத்த கருத்துரு எதுவும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

சிதம்பரத்தில் மகளிர் கல்லூரி.

90. டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் நகரில் மகளிர் கல்லூரி தொடங்க திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.

ஒட்டன்சத்திரத்தில் கலைக்கல்லூரி.

91. திரு. பி. காளியப்பன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஒட்டன்சத்திரத்தில் ஒரு கலைக்கல்லூரி (Arts College) துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சிறு பொருட்காட்சி நடத்துதல்.

92. திரு. ஆர். அண்ணாநம்பி:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழகம் முழுவதும் சிறு பொருட்காட்சி (கார்னிவல் ஷோ) நடத்த அரசு அனுமதி வழங்குமா?

விடை—

அரசு சிறு பொருட்காட்சி நடத்த அனுமதி வழங்கி வருகிறது.

கமண்டல் நதியில் மேம்பாலம் கட்டுதல்

93. திரு. பெ. சு. திருவேங்கடம்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

போளூர்-செங்கம் சாலையில் சோழபுரம் கிராமத்துக்கு அருகில் கமண்டல் நதியில் மேம்பாலம் கட்டும் வேலையை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

குறிப்பிடப்பட்டுள்ள பாலப்பணியினை 15-10-1989-க்குள் நிறைவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5 கிலோ அரிசி ஏழைகளுக்கு வழங்கும் திட்டத்திற்கு வருமான வரம்பை அதிகப்படுத்துதல்.

94. திரு. வெ. இராசு:

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழக அரசு, புத்தாண்டு தினத்தன்று 5 கிலோ அரிசி ஏழைகளுக்கு வழங்கும் திட்டத்திற்கு மாத வருமானம் வரம்பு ரூ. 300 என்பதை தளர்த்தி அதிகப்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரும் புத்தாண்டுக்குள் அறிவிக்கப்படுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1989 நவம்பர் 2]

தமிழ்நாட்டில் புதிய விமான நிலையங்கள்.

95. திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

புதிய விமான நிலையங்கள் அமைப்பதற்காக இந்திய விமானப் போக்குவரத்து அமைச்சகத்திற்கு மாநில அரசு பரிந்துரை செய்துள்ள இடங்கள் குறித்த விவரம் யாது?

விடை—

தமிழ்நாட்டில் சேலத்திலும், தூத்துக்குடியிலும் புதிய விமான நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென இந்திய விமானப் போக்குவரத்து அமைச்சகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. இவ்விரு இடங்களிலும் விமான நிலையங்கள் அமைக்கும் பணி மத்திய, மாநில அரசுகளினால் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இடைக்கழிநாட்டுப் பகுதியில் பனைவெல்லம் கூட்டுறவுச் சங்கம்.

96. திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், இடைக்கழிநாட்டு பகுதியில் பனைவெல்லம் கூட்டுறவுச் சங்கம் சில ஆண்டுகளாக இயங்காமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதை இயங்கச் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இப்பிரச்சினை எழவில்லை.

கால்நடைத் தீவனங்களை நியாய விலைக்கடைகளின் மூலம் வழங்குதல்.

97. திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கால்நடைத் தீவனங்களை நியாய விலைக்கடைகளின் மூலம் வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இத்தகைய திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பால்வளத்துறையின் மூலம் வழங்கப்படும் பால்

98. திரு, என். பழனிவேல் :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பால்வளத்துறையின் மூலமாக நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் பாலின் அளவு என்ன ?

விடை—

சென்னை மாநகரம் மற்றும் மாவட்டங்களில் நாளொன்றுக்கு சராசரியாக சுமார் 9.97 இலட்சம் லிட்டர் பால் பொதுமக்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. இதில் சென்னை மாநகரத்தில் மட்டும் நாளொன்றுக்கு தோராயமாக 6.3 இலட்சம் லிட்டர் நிலைப்படுத்திய பால் பொதுமக்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது.

திருப்பூரில் கலை அரங்கம்.

99. திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாவட்டம், திருப்பூரில் கலை அரங்கம் கட்ட அரசு முன்வருமா ?

விடை—

இல்லை.

1989 நவம்பர் 2]

தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுதல்

100. திரு. எம். முத்தையன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை-சேலம் (வழி) மூங்கில் துறைப்பட்டு, சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, ஆத்தூர், சேலம் இந்த நெடுஞ் சாலை வழித் தடத்தை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

அவிநாசி தொகுதியில் பாசன வசதிக்கென குளம் குட்டைகளுக்கு தண்ணீர் விடும் திட்டம்.

101. திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் அவினாசி தொகுதியில் பாசன வசதி யின்மையால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவதால் இப் பகுதியிலுள்ள குளம் குட்டைகளுக்கு தண்ணீர் விட திட்டம் வகுக்கப்படுமா ?

விடை—

இல்லை. அவினாசி தொகுதிக்கு பாசன வசதி செய் வதற்காக மேல்பவானித் திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. பவானிசாகர் நீர்த்தேக்கம் கடந்த சில வருடங்களாக பற்றாக்குறையில் இருந்து வருகிறது. மேட்டூரில் தண்ணீர் குறையும்போது பவானிசாகரில் இருந்து காவிரி டெல்டா பகுதிக்கும், தண்ணீர் விடப்படுகிறது. காவிரி சம்பந்தமாக கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக் கிடையேயான பிரச்சினை தீர்க்கப்படவில்லை, இச்சூழ்நிலை யில் பவானிசாகருக்கு மேற்புறத்தில் பாசனத்திற்கு நீர் எடுப்பது சாத்தியமில்லை என்று தீர்மானித்து மேல்பவானித் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கிராமப்புற சாலைகளுக்காக செலவு

102. திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடந்த ஐந்து ஆண்டுகளில் உள்ளாட்சி மன்றங்கள் வாயிலாக கிராமப்புற சாலைகளுக்காக செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை—

கடந்த ஐந்து ஆண்டுகளில் (1983-84 முதல் 1987-88 முடிய) உள்ளாட்சி மன்றங்கள் வாயிலாக கிராமப்புற சாலைகளுக்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 18,84,21,017/- ஆகும்.

அனுமதி பெறாத வீடியோ கடைகள்.

103. திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் 1988-89-ல் அனுமதியின்றி வீடியோ கடைகளில் கேசட்டுகள் விற்றவர்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(ஆ) அனுமதியின்றி கேசட்டுகள் விற்பனை செய்வதை தடுக்க அரசின் திட்டம் என்ன ?

விடை—

(அ) சென்னையில் 1988 மற்றும் 1989 (28—2—1989 வரை) ஆம் ஆண்டுகளில் அனுமதியின்றி வீடியோ கடைகளில் கேசட்டு களை விற்றவர்கள் மீது 55 குற்ற வழக்குகள் மொத்தம் பதிவு செய்யப்பட்டன. அவைகளில் 20 வழக்குகள் தண்டனை அடையப்பட்டன. மீதமுள்ள 28 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையிலும் 7 வழக்குகள் புலனாய்விலும் உள்ளது.

(ஆ) அனுமதியின்றி கேசட்டுகள் விற்பனை செய்வதைத் தடுக்க, வீடியோ நூலகங்களை அடிக்கடி திடீர்

பரிசோதனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்குமாறு காவல் துறையினருக்கு அரசால் அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் இது சம்பந்தமாக கண்காணிப்பு பணிகளை தீவிரப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கோவை மாநகர எல்லைக்குள் சுரங்கப்பாதை

104. திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாநகர எல்லைக்குள் மிகவும் போக்கு வரத்து நெருக்கடியான எத்தனை சாலைகளில் சுரங்கப்பாதை கட்ட திட்டமிடப்பட்டுள்ளது ?

(ஆ) உடனடியாக எந்தெந்த சாலைகளில் எந்தெந்த இடத்தில் சுரங்கப்பாதை அமைக்க முடிவு செய்யப் பட்டுள்ளது ?

(இ) அதன் மதிப்பீடு என்ன ?

(ஈ) எப்பொழுது பணி தொடங்கப்படும் ?

விடை—

(அ) கோவை மாநகர எல்லைக்குள் மிகவும் போக்கு வரத்து நெருக்கடியாக உள்ள காந்திபுரத்தில், சக்தி சாலை, டாக்டர் நஞ்சப்பா சாலை, பாரதியார் சாலை, கிராஸ்கட் சாலை ஆகிய சாலைகள் கூடும் சந்திப்பில் ஒரு சுரங்கப் பாதை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) கோவையில் உள்ள கிராஸ்கட் சாலையில் காந்தி புரம் சந்திப்பு அபிவிருத்தி செய்ய ஆய்வு செய்யும்போது சுரங்கப்பாதை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் ஆராயப் படும்.

(இ) காந்திபுரம் சந்திப்பு அபிவிருத்தி செய்ய மற்றும் சுரங்கப்பாதை கட்டுவதற்கு தோராய மதிப்பீடு ரூ. 1.69 கோடி ஆகும்.

(ஈ) ஆய்வுப்பணி முடிந்ததும் விரைவில் ஆரம்பிக்கப் படும்.

சங்கிலிவாடி கிராம ஆதி திராவிடர்கள் பயன்படுத்தும் சுடுகாட்டுப்பாதை ஆக்கிரமிப்பு.

105. திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரூர் வட்டம், சங்கிலிவாடி கிராம ஆதிதிராவிடர்கள் பயன்படுத்தும் சுடுகாட்டுப்பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) அரூர் வட்டம், சங்கிலிவாடி கிராம ஆதிதிராவிடர்கள் பயன்படுத்தும் சுடுகாட்டுப்பாதையில் இருந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுவிட்டது. தற்போது ஆக்கிரமிப்பு இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

நிலமற்ற விவசாயிகளுக்கு குத்தகைக்கு வனத்துறை நிலம்

106. திரு. பொன். விஜயராகவன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலமற்ற விவசாயிகளுக்கு வனத்துறைக்குச் சொந்தமான நிலங்களில் ஏலக்காய் பயிரிட குத்தகை வழங்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) எந்தெந்தப் பகுதிகளில் எவ்வளவு நிலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது?

னடை—

(அ) வனத்துறைக்கு சொந்தமான நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்கு ஏலக்காய் பயிரிட குத்தகை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மொத்தம் 437 நபர்களுக்கு ஏலக்காய் பயிரிட குத்தகை வழங்கப்பட்டுள்ளது. தற்போது 151 நபர்கள்

குத்தகை அனுபவித்து வருகின்றனர். மீதமுள்ள 286 நபர்களுடைய குத்தகை நிலத்தை துறை திரும்பப்பெற்றுள்ளது.

(இ) குத்தகை நிலம் பல்வேறு மாவட்டங்களில் விடப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு :—

கோட்டம்.	பரப்பளவு ஹெக்டேரில்
(1)	(2)
1. தேனி	535.94
2. கோடைக்கானல்	425.65
3. திண்டுக்கல்	1,019.06
4. திருநெல்வேலி	162.63
5. கன்னியாகுமரி	138.00
6. செங்கோட்டை வனவிலங்கு பகுதி. ..	392.40
7. திருநெல்வேலி வனவிலங்கு பகுதி	97.37
மொத்தம் ..	2,771.05

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

புத்துக்கண்ணூர்—ஆவாரங்குப்பம் நெடுஞ்சாலை சீரமைத்தல்

107. திரு. ஆர். மகேந்திரன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாட்ரம்பள்ளி தொகுதியில் புத்துக்கண்ணூர்-ஆவாரங்குப்பம் நெடுஞ்சாலை சீரமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீரமைக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதியில் புத்துக்கண்ணூர்-ஆவாரங்குப்பம் நெடுஞ்சாலை சீரமைக்க சுமார் ரூ. 6.40 இலட்சம் தேவைப்படுகிறது. அரசின் நிதி நெருக்கடி காரணமாக அபிவிருத்தி வேலை எடுத்துக் கொள்ளப்படவில்லை. இருந்த போதிலும் நிதிநிலைமை சீர்பட்டவுடன் இப்பணி எடுத்துக் கொள்ளப்படும்.

பி.கே. மூக்கையாத்தேவர் சிலை

108. திரு. பி. என். வல்லரசு:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பார்வர்டு பிளாக் தலைவர் பி. கே. மூக்கையாத் தேவர் சிலையை மதுரை அரசரடியில் வைப்பதற்கு அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இட அனுமதி வழங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ); ஆம். அரசிடம் அனுமதி கேட்கப்பட்டு 3—2—1983ம் நாளிட்ட ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை (நிலை) எண். 147-ல் சிலை நிறுவ அனுமதி வழங்கப்பட்டது. சிலை நிறுவ செலவாகும் தொகைக்கு சமமாக சிலை பராமரிப்புக்கு ரூ. 10,100/- செலுத்தக் கோரி சிலை நிறுவும் கமிட்டி செயலருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அத்தொகை செலுத்தப்பட்டவுடன் இட அனுமதி வழங்கப்படும்.

நகரப்பேருந்து விடுதல்

109. திரு. பி. என். வல்லரசு.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 நவம்பர் 2]

(அ) உசிலம்பட்டி ஒன்றியம், பண்ணைபுரம், வில்லாணி வழியாக வி. பெருமாள்பட்டிக்கு நகரப்பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயற்படுத்தப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ). இல்லை. வில்லாணி-பெருமாள்பட்டி கிராமம், உசிலம் பட்டியிலிருந்து 4.2 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இதில் 2.5 கிலோமீட்டர் தூரம் பேருந்து போக்குவரத்து வசதியில்லாத பகுதி. இப்பகுதியில் சாலை மிகவும் மோசமாக உள்ளது. எனவே இச்சாலையை பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றார்போல் சீர் செய்யப்பட்டதும், மேல் நடவடிக்கை பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தால் எடுக்கப்படும்.

எ. செட்டிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம்.

110. திரு. வி.கே. சின்னச்சாமி

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பெரியார் மாவட்டம் எ. செட்டிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தமாக கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

பொதுமக்களிடமிருந்து பணம் நன்கொடை கட்டிடம் கட்ட நிலம் தானம் வழங்கி பதிவு செய்தல் முடிந்தவுடன் பெரியார் மாவட்டம் செட்டிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோவை மாவட்டத்திற்கு முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித்தலைவரின் பெயர்,

திரு. சே. ஏ. செங்கோட்டையன் :

திரு. வே. பெரியசாமி :

திரு. வே. நா. சுப்பிரமணியன்

திரு. வி. கே. சின்னச்சாமி மற்றும்

திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாவட்டத்திற்கு முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவரின் பெயர் வைக்க அரசு முன்வருமா ?

விடை—

கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பிரித்தமைக்கவோ அல்லது அம்மாவட்டத்தின் தற்போதைய பெயரை மாற்றவோ எவ்விதமான செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லாத நிலையில் முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவரின் பெயரை வைக்க சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

திருக்கோவிலூர் வீரசோழபுரம் வழி ஆயத்தூர் பேருந்து

112. திரு. எ. ஜி. சம்பத் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூரிலிருந்து வீரசோழபுரம் வழியாக ஆயத்தூர் வரை சென்று கொண்டிருந்த பேருந்து மீண்டும் விடப்படுமா ?

விடை—

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர்-ஆயத்தூர் (வழி) வீரசோழபுரம்-கடலூர், காக்குப்பம், சத்திரம் அரகண்டநல்லூர், ஆய்காடு தடத்தில் காக்குப்பம் அருகில் ஒரு வாய்க்கால் பாலம் பழுதடைந்து இருப்பதால், பாலம் சரி செய்யும் வரை பெரிய வாகனங்கள் செல்வதை தடை செ

யக்கோரி சம்பந்தப்பட்ட திருக்கோவிலூர் உதவி நிர்வாகப் பொறியாளர் (பொதுப்பணித்துறை) எழுதியுள்ளார் எனவும் தற்போது மேற்படி தடத்தில் ஓடப்படும் தனியார் பேருந்துகள் (வெளியூர் பேருந்துகள்) 7' 6'' அகலம் உடைய சிறிய பேருந்துகள், மேற்கண்ட தடத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆனால் இதே தடத்தில் ஓட்டப்பட்ட தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நகரப்பேருந்து 8' 2'' அகலமும் 210'' வீல் பேஸ் உள்ள பெரிய வாகனமானதால் மேற்கண்ட குறுகிய பாலம் உள்ள தடத்தில் தந்தை பெரியார் கழக பேருந்து ஓட்டுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது எனவும் சாலை சீர் செய்தபிறகு கழக நகரப் பேருந்து ஓட்டப்படும் எனவும் போக்குவரத்து ஆணையர் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை தொகுதியில் ரேஷன் கார்டுகள் பெறாத குடும்பங்கள்.

113. திரு. கே. பிச்சாண்டி:

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவண்ணாமலை தொகுதியில் ரேஷன் கார்டுகள் பெறாத குடும்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டு கார்டுகள் வழங்க ஆவன செய்யப்படுமா ?

விடை—

திருவண்ணாமலை தொகுதியில் ரேஷன் கார்டுகள் பெறாத குடும்பங்களுக்கு 1988-ம் வருடம் ஜனவரி மாதத்தில் பழைய குடும்ப அட்டைகள் புதுப்பித்து வழங்கப்பட்டன. புதிய குடும்ப அட்டைகளுக்கான மனுக்கள் பெறப்பட்டு விசாரணைக்குப்பின் உணவு அட்டைகள் வழங்கப்பட்டன.

மறுபடியும் புதிதாக கணக்கெடுப்பு நடத்தி 1—1—1990-ல் இருந்து புதிய குடும்ப அட்டை வழங்கப்பட வேண்டுமென்று தற்போது அரசு ஆணையிட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தை இதுவரை அட்டை பெறாத அனைவரும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள்.

114. திரு. மு. இராமநாதன் மற்றும் திரு. வ. முல்லைவேந்தன்:

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகம் முழுமையும் உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் எத்தனை ?

(ஆ) இதில் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சங்கங்கள் எத்தனை ?

விடை—

(அ) 30—4—1989-ல் உள்ளபடி மொத்த சங்கங்களின் எண்ணிக்கை 6,385 (செயல்படுபவை), இவை தவிர பதிவு செய்யப்பட்டு செயல்படாமல் உள்ள சங்கங்களின் எண்ணிக்கை 1,784.

(ஆ) மேற்கண்ட சங்கங்களில் ஆதி திராவிடர்களுக்கு அமைக்கப்பட்டுள்ளவை 224 ஆகும். (அவற்றில் செயல் படுபவை-97, செயலற்றவை-127).

அரசு மற்றும் சேவா சங்கங்கள் தயாரித்த கதர்த் துணியின் மதிப்பு

115. **திரு. மெ. ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1985-86 முதல் 1988-89-இல் டிசம்பர் மாதம் முடிய அரசு மற்றும் சேவா சங்கங்கள் தயாரித்த கதர்த்துணியின் மதிப்பு ஆண்டுவாரியாக எவ்வளவு ?

விடை—

ஆண்டு.	கதர் உற்பத்தி.		மொத்தம்.
	தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.	சர்வோதய சங்கங்கள்.	
	(ரூபாய் இலட்சத்தில்)		
(1)	(2)	(3)	(4)
1985—86 ..	1,907.34	1,162.58	3,069.92
1986—87 ..	2,300.29	1,297.37	3,597.66
1987—88 ..	2,430.81	1,418.85	3,849.66
1988—89 .. (31—3—89 முடிய)	3,127.00	1,548.76	4,675.76

1989 நவம்பர் 2]

தார் போடப்படாத பகுதியைத் தார் சாலையாக மாற்றுதல்.

116. திரு. வ. அன்பழகன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யாறு தொகுதியை சேர்ந்த புதுப்பாளையம்-காஞ்சிபுரம் திருவத்திபுரம் சாலையில் இணையும் சாலை 0/17/2-ஐ இன்னும் தார் போடப்படாத பகுதியைத் தார் சாலையாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் தார் போடப் படாத பகுதியான கி.மி. 5/0-16/2 வரையிலான கப்பித்தள சாலைப்பகுதி புதுப்பிக்கப்பட்டு தார் சாலையாக மேம்பாடு செய்ய உத்தேசமாக ரூ. 17.00 இலட்சம் தேவைப்படுகிறது. நிதி நெருக்கடி நிலை காரணமாக அரசு சாலைத் திட்டத்தில் இப்பணியை எடுத்துச் செய்ய இயலாது. இருந்தபோதிலும் இச்சாலைப்பகுதியை பராமரிப்பு நிதியைக் கொண்டே கட்டம் கட்டமாக தார் சாலையாக மேம்பாடு செய்ய வரும் ஆண்டுகளில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளது.

திண்டுக்கல் புத்தூர் வழித்தடத்தில் புதியதாக நகரப் பேருந்து.

117. திரு. ப. முத்துசாமி:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திண்டுக்கல்-புத்தூர் (வழி) அய்யலூர் குறுந்தம்பட்டி வழித்தடத்தில் புதியதாக நகரப்பேருந்து விடப்படுமா ?

விடை—

திண்டுக்கல்-புத்தூர் (வழி) அய்யலூர் குறுந்தம்பட்டி பேருந்து வழித்தடத்தின் நீளம் 33.8 கி.மீ. ஆகும். மோட்டார் வாகன விதிகளின்படி, வழித்தடத்தின் நீளம் 30.00 கி. மீட்டருக்கு மேல் வருவதால் இவ்வழித்தடத்தில நகரப்பேருந்தினை இயக்க இயலாத நிலை உள்ளது. எனினும் புத்தூர் வழியாக திண்டுக்கல் குறுந்தம்பட்டி செல்லும் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தேனி நடைகள் செல்கின்றன.

வேடசந்தூர்-ஆத்துமேடு புதிய நகரப்பேருந்து.

118. திரு. ப. முத்துசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கூம்பூர் ஈசநத்தம் வெள்ளோடு வழியாக வேடசந்தூர்-ஆத்துமேடுக்கு புதிய நகர பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

வேடசந்தூர்-ஆத்துமேடு (வழி) அழகாபுரி, கூம்பூர், ஈசநத்தம், ஆர். வெள்ளோடு என்ற வழித்தடத்தில் நீளம் 36.00 கி.மீ. மோட்டார் வாகன விதிப்படி வழித்தடத்தின் நீளம் 30.00 கி. மீட்டருக்கு மேற்பட்டால் நகர பேருந்தினை இயக்க இயலாது. எனவே, இவ்வழித்தடத்தில் நகர பேருந்தினை இயக்க இயலாத நிலையில் இராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் உள்ளது.

வேடசந்தூர்-ஒட்டன்சத்திரம் புதிய நகரப்பேருந்து.

119. திரு. ப. முத்துசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நால்ரோடு சுள்ளெறும்பு வழியாக வேடசந்தூர்-ஒட்டன்சத்திரத்திற்கு புதிய நகரப்பேருந்து விட ஏற்பாடு செய்யப்படுமா ?

விடை—

வேடசந்தூர்-ஒட்டன்சத்திரம் (வழி) சுள்ளெறும்பு, நால்ரோடு வழியாக 4 புறநகர் பேருந்துகள் 18 தனி நடைகளும் 4 நகரப்பேருந்துகள் 48 தனி நடைகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தற்போதுள்ள பேருந்துகள் வசதியே போக்குவரத்திற்கு போதுமானது. எனவே, புதிய நகரப் பேருந்து விடவேண்டிய அவசியமில்லை என கருதப்படுகிறது.

1989 நவம்பர் 2]

மதுராந்தகம் தாலூகா அரசு பொது மருத்துவ மனைக்கு அமரர் ஊர்தி.

120. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுராந்தகம் தாலூகா அரசு பொது மருத்துவமனையில் அமரர் ஊர்தி வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மதுராந்தகம் மருத்துவமனையில் அமரர் ஊர்தி இல்லை. அமரர் ஊர்தி வழங்கிட 1990-91-க்கான பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் கருத்துரு பரிசீலிக்கப்படும்.

மதுராந்தகம் மற்றும் லத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டம்.

121. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை - அண்ணா மாவட்டம், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் லத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள மனுக்கள் எத்தனை ?

(ஆ) அவைகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) ஒரு குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் 337 மனுக்களும்; லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 502 மனுக்களும் மின் இணைப்பு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளன.

(ஆ) மேற்படி குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் மனுக்களின் பதிவு வரிசைப்படி மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எண்டலப்பாறை நீர்த்தேக்க அணை.

122. திரு. எஸ்.ஏ. தங்கராஜன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டம், திண்டுக்கல் சட்டமன்ற தொகுதியில் உள்ள எண்டலப்பாறை நீர்த்தேக்க அணை கட்டி முடிக்கப்பட்டுவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1. இந்தத் திட்டம் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்து முடிக்கப்பட்டுவிட்டது.

2. திட்டம் 6/84-ல் ஆரம்பித்து 3/87-ல் முடிவுற்றது.

3. திட்ட மதிப்பீடு ரூ. 30.30 இலட்சங்கள்.

4. திட்ட இறுதி செலவினம் ரூ. 32.41 இலட்சங்கள்.

பேரணையில் உள்ள பாலம் சீர் செய்யும் வேலை.

123. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முன்னாள் அண்ணா மாவட்டம், தற்போதைய திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் நிலக்கோட்டை தொகுதி பேரணையில் உள்ள பாலம் சீர்செய்யும் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

பேரணையில் உள்ள பாலம் சீர்செய்யும் வேலை இந்த நிதியாண்டில் (1989—90) எடுத்து முடிக்கப்படும். இதனை சீர்செய்வதற்கு ரூ. 1.65 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளது. 70 மீட்டர் அகலமுள்ள இந்த இரும்புப்பாலம் பொதுப்பணித்துறையினரின் ஆய்விற்கும் செயல் மற்றும் பராமரிப்புக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

1989 நவம்பர் 2

நிலக்கோட்டைத் தொகுதியில் பெரியார் வைகை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் புதிதாக பாசன வசதி

124. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலக்கோட்டைத் தொகுதியில் பெரியாறு வைகை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் புதியதாக 3,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி செய்யப்படும் என்று அரசு அறிவித்தது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அவ்வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரியாறு-வைகை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்வைகை அணைக்கருகில் உள்ள எடுப்பு அணையிலிருந்து (Pickup anaicut) பேரணைவரை 32.5 கி.மீ. நீள புதிய இணைப்பு கால்வாய் (Link Canal) திட்டத்தின்மூலம் நிலக்கோட்டை வட்டத்தில் 3,020 ஏக்கர் நிலப்பரப்பிற்கும் பெரியகுளம் வட்டத்தில் 980 ஏக்கர் நிலப்பரப்பிற்கும் ஆக மொத்தம் 4,000 ஏக்கர் நிலப்பரப்பிற்கு பாசன வசதி அளிப்பதற்கு 31—8—1978 அன்று அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டில் உலக வங்கியின் ஆலோசனைக்கேற்ப இத்திட்டம் கைவிடப்பட்டது. மத்திய பாசன தலைமைப்பொறியாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ரூ. 22 கோடிக்கான தோராய மதிப்பீடு இத்திட்டத்திற்காக வரப்பெற்றது. இப்பணிக்கு உலக வங்கி நிதி உதவி கிடைக்காத நிலை உள்ளது. எனினும் பெரியாறு வைகை மேம்பாட்டுத் திட்ட இரண்டாம் கட்டப் பணிகள் முடிவுபெற்ற பின்னர் இத்திட்டத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று டிமுவு செய்யப்பட்டுள்ளது.

உடல்கார குப்பம் ஆதிதிராவிடர் சுடுகாடு ஆக்கிரமிப்பு.

125. திரு. எஸ். டி. உசம்சந்த் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், உடல்கார குப்பம், ஆதி திராவிடர் சுடுகாடு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பு அகற்றப்படுமா ?

விடை—

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், பரமேசுவரன்மங்கலம் கிராம காலனியில் குடியிருக்கும் 30 ஆதி திராவிடர் குடும்பங்கள் உடல்கார குப்பம் புல எண். 461/3-2. 12.0 ஹெக்டேர் மடுவு புறம்போக்கில் சுமார் 0.10 செண்ட் நிலத்தினை இடுகாடாக பயன்படுத்தி சடலங்களைப் புதைத்து வருகின்றனர். இதில் எவ்விதமான ஆக்கிரமிப்புகளும் இல்லை.

(ஆ) இடுகாடாக பயன்படுத்தும் நிலத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லாததால் இக்கேள்வி எழவில்லை.

அன்னியூர் கிராம ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிதாக கட்டிடம்.

126. திரு. ஏ. ஜி. சம்பத் :

மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம் காணை ஒன்றியம் அன்னியூர் கிராமத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிதாக கட்டிடம் கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேறும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பொதுமக்களிடமிருந்து பணம், நன்கொடை கட்டிடம் கட்ட நிலம் தானம் வழங்கி பதிவு செய்தல் முடிந்தவுடன் அன்னியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சேத்தியாத்தோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலை.

127. திரு. கோ. பூவராகவன் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

1989 நவம்பர் 2

(அ) சேத்தியாத்தோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலை வேலைகள் தொடங்கிவிட்டனவா?

(ஆ) அதற்கு வேண்டிய இயந்திரங்கள் வந்துவிட்டனவா ?

(இ) எப்போது கரும்பு அரவை தொடங்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தேவையான இயந்திர தளவாடங்களைப் பெற ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் சில இயந்திரங்கள் வந்துள்ளன மற்றும் பல இயந்திங்கள் வரத்தொடங்கியுள்ளன. கட்டுமான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

(இ) கட்டுமான பணிகள் முடிந்து இயந்திரங்கள் அனைத்தும் பொருத்தி மார்ச் 1990ல் அரவை துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொட்டாம்பட்டி கிராம ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம்.

128. திரு. க. வெ. வீ இராசமாணிக்கம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேலூர் சட்டமன்ற தொகுதி கொட்டாம்பட்டி கிராமத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்புள்ளதா?

விடை—

கொட்டாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் திட்டம் பொதுமக்களிடமிருந்து பணம் நன்கொடை, கட்டிடம் கட்ட நிலம் தானம் வழங்கி பதிவு செய்தல் முடிந்தவுடன் அரசின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

1989 நவம்பர் 2

இரண்டாவது பால் பெருக்குத் திட்டம்.

129. திரு. கே. ஏ. செங்கோட்டையன் :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் இராண்டாவது பால் பெருக்குத் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள பால்பண்ணை பணிகள் எப்போது துவங்கும்?

விடை—

பெரியார் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தில் தேசீய பால்வள வாரியம் ஆனதிலிலிருந்து பெறப்பட்ட திட்ட அறிக்கையின்படி கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன :—

1. சித்தோடு பால்பண்ணை வளாகத்தில் விரிவு படுத்துவதற்கான கட்டிடப்பணிகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன.

2. பால்பதன இயந்திரங்கள் நிறுவும் பணி அனைத்தும் முடிவடைந்துவிட்டது.

3. குளிர்சாதன இயந்திரங்கள் நிறுவும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

4. மின்மாற்றி இயந்திரங்கள் நிறுவும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இவ்வாண்டு இறுதிக்குள் திட்டப் பணிகள் அனைத்தும் முடிந்து பால்பண்ணை பணிகள் முழுமையாக துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சத்துணவு மையங்களுக்கு காய்கறிகள்.

130. திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரக தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவுக் கூடங்களுக்குரிய காய்கறிகள் வாங்கு வதற்குரிய விதிமுறைகள் ஏதேனும் நடைமுறையில் இருக்கின்றதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) ஒவ்வொரு சத்துணவுக் கூடங்களிலும் எத்தனை பேர் பணிபுரிகின்றார்கள் ?

விடை—

(அ) மற்றும் (ஆ). சத்துணவு மையங்களுக்குத் தேவைப்படும் காய்கறிகளை கூட்டுறவுச் சங்கங்களில் மட்டும்தான் வாங்கவேண்டும் என்று விதிமுறை இல்லை, வெளிச்சந்தையிலும் காய்கறி வாங்கலாம். கூட்டுறவுச் சங்கங்களில் விற்கப்படும் காய்கறிகள் சிறந்தவை யாகவும் விலை மலிவாகவும் இருக்குமேயானால் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து காய்கறிகள் வாங்குவதற்குத் தடையில்லை சத்துணவு மையங்களில் பயன்படுத்தப்படும் காய்கறிகள் புதியவையாகவும் தரமுள்ளவையாகவும் இருக்கவேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) மூன்று பேர்.

சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் குழந்தைகள்.

131. **திரு. மு. இராமநாதன் :**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு முழுவதும் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் குழந்தைகள் எத்தனை பேர்?

(ஆ) பள்ளிக் குழந்தைகள் தவிர வேறு யார் யாருக்கு இந்தத் திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கப்படுகிறது?

(இ) 1986—87, 1987—88 ஆகிய ஆண்டுகளில் அரசுக்கு ஏற்பட்ட சத்துணவுத் திட்டச் செலவு மொத்தம் எவ்வளவு? முழு விபரம் என்ன?

விடை—

(அ) மொத்தம் 85,05,281 குழந்தைகள்.

(ஆ) பள்ளிக் குழந்தைகள் தவிர 2 வயது முதல் 5 வயது வரையிலுள்ள பள்ளி செல்லாத குழந்தைகளுக்கும் முதியோர் உதவித்தொகை பெறுவோருக்கும், முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ஓய்வூதியம் பெறும் முன்னாள் படை வீரர்களுக்கும் அவர்தம் விதவையர்களுக்கும் தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின்கீழ் சத்துணவு அளிக்கப் படுகிறது.

(இ) 1986-87ஆம் ஆண்டில் ரூ. 158.31 கோடியும் 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 168.08 கோடியும் சத்துணவுத் திட்டத்தின்கீழ் செலவாகி உள்ளது.

சென்னிமலை—கனுவாய் ரோட்டை சமன் செய்யும் திட்டம்.

132. திரு. பி. மாரப்பன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னிமலை, கனுவாய் ரோட்டை சமன் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் என்றால், பணி எப்போது நிறைவு பெறுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னிமலை—கனுவாய் சாலையை சமன்படுத்தி மேம்பாடு செய்யும் பணி அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பணித்தொகுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அரசின் நிதிவளம் பணியின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் காலங்களில் பகுதி-2 திட்டத்தின் கீழ் இப்பணியை எடுத்துச் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

நவம்பர் 1989 2]

ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்களுக்கு உதவித் தொகை.

133. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் களுக்கு மாதம் ரூ. 500 உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் எவ்வளவு பேர் பயன் பெறுகிறார்கள்?

(ஆ) இந்த எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

விடை—

(அ) சட்டம் பயின்ற ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் பட்டதாரிகளுக்கு நீதி நிர்வாகத்தில் பயிற்சி அளிக்க 1988—89-ல் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 20 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களுக்கு தலா மாதம் ரூ. 500 உதவித்தொகை வழங்கப்படுகிறது. 1988—89-ம் ஆண்டில் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 20 மாணவர்களில் 19 மாணவர்கள் மட்டும் சேர்ந்து பயிற்சி பெற்று வருகிறார்கள்.

(ஆ) இந்த எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் ஆய்வில் இல்லை.

விதை நெல்லுக்கு மானியம்.

134. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் விதை நெல்லுக்கு எவ்வளவு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) மான்யத் தொகையை அதிகரிக்க அரசிடம் செயற்ந் குறிப்பு உள்ளதா?

விடை—

(அ) எல்லா மாவட்டங்களிலும் ஆதி திராவிட விவ சாயிகளுக்கு மட்டும் நெல் மற்றும் சிறு தானியங்களின்

விலையில் 50 சதவீதம் மான்யம் வழங்கப்பட்டு வருகிறது. மற்றபடி சிறப்பு உணவுப்பொருள் உற்பத்தி திட்ட மாவட்டங்களான செங்கை-அண்ணா, தென்னாற்காடு, வடாற்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் மட்டும் எல்லா விவசாயிகளுக்கும் நெல் விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ. 1.50 பைசா மான்யம் வழங்கப்படுகிறது.

(ஆ) மான்யத்தொகை அதிகரிக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

நில உச்சவரம்புச் சட்டம்.

135. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தில் எத்தனை ஏக்கர் நிலங்கள் நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கைப்பற்றப் பட்டுள்ளன.

(ஆ) நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் பினாமி நில பரிவர்த்தனைப்பற்றி அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தில் 80,680 ஏக்கர் நிலம், நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் மிகை நிலமாகக் கைப்பற்றப்பட்டுள்ளன.

(ஆ) ஆம்.

(இ) ஏற்கனவே 1980 ஆம் ஆண்டு பினாமி பரிவர்த்தனைத் தடுக்கும் நோக்கத்தோடு கொண்டு வந்த பினாமி ஒழிப்புச் சட்டமுன்வடிவிற்கு மைய அரசு இசைவளிக்க மறுத்து திரும்பவும் இவ்வரசுக்கு அனுப்பிவிட்டது. மீண்டும் பினாமி கைப்பற்றுகள் மற்றும் பரிவர்த்தனைகள் மீது நடவடிக்கை எடுக்க பினாமி ஒழிப்புச் சட்டம் விரைவில் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

1989 நவம்பர் 2]

குடிநீர் வழங்க தனியாரிடமிருந்து வாடகைக்கு எடுத்துக் கொண்ட லாரிகள்.

136. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தில் 1987-88, 1988-89-ல் குடிநீர் வழங்க தனியாரிடமிருந்து வாடகைக்கு எடுத்துக் கொண்ட லாரிகள் எத்தனை?

(ஆ) அவைகளுக்கு கட்டணமாக செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

(அ) 1987-88-ல் அதிகபட்சமாக தனியாரிடமிருந்து வாடகைக்கு எடுத்துக் கொண்ட லாரிகள் 351, டிராக்டர்கள் 231. 1988—89-ல் அதிகபட்சமாக தனியாரிடமிருந்து வாடகைக்கு எடுத்துக்கொண்ட லாரிகள் 250, டிராக்டர்கள் 50.

(ஆ) 1987—88-ல் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 507.12 இலட்சங்கள்.

1988—89-ல் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 655.09 இலட்சங்கள்.

ஆதி திராவிடர் விடுதிக்கு கட்டிடம்.

137. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கை-அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம் கடப்பாக்கம்—பொலப்பாக்கம் உயர்நிலைப்பள்ளி ஆதி திராவிடர் விடுதிக்கு கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

செங்கை-அண்ணா மாவட்டம் கடப்பாக்கம்—பொலப் பாக்கம் உயர்நிலைப்பள்ளி ஆதிதிராவிடர் நல விடுதிக்கு கட்டிடம் கட்ட போதிய நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டபின், மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்களோடு செயற்குறிப்பு பெறப்பட்டு பரிசீலிக்கப்படும்.

ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்.

138. திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடந்த 10 ஆண்டுகளில் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனை இலவச பட்டாக்கள் எவ்வளவு?

(ஆ) இவ்வாண்டு எவ்வளவு இலவச மனைப்பட்டா வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

விடை—

(அ) 2,14,335 இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 1989-90 ஆம் ஆண்டில் 40,000 இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

பிரம்மதேசம் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுதல்.

139. திரு. வ. அன்பழகன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செய்யாறு தொகுதியில் உள்ள பிரம்மதேசம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ)

பிரம்மதேசம் அரசு உயர்நிலைப் பள்ளியை 1989—90 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்குக் கருத்துருக்கள் பெறப்படவில்லை.

1989 நவம்பர் 2]

கிராம கூட்டுறவு தொடக்க வங்கிக்கு அலுவலகம் மற்றும் கிடங்கு கட்டுதல்.

140. திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை வட்டம் பழைய கூடலூர் கிராம கூட்டுறவு தொடக்க வங்கிக்கு அலுவலகம் மற்றும் கிடங்கு கட்டிடம் கட்ட இடம் வாங்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் 1990 ஜூலை முதலாக ஆண்டொன்றுக்கு சுமார் 200 கிடங்குகள் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நான்காவது உலக வங்கித் திட்டத்தின் கீழ் உதவியளிக்க திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் 1990-91ஆம் நிதியாண்டில் பழைய கூடலூர் தொடக்க கூட்டுறவு வங்கிக்கு கிடங்கு கட்ட தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் நிதி உதவி வழங்க ஆவன செய்யப்படும்.

திறந்தவெளிப் பயிற்சி கல்வித்திட்டம் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் மூலம் செயல்படுத்துதல்.

141. திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திறந்தவெளிப் பயிற்சி கல்வித்திட்டம் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திறந்தவெளிப் பள்ளி 1986-ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாட்டுக் கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படு கின்றது. 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று 15 ஆண்டு பூர்த்தி அடைந்த மாணவர்கள் 10-ஆம் வகுப்பு பயிலுவதற்கு தகுதி யுள்ளவர்கள் ஆவார்கள். மாணவர்களுக்கு அஞ்சல் வழி மூலம் பாடங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. பின்னர் நேர்ப்பயிற்சி ஏழு நாட்கள் மற்றும் ஏழு நாட்கள் தேர்வுகள் 16 மையங்களில் நடத்தப்பட்டு தேர்ச்சி பெற்றவுடன் சான்றிதழ்கள் வழங்கப் படுகின்றன. சுமார் 2,500 மாணவர்கள் ஆண்டுதோறும் படிக் கின்றனர். ஓர் ஆண்டிற்கு படிப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ரூ. 225 வசூலிக்கப்படுகின்றன.

கால்நடை ஆய்வாளர் பயிற்சி.

142. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கால்நடை ஆய்வாளர் பயிற்சி தற்போது நடைபெறு கிறதா ?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு நடைபெறுகிறது ?

(இ) எத்தனை மாணவர்கள் பயிலுகின்றனர் ?

விடை—

(அ) தற்போது நடைபெறவில்லை.

(ஆ) வினா எழாது.

(இ) வினா எழாது.

எண்டத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளி கட்டிடம்.

143. திரு. எஸ். டி. உக்கம்சந்த் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை - அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், எண்டத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளி கட்டிடம் பழு தடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பள்ளிக்கு சொந்தக் கட்டிடம் இல்லை. இப்பள்ளி ஊராட்சி ஒன்றியக் கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது. பள்ளிக்குச் சொந்தமல்லாத கட்டிடத்தை சீர் செய்ய இயலாது. பள்ளியை ஒரு பாதுகாப்பான இடத்திற்கு மாற்ற உத்தரவிடப் பட்டுள்ளது. இப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுவதற்காக நிலத்தைப்பெற நடவடிக்கை தனியே எடுக்கப்பட்டு வருகிறது.

அணைக்கட்டு — சென்னை பேருந்து.

144. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கே. நெல்வாய்—சென்னை வழி கல்குளம், அணைக்கட்டு வழியாக டி.பி.டி.சி. மூலம் பஸ் வசதி செய்துதர அரசு முன் வருமா?

விடை—

அணைக்கட்டு கிராமத்திலிருந்து கல்குளம், கே. நெல்வாய், மதுராந்தகம், செங்கல்பட்டு மற்றும் தாம்பரம் வழியாக சென்னைக்கு பேருந்து வசதி அளிக்கும் செயற்குறிப்பு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திடம் உள்ளது.

சுற்றுலா வாரியத்தின் மூலம் பொருட்காட்சிகளின் வருமானம்.

145. திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1985—86, 1986—87, 1987—88-ல் தமிழகத்தில் சுற்றுலா வாரியத்தின்மூலம் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டதன் மூலம் அரசுக்கு கிடைத்த மொத்த வருமானம் எவ்வளவு ?

விடை—

கீழ்க்காணும் மூன்று ஆண்டுகளில் சுற்றுலா வாரியத்தின் மூலம் நடத்தப்படும் இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட் காட்சிகள் மூலம் கிடைத்த வருமானம் பின்வருமாறு:—

ஆண்டு.		வருவாய்.	செலவு.	நிகர வருமானம் (இவ்வருமானம் சுற்றுலா வாரியத்தைச் சாரும்).
(1)		(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)		
1985—86		68.65	53.53	15.12
1986—87		85.56	72.44	13.12
1987—88		(பொருட்காட்சி நடத்தப்படவில்லை)		

மயிலாடுதுறை நவீன அரிசி ஆலை.

146. திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறையில் உள்ள நவீன அரிசி ஆலையில் 1987—88, 1988—89 ஆண்டுகளில் அரவை செய்யப் பட்ட அரிசியின் அளவு எவ்வளவு?

விடை—

தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையில் உள்ள நவீன அரிசி ஆலையில் அரவை செய்யப்பட்ட அரிசியின் அளவு பின்வருமாறு:

வருடம்.		அரைக்கப்பட்ட நெல்லின் அளவு.	சராசரி கண்டு முதல்.	அரைக்கப் பட்ட அரிசியின் அளவு.
1987—88	..	15,210	66%	10,038.6
1988—89	..	16,687	66%	11,013.4

1989 நவம்பர் 2]

துவரங்குறிச்சியில் நகரப் பேருந்து பணிமனை.

147. பேராசிரியர் க. பொன்னுசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம்— துவரங்குறிச்சியில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் நகரப் பேருந்து பணிமனை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது நிறைவு பெறும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

கமுதியில் ஒரு புதிய நீதிமன்றம்.

148. திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுக்கா தலை நகரில் ஒரு புதிய நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை.

149. திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கால்நடை வளர்ச்சிக்கும் பால் பெருக்கத்திற்கும் உரிய மாட்டுத்தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை எங்கெங்கு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது ?

(ஆ) தற்போது இயங்கிவரும் மாட்டுத்தீவன உற்பத்தித் தொழிற்சாலைகளின் விவரம் என்ன ?

விடை—

(அ) மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை மதுரை அருகிலுள்ள கப்பலூரில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) தற்போது சென்னை மாநகருக்கு அருகில் மாதவரத்திலும் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஆம்பூரிலும், பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோட்டிலும் நாளொன்றுக்கு 100 டன் தீவன உற்பத்தித் திறன் கொண்ட மாட்டுத்தீவனத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

விளங்குளம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

150. திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம்—விளங்குளம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் கோரிக்கை வந்துள்ளதா ?

விடை—

இல்லை.

பொறியியல் கல்லூரிகள்.

151. திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1987—88, 1988—89 ஆம் கல்வி ஆண்டுகளில் துவக்கப்பட்ட பொறியியல் கல்லூரிகள் (தனியார்/அரசுக் கல்லூரிகள்) எத்தனை?

(ஆ) எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசு பொறியியற் கல்லூரிகள் ஏதும் ஆரம்பிக்கப்படவில்லை.

1987-88-ல் ஆரம்பிக்கப்பட்ட சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள்.

1. அதியமான் பொறியியற் கல்லூரி, ஓசூர், தர்மபுரி மாவட்டம்.

2. கிருபானந்தவாரியார் பொறியியற் கல்லூரி, சேலம்.

1988-89-ல் அனுமதிக்கப்பட்ட சுயநிதி பொறியியற் கல்லூரிகள்— 7. அவைகளில் நடைபெற்று வருபவை— 3.

அவைகளின் விவரம் கீழ்வருமாறு :—

செயல்படுபவை—

1. சத்யபாமா பொறியியற் கல்லூரி, ஆரம்பாக்கம், செங்கை-அண்ணா மாவட்டம்.

2. டாக்டர் எம்.ஜி.ஆர். பொறியியற் கல்லூரி, நுலாம்பூர் மதுரவாயல், செங்கை-அண்ணா மாவட்டம்.

3. பெரியார், மணியம்மை பெண்கள் பொறியியற் கல்லூரி, வல்லம், தஞ்சாவூர்.

மைய தொழில் நுட்பக் கல்வி கழகத்தின் ஒப்புதல் எதிர்நோக்கி உள்ளவை—

4. பல்லவா பொறியியற் கல்லூரி, சேலம்.

5. நூருல் இஸ்லாம் பொறியியற் கல்லூரி, திருவிதான் கோடு, கன்னியாகுமரி மாவட்டம்.

செயல்படாதவை —

6. கே. எஸ். ரெங்கசாமி பொறியியற் கல்லூரி, திருசெங்கோடு, சேலம்,

7. ஏ.வி.எஸ். பொறியியற் கல்லூரி, திருச்சி மாவட்டம்.

நிலப் பட்டா கோரி மனு.

152. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் வட்டம், முருக்கம்பாக்கம், சிறுநல்லூர் ஆகிய கிராமங்களிலிருந்து நிலப்பட்டா கோரி மனு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், நிலப்பட்டா வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) செங்கை-அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம் சிறுநல்லூர் கிராமத்தில் புல எண் 139-ல் திரு. பச்சையப்பன் மற்றும் இரு நபர்களும் புல எண் 126-ல் திரு. எட்டியப்ப கவுண்டர் மற்றும் மூன்று நபர்களும் ஒப்படை கோரி விண்ணப்பித்திருந்தனர். ஒப்படை கோரியிருந்த நிலம் மேய்க்கால் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்ட நிலமாகும். மேய்க்கால் புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்ய தடை விதித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் மனுதாரர்களின் கோரிக்கையை நிராகரித்து அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. முருக்கம்பாக்கம் கிராமத்தில் நிலப்பட்டா கோரி மனுக்கள் ஏதும் வரவில்லை.

பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் நூறு சதவிகிதம் தேர்வு பெற்ற பள்ளிகள்.

153. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1987-88-ஆம் ஆண்டு அரசு பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) நூறு சதவிகிதம் தேர்வு பெற்ற பள்ளிகள் எத்தனை?

(ஆ) ஒருவர்கூட தேர்வு பெறாத பள்ளிகள் எத்தனை? அவை யாவை?

விடை—

(அ) 56.

(ஆ) 31. பட்டியல் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

1989 நவம்பர் 2]

இணைப்பு

	(1)	மாணவர்களின் எண்ணிக்கை. (2)
1	சி. எஸ். ஐ. காது கேளாதோர் உயர்நிலைப்பள்ளி (கன்னியாகுமரி மாவட்டம்)	12
2	சரளாதேவி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கோவில்பட்டி (சிதம்பரனார் மாவட்டம்)	4
3	அரசு உயர்நிலைப்பள்ளி, பம்மனேந்தல் (இராமநாதபுரம் மாவட்டம்)	5
4	அரசு உயர்நிலைப்பள்ளி, சின்னக்கண்ணனூர் (பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்)	19
5	அரசு உயர்நிலைப்பள்ளி, வேதளை (இராமநாதபுரம் மாவட்டம்)	14
6	ஒய்.எம்.சி.ஏ. காமக் காதுகேளாதோர் உயர்நிலைப்பள்ளி. மதுரை	9
7	அரசு உயர்நிலைப்பள்ளி, காளிமங்கலம் (மதுரை மாவட்டம்)	32
8	அரசு உயர்நிலைப்பள்ளி, ஹைவேஸ் (மதுரை மாவட்டம்)	30
9	அரசு உயர்நிலைப்பள்ளி, கூக்கல்துறை (நீலகிரி மாவட்டம்)	27
10	அரசு உயர்நிலைப்பள்ளி, சந்தனபள்ளி (தர்மபுரி மாவட்டம்)	11
11	அரசு உயர்நிலைப்பள்ளி, காலப்பம்பாடி (தர்மபுரி மாவட்டம்)	16
12	அரசு உயர்நிலைப்பள்ளி, முக்கால்நாயக்சன் பட்டி (தர்மபுரி மாவட்டம்)	38
13	அரசு உயர்நிலைப்பள்ளி, லப்பைக்குடிக்காடு (திருச்சி மாவட்டம்)	10
14	அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, கல்லூரணிக்காடு (தஞ்சை மாவட்டம்) ..	25

(1)	மாணவர்களின் எண்ணிக்கை. (2)
15 அரசு உயர்நிலைப்பள்ளி, நடுவிக்கோட்டை (தஞ்சை மாவட்டம்)	36
16 அரசு உயர்நிலைப்பள்ளி, மூவாநல்லூர் (தஞ்சை மாவட்டம்)	9
17 அரசு உயர்நிலைப்பள்ளி, குலமங்கலம் (தஞ்சை மாவட்டம்)	25
18 அரசு உயர்நிலைப்பள்ளி, பெருமங்களம், (தென் ஆற்காடு மாவட்டம்)	11
19 அரசு உயர்நிலைப்பள்ளி, இ. கீரனூர் (தென் ஆற்காடு மாவட்டம்)	4
20 அரசு உயர்நிலைப்பள்ளி, பாரிவிளாகம் (தென் ஆற்காடு மாவட்டம்)	12
21 அரசு உயர்நிலைப்பள்ளி, கருவாட்சி (தென் ஆற்காடு மாவட்டம்)	12
22 அரசு உயர்நிலைப்பள்ளி, கருப்பூர் (தென் ஆற்காடு மாவட்டம்)	9
23 அரசு உயர்நிலைப்பள்ளி, பெருங்குளத்தூர் (வட ஆற்காடு மாவட்டம்)	36
24 அரசு உயர்நிலைப்பள்ளி, அயங்குளம் (வட ஆற்காடு மாவட்டம்)	24
25 அரசு உயர்நிலைப்பள்ளி, வேதாநாதம் (வட ஆற்காடு மாவட்டம்)	15
26 அரசு உயர்நிலைப்பள்ளி, ஜமீன் எண்டாதூர் (சென்னை மாவட்டம்)	14
27 அரசு முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி, ஜார்ஜ்டவுன் சென்னை-1	7
28 மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, கொசப்பேட்டை, சென்னை-12	27

	மாணவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)
29 ஹாஜி மன்சூர்ஷா ஓரியண்டல் அராபிக் மேல் நிலைப்பள்ளி, விழுப்புரம்	11
30 ஸ்ரீதண்டபாணி ஓரியண்டல் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்	31
31 எஸ்.பி. ஜி. ஓரியண்டல் உயர்நிலைப்பள்ளி, மேட்டுப்பாளையம் (தஞ்சை மாவட்டம்)	2

அரசு மேல்நிலைப்பள்ளித் தேர்வில் நூறு சதவிகிதம் தேர்வு பெற்ற பள்ளிகள்.

154. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1987-88-ஆம் ஆண்டு அரசு மேல்நிலைப்பள்ளி தேர்வில் நூறு சதவிகிதம் தேர்வு பெற்ற பள்ளிகள் எத்தனை? அவை யாவை?

(ஆ) ஒருவர் கூட தேர்வு பெறாத பள்ளிகள் எத்தனை? அவை எவை எவை?

விடை—

(அ) 56. பட்டியல் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஒன்று, அது சென்னை-79-ல் உள்ள உமா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி ஆகும்.

[1989 நவம்பர் 2

மேல்நிலை தேர்வு : மார்ச்/ஏப்ரல் 1988.

வருவாய் மாவட்ட வாரியாக 100 சதவிகித விழுக்காடு தேர்ச்சி காட்டிய பள்ளிகள் விவரம்.

மாணவர்களின் எண்ணிக்கை.

கன்னியாகுமரி

இல்லை.

திருநெல்வேலி—கட்டபொம்மன்.

1 சின்மையா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை. 23

2 செயின்ட் இக்னேஷியஸ் மேல்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை. 264

21 (எஸ்.ஜி.டி.டி.)

வ. உ. சிதம்பரனார்.

3 செயின்ட் தாமஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி. 44

4 டி.டி.டி.ஏ. செயின்ட் மைக்கேல்ஸ் மேல்நிலைப்பள்ளி, முடலூர். 28

24 (எஸ்.ஜி.டி.டி.)

5 ஹோலிகிராஸ் ஆங்கிலோ-இந்திய மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி. 64

இராமநாதபுரம்.

—இல்லை—

பசும்பொன் தேவர் திருமகன்

—இல்லை—

காமராசர்.

6 கி.வி.பி.ஏ.சி.ஆர். மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, ராஜபாளையம். 17

7 லயன்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, சிவகாசி. 28

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மதுரை

8.	டி.வி.எஸ். லஷ்மி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, மதுரை.	189
9.	செவன்த்டே மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி, மதுரை.	30
	திண்டுக்கல்-காயிதே மில்லத்.	
10.	சியான் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, கொடைக்கானல்.	9
	நீலகிரி.	
11.	செயின்ட் ஜோசப் ஆண்கள் மேல் நிலைப்பள்ளி, குன்னூர்.	69
	கோயம்புத்தூர்.	
12.	செயின்ட் ஜோசப் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, திருப்பூர்.	48
13.	எஸ்.என்.வி. மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி, சுப்பிரமணியபுரம்.	86
14.	கார்மல் கார்டன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, கோயம்புத்தூர்.	88
15.	ஜி.ஆர்.ஜி. மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி, பீளமேடு.	103
16.	அவிலா கான்வென்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, கோயம்புத்தூர்.	145
17.	எ. மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்.	125
18.	இம்மாகுலேட் மெட்ரிகுலேஷன் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கோயம்புத்தூர்.	22
	பெரியார்.	
19.	பி.வீ.பி. மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி, திண்டல்,	48

சேலம்.

20. மான்ட்போர்ட் மேல்நிலைப்பள்ளி ஏர்க்காடு. 45

21. சேக்ரட் ஹார்ட் ஆங்கிலோ—இந்திய பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஏர்க்காடு. 41

22. செயின்ட் ஜோசப்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, சேலம். 97

தர்மபுரி

23. பி.ஒ.ஆர்.எம்.மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி, பாப்பிரெட்டிபட்டி. 10

புதுக்கோட்டை

—இல்லை—

திருச்சி.

—இல்லை—

தஞ்சாவூர்.

24. ஏ.ஆர்.ஆர். மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி, கும்பகோணம். 33

பாண்டிச்சேரி மாநிலம்

25. பெட்டிட் செமினரி மேல்நிலைப்பள்ளி, பாண்டி. 155

26. செயிண்ட் ஜோசப்ஸ் ஆப் குளுனி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பாண்டி. 116

தென்னாற்காடு

27. சேக்ரட் ஹார்ட் பெண்கள், மேல்நிலைப்பள்ளி, விழுப்புரம். 52

28. செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளி, கடலூர். 02

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

29. செயின்ட் ஜே. சி. மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, நெய்வேலி. 68

30. ஜவஹர் மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி, நெய்வேலி. 254

31. ஏ.ஆர்.எல்.எம். மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, மஞ்சக்குப்பம். 41

32. செயின்ட் மேரீஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, கடலூர். 43

33. செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, நெய்வேலி. 116

வட ஆற்காடு.

34. டான்பாஸ்கோ மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, திருப்பத்தூர். 71

35. இஸ்லாமிய பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மேல்விஷாரம். 5

செங்கை-அண்ணா.

36. கிரசண்ட் ரெசிடன்ஷியல் மேல்நிலைப் பள்ளி, வண்டலூர். 47

37. டி.ஐ. மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளி, அம்பத்தூர். 48

38. எஸ். எச். மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி, மரியநகர், பாடி. 16

39. சர்வீஸ் ஹோம், தாம்பரம் .. 9

40. எபினேசர் மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி, பெரியார் நகர். 35

சென்னை.

41. சரஸ்வதி வித்தியாலயர் மேல்நிலைப் பள்ளி, சென்னை-26 61

42.	ஹோலி ஏஞ்சல்ஸ் ஆங்கிலோ-இந்தியன் மேல்நிலைப்பள்ளி, சென்னை-17.	93
43.	வித்யோதயா மெட்ரிகுலேஷன் அக்கடமி, தி. நகர், சென்னை-17.	45
44.	செயின்ட் கொலம்பஸ் ஆங்கிலோ-இந்தியன் மேல்நிலைப்பள்ளி, சென்னை-1.	77
45.	சி.எஸ்,ஐ. எவார்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, வேப்பேரி, சென்னை-84.	116
46.	குட்ஷெபர்ட் மேல்நிலைப்பள்ளி, சென்னை-6.	108
47.	கிரசன்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம்.	21
48.	வள்ளியம்மாள் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, அண்ணா நகர் சென்னை.	53
49.	சி.எஸ்.ஐ. ஜெசி மோசஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, சென்னை-40.	84
50.	எல்.எப். கான்வென்ட் மேல்நிலைப் பள்ளி (காது கேளாதோர்) சென்னை-6.	10
51.	ரோசரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சாந்தோம், சென்னை-4.	122
52.	அல்பா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சென்னை-35.	36
53.	ஸ்ரீ அகோபிலமத் ஓரியண்டல் மேல்நிலைப்பள்ளி, சென்னை-33.	45
54.	யு.சி.எம். மேல்நிலைப்பள்ளி, சேத்துப்பட்டு, சென்னை-31.	51

1989 நவம்பர் 2]

55. சர். எம்.வி.எஸ். ஆண்கள் மெட்ரிகு லேஷன் மேல்நிலைப்பள்ளி, சென்னை-17. 53

56. ஜ.சி.எப்.எஸ்.ஜே. மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, சென்னை-38. 78

செங்கை-அண்ணா மாவட்டத்தில் தேர்வு நிலை பேரூராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட மானியத் தொகை.

155. திரு. வீ. தமிழ்மணி:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டத்தில் தேர்வு நிலை பேரூராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) அந்தத் தொகையில் திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு?

விடை—

(அ) 1988-89-ஆம் நிதியாண்டிற்கு செங்கை—அண்ணா மாவட்டத்திலுள்ள தேர்வுநிலை பேரூராட்சிகளுக்கு மொத்தம் ரூ. 43,05,076 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அத்தொகையில் திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு ரூ. 13,45,076.00 மான்யமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் நகரில் வணிக வரி அலுவலகங்கள்.

156. திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பத்தூர் நகரில் வாடகை இல்லத்தில் இயங்கி வரும் உதவி வணிகவரி அலுவலர் அலுவலகம், துணை வணிகவரி அலுவலர் அலுவலகம் (ACTO, DCTO) இவற்றிற்கு சொந்த கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

திருப்பத்தூரில் துணை வணிகவரி அலுவலர் அலுவலகம் மற்றும் செயலாக்க அலுவலகங்களை கட்டுவது அரசின் நிதி பற்றாக்குறையின் காரணமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. மற்றும் அரசு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்ட நிதி நிலைமையையும் ஏனைய தேவைகளையும் கருத்திற் கொண்டு அவ்வப்போது உள்ள நிலைமைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

கோவை மாநகரில் இணைப்புச் சாலை.

157. திரு. மு. இராமநாதன்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாநகரில் பெரியகுளம் கரையோரமாக போடப்பட்டு வரும் இணைப்புச் சாலையின் பணி எப்போது முடியும்?

(ஆ) இதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) இதன் முழு விவரம் என்ன?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) கோவை மாநகரில் பெரிய குளம் கரையோரமாக சுமார் 1,800 மீட்டருக்கு போத்தனூர் சாலையையும் சுண்டக்கமுத்தூர் சாலையையும் இணைக்கும், 'இணைப்புச் சாலை' அமைக்கப்பட்டு வருகிறது. இதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 20 இலட்சம். இதில் 1,100 மீட்டர் அளவிற்கு இணைப்புச்சாலை போடப்பட்டு விட்டது. மீதம் உள்ள 700 மீட்டர் தூரத்திற்கு தேவையான நிலம், பொதுப்பணித்துறைக்குச் சொந்தமானது, பொதுப்பணித்துறையிடம் இருந்து மாநகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்யக்கோரி சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையருக்கு மாநகராட்சி ஆணையர் கடிதம் எழுதியுள்ளார். பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான இந்த 700 மீட்டர் தூரமுள்ள இடத்தில், ஒரு பகுதியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, சாலைகள் அமைக்கப்பட முடியாமல் இருக்கிறது. பொதுப்பணித்துறை மூலம் இந்த ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆக்கிரமிப்புகள் அகற்றிய பின்பு, பொதுப் பணித்துறையிடமிருந்து உரிமை மாற்றம் பெற்றவுடன், இச் சாலைகளின் வேலைகளை தொடர்ந்து செய்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

போலி ரேஷன் கார்டுகள்.

158. திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு முழுவதும் போலி ரேஷன் கார்டுகள் உலவி வருவது உண்மையா?

(ஆ) இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள போலி ரேஷன் கார்டுகள் எவ்வளவு ?

(இ) இதில் கோவை மாநகரில் கண்டுபிடிக்கப்பட்ட கார்டுகள் எவ்வளவு?

(ஈ) இத்தகைய தவறுக்குக் காரணமான நபர்கள் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 31—12—1988 முடிந்த ஆண்டில் 45,395 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஜனவரி 1989 முதல் போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கும் பணி தீவிர மாக்கப்பட்டுள்ளது.

(இ) கோவை மாநகரில் மட்டும் 15—3—1989 வரை 2,503 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

(ஈ) போலி குடும்ப அட்டைகள், குடும்ப அட்டை பெறும் போது மக்களின் பொய்யான வாக்குமூலங்கள் காரணத்தினா லேயே தோன்றுகின்றன. இம்மாநிலத்தில் மொத்தம் 129 லட்சம் குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. இந்த 129 லட்சம் குடும்ப அட்டைதாரர்களும் கொடுத்துள்ள தகவல்களை விசாரித்து சரிபார்க்க துறையிலுள்ள குறைந்த பணியாளர்களை கொண்டு செயல்படுத்த இயலாது, எனவே விசாரணையின் போது பொய்யான வாக்குமூலம் அளித்து குடும்ப அட்டைகள் பெற்றவர்கள் குடும்ப அட்டைகளை ரத்து செய்வதுடன் சிலர் மீது இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955-ன்படி குற்ற வியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

பாப்பான் கால்வர்யைப் பழுது பார்த்தல்.

159. திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதிக்குட்பட்ட கருப்பா நதியிலிருந்து ஊத்துமலைப்பகுதிக்கு வரும் பாப்பான் கால்வாயைப் பழுது பார்க்காததால், தண்ணீர் வராமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை அரசு எடுத்துள்ளது?

விடை—

(அ) கருப்பாநதி அணையில் கடந்த சில வருடங்களாக தண்ணீர்ப் பற்றாக்குறை இருந்து வருகிறது. இதனால் ஊத்து மலைப் பகுதிக்கு வரும் பாப்பான்காலில் 10-வது மடைக்குக் கீழ் தண்ணீர் கொடுக்க இயலவில்லை. தண்ணீர்ப் பற்றாக் குறை காரணமே தவிர, வாய்க்காலில் பெரும் பழுதுகள் ஏதுமில்லை. கடந்த பருவத்தில் பாப்பான்கால் 10-வது மடை வரை நீர் வழங்கப்பட்டது.

(ஆ) இக்கால்வாயில் ஏற்படும் சிறு பழுதுகள் அப்போதைக் கப்போது நிதிநிலமைக்கேற்ப சீர் செய்யப்பட்டு வருகின்றன. தற்பொழுது ''தீவிர உணவு உற்பத்தி'' என்ற திட்டத்தின் கீழ் பாப்பான் கால்வாயில் அமைந்துள்ள மதகுகள் எண். 6, 10 மற்றும் 15 இவைகளுக்கு அருகில் ரெகுலேட்டர்கள் அமைக்கப் பட்டு வருகின்றன. மேலும் சுமார் 850 மீட்டர்கள் நீளத்திற்கு லைனிங் வேலை செய்யப்பட உள்ளது.

குற்றவியல் நீதிமன்றக் கட்டிடம்.

160. திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர்—மேற்கு மாவட்டம் திருவையாறு நகரில் அமைந்துள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வளாகத்தினுள் புதிதாக குற்றவியல் நீதிமன்றக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் (மேற்கு) மாவட்டம் திருவை யாறு நகரில் குற்றவியல் நீதிமன்றத்திற்கு கட்டிடம் கட்டுவதற் காக, மாவட்ட உரிமையியல், நீதிமன்ற கட்டிடத்திற்கு அருகா

மையில் 93 கல்யாணபுரம் கிராமம், சர்வே எண். 21/3-ல் 0.40.5 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப் பட்ட பின்னர் கட்டிடம் கட்டுவதற்கான வரைபடமும் மதிப் பீடும் உயர்நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்டு நிதிநிலைக்கேற்ப மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

பழக்கன்றுகள் உற்பத்தி செய்யும் நர்சரிகள்.

161. திரு. என். பழனிவேல்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பழக்கன்றுகள் (கொய்யா, மா, எலுமிச்சை) உற்பத்தி செய்யும் நர்சரிகள் எத்தனை? எங்கெங்கு உள்ளன?

(ஆ) இக்கன்றுகள் விவசாயிகளுக்கு எந்த முறையில் விநியோகிக்கப்படுகிறது ?

(இ) மானியம் உண்டா?

விடை—

(அ) தமிழ்நாட்டில் கொய்யா, மா, எலுமிச்சை உற்பத்தி செய்யும் நர்சரிகள் 38-ம் எலுமிச்சை குடும்பச் செடிகள் மட்டும் இடைப்பயிராக மலைப் பகுதிகளில் பயிரிடும் பொருட்டு உற்பத்தி செய்யும் நர்சரிகள் 2-ம் உள்ளன. அவைகளின் விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

(ஆ) இப்பழச்செடிகள், பண்ணைகளில் நேரடியாகவும் தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் மூலமும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப் படுகிறது.

(இ) ஆம்.

இணைப்பு

வரிசை எண் மற்றும் பண்ணையின் பெயர்.	மாவட்டம்.
(1)	(2)
1. அரசு பழப்பண்ணை, கன்னியாகுமரி.	கன்னியாகுமரி மாவட்டம்
2. அன்னாச்சி நாற்று பண்ணை, பேச்சிப்பாறை.	கன்னியாகுமரி மாவட்டம்
3. அரசு தோட்டக்கலைப் பண்ணை, குற்றாலம்.	திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.
4. அரசு தோட்டக்கலை பண்ணை, அரசூர்.	சிதம்பரனார் மாவட்டம்
5. அரசு தோட்டக்கலை பண்ணை, சுந்தரமுறையான்.	இராமநாதபுரம் மாவட்டம்.
6. அரசு தோட்டக்கலை பண்ணை, பூவானி.	காமராஜர் மாவட்டம்
7. பெரும் பழப் பண்ணை, வில்லிபுத்தூர்.	காமராஜர் மாவட்டம்
8. அரசுதோட்டக்கலைபண்ணை, தேவக்கோட்டை.	பசும்பொன் தேவர் திருமகன்மாவட்டம்.
9. அரசு தோட்டக்கலை பண்ணை, நேமம்.	பசும்பொன் தேவர் திருமகன்மாவட்டம்.
10. அரசு தோட்டக்கலை பண்ணை. பெரியகுளம்.	மதுரை மாவட்டம்
11. பெரும் பழப் பண்ணை, சிறுமலை.	திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்.
12. மத்திய நாற்றுப் பண்ணை, தாண்டிக்குடி.	திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்.
13. வெப்பப் பிராந்திய பழப், பண்ணை, குடுமியான்மலை.	புதுக்கோட்டை மாவட்டம்.

1989 நவம்பர் 2]

	(1)	(2)
14.	மாபெரும் பழப் பண்ணை, வல்லாத்திராக்கோட்டை.	புதுக்கோட்டை மாவட்டம்.
15.	அரசு தோட்டக்கலை பண்ணை, நாட்டுமங்கலம்.	புதுக்கோட்டை மாவட்டம்.
16.	அரசு தோட்டக்கலை பண்ணை, மருங்குளம்.	தஞ்சாவூர் மாவட்டம்
17.	வாழை பரிசோதனை நிலையம், ஆடுதுறை.	தஞ்சாவூர் மாவட்டம்
18.	சீரிய வாழைத் தோட்டம், முதலைப்பட்டி.	திருச்சி மாவட்டம்
19.	அரசு தோட்டக்கலை பண்ணை, முள்ளுவாடி.	சேலம் மாவட்டம்
20.	பெரும் பழப்பண்ணை, கருமந் துறை.	சேலம் மாவட்டம்
21.	சீரிய வாழைத் தோட்டம், கருமந்துறை.	சேலம் மாவட்டம்
22.	அரசு தோட்டக்கலை பண்ணை, ஆத்தூர்.	சேலம் மாவட்டம்
23.	அரசு தோட்டக்கலை பண்ணை, ஏற்காடு.	சேலம் மாவட்டம்
24.	அன்னாசி நாற்றுப்பண்ணை, கொல்லிமலை.	சேலம் மாவட்டம்
25.	அரசு தோட்டக்கலைபண்ணை, அருநூத்துலை.	சேலம் மாவட்டம்
26.	அரசு தோட்டக்கலைபண்ணை, திம்மாபுரம்.	தருமபுரி மாவட்டம்
27.	பெரும் பழப்பண்ணை, ஜீனூர்.	தருமபுரி மாவட்டம்
28.	அரசு தோட்டக்கலைபண்ணை, கடப்பட்டு.	வடஆற்காடு மாவட்டம்.

(1)	(2)
29. பெரும் பழப்பண்ணை, நவ்லாக்.	வடஆற்காடு மாவட்டம்
30. உயரிய வாழைத் தோட்டம், நவ்லாக்.	வடஆற்காடு மாவட்டம்
31. அரசு தோட்டக்கலை பண்ணை, கண்டியாங்குப்பம்.	தென்னாற்காடு மாவட்டம்.
32. அரசு தோட்டக்கலை பண்ணை, நெய்வேலி.	தென்னாற்காடு மாவட்டம்.
33. அரசு தோட்டக்கலை பண்ணை, கல்லார்.	நீலகிரி மாவட்டம்
34. அரசு தோட்டக்கலை பண்ணை, பர்லியார்.	நீலகிரி மாவட்டம்
35. செடி மற்றும் விதை உற்பத்தி மையம், குன்னூர்.	நீலகிரி மாவட்டம்
36. அரசு தோட்டக்கலை பண்ணை, கூடலூர்.	நீலகிரி மாவட்டம்
37. அரசு தோட்டக்கலைபண்ணை, குன்னூர்.	நீலகிரி மாவட்டம்
38. அரசு தோட்டக்கலைபண்ணை, ஆனைக்கட்டி.	கோயம்புத்தூர் மாவட்டம்.
1. மிளகு நாற்றுப்பண்ணை, பேச்சிப்பாறை.	கன்னியாகுமரி மாவட்டம்
2. மாதிரி காபி பண்ணை. கருமந்துறை.	சேலம் மாவட்டம்

ஆதிதிராவிட நலத்துறையின் மூலம் வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்.

162. திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு ஆதி திராவிடர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடந்த பத்தாண்டு காலத்தில் தர்மபுரி மாவட்டத்தில் ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் தாலுக்கா வாரியாக எத்தனை?

விடை—

வரிசை எண்ணும், வட்டமும்.	வழங்கப்பட்ட இலவச மனைப் பட்டா விவரம்.
(1)	(2)
1. தர்மபுரி	1,021
2. பாலக்காடு	525
3. பொன்னாகரம்	949
4. அரூர்	1,931
5. ஊத்தங்கரை	357
6. கிருஷ்ணகிரி	1,754
7. ஓசூர்	962
8. தேங்கனிக்கோட்டை	729
ஆக மொத்தம் ..	8,228

சிங்காரப்பேட்டை நகரில் பேருந்து நிலையம்.

163. திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊத்தங்கரை வட்டம் சிங்காரப்பேட்டை நகரில் பேருந்து நிலையம் உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

பேருந்து நிலையம் அமைக்கத் தேவையான நிலத்தை நில எடுப்பு மூலம் பெற 14-3-1989-ல் சிங்காரப்பேட்டை

ஊராட்சித் தலைவர் தர்மபுரி மாவட்ட ஆட்சியருக்கு மனு செய்துள்ளார். நில எடுப்புப் பணி முடிந்தவுடன் ஊராட்சி நிதி நிலைக்கேற்ப பேருந்து நிலையம் கட்ட ஆவன செய்யப் படும்.

குலசேகரத்தில் பேருந்து நிலையம்.

164. திரு. செ. நூர்முகமது :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்தில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு திற்பரப்பு பேரூராட்சியில் இருந்து நிலம் கேட்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை. ஆனால் திற்பரப்பு பேரூராட்சிக்குட்பட்ட தும்பகோடு கிராமம் புல எண். 368/2 அரசகுளத்தில் ஒரு பேருந்து நிலையம் அமைக்க திற்பரப்பு பேரூராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்த இடம் நீர்ப்பாசன குளம். இக்குளம் திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமானது.

நெய்யார் இடது புற கால்வாயை விஸ்தரித்தல்.

165. திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யார் இடதுபுற கால்வாயினை மடிச்சல் கால்வாய்வரை விஸ்தரிப்பதற்கு, மத்திய நிதி உதவி அண்மையில் பெறப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள்

(இ) இத்திட்டப்பணி செயல்முறைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதா?

1989 நவம்பர் 2]

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மடிச்சல் கால்வாய் பணி நடைபெற ரூ. 27.93 இலட்சத்திற்கு மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டு, மாநில அரசு ஊரகத் துறையினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணியின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 28.65 இலட்சத்திற்கு தயாரிக்கப் பட்டுள்ளது. மதிப்பீட்டில் உள்ள சில குறைபாடுகளை நீக்க, கண்காணிப்புப் பொறியாளர், திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். மதிப்பீடு சரிசெய்த பின் அங்கீகாரம் அளிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் (சிறுபாசனம்) அவர்களால் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ளப்படும்.

சென்னை பூங்கா நகர் தொகுதியில் பட்டா வழங்குதல்.

166. **திரு. அ. இரகுமான்கான்:**

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பூங்கா நகர் தொகுதி தட்டாங்குளம் சூளை பகுதியில் வசிக்கும் ஆதி ஆந்திர மக்களுக்கு கோவிந்த ஆச்சாரி தெருவில் அங்காளம்மன் கோயில் இடத்தைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோவிந்த ஆச்சாரி தெருவில் உள்ள அங்காளம்மன் கோயிலுக்குச் சொந்தமான புல எண். 2128/1-ல் 11 கிரவுண்டு 1180 சதுர அடி நிலம் உள்ளது. இந்த காலி மனை ஆலயக் கேட்பு, வரவு நிலுவைப் பதிவேட்டின்படி ஒன்பது நபர்களுக்கு அடிமனை மாத வாடகை ரூ. 7.05 பைசாவுக்கு பல ஆண்டு காலமாக விடப்பட்டுள்ளது. இதில் உள் குத்தகைதாரர்கள் எல்லாம் சேர்ந்து 44 நபர்கள் உள்ளனர். மேற்படி இடத்தினை உலக வங்கித் திட்டத்தின் கீழ் கடன் வழங்கி வீடு கட்டுவதற்கு முன்பு பட்டா வழங்க பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இந்து சமய அறநிலையத்துறையினருடன் தொடர்பு கொண்டுள்ளது.

அன்னூர், அவினாசி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் குடிநீர் விநியோகம்.

167. திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அன்னூர், அவினாசி ஊராட்சி ஒன்றிய பல்வேறு பகுதிகளில் குறிப்பாக ஆதி திராவிடர் மற்றும் நெசவாளர் குடியிருப்பு பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) (1) அன்னூர் ஊராட்சி ஒன்றியம்: இவ் ஒன்றியப் பகுதிகளில் நிலவி வரும் குடிநீர் பிரச்சினையை சமாளிக்கும் பொருட்டு 15 புதிய ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க உத்தர விடப்பட்டுள்ளது. இவைகளால் 3 ஆதி திராவிடர் குடியிருப்பு களும், 12 நெசவாளர் குடியிருப்பு உள்ளிட்ட பொதுக் குடியிருப்புகளும் பயன் பெறும்.

(2) அவினாசி ஊராட்சி ஒன்றியம் : மொத்தமாக 13 புதிய ஆழ் குழா கிணறுகள் அமைக்கப்பட உள்ளன. இவற்றில் 9 ஆதி திராவிடர் குடியிருப்புகளும், 4 நெசவாளர் குடியிருப்பு உள்ளிட்ட பொதுக் குடியிருப்புகளும் பயனடையும்.

அவினாசிக்குக் குடிநீர்.

68. திரு. ஆர். அண்ணாநம்பி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டத்தில் திருப்பூர் இரண்டாவது குடிநீர்த் திட்டத்திலிருந்து, அவினாசிக்கு கிடைத்துவரும் குடிநீரை விஸ்தரிக்கும் வகையில், போடப்பட்டுள்ள குழாய் களில் தண்ணீர் விடப்படவில்லை என்பது அரசின் கவனத் திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகராட்சி, 4 பேரூராட்சிகள் மற்றும் 44 வழியோர ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயன்பெறும் பேரூராட்சிகளில் ஒன்றாக, அவிநாசியும் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பேரூராட்சியில் 11 கி. மீ. நீளத்திற்கு பகிர்மான குழாய்கள் போடப்பட்டுள்ளன. இக்குழாய்களில், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் பிரதான குழாய் பதித்தல் முதலிய வேலைகள் முடிவுற்ற பின்னரே நீர் வழங்க முடியும். அதற்கான வேலைகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம், 1991—92 ஆம் ஆண்டு முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

துறையூர் நகரில் அரசினர் மேல்நிலைப்பள்ளி.

169. திரு. ஆர். மூக்கன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உப்பிலியாபுரம் தொகுதி துறையூர் நகரில் அரசினர் மேல்நிலைப்பள்ளி துவக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இது தொடர்பாக கருத்துரு ஒன்று திருச்சி முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட கருத்துரு அரசால் பெறப்பட்ட பின்னர், அரசின் நிதி நிலைக் கேற்ப உரிய ஆணை வழங்கப்படும்.

ENCROACHMENT BY PAVEMENT SHOPS.

170. Thiru M. SUNDARADAS :

Will the Honourable Minister for Hindu Religious and Charitable Endowments be pleased to state:

(a) Whether the Government are aware that the four street of the Kapaleeswarar Temple have been encroached by pavement shops

(b) If so, the details of steps taken to clear the encroachment

விடை—

(அ) மற்றும் (ஆ) : அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான தெப்பகுளத்தைச் சுற்றிலும் உள்ள காலி இடத்தில் இரும்புவேலி போடப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. திருக்குளத்திற்கு தெற்கு, மேற்கு மாடவீதி ஆகிய தெருக்களில் நடைபாதை கடைக்காரர்களால் ஆக்கிரமிப்பு செய்யும் இடம் மாநகராட்சிக்குச் சொந்தமானது.

புதிதாக பாசனம் பெறும் நிலப் பரப்பு.

171. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இந்த ஆண்டு (1989-90) புதிதாக எத்தனை இலட்சம் ஏக்கர்களுக்கு பாசன வசதி செய்து கொடுக்க அரசு உத்தேசித்துள்ளது ?

(ஆ) எந்தெந்த மாவட்டங்களில் ?

விடை—

(அ) சேலம் மாவட்டம் ஆனைமடுவு நீர்த்தேக்கம், கரிய கோயில் நீர்த்தேக்கம், காமராசர் மாவட்டம், கோல்வார் பட்டி நீர்த்தேக்கம் ஆகியவற்றின் மூலம் 13,190 ஏக்கர் நிலத்திற்கும், சிறுபாசன திட்டங்களின் மூலம் 8,092 ஏக்கர் நிலத்திற்கும் 1989-90 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

1989 நவம்பர் 2]

(ஆ) புதிதாக பாசன வசதி பெறும் நிலங்கள் உள்ள மாவட்டங்கள் பின்வருமாறு :—

வரிசை எண்ணும் மாவட்டமும்.	திட்டமிடப் பட்டுள்ள புதிய பாசனப் பரப்பு. (ஏக்கரில்.)
(1)	(2)
1. செங்கை-அண்ணா	2,001
2. வடாற்காடு	889
3. தென்னாற்காடு	1,699
4. திருச்சி	398
5. புதுக்கோட்டை	442
6. மதுரை	143
7. திண்டுக்கல் காயிதே மில்லத்	173
8. திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார்.	595
9. பசும்பொன் தேவர் திருமகன்	336
10. இராமநாதபுரம்	252
11. காமராசர்	3,893
12. தஞ்சாவூர்	371
13. சேலம்	10,080
மொத்தம் ..	21,282

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மருத்துவர்களுக்கு வேலை வாய்ப்பு.

172. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1980-ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டுவரை தமிழக மருத்துவக் கல்லூரிகளில் தேர்ச்சி பெற்று வெளிவந்த மருத்துவர்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக எவ்வளவு ?

(ஆ) அவர்களில் பெண் மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) தேர்ச்சி பெற்ற மொத்த மருத்துவர்களில் எத்தனை பேருக்கு அரசு வேலைவாய்ப்பு கொடுத்துள்ளது ?

விடை—

		நபர்கள்.
(அ)	1980-81	1,112
	1981-82	971
	1982-83	1,014
	1983-84	1,136
	1984-85	1,114
	1985-86	1,290
	1986-87	1,138
	1987-88	1,049
(ஆ)	1980-81	372
	1981-82	356
	1982-83	380
	1983-84	491
	1984-85	527
	1985-86	618
	1986-87	513
	1987-88	506

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(இ) தமிழ்நாடு தேர்வாணைக்குழு 1986-ஆம் ஆண்டில் தேர்வு செய்த மருத்துவர்கள் உட்பட 5,127 பேருக்கு அரசு வேலை கொடுத்துள்ளது.

மஞ்சள் உற்பத்தி.

173. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உற்பத்தியாகும் மஞ்சளின் அளவு என்ன ?

(ஆ) எந்தெந்த மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது ?

(இ) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா ?

விடை—

(அ) தமிழகத்தில் உற்பத்தியாகும் மஞ்சளின் அளவு 1,03,570 டன்களாகும்.

(ஆ) பெரியார், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், தென் அற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் மிகுதியாகவும், இதர மாவட்டங்களில் குறைந்த பரப்பிலும், மஞ்சள் சாகுபடி செய்யப்படுகின்றது.

(இ) ஆம். வெளிநாடுகளுக்கும் மஞ்சள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வீட்டுக்கு ஒரு விளக்குத் திட்டம்.

174. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 30 ஆதி திராவிட காலனிகளுக்கு வீட்டுக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தின் கீழ் மின் இணைப்பு கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பழனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 30 ஆதி திராவிட காலனிகளில் ஏழு (7) காலனிகளுக்கு வீட்டுக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தின் கீழ் மின் இணைப்புக்கோரி மொத்தம் 89 மனுக்கள் வரப் பெற்றுள்ளது. மீதமுள்ள 23 காலனிகளிலிருந்து வீடுகளுக்கு மின் இணைப்புக்கோரி மனுக்கள் ஏதும் வரவில்லை. மேற்படி 89 வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளது. விரைவில் மின் இணைப்பு கொடுக்கப்படும்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலில் தங்கம் கையிருப்பு.

175. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் தேவஸ்தானத்தில் 1—2—1989 தேதியின்படி தங்கம் கையிருப்பு எவ்வளவு ?

(ஆ) மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு சில ஆண்டுகளுக்கு முன்பு, தங்கம் கடனாக வழங்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது திரும்பப் பெறப்பட்டு விட்டதா ?

விடை—

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் 1—2—1989 தேதியின்படி கையிருப்பில் இருந்த தங்கத்தின் விவரம் கீழ்வருமாறு :—

722 கிலோ 978 கிராம் 307 மில்லி கிராம்.

(ஆ) ஆம். இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் உத்திரவின்படி 1,269 கிராம் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு தங்க ரதப்பணிக்கு 17—12—1982 அன்று வழங்கப்பட்டது.

(இ) தங்கத்திற்குப் பதிலாக ரொக்கமாக ரூபாய் 2,37,303 மேற்படி ஆலயத்திலிருந்து 18—6—1984ல் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

1989 நவம்பர் 2]

தமிழகத்தில் பழங்கள் உற்பத்தி.

176. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் கடந்த 5 ஆண்டு காலமாக உற்பத்தி செய்யப்பட்ட பழங்கள் அளவு என்ன? (ஆண்டு வாரியாக).

(ஆ) அவைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டனவா ?

(இ) ஆம் எனில், என்னென்ன பழங்கள், எந்தெந்த நாடு களுக்கு ?

விடை—

(அ) கடந்த 5 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பழங்களின் உத்தேசமான அளவு கீழே கொடுக்கப்பட் டுள்ளன :

1984—85	..	21.83 இலட்சம் மெட்ரிக் டன்.
1985—86	..	21.33 இலட்சம் மெட்ரிக் டன்.
1986—87	..	22.04 இலட்சம் மெட்ரிக் டன்.
1987—88	..	24.57 இலட்சம் மெட்ரிக் டன்.
1988---89	..	23.93 இலட்சம் மெட்ரிக் டன்.

(ஆ) ஆம். பழ வகைகளில் மாம்பழம் மட்டுமே சிறிய அளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

(இ) மாம்பழ வகைகள் பெருவாரியாக அரபு நாடு களுக்கு மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சிறைக் கைதிகளின் உணவுக்காக செலவிடப்படும் தொகை.

177. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிறைக் கைதிகளின் உணவுக்காக நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு செலவிடப்படும் தொகை எவ்வளவு ?

(ஆ) அந்தத் தொகை எந்த ஆண்டு நிர்ணயம் செய்யப் பட்டது ?

விடை—

(அ) அனைத்து வகுப்பு சிறைவாசிகளுக்கும் தமிழ்நாடு சிறைச்சாலை விதிகள், 1983-ன்படி அரசால நிர்ணயிக்கப்பட் டுள்ள விகிதப்படி உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. உணவுச் செலவுக்கான செலவினம் சந்தை நிலவரப்படி அந்த சமயம விற்கப்படும் பல்வேறு உணவுப் பொருட்களின் விலை யின் அடிப்படையில் அவ்வபபோது வேறுபடும். கடந்த மூன் றாண்டுகளில், சிறைவாசிகளின் உணவுக்காக நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு செலவிடப்பட்ட விவரம் பின்வருமாறு :—

		ரூ.
1985–86	..	5.89
1986–87	..	5.65
1987–88	..	7.00

சிறைவாசிகளின் உணவுச் செலவுக்காக நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு தற்போதைய அங்காடி விலைப்படி செலவிடப் படும் தொகையின் விவரம் பின்வருமாறு :—

1. ஏ. வகுப்பு சிறைவாசிகள்.

			ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஆகும் செலவினம்.
(1)		(2)	(3)
			ரூ.
சைவம்	..	வேலை செய்பவர் ..	14.87
சைவம்	..	வேலை செய்யாதவர் ..	13.85
அசைவம்	..	வேலை செய்பவர் ..	14.30
அசைவம்	..	வேலை செய்யாதவர் ..	12.02

2. பி. வகுப்பு சிறைவாசிகள்

	அரிசி உணவு.	கோதுமை உணவு.
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
வேலை செய்பவர் மற்றும் வேலை செய்யாதவர்.	7.34	7.28

'ஏ' வகுப்பு சைவ உணவுச் செலவினம் அசைவ, உணவுச் செலவை விட அதிகமாக இருப்பதற்குக் காரணம் சைவ உணவுக்கு நெய், பால் மற்றும் கூடுதலாக காய்கறிகள் அவர்களுக்கு வழங்கப்படுவது ஆகும்.

(ஆ) மேலே (அ)ன் விடைப் பகுதியில் கூறப்பட்டுள்ள சூழ்நிலையில், இவ்வினா எழ இடமில்லை.

கணபதிபுரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

178. திரு. மா. **மணிமாறன் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருமருகல் ஒன்றியம் கணபதிபுரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், திருமருகல் ஒன்றியத்தில் உள்ள கணபதிபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது பற்றி திருவாரூர் மாவட்ட சுகாதார அலுவலர் பரிந்துரை செய்துள்ளார். 1989-90 ஆம் ஆண்டில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் பொழுது இது பற்றி ஆய்வு செய்யப்படும்.

பாப்பான்குளம்—ஆழ்வார்குறிச்சி சாலையை செப்பனிடுதல்

179. திரு. **ரவிஅருணன் ;**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், பாப்பாங்குளம், ஆழ்வார்குறிச்சி சாலையை செப்பனிட்டு, வீரா நதி குறுக்கே தாம்போதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா

விடை—

ஆழ்வார்குறிச்சி-பாப்பான்குளம் சாலை கடையம் ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/4ல் அமைக்கப்பட வேண்டிய தாம்போதிக்கும் மற்றும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

சாலையைச்செப்பனிடுவதற்கும் தோராயமாக ரூ. 15 00 இலட்சம் தேவைப்படும். இதுவரையில் அரசின் ஒப்புதல் பெற்ற திட்டங்கள் எதிலும் இப்பணி இடம் பெறாத காரணத்தாலும், இப்போதைய அரசின் நிதி நெருக்கடியாலும், இப்பணியை அண்மைக் காலத்தில் எடுத்துச் செய்யும் சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

ஏட்டுக்குடி அருள்மிகு சுப்ரமணியசுவாமி கோவிலில் யாத்ரீகர்களுக்கு விடுதி :

180. திரு. வி. தம்புசாமி :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எட்டுக்குடி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோவிலில் யாத்ரீகர்களுக்கு உட்பட்ட விடுதி பூர்த்தியாகாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதனைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) ஆம். இது விவரம் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு விடுதிக் கட்டிடத்தை பூர்த்தியாக கட்டி முடிக்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) சிமெண்ட் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் இடையே நின்று போயிருந்த அப்பணி மீண்டும் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அப்பணி 30—6—1989க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பவானிசாகர் நீர்த் தேக்கத்தில் படிந்துள்ள வண்டல் மண்அகற்றும் திட்டம்.

181. திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் படிந்துள்ள வண்டல் மண் அகற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பவானிசாகர் நீர்த்தேக்கப் பரப்பு 30 சதுர மைல்கள் பொதுவாக நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் அகற்றும் தூர் வாரும பணி மேற்கொள்ளப்படுவதில்லை. மேலும் இந்நீர்த் தேக்கத்தில் வண்டல்மண் படிவதற் கென்று ஒரு பகுதி கொள்ளளவு ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, வண்டல் மண்ணை அகற்றும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

182. திரு. வி. கே. சின்னசாமி:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

போக்குவரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரிப்பது என்பது அக்கழகங்கள் இயக்கும் பேருந்துகளின் எண்ணிக்கையைப் பொறுத்தும் மற்றும பிரிக்க உத்தேசிக்கப்படும் புதிய கழகங்கள தனித்தியங்கும் சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்பனவற்றைப் பொறுத்தும் தீர்மானிக்கப்படும். தற் போதுள்ள சூழ்நிலையில், சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு காவேரி நீர்

183. திரு. வெ. இராசு :
திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திற்கு திருச்சி மாவட்டம் ஜீயபுரத்திலிருந்து காவேரி நீர் கொண்டு வரும் திட்டத்தை விராலிமலை, அன்னவாசல், கீரனூர் வழியாக செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) இத்திட்டம் எப்பொழுது அமுலுக்கு வரும் ?

விடை—

(அ) திருச்சி மாவட்டத்தில் காவேரியில் உள்ள கட்டளை பெட் (bed) ரெகுலேட்டரில் இருந்து புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வெள்ளாறு வரை ஒரு வெள்ள நீர் போக்கி வாய்க்கால் வெட்டி காவேரியில் அதிகப்படியாக வரும் வெள்ள நீரை கொண்டு செல்வதற்கான பூர்வாங்க திட்டமொன்று அரசு பரிசீலித்தது.

(ஆ) மேற்படி திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 347.30 கோடியாகும். இறுதி கட்ட வேலைகள் முடியும் பொழுது இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 743.46 கோடிகளாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

(இ) மேற்படி திட்டம் குறைந்த பயன், செலவு விகிதம் உள்ளபடியாலும் போதுமான நீர் வரத்து உறுதியாக இல்லை என்பதாலும் மற்றும் காவேரி நீர் தகராறு தீர்க்கப்படாமல் இருப்பதாலும் இத்திட்டம் அரசால் கைவிடப்பட்டது.

விராலிமலை ஒன்றியத்தைச் சேர்ந்த கோவில்பட்டி மீனவேலி சாலையை சீர் செய்யும் திட்டம்.

184. திரு. வெ. இராசு :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியத்தைச சேர்ந்த கோவில்பட்டி மீனவேலி சாலையை சீர் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?—

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேற்படி சாலையின் மொத்த நீளம் 5. கி.மீ. ஆகும். இதில் 1988-89ஆம் ஆண்டில், மேற்படி ஒன்றியத்தின் பொது நிதியிலிருந்து ரூ. 16,695 செலவில் 2 கி.மீ. நீளத்திற்கு கிராவல் போடப்பட்டுள்ளது. மீதமுள்ள 3 கி.மீ. நீளமுள்ள சாலைக்கு ரூ. 15,000 செலவில் கிராவல் பரத்திட டெண்டர் கோரப்பட்டுள்ளது.

1989 நவம்பர் 2]

வேட்டவலம் அரசு மேல் நிலைப் பள்ளி விஞ்ஞான ஆய்வுக் கூடம்.

185. திரு. கே. பிச்சாண்டி:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை தொகுதி வேட்டவலம் அரசு மேல் நிலைப் பள்ளி விஞ்ஞான ஆய்வுக் கூடம் 1978-79ல் கட்டப் பட்டும் மாணவர்களுக்கு உபயோகமின்றி உள்ளதை இயங்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

வட ஆற்காடு மாவட்டம், வேட்டவலம் அரசு மேல் நிலைப்பள்ளிக்கு ஒரு வகுப்பறையுடன் கூடிய ஆய்வகம் கட்ட அரசு ரூ. 1,57,140 அனுமதித்தது. அதன்படி, 2.74 ஏக்கர் நிலப்பரப்பில் பொதுப் பணித்துறையினரால் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. ஆனால் மேற்படி கட்டிடம் பள்ளிக்கு சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்ததாலும் போக்கு வரத்து வசதியின்மையாலும், ஆசிரியர்களும் சென்று வர இயலாததாலும் பொதுமக்கள் ஆட்சேபணையை முன்னிட்டும், மேற்படி கட்டிடத்துடன் கூடிய நிலத்தை வட ஆற்காடு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு தற்போதைய நிலவரப் படி வருவாய்த் துறை மற்றும் பொதுப் பணித்துறை நிர்ண யிக்கும் விலைக்கு விற்கவும், பள்ளிக்கு அருகில் உள்ள தனி யார் நிலத்தை மேலே கூறப்பட்ட ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை விற்கும் பணத்தைக் கொண்டு வாங்கிக் கொள்ளவும் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கி ஆணை பிற பிக்கப்பட்டது. அதன்படி வேலூர் பொதுப் பணித்துறைப் கண்காணிப்பு பொறியாளருடன் தொடர்பு கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேற்படியார் மூலம் சென்னை தலைமை கட்டிட பொறியாளருக்கு கட்டிட மதிப்பீடு நிர்ணயம் செய் யக்கோரி அனுப்பப்பட்டுள்ளது. அன்னாரின் பதில் எதிர் பார்க்கப்படுகிறது. பள்ளிக் கல்வி இயக்குநர் இப்பள்ளிக்கான அறிவியல் ஆய்வகம் கட்டும் பணியை தலைமைக் கட்டிடப் பொறியாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோருடன் கலந்து விரைவில் கட்டி முடிக்க தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

தொலைபேசி தொடர்பக தளம் அமைத்தல்

186. திரு. கே. பிச்சாண்டி :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை நகருக்கு தெற்கே தேனிமலை (தேவர் மலை) பகுதியில் தொலைபேசி தொடர்பக தளம் அமைக்க மத்திய அரசு இடம் கோரியதின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

மத்திய அரசிடமிருந்து தேனிமலை பகுதியில் தொலைபேசி தொடர்பு தளம் அமைக்க இடம் வேண்டி கடிதம் ஏதும் வரப்பெறவில்லை. மத்திய அரசின் பல் நோக்கு கிராம வானொலி திட்டத்தின் கீழ் நுண்ணலை மையம் கட்ட சென்னை ''மைக்ரோவேவ்'' தொலைபேசி கோட்டப் பொறியாளரிடமிருந்து கடிதம் வரப்பெற்று, மாவட்ட அளவில் நடவடிக்கையில் உள்ளது.

வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கின்ற பட்டதாரிகள்.

187. திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கின்ற பட்டதாரிகள் மாவட்ட வாரியாக எத்தனை பேர் ?

(ஆ) ஆண்கள், பெண்கள் முறையே எத்தனை பேர் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) 31—12—1988 தேதியில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து செல்லுப்படி பதிவேட்டிலுள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை (ஆண்கள் மற்றும் பெண்கள் எண்ணிக்கை) மாவட்ட வாரியாக கீழே தரப்பட்டுள்ளது—

வரிசை எண்ணும் மாவட்டமும்.	பதிவு செய்து செல்லுப்படிபதிவேட்டிலுள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை.		
	ஆண்கள்.	பெண்கள்.	மொத்தம்
(1)	(2)	(3)	(4)
1. திண்டுக்கல் காயிதே மில்லத். ..	3,302	2,036	5,338
2. வடாற்காடு ..	5,686	5,342	11,028
3. தென்னாற்காடு ..	8,463	2,741	11204
4. கோயம்புத்தூர் ..	10,836	7,989	18,825
5. சிதம்பரனார் ..	4,391	2,322	6713
6. செங்கை அண்ணா ..	3,203	1,524	4,727
7. தர்மபுரி ..	7,558	951	8,509
8. காமராஜர் ..	3,649	1,815	5,464
9. கன்னியாகுமரி ..	6,387	4,180	10,567
10. சென்னை ..	49,795	35,918	85,713
11. மதுரை ..	11,613	4,295	15,908
12. தஞ்சாவூர் ..	19,874	4,061	23,935
13. பசும்பொன் தேவர் திருமகன்.	1,473	1,179	2,652
14 பெரியார் ..	4,083	1,431	5,514
15 புதுக்கோட்டை ..	1,776	673	2,449
16 இராமநாதபுரம் ..	1,561	430	1,991
17 சேலம் ..	7,186	4,359	11,545
18 திருச்சிராப்பள்ளி ..	8,228	2,722	10,950
19 திருநெல்வேலி கட்டபொம்மன். ..	8,560	5,115	13,675
20. உதகமண்டலம்	1,643	759	2,402
மொத்தம்	1,69,267	89,842	2,59,109

மேற்கண்ட புள்ளி விவரங்களில் முதுநிலை பட்டதாரிகளும் அடங்குவர்.

[1989 நவம்பர் 2

188. திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி மாவட்டத்தில் 1986-87, 1987-88 ஆகிய ஆண்டுகளில் கூட்டுறவு விவசாயக் கடன் சேவா சங்கங்கள் மூலம் கடன் பெற்ற விவசாயிகள் எத்தனை பேர் ?

(ஆ) இதில் கடன் தொகையை குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்தாதவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) தருமபுரி மாவட்டத்தில் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 1986-87-ஆம் ஆண்டில் 22,794 விவசாயிகளும், 1987-88-ஆம் ஆண்டில் 31,267 விவசாயிகளும் கடன் பெற்றனர்.

(ஆ) 30—6—1987-ன்படி நிலுவையிலுள்ள கடன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 53,628-ல் தவணை தவறிய கடன் செலுத்தாத உறுப்பினர்களின் எண்ணிக்கை 31,728, 30—6—1988-ன்படி நிலுவையிலுள்ள கடன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 75,219-ல் தவணை தவறிய கடன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 38,865.

உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல் நிலைப் பள்ளிகள் வேண்டி அரசுக்கு விண்ணப்பம்.

189. திரு. மு. இராமநாதன் :
திரு. வ. முல்லைவேந்தன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் வேண்டுமென அனுமதி கோரி அரசுக்கு விண்ணப்பித்துள்ளவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இதில் முன் வைப்புத் தொகை கட்டியவர்கள் எத்தனை பேர் ? மாவட்ட வாரியாக.

விடை—

(அ) உயர்நிலைப்பள்ளிகள்; 198

மேல்நிலைப் பள்ளிகள், 246

(ஆ) இதுபற்றிய விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டு உள்ளது.

இணைப்பு.

வரிசை எண்ணும் மாவட்டமும்,	உயர்நிலைப் பள்ளிகள். முன் வைப்புத் தொகை கட்டியவர்கள் (முழுமையாக).	உயர்நிலைப் பள்ளிகள். முன் வைப்புத் தொகை ஒரு பகுதி கட்டியவர்கள்.	மேல்நிலைப் பள்ளிகள். முன் வைப்புத் தொகை கட்டியவர்கள் (முழுமையாக).	மேல்நிலைப் பள்ளிகள். முன் வைப்புத் தொகை ஒரு பகுதி கட்டிவர்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)
1 சென்னை ..	..	1	4	..
2 செங்கை அண்ணா	9	..	8	1
3 தென்னாற்காடு	13	6	15	3
4 வடாற்காடு ..	22	2	20	4
5 தஞ்சாவூர் ..	11	5	11	3
6 திருச்சி ..	12	1	15	1
7 புதுக்கோட்டை	11	..	5	..
8 மதுரை ..	..	1	4	..
9 திண்டுக்கல் காயிதே மில்லத்.	7	2	4	..
10 இராமநாதபுரம்	4	..	2	1
11 பசும்பொன் தேவர் திருமகன்.	6	1	4	2
12 காமராசர் ..	4	1	2	..
13 திருநெல்வேலி கட்டபொம்மன்.	..	1	2	1
14 வ. உ. சிதம்பரனார்	1	1	5	..
15 கன்னியாகுமரி ..	..	2	2	..
16 கோவை ..	7	..	6	..
17 பெரியார்	9	..	4	1
18 நீலகிரி ..	6	..	3	2
19 சேலம் ..	6	..	12	1
20 தர்மபுரி ..	8	..	13	..

53—235—21

பதுக்கல் மற்றும் கடத்தல் மூலம் பறிமுதல் செய்யப்பட்ட பாமாயில்.

190. திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1987—88 மற்றும் 1988—89-ல் ஜனவரி மாதம் முடிய பதுக்கல் மற்றும் கடத்தல் மூலம் பறிமுதல் செய்யப்பட்ட பாமாயில் எவ்வளவு ?

(ஆ) தண்டிக்கப்பட்டவர்களின் விவரம் என்ன ?

விடை—

	1987—88	1988—89 (ஜனவரி முடிய)
(அ)	648.71 குவிண்டால் மதிப்பு ரூபாய் 8,53,255.	222.10 குவிண்டால் ரூபாய் 3,63,018.20
(ஆ)	265 நபர்கள்.	135 நபர்கள்.

சென்னை அரசினர் தோட்ட வளாக எல்லைக்குள் குளியலறை, கழிவறை கட்டுதல்.

191. திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை அரசினர் தோட்ட வளாக எல்லைக்குள் ஒரு பொது நவீன குளியலறை, கழிவறை கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

சென்னை அரசினர் தோட்ட வளாகத்திற்கு வரும் பார்வையாளரின் வசதிக்காக சட்டமன்ற பல மாடிக் கட்டிடத்தை ஒட்டி ஒரு கட்டணக் கழிப்பிடம் மற்றும் குளியலறை ரூபாய் 1.25 இலட்சத்தில் கட்டப்படவுள்ளது. வெகு முக்கிய பிரமுகர்கள் தங்கும் மற்றும் வருகை தரும் அரசினர் தோட்ட வளாகத்தில் பொது நவீன கழிப்பறை குளியலறை போன்றவை அமைப்பது இடையூறு விளைவிக்கும் என கருதப்படுகிறது.

1989 நவம்பர் 2]

அரசு விளம்பரங்கள்.

192. திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1985-86, 1986—87, 1987—88-ல் அரசு விளம்பரங்கள் வெளியிட்டமைக்காக அளிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை—

அரசு விளம்பரங்கள் வெளியிட்டமைக்காக அளிக்கப்பட்ட தொகை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது :—

1985—86		ரூபாய் 4,36,06,691.39
1986—87		ரூபாய் 5,73,76.599.60
1987—88		ரூபாய் 5,42,00,517.22

செய்யாறு தொகுதியில் கிணறுகள் ஆழப்படுத்துதல்.

193. திரு. வ. அன்பழகன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யாறு தொகுதியில் கிணறுகள் ஆழப்படுத்த போதிய நிதி ஆதாரம் ஒதுக்கிட அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா ?

விடை—

செய்யாறு வட்டம் உட்பட வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பதின் மூன்று வட்டங்களும், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன என வறட்சி நிவாரண ஆணையர் தெரிவித்துள்ளார். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என அறிவிப்பு செய்யாமலேயே பாதிக்கப்பட்ட எல்லாப் பகுதிகளிலும் அனைத்து நிவாரணப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தெரிவித்துள்ள கிணறுகள் ஆழப்படுத்தும் பணிக்கென்று இந்த மாவட்டத்திற்கு ரூபாய் 17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1989 நவம்பர் 2

கூட்டுறவு தேயிலை, காப்பி தொழிற்சாலைகள்

194. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் கூட்டுறவு தேயிலை, காப்பி தொழிற் சாலைகள் முறையே எவ்வளவு உள்ளன?

(ஆ) அவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் முறையே எவ்வளவு பேர்?

(இ) அவர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைச் சம்பளம் என்ன?

விடை—

(அ) தமிழகத்தில் தொழில் வணிகத்துறையின் கீழ் 15 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு 13 தொழிற் கூட்டுறவுத் தேயிலை த்தொழிற் சாலைகள் உற்பத்தி செய்து கொண்டு வருகின்றன. இத்துறையின் கீழ் கூட்டுறவு முறையில் காபி தொழிற்சாலைகள் ஏதுமில்லை.

(ஆ) அத்தேயிலைத் தொழிற்சாலைகளில் மொத்தம் 1,070 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

(இ) இத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்குக் குறைந்த பட்ச ஊதியமாக ரூபாய் 9-50 வழங்கப்படுகிறது.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நகரப் பேருந்து விடுதல்.

195 திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் மதுராந்தகம்-மதுராந்தகம் (வழி) தச்சூர், புதூர், படாளம் கள்ளபிரான்புரம், கருங்குழி நகரப் பேருந்து விட நட வடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மதுராந்தகத்திலிருந்து அருங்குளம், தச்சூர், புதூர் படாளம், கள்ளபிரான்புரம் மற்றும் கருங்குழி, வழியாக மதுராந்தகம் வரையிலான தட நீளம் 40.3 கி. மீட்டர் ஆகும். இது நகரப் பேருந்து இயக்குதலுக்கு அனுமதிக்கப் பட்ட உச்ச கட்ட தூரமான 30 கி. மீட்டருக்கும் அதிகமாத லால் இத்தடத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நகரப் பேருந்து இயக்க இயலாது.

1989 நவம்பர் 2]

எடை அளவு சோதனைகள்.

196. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சரியான எடை அளவில் பொருட்கள் விற்பனை செய்ய சோதனைகள் நடத்தப்படுகின்றனவா ?

(ஆ) 19888—9ல் எத்தனை சோதனைகள் செய்யப்பட்டன ?

விடை—

(அ) ஆம். ஆய்வுகள் நடத்தப்படுகின்றன.

(ஆ) 1988-ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் 4,13,097 ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளின் விளைவாக, சட்ட விதிகளை மீறியதற்காக 1988ஆம் ஆண்டில் 18,428 வழக்குகள் தொடரப்பட்டு, இதுவரையில் 16,561 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு ரூ. 19,36,276 அபராதத் தொகை வசூலிக்கப்பட்டது. 1989-ம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் 59,573 ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டு 1,719 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடுகள்.

197. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:

திருமதி ரமணி நல்லதம்பி:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் மாவட்ட வாரியாக ஆண்டு தோறும் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) ஒரு வீட்டிற்கு ரூபாய் 6,000 என்று இருப்பதை ரூபாய் 10,000 ஆக உயர்த்தும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

(அ) கிராம வீட்டு வசதி திட்டத்தின் கீழ் மாவட்ட வாரியாக ஆண்டு தோறும் கட்டப்பட்ட வீடுகள் குறித்த விவரங்கள் பட்டியலில் தனியாக வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) 1988ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தில் வீடுகளை கட்டிக் கொள்ள ரூபாய் 6,000-லிருந்து ரூபாய் 8,000 மாக சம வெளிப் பகுதிகளிலும் அதிக பட்ச கடனாக ரூபாய் 10,000-மாக மலைப் பகுதிகளிலும் மற்றும் இராமேஸ்வரம் தீவுப் பகுதிகளிலும் உயர்த்தப்பட்டுள்ளது.

[1989 நவம்பர் 2

கிராமப் புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் மாவட்ட வாரியாக ஆண்டுதோறும் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை மக்களுக்கு 31—3—1989 முடிய கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் விவரப் பட்டியல்.

ஆண்டு.	செங்கை-அண்ணா.	வட ஆற்காடு.	தர்மபுரி.	தென் ஆற்காடு.
(1)	(2)	(3)	(4)	(5)
1978-79 ..	77	155	221	474
1979-80 ..	1,616	1,951	781	712
1980-81 ..	2,693	4,279	2,966	4,138
1981-82 ..	2,738	4,472	1,421	2,516
1982-83 ..	1,248	3,958	1,873	5,675
1983-84 ..	2,448	3,758	1,192	4,357
1984-85 ..	1,826	2,654	834	3,125
1985-86 ..	376	456	410	670
1986-87 ..	200	526	335	481
1987-88 ..	850	1,450	750	1,250
1988-89 ..	651	1,422	801	1,989
	14,723	25,081	11,584	25,387

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆண்டு.		தஞ்சாவூர்.	சேலம்.	பெரியார்.	கோயம்புத்தூர்.
(1)		(6)	(7)	(8)	(9)
1978-79	..	213	255	181	337
1979-80	..	741	869	1,094	1,423
1980-81	..	5,547	1,258	1,875	2,036
1981-82	..	2,120	2,184	1,770	1,885
1982-83	..	6,183	1,398	1,810	1,741
1983-84	..	5,471	2,495	1,636	1,500
1984-85	..	4,267	1,760	809	771
1985-86	..	3,758	400	250	250
1986-87	..	484	350	350	300
1987-88	..	850	1,900	1,600	800
1988-89	..	2,249	1,141	1,060	685
		3,8183	14,010	12,435	11,701

ஆண்டு.		நீலகிரி.	மதுரை.	இராமநாதபுரம்.	திண்டுக்கல் காயிதே மில்லத்.
(1)		(10)	(11)	(12)	(13)
1978-79	..	72	508	166	
1979-80	..	311	1622	879	மதுரை
1980-81	..	663	3,616	2,980	மாவட்
1981-82	..	274	5,823	3,562	டத்தின்
1982-83	..	436	3,410	2,916	எண்
1983-84	..	560	5,615	3,743	ணிக்கை
1984-85	..	361	2,461	2,474	யுடன் உள்ள
1985-86	..	150	2,613	288	டக்கியது.
1986-87	..	100	192	250	129
1987-88	..	300	2,250	1,500	1,200
1988-89	..	285	1,295	544	1,297
		3,512	29,405	19,242	2,626

ஆண்டு.	காமராஜர்.	பசும்பொன் தேவர் திருமகன்.	திருநெல்வேலி கட்டபொம்மன்.	கன்னியாகுமரி.
(1)	(14)	(15)	(16)	(17)
1978-79	இராமநாதபுரம் மாவட்டத்தின் எண்ணிக்கையுடன் உள்ளடக்கியது.		267	149
1979-80			933	393
1980-81			2,473	826
1981-82			1,900	691
1982-83			2,932	942
1983-84			1,950	291
1984-85			1,154	255
1985-86	857	833	650	250
1986-87	276	186	485	482
1987-88	1i200	1,700	800	591
1988-89	1311	1,829	669	848
	3,644	4,548	14,213	5,218

ஆண்டு.	திருச்சி.	புதுக்கோட்டை.	சிதம்பரம்	மொத்தம்
(1)	(18)	(19)	(20)	(21)
1978—79	73	3	நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தின் எண்ணிக்கையுடன் உள்ளடக்கியது.	3,151
1979—80	742	314		14,381
1980-81	4,992	1,740		42,082
1981-82	3,578	1,419		36,326
1982-83	3,600	1,970		40,092
1983-84	3,300	1,700		40,016
1984-85	3,391	1,865		28,007
1985-86	1,334	566		14,501
1986-87	580	300	180	6,186
1987-88	2,598	700	711	23,000
1988-89	943	403	374	19,296
	25,131	10,980	1,265	2,66,588

1989 நவம்பர் 2]

வள்ளுவர் கோட்ட பார்வையாளர்கள்.

198. திரு. வீ. தமிழ்மணி :
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வள்ளுவர் கோட்டம் ஆரம்பித்த வருடத்தில் இருந்து 1988 முடிய பார்வையாளர்களிடமிருந்து வசூலித்த மொத்த தொகை எவ்வளவு ?

(ஆ) பார்வையாளர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) வள்ளுவர் கோட்டம் ஆரம்பித்த 13-5-1976-லிருந்து 1988 டிசம்பர் 31 ஆம் நாள் முடிய பார்வையாளர்களிடமிருந்து வசூலித்த மொத்த தொகை ரூ. 36,00,478 (ரூபாய் முப்பத்தாறு இலட்சத்து நானூற்று எழுபத்தெட்டு மட்டும்.)

(ஆ) பார்வையாளர்கள் சுமார் 80 இலட்சம் பேர்.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள்.

199. திரு. கே. ஏ. செங்கோட்டையன் :
மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் எவ்வளவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் உள்ளன ?

(ஆ) எந்தெந்த ஒன்றியங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன ?

விடை—

(அ) தமிழகத்தில் மொத்தம் 17 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் உள்ளன.

(ஆ) கீழ்க்கண்ட ஒன்றியங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன :

(1) சென்னை-செங்கை அண்ணா மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்.

(2) வடாற்காடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்.

(3) பெரியார் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்.

(4) கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்.

(5) மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்.

(6) திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்.

(7) தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்.

(8) தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்.

(9) காமராஜர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்.

(10) சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்.

(11) கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்.

தமிழ் நாட்டில் குத்தகை வார சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவர்கள்.

200. **திரு. எஸ். டி. உகம்சந்த் :**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ் நாட்டில் குத்தகை வார (Tamil Nadu Cultivating Tenant Protection Act சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அதனால் பயன் அடைந்த நிலங்கள் எவ்வளவு ஏக்கர் ?

விடை—

(அ) தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் குத்தகைதாரர்கள் பதிவு செய்யப்படுவதில்லை.

1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகைப் பதிவு ஆவணங்கள் சட்டப்படி, அச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவர்கள்—4,95,981 பேர்.

(ஆ) அவர்கள் பயனடைந்த நிலப்பரப்பு—7,01,033 ஏக்கர்

[வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.]

(**குறிப்பு**.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

தகவல் கோரல்

(அ)செய்தித் துறை உதவி இயக்குநர் திரு. நடராஜன் ராஜினாமா ஏற்கப் பெறாதது குறித்து 10-25 மணி

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடரின் கடைசி நாளான இன்று கொஞ்சம் லிபரலாகயிருந்து—ஒன்றிரண்டு பிரச்சினைகளை. எதிர்கட்சிகளுடைய கவனத்திற்கு வந்த பிரச்சினைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தகவலுக்குச் சொல்லி, பதில் பெற விரும்புகிறோம் என்பதால் அனுமதிக்க கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் Liberal ஆக இருப்பதாக நினைக்கிறீர்களா, அல்லது எப்படி நினைக்கிறீர்கள்?

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஃபாரின் போய்விட்டு வந்த பிறகு ரொம்பவும் லிபரலாக இருக்கிறீர்கள். (சிரிப்பு) ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்து, இந்த சட்ட மன்றத்திலே எழுப்பி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதுகுறித்து இங்கே தெரிவித்தக் கருத்தின் அடிப்படையில் ஒன்றை கேட்க விரும்புகிறேன். செய்தித் துறையில் உதவி இயக்குநராகப் பணியாற்றிய திரு. நடராஜன் இராஜினாமா கடிதம் அனுப்பி ஏறக்குறைய ஒரு ஆண்டு ஆகப் போகிறது. இது குறித்து சென்ற தடவை அந்த இராஜினாமா ஏன் ஏற்கட்படவில்லை, அதற்கு அரசியல் காரணமா, என்ன காரணம் என்று கேட்ட போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர் அரசாங்கத்திற்கு கார், வீடு போன்றவற்றிற்கு பாக்கி கட்ட வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்குரிய பணத்தை நிலுவையில்லாமல் அனைத்தையும் கட்டி முடித்தப் பிறகு மீண்டும் அதுகுறித்து கேட்டபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதுகுறித்து அரசு சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்து இருந்தார்கள். இப்போது சட்டமன்றக் கூட்டம் முடிந்து ஏறக்குறைய ஆறு மாதம் ஆகிறது. பல அரசு அதிகாரிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கூட சில பேர் இராஜினாமா செய்து விட்டு தேர்தலில் போட்டியிடுவதற்காக வெளியே போயிருக்கிறார்கள். அவர்கள் இராஜினாமா எல்லாம் ஏற்கப் பட்டிருக்கிறது. ஒருவேளை நடராஜன் அவர்களின் இராஜினாமாவைக் கூட இந்த அரசு முன்னாலே ஒப்புக் கொண்டிருந்தால்....

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். அதிகாரி இராஜினாமா ஏற்கப்பட்டதே தவிர, அவர் கட்சியிலே செய்த வேட்பு மனு ஏற்கப்படவில்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு: அதற்காக அவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபம் தான் நாம் தெரிவிக்கலாம். வேறுஎதையும் செய்ய முடியாது. எனவே, அப்படி நடராஜனின் இராஜினாமாவை ஏற்றுக் கொண்டிருந்தால் ஒரு வேளை எம்.எல்.ஏ., எம்.பி.யாக கூட அவர் வந்தாலும் வந்திருக்கலாம் அல்லது தொழில் ஏதாவது செய்து சொந்த வேலையைப் பார்க்கலாம். இப்படித் தனியாருக்குக் கிடைக்கிற அந்த வாய்ப்பு இல்லாமல் போகிற விதத்தில் அரசு ஏன் அந்த இராஜினாமாவை மட்டும் ஏற்காமல் இருக்கிறது? அதற்கு என்ன காரணம்? ஒரு வேளை எதிர்க் கட்சித் தலைவருடைய குடும்ப நண்பர் என்ற காரணத்தால் பழி வாங்குகிற நோக்கத்தில் இது ஏற்கப் படாமல் இருக்கிறதோ என்ற சந்தேகம் இருக்கிறது. எனவே, உடனடியாக அரசு அந்த இராஜினாமாவை ஏற்றுக் கொண்டு, அவரை ரிலீஸ் செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். இது ஒன்று.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஏற்கனவே செய்தித் துறையில் இருந்த நடராஜன் மீது எடுக்கப் பட்ட நடவடிக்கை இந்த ஆட்சி அமைந்த பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கையல்ல. கவர்னர் ஆட்சியின் போதே அப்படியொரு நடவடிக்கை நடராஜன் அவர்கள் மீது எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இது நிர்வாகம் சம்பந்தமான விஷயம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே சொன்னார்கள். இந்த இராஜினாமா ஏற்கப்பட்டிருக்குமானால் இந்நேரம் அவர் எம்.பி.யாக ஆகியிருக்கிப்பார் என்று சொன்னார்கள். அவர் இன்றைய தினம் பலபேரை எம்.பி.யாக ஆக்குகிற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார் என்பதும் இந்த அவைக்குத் தெரியும். என்ன இருந்தாலும் ஒரு அரசு ஊழியருடைய விஷயம் அவைக்கு வந்துவிட்ட காரணத்தால் அதையும் சொல்ல வேண்டியிருக்கிறது. நம்முடைய நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். எம்.பி.யாகவும் ஆகியிருப்பார், அல்லது சொந்த வேலையைப் பார்க்கவும் போயிருப்பார் என்று சொன்னார்கள். அது ரொம்பவும் நல்லது, இருந்தாலும் என்ன செய்வது? அவர் பொது வேலையில் இன்றைக்கு ஈடுபட்டிருக் கிறார். அவர் பணத்தைக் கட்டி விட்டார் என்று எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இவைகளையெல்லாம் நான் உடனடியாக இங்கே திடீரென்று அறிவித்துவிட இயலாது. அது நிர்வாக சம்பந்தப்பட்ட விஷயம். அவர்மீது என்ன குற்றச்சாட்டு, ஏன் இராஜினாமா ஏற்கப்பட வில்லை என்பதெல்லாம் கவர்னர் ஆட்சியில் செய்யப்பட்ட காரியம் என்ற காரணத்தால்—கவர்னர் அவர்கள் ஒரு நல்ல நிர்வாகி என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவருடைய ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கை இது. எனவே அதைக் குறித்து ஆலோசித்து தான் நான் எந்த முடிவும் செய்ய இயலும்.

1989 நவம்பர் 2]

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.பி.யாக ஆகியிருப்பார் என்று நான் சொன்னதாகச் சொன்னால் நான் சீட் கொடுக்கிற மாதிரி ஆகிவிடும். எம்.பி.யாக ஆனாலும் ஆகியிருப்பார் என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த நிலையில் நீங்கள் இல்லை என்பதும் எங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். (சிரிப்பு).

10-30 மணி

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் நானே ஜாக்கிரதையாகச் சொன்னேன், அவர் எம்.பி.யாகவும் ஆகியிருக்கலாம். அல்லது வேறு ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்றாலும் செய்திருக்கலாம். அவருடைய பிரைவேட் ரைட் பாதிக்கப்படுகிறதே என்பதற்காகத்தான் அந்த ராஜினாமா ஏற்கப்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தினேன்.

(ஆ) சென்னை-செங்கை-அண்ணா மாவட்டங்களிலிருந்து மீன் பிடிக்கச்-சென்றவர்களை ஆந்திரப் பகுதியில் பிடித்து வைத்துள்ளது குறித்து.

திரு. எஸ். திருநாவுக்கரசு: இன்னொரு முக்கியமான பிரச்சினை. சென்னை, மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களிலேயிருந்து மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், விசைப் படகுகள் மூலமாக ஆந்திரப் பகுதியிலே மீன் பிடிக்கச் செல்கிற போது—அங்கே அதற்கு என்று யாரோ ஒரு புரோக்கர் தனியாக இருக்கிறார் போல் தெரிகிறது. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், மொத்தமாக அங்கேயிருக்கிற மீனவர்களை எல்லாம் பிடித்து வைத்துக் கொண்டு, இங்கேயிருந்து ஸ்டீம் போட்டுகள் மூலமாகப் போகிறவர்களைப் பிடித்துக் கொண்டு போய் வழக்குகள் பதிவு செய்கிறார்கள். சமீபத்திலே 22-ம் தேதி, பத்தாவது மாதத்திலே சுமார் 61 பேர்கள் மேலே வழக்கு போட்டிருக்கிறார்கள். சென்னையிலே இருக்கிற விசைப் படகுகளுக்குச் சொந்தக்காரர்கள் செங்கற்பட்டிலே கடற்கரைக்கு ஓரத்திலே இருக்கிற விசைப் படகுகளுக்குச் சொந்தக்காரர்கள் ஆந்திரப் பகுதி செல்கிறார்கள். ஆந்திரப் பகுதியில் உள்ள கடற்கரை ஓரங்களில் அவர்கள் மீன்பிடிக்கிற போது, அந்தப் பகுதியிலே தான், நெல்லூர் மாவட்டத்திலே தான் அந்த கேசைப் போட்டிருக்கிறார்கள்—61 பேர்கள் மீது,வழக்கு போட்டிருக்கிறார்கள்

அது மட்டுமல்ல, 2 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கட்டினால்தான் பிடித்த அந்த 10 படகுகளை விடுவோம் என்று சொல்லி, அந்த 2 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கட்டியதற்கான சலானும் இதிலே இருக்கிறது. இதையும் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு

1989 நவம்பர் 2]

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.பி.யாக ஆகியிருப்பார் என்று நான் சொன்னதாகச் சொன்னால் நான் சீட் கொடுக்கிற மாதிரி ஆகிவிடும். எம்.பி.யாக ஆனாலும் ஆகியிருப்பார் என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த நிலையில் நீங்கள் இல்லை என்பதும் எங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். (சிரிப்பு).

10-30 மணி

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் நானே ஜாக்கிரதையாகச் சொன்னேன், அவர் எம்.பி.யாகவும் ஆகியிருக்கலாம். அல்லது வேறு ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்றாலும் செய்திருக்கலாம். அவருடைய பிரைவேட் ரைட் பாதிக்கப்படுகிறதே என்பதற்காகத்தான் அந்த ராஜினாமா ஏற்கப்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தினேன்.

(ஆ) சென்னை-செங்கை-அண்ணா மாவட்டங்களிலிருந்து மீன் பிடிக்கச்-சென்றவர்களை ஆந்திரப் பகுதியில் பிடித்து வைத்துள்ளது குறித்து.

திரு. எஸ். திருநாவுக்கரசு: இன்னொரு முக்கியமான பிரச்சினை. சென்னை, மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களிலேயிருந்து மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், விசைப் படகுகள் மூலமாக ஆந்திரப் பகுதியிலே மீன் பிடிக்கச் செல்கிறபோது—அங்கே அதற்கு என்று யாரோ ஒரு புரோக்கர் தனியாக இருக்கிறார் போல் தெரிகிறது. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், மொத்தமாக அங்கேயிருக்கிற மீனவர்களை எல்லாம் பிடித்து வைத்துக் கொண்டு, இங்கேயிருந்து ஸ்டீம் போட்டுகள் மூலமாகப் போகிறவர்களைப் பிடித்துக் கொண்டு போய் வழக்குகள் பதிவு செய்கிறார்கள். சமீபத்திலே 22-ம் தேதி, பத்தாவது மாதத்திலே சுமார் 61 பேர்கள் மேலே வழக்கு போட்டிருக்கிறார்கள். சென்னையிலே இருக்கிற விசைப் படகுகளுக்குச் சொந்தக்காரர்கள் செங்கற்பட்டிலே கடற்கரைக்கு ஓரத்திலே இருக்கிற விசைப் படகுகளுக்குச் சொந்தக்காரர்கள் ஆந்திரப் பகுதி செல்கிறார்கள். ஆந்திரப் பகுதியில் உள்ள கடற்கரை ஓரங்களில் அவர்கள் மீன்பிடிக்கிற போது, அந்தப் பகுதியிலே தான், நெல்லூர் மாவட்டத்திலே தான் அந்த கேசைப் போட்டிருக்கிறார்கள்—61 பேர்கள் மீது, வழக்கு போட்டிருக்கிறார்கள்

அது மட்டுமல்ல, 2 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கட்டினால்தான் பிடித்த அந்த 10 படகுகளை விடுவோம் என்று சொல்லி, அந்த 2 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கட்டியதற்கான சலானும் இதிலே இருக்கிறது. இதையும் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு

வருகிறேன். வழக்கு போட்டதினுடைய பட்டியலும் இதில் இருக்கிறது. இது தொடர் நிகழ்ச்சியாக, பணம் பறிக்கிற முயற்சியோடும், நம்முடைய பகுதியிலேயிருந்து தமிழ் நாட்டிலேயிருந்து மீன் பிடிக்கப் போகிற மீனவர்களுக்கு, விசைப் படகுச், சொந்தக்காரர்களுக்கு தொல்லை கொடுக்கிற நோக்கத்தோடும் ஆந்திரப் பகுதியிலே நெல்லூர் மாவட்டத்திலேயும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலேயும் இது நடப்பதாகத் தெரிகிறது. எனவே இது குறித்து உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதலமைச்சரோடும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடும் பேசி, நம்முடைய பகுதி மீனவர்களுக்கு, விசைப் படகுச் சொந்தக்காரர்களுக்கு, அந்தத் தொல்லைகளிலேயிருந்து நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு பிரச்சினையை ஏற்கெனவே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் இந்த மன்றத்திலே எழுப்பியதாக எனக்கு நினைவு. அப்போது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஆந்திர மாநிலத்திற்கு நம்முடைய போலீஸ் அதிகாரிகள் அனுப்பப்பட்டு, அவ்வாறு அங்கே பிடித்து வைக்கப்பட்டவர்களை மீட்டு வந்திருக்கிறார்கள். இப்போது சொல்லப்படுகிற இந்தச் செய்தியிலும் இரண்டு அரசுகளுக்கும் சம்பந்தம் இல்லாத ஒரு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஆந்திர அரசுக்கும் தெரியாத வகையிலே, சில பேர்கள் கோஷ்டியாகச் சேர்ந்து கொண்டு, தமிழக மீனவர்கள் அந்த வட்டாரத்திற்குச் செல்கிற நேரத்திலே அவர்களைப் பிடித்து இழுத்துச் சென்று, ஏதோ பணயக் கைதிகளைப் போல் வைத்து பணம் பெறுகிறார்கள் என்பது உள்ளபடியே ஒரு பெரிய சமுதாயக் குற்றம். இதை ஆந்திர அரசும் அனுமதிக்காது என்று நான் நம்புகிறேன். ஏற்ற நடவடிக்கைகள் தமிழக அரசின் சார்பாக எடுக்கப்படும். ஆந்திர முதலமைச்சரோடும் நான் இது குறித்து பேசி, உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) போலீஸ் கமிஷன் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு 1969-லே ஒரு போலீஸ் கமிஷனைப் போட்டதற்குப் பின்னாலே, 20 ஆண்டுகளுக்குப் பின்னால் இப்போதும் ஒரு போலீஸ் கமிஷனை, நமது திரு. சபாநாயகம் அவர்களுடைய தலைமையிலே 6 பேர்களைக் கொண்ட குழுவாக அமைத்திருக்கிறது. இந்தக் குழு இந்தப் போலீஸ் இலாக்காவை சீரமைக்கின்ற முழுப் பொறுப்பையும், அதற்கான வழிவகைகளைக் காண்கின்ற பொறுப்பையும் ஏற்றிருக்கிறது. வீட்டுவசதி, பொது நலன், போலீசினுடைய அதிகாரம்,

வருகிறேன். வழக்கு போட்டதினுடைய பட்டியலும் இதில் இருக்கிறது. இது தொடர் நிகழ்ச்சியாக, பணம் பறிக்கிற முயற்சியோடும், நம்முடைய பகுதியிலேயிருந்து தமிழ் நாட்டிலேயிருந்து மீன் பிடிக்கப் போகிற மீனவர்களுக்கு, விசைப் படகுச், சொந்தக்காரர்களுக்கு தொல்லை கொடுக்கிற நோக்கத்தோடும் ஆந்திரப் பகுதியிலே நெல்லூர் மாவட்டத்திலேயும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலேயும் இது நடப்பதாகத் தெரிகிறது. எனவே இது குறித்து உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதலமைச்சரோடும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடும் பேசி, நம்முடைய பகுதி மீனவர்களுக்கு, விசைப் படகுச் சொந்தக்காரர்களுக்கு, அந்தத் தொல்லைகளிலேயிருந்து நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு பிரச்சினையை ஏற்கெனவே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் இந்த மன்றத்திலே எழுப்பியதாக எனக்கு நினைவு. அப்போது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஆந்திர மாநிலத்திற்கு நம்முடைய போலீஸ் அதிகாரிகள் அனுப்பப்பட்டு, அவ்வாறு அங்கே பிடித்து வைக்கப் பட்டவர்களை மீட்டு வந்திருக்கிறார்கள். இப்போது சொல்லப் படுகிற இந்தச் செய்தியிலும் இரண்டு அரசுகளுக்கும் சம்பந்தம் இல்லாத ஒரு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஆந்திர அரசுக்கும் தெரியாத வகையிலே, சில பேர்கள் கோஷ்டியாகச் சேர்ந்து கொண்டு, தமிழக மீனவர்கள் அந்த வட்டாரத்திற்குச் செல்கிற நேரத்திலே அவர்களைப் பிடித்து இழுத்துச் சென்று, ஏதோ பணயக் கைதிகளைப் போல் வைத்து பணம் பெறுகிறார்கள் என்பது உள்ளபடியே ஒரு பெரிய சமுதாயக் குற்றம். இதை ஆந்திர அரசும் அனுமதிக்காது என்று நான் நம்புகிறேன். ஏற்ற நடவடிக்கைகள் தமிழக அரசின் சார்பாக எடுக்கப்படும். ஆந்திர முதலமைச்சரோடும் நான் இது குறித்து பேசி, உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) போலீஸ் கமிஷன் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு 1969-லே ஒரு போலீஸ் கமிஷனைப் போட்டதற்குப் பின்னாலே, 20 ஆண்டுகளுக்குப் பின்னால் இப்போதும் ஒரு போலீஸ் கமிஷனை, நமது திரு. சபாநாயகம் அவர்களுடைய தலைமையிலே 6 பேர்களைக் கொண்ட குழுவாக அமைத்திருக்கிறது. இந்தக் குழு இந்தப் போலீஸ் இலாக்காவை சீரமைக்கின்ற முழுப் பொறுப்பையும், அதற்கான வழிவகைகளைக் காண்கின்ற பொறுப்பையும் ஏற்றிருக்கிறது. வீட்டுவசதி, பொது நலன், போலீசினுடைய அதிகாரம்,

கடமை, சட்டம்-ஒழுங்கு, பராமரிப்பு, குற்றங்களைத் தடுத்தல், கண்டுபிடித்தல், போக்குவரத்து, மொத்தத்திலே இந்த இலாக்காவை நவீனப்படுத்துதல், தகவல் தொடர்பு, ஆள் எடுத்தல், பயிற்சி கொடுத்தல், பதவி உயர்வு, நீதிமன்றத்திற்கும் போலீசுக்கும் உள்ள உறவு, மக்களுக்கும் போலீசுக்கும் உள்ள உறவு, தொழிலாளர்களுக்கும் போலீசுக்கும், மாணவர்களுக்கும் போலீசுக்கும், பத்திரிகையாளருக்கும் போலீசுக்கும் உள்ள உறவு, இப்படி பல்வேறுபட்ட பிரச்சினைகளிலே தன்னுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று இந்தக் கமிஷன் அரசாங்கத்தாலே கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறது.

அதோடு கூட இன்னும் அரசாங்கம் ஏதாவது பிரச்சினையை ஆராய வேண்டும் என்று விரும்பினால், அதையும் அது ஆயும் என்றும், கமிஷனே தேவை எனக் கருதினால், அது எது தேவை என்று கருதுகிறதோ, அதை ஆயும் என்றும், இந்த டெர்ம்ஸ் ஆப் ரெபரன்சிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மிக முக்கியமான காரியத்திலே இந்த அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏன் என்றால், போலீஸ் இலாக்காவிலே பல்வேறுவிதமான சிரமங்கள் இருக்கின்றன, போலீஸ்காரர்களுக்கு என்பதோடு கூட, போலீஸ் இலாக்காவினாலே பொது மக்களுக்கும் சிரமம் இருக்கிறது என்பதையும் நாம் அறிவோம்.

அண்மையிலே கூட ஒரு வழக்கறிஞரை இரவு நேரத்திலே.... (மணியடிக்கப்பட்டது). வழக்கறிஞர்களுக்கும், போலீஸ் இலாக்காவிற்கும் என்ன தொடர்பு இருக்க வேண்டும், நீதிமன்றத்திற்கும் போலீஸ் இலாக்காவிற்கும் என்ன உறவு இருக்க வேண்டும் என்பதை எல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கிறபோது, ஒரு பெரும் பணி திரு. சபாநாயகம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் ஒரு வருடத்திற்குள்ளே அவர்கள் அந்த ரிப்போர்ட்டைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு இருந்து, இப்போதே 5 மாதம் ஆகிவிட்டது.

10-35 மணி

பொது மக்களுடைய கருத்தைக் கூட இன்னும் கேட்டு அறியவில்லை. மாணவர்கள், தொழிலாளர்கள், வாகன ஓட்டிகள்—ஏனென்றால் போக்குவரத்து என்றால் இவைகள் எல்லாம் வரும்—நம்மைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் இவர்களுடைய கருத்துக்களை எல்லாம் கூட அறிய வில்லை. போலீஸ் இலாக்கா செம்மைப்பட வேண்டும் என்பதும் போலீஸ் இலாகாவினால் மக்களுடைய நலன் செம்மைப்பட வேண்டும் என்பதும் அரசாங்கத்தினுடைய குறிக்கோளாக இருக்கின்ற காரணத்தாலே, 5 மாதங்கள் ஆகியும் இது பொதுமக்களுக்கு விரிவாகத் தெரிவிக்கப்பட்டு, பொது மக்களுடைய கருத்துக்கள் சில குழுக்களுடைய கருத்துக்கள், மாணவ அமைப்புகளுடைய கருத்துக்கள், தொழிற்சங்கங்களுடைய கருத்துக்கள் எல்லாம்

கேட்கப்படவில்லையே, இது எந்த நிலையில் இருக்கிறது. ஓராண்டு காலத்திற்குள் அது முடிக்கப்பட்டு விடுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர், இங்கே எடுத்துக் காட்டியதைப் போல 1969-ஆம் ஆண்டில் முதலமைச்சர் பொறுப்பில் நான் இருந்த அந்தக் காலக் கட்டததில் காவல் துறை குறித்து ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் நூற்றுக்கும் மேற்பட்டவைகள் உடனடியாக செயல்படுத்தப் பட்டன என்பதை இந்த மாமன்றம் மிக நன்றாக அறியும். பின்னர், 20 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அத்தகைய காவல் துறை குழு, போலீஸ் கமிஷன் ஒன்று, ஏற்கெனவே இங்கே தலைமைச் செயலாளராகப் பணியாற்றிய திரு. சபா நாயகம், ஐ.ஏ.எஸ். அவர்களுடைய தலைமையிலே அமைக்கப் பட்டு, 5 மாத காலமாக அது நல்ல முறையிலே இயங்கி வருகிறது.

அதனுடைய பூர்வாங்க வேலைகள் அனைத்தும் முடிவுற்று முக்கியமான அதிகாரிகளைச் சந்தித்து அவர்களிடத்திலே இவர்கள் பெற வேண்டிய விவரங்களை எல்லாம் பெற்றிருக் கிறார்கள். குழுவினுடைய தலைவர் திரு. சபாநாயகம் அவர்கள் போலீஸ் துறையினுடைய அமைச்சராகவும் நான் இருக்கிற காரணத்தால், என்னையும் வாரத்திற்கு ஒரு முறையோ, இரண்டு வாரத்திற்கு ஒரு முறையோ சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெற்று, நானும் அவரும் இது குறித்து கலந்துரையாடுகின்ற அந்த நிகழ்ச்சிகளும் இடையிலே நடைபெற்றிருக்கின்றன.

நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, இந்தப் பிரச்சினைகள் குறித்து, 'குவஸ்டினர்' அதாவது கேள்விப் பட்டியல் தயாரித்து பல்வேறு குழுக்கள், பொதுமக்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் போன்றவர்களை அணுகி, அவர்களிடத்திலே விடைகளை, விளக்கங்களை இந்தக் குழு பெற்றிருக்கிறதா என்ற அவரு டைய ஐயப்பாட்டிற்கு நான் தருகிற பதில், அதற்கான கேள்விப் பட்டியல் எல்லாம் தயாராகி விட்டது. அவைகளைப் பத்திரிகை களிலே விளம்பரப்படுத்தி, அவரவர்களை அணுகி நேரிடையாகக் கேட்பது ஒன்று, அடுத்து இன்னொரு முறையாக, ஏடுகளிலே அவைகளையெல்லாம் விளம்பரப்படுத்தி, சந்திக்க இயலாத வாய்ப்பற்றுப் போயிருக்கிற பொதுமக்கள் கூட தங்களுடைய கருத்துக்களைக் கடிதங்கள் மூலமாக அந்தக் குழுவிற்கு அனுப்பு கிற ஒரு முயற்சியை மேற்கொள்ளலாம் என்று அந்தக் குழு வினுடைய தலைவர் திரு. சபாநாயகம் அவர்கள் விரும்பிய தற்கு ஏற்ப அதற்கான செலவுகளையும் அரசு ஏற்றுக் கொள்ளத் தயார் என்று அவர்களுக்கு பதில் அனுப்பப்பட்டு இருக்கிறது. விரைவிலே அத்தகைய கேள்விகள் ஏடுகள் மூலமாக

வெளிவரும். அவரவர்களையும் அணுகிக் கேட்கிற அந்த முறையும் பின்பற்றப்படும்.

எப்படியும் ஓர் ஆண்டு காலத்திற்குள்ளாக இந்தக் குழுவின் பணிகள் நிறைவேற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் போனால் ஓரிரு மாதங்கள் அதிகமாகக் கூடும். 20 ஆண்டு காலமாக இடையில் எந்தக் குழுவும் காவல் துறைக்காக இல்லாது இருந்த சூழ்நிலையில், இப்போது மீண்டும் ஒரு குழு அமைக்கப்பட்டு அதனுடைய பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படும்போது, ஓரிரு மாதங்கள் கால தாமதம் ஆனாலும் பரவாயில்லை என்ற அளவிலே அந்தக் குழு செயல்படுகிறது. அதற்கு அரசு ஒத்துழைப்பாக இருந்து வருகிறது என்ற விளக்கத்தையும் நான் தருகிறேன்.

(ஈ) அத்தியாவசியப் பொருள்களின் தேவையை உடனடியாகப் பூர்த்தி செய்ய வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, உணவு நிலைமையினுடைய தீவிரத் தன்மையை நேற்றைய தினம் இந்த அவையிலே எடுத்துக் காட்டி ஒரு தீர்மானத்தை இந்த அவையின் சார்பாக அரசு கொண்டு வந்து நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பி நமக்கு உடனடியாக 80 ஆயிரம் டன் அரிசியும், 33 ஆயிரம் டன் சர்க்கரையும், 13,500 டன் பாமாயிலும் கிடைப்பதற்கு மத்திய அரசை வேண்டுகிற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர கேட்டு இருந்தேன். அதை அரசு கொண்டு வருமா இன்று என்று அறிய விரும்புகிறேன்.

10-40 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சில நேரங்களில் தீர்மானங்கள் எழுதப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டால்தான் அது தீர்மானம் என்று பொருள் இல்லை. நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். விருகம்பாக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாடு 1966 ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்றபோது அண்ணா அவர்கள் பேச எழுந்தார்கள். அந்த மாநாட்டிலே என்ன தீர்மானம் என்பதை யாரும் எழுதிப்படிக்க வில்லை. இப்போது அண்ணா அவர்கள் பேசுவது தான் இந்த மாநாட்டின் தீர்மானம் என்று அண்ணா பேசுவதற்கு முன்பு அறிவிக்கப்பட்டது. அந்தப் பேச்சே தீர்மானம் ஆயிற்று. அதே போல இந்த மாமன்றத்திலே நேற்றைய தினம் நம்முடைய திருநாவுக்கரசு, ரமணி, நம்முடைய வீராசாமி, நான், இடையிலே இலக்கியச் செல்வர் குமரி அனந்தன்—இவர்கள் எல்லாம் பேசியவை தான் இந்த மாமன்றத்தின் தீர்மானம் என்ற வகையிலே இதை மத்திய அரசு எண்ணிப் பார்த்து உடனடியாக நம்முடைய தேவைகளை நிறைவு செய்யும் என்று எதிர்பார்ப்போமாக.

வெளிவரும். அவரவர்களையும் அணுகிக் கேட்கிற அந்த முறையும் பின்பற்றப்படும்.

எப்படியும் ஓர் ஆண்டு காலத்திற்குள்ளாக இந்தக் குழுவின் பணிகள் நிறைவேற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் போனால் ஓரிரு மாதங்கள் அதிகமாகக்கூடும். 20 ஆண்டு காலமாக இடையில் எந்தக் குழுவும் காவல் துறைக்காக இல்லாது இருந்த சூழ்நிலையில், இப்போது மீண்டும் ஒரு குழு அமைக்கப்பட்டு அதனுடைய பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படும்போது, ஓரிரு மாதங்கள் கால தாமதம் ஆனாலும் பரவாயில்லை என்ற அளவிலே அந்தக் குழு செயல்படுகிறது. அதற்கு அரசு ஒத்துழைப்பாக இருந்து வருகிறது என்ற விளக்கத்தையும் நான் தருகிறேன்.

(ஈ) அத்தியாவசியப் பொருள்களின் தேவையை உடனடியாகப் பூர்த்தி செய்ய வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, உணவு நிலைமையினுடைய தீவிரத் தன்மையை நேற்றைய தினம் இந்த அவையிலே எடுத்துக் காட்டி ஒரு தீர்மானத்தை இந்த அவையின் சார்பாக அரசு கொண்டு வந்து நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பி நமக்கு உடனடியாக 80 ஆயிரம் டன் அரிசியும், 33 ஆயிரம் டன் சர்க்கரையும், 13,500 டன் பாமாயிலும் கிடைப்பதற்கு மத்திய அரசை வேண்டுகிற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர கேட்டு இருந்தேன். அதை அரசு கொண்டு வருமா இன்று என்று அறிய விரும்புகிறேன்.

10-40 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சில நேரங்களில் தீர்மானங்கள் எழுதப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டால்தான் அது தீர்மானம் என்று பொருள் இல்லை. நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். விருகம்பாக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாடு 1966 ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்றபோது அண்ணா அவர்கள் பேச எழுந்தார்கள். அந்த மாநாட்டிலே என்ன தீர்மானம் என்பதை யாரும் எழுதிப்படிக்க வில்லை. இப்போது அண்ணா அவர்கள் பேசுவது தான் இந்த மாநாட்டின் தீர்மானம் என்று அண்ணா பேசுவதற்கு முன்பு அறிவிக்கப்பட்டது. அந்தப் பேச்சே தீர்மானம் ஆயிற்று. அதே போல இந்த மாமன்றத்திலே நேற்றைய தினம் நம்முடைய திருநாவுக்கரசு, ரமணி, நம்முடைய வீராசாமி, நான், இடையிலே இலக்கியச் செல்வர் குமரி அனந்தன்—இவர்கள் எல்லாம் பேசியவை தான் இந்த மாமன்றத்தின் தீர்மானம் என்ற வகையிலே இதை மத்திய அரசு எண்ணிப் பார்த்து உடனடியாக நம்முடைய தேவைகளை நிறைவு செய்யும் என்று எதிர்பார்ப்போமாக.

(உ) சொந்த மாவட்டங்களில் கிராம நிர்வாக அலுவலர்கள் பணியாற்ற ஏற்பாடு.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்ட நேரத்தில் அவர்கள் சொந்த பகுதிகளிலே பணியாற்றக் கூடாது என்ற நிலைமை இருந்தது. ஆனால் சென்ற ஆண்டு அவர்களுடைய சொந்தப் பகுதிகளில் சொந்த ஃபிர்க்கா, சொந்த வட்டாரத்தில் பணியாற்றலாம் என்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டதற்குப் பின்னர் பெரும்பாலான மாவட்டங்களில் இன்றைய தினம் அவர்கள் சொந்த ஃபிர்க்காக்களிலே, வட்டாரங்களிலே பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கோவை மாவட்டத்திலே மட்டும் இன்று வரையில் அந்த ஆணை அமுல்படுத்தப்படவில்லை. பலகாலமாக கிராம நிர்வாக அதிகாரிகள் தங்களுடைய கோரிக்கையாக அதை வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, சென்ற இரண்டு தினங்களுக்கு முன்னால் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்னால் அவர்கள் மறியல் செய்திருக்கிறார்கள். அதிலே 125 பேர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டதாக நான் அறிகிறேன். அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசாங்கம் அமல்படுத்த வேண்டுமென்று மற்ற மாவட்டங்களில் இருப்பதைப் போல கோவை மாவட்டத்தில் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவதாக பொதுப்பணித் துறை....... மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொது சொற்பொழிவு இல்லையே!

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானம் மிகு உறுப்பினர் அருமைத் தம்பி திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மிகுந்த உரிமையுடன் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: அவர் கேட்ட கேள்வியைப் பற்றிய தகவல் எனக்கு இல்லை. அவர் உங்களுக்கு ஏதாவது கவன ஈர்ப்புத் தீர்மானம் என்ற முறையிலோ ஒத்தி வைப்புத் தீர்மானம் என்ற முறையிலோ எழுதியனுப்பியிருக்கிறாரா என்பதும் எனக்குத் தெரியாது. தெரியாத நிலையில் எப்படி இதை கேட்கிறார் என்றும் எனக்கு புரியவில்லை. மற்றைய மாவட்டங்களில் எல்லாம் ஒழுங்காக நடைபெற்றன என்று சொல்லி விட்டு கோவை மாவட்டத்தில் மட்டும் என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். உங்களுக்குத் தெரிந்த

உண்மை என்று நான் எடுத்துக் கொள்ளலாம், ஆனால் விவரம் எனக்குத் தெரியாது. விவரம் கிடைத்ததற்குப் பிறகு உடனடித் தகவல் தரப்படும். சட்டப் பேரவை இல்லாவிட்டாலும் எழுத்து மூலமாவது தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு மேல் கேள்வி இல்லை.

(ஊ) ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வூதியத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது குறித்து.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் தந்த இந்த வாய்ப்பின் மூலம் ஒரு முக்கியமானப் பிரச்சினையை நமது அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். கடந்த அரசு ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவி சிறப்புத் திட்டம் என்கிற ஒரு திட்டத்தை அறிவித்திருந்தது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் சிறு விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், நெசவாளர்கள்; சிறு வணிகர்கள் மாதம் ரூபாய் 10 கட்டி, ஆயுள் காப்பீட்டுக் கழகமும் தமிழக அரசும் சேர்ந்து நடத்திய இந்த ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய் திட்டத்திலே இறந்தாலும், ஓய்வு பெற்றாலும் 5,000 ரூபாம் பெற்று வந்தார்கள். ஆனால் இன்றைய இந்த அரசு 1—8—1989 முதல் இந்தத் திட்டத்தை நிறுத்தி விட்டதாக அறிவித்து விட்டது.

என்னுடைய சட்ட மன்றத் தொகுதியில் மட்டும் ஏறத் தாழ 4,000 பேருக்கு மேல் இந்தத் திட்டத்திலே சேர்ந்து பணம் கட்டியிருக்கிறார்கள். கடந்த முறை நமது விவசாயத் துறை அமைச்சர் மாண்புமிகு கோ. சி. மணி அவர்கள் கூட எங்கள் பகுதிக்கு வந்திருந்த போது அந்தப் பகுதி விவசாயிகள், அவர்களைக் கூட்டமாகச் சென்று சந்தித்து இந்தத் திட்டத்தை மீண்டும் நடத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

உதாரணமாக ஒரு சீட்டுக் கம்பெனியிலே சீட்டு நடத்தி அதைப் பாதியிலே விட்டு விட்டால் அதை மோசடி சீட்டுக் கம்பெனி என்று சொல்கிறோம்.**

Whether the Government can go back from the promise mad: already to the public.

10 ரூபாய் சந்தாத் திட்டத்தில் சேர்த்து, அதற்கான கார்டுகளும் அச்சடித்துக் கொடுக்கப்பட்டு, உரிமையும் கொடுக்கப் பட்டிருந்த போது திடீரென்று ஒரு அரசு ஆணை குறிப்பின் மூலம்அந்தத் திட்டத்தை விட்டு விட முடியுமா? அதை நான் கடந்த முறை முதலமைச்சர் அவர்கள் நெல்லைக்கு வந்திருந்த போது (மணியடிக்கப் பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1989 நவம்பர் 2] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

உண்மை என்று நான் எடுத்துக் கொள்ளலாம், ஆனால் விவரம் எனக்குத் தெரியாது. விவரம் கிடைத்ததற்குப் பிறகு உடனடித் தகவல் தரப்படும். சட்டப் பேரவை இல்லாவிட்டாலும் எழுத்து மூலமாவது தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு மேல் கேள்வி இல்லை.

(ஊ) ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வூதியத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது குறித்து.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் தந்த இந்த வாய்ப்பின் மூலம் ஒரு முக்கியமானப் பிரச்சினையை நமது அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். கடந்த அரசு ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவி சிறப்புத் திட்டம் என்கிற ஒரு திட்டத்தை அறிவித்திருந்தது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் சிறு விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், நெசவாளர்கள்; சிறு வணிகர்கள் மாதம் ரூபாய் 10 கட்டி, ஆயுள் காப்பீட்டுக் கழகமும் தமிழக அரசும் சேர்ந்து நடத்திய இந்த ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய் திட்டத்திலே இறந்தாலும், ஓய்வு பெற்றாலும் 5,000 ரூபாம் பெற்று வந்தார்கள். ஆனால் இன்றைய இந்த அரசு 1—8—1989 முதல் இந்தத் திட்டத்தை நிறுத்தி விட்டதாக அறிவித்து விட்டது.

என்னுடைய சட்ட மன்றத் தொகுதியில் மட்டும் ஏறத்தாழ 4,000 பேருக்கு மேல் இந்தத் திட்டத்திலே சேர்ந்து பணம் கட்டியிருக்கிறார்கள். கடந்த முறை நமது விவசாயத் துறை அமைச்சர் மாண்புமிகு கோ. சி. மணி அவர்கள் கூட எங்கள் பகுதிக்கு வந்திருந்த போது அந்தப் பகுதி விவசாயிகள், அவர்களைக் கூட்டமாகச் சென்று சந்தித்து இந்தத் திட்டத்தை மீண்டும் நடத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

உதாரணமாக ஒரு சீட்டுக் கம்பெனியிலே சீட்டு நடத்தி அதைப் பாதியிலே விட்டு விட்டால் அதை மோசடி சீட்டுக் கம்பெனி என்று சொல்கிறோம்.**

Whether the Government can go back from the promise mad: already to the public.

10 ரூபாய் சந்தாத் திட்டத்தில் சேர்த்து, அதற்கான கார்டுகளும் அச்சடித்துக் கொடுக்கப்பட்டு, உரிமையும் கொடுக்கப்பட்டிருந்த போது திடீரென்று ஒரு அரசு ஆணை குறிப்பின் மூலம்அந்தத் திட்டத்தை விட்டு விட முடியுமா? அதை நான் கடந்த முறை முதலமைச்சர் அவர்கள் நெல்லைக்கு வந்திருந்த போது (மணியடிக்கப் பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டீர்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் விளக்கம் அளிக்க இருக்கிறார். ஆனால் நம்முடைய நண்பர் ஆல்போன்ஸ் அவர்கள் பேசும் போது ** அவ்வளவு சரியானதாக எனக்குத் தெரியவில்லை. அவருக்கும் கூட நினைத்துப்பார்த்தால் சுவைக்காது என்று கருதுகிறேன். அதை அவைக் குறிப்பிலிருந்து அகற்றுவது நல்லது.

10-45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆல்போன்ஸ் அவர்களுக்கு ஒரு செய்தியைக் குறித்து விளக்கம் பெறுவதற்காகத் தான் வாய்ப்புத் தரப்படுகிறது. குற்றம் சாட்டுவதற்காக வாய்ப்புத் தரப் படவில்லை. குற்றச் சாட்டுக்கள், உவமைகள் மோசமாக வரும்போது, இவை எல்லாவற்றுக்கும் பொருந்தும் என்பதால், அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் உட்காரலாம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வூதியத் திட்டம் பற்றிப் பேசி, அது தொடர்பாக வசூலிக்கப்பட்ட ரூபாய் 10 திரும்பத் தரப்படவில்லை. என்பதை இந்த மன்றத்திலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். கடந்த ஆட்சியில், விவசாயத் தொழிலாளர்கள் குறைந்த நில உடைமையாளர்கள், கிராமக் கைவினைஞர்கள், அது போன்று சுமை தூக்குவோர், கை வண்டி இழுப்போர் ஆகியோர்களுக்கு ஒரு திட்டம் 1984-ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டது. அந்தத் திட்டத்தினுடைய ஷரத்தின்படி, ரூபாய் 3,500-க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்கள் இறந்து விடுவார்களேயானால், அவர்களுக்கு 10,000 ரூபாய் நஷ்டஈடு வழங்குவது என்றும், காயம்பட்டு விடுவார்களேயானால், அவர்களுக்கு 5,000 ரூபாய் வழங்குவது என்றும், விபத்து உதவித் திட்டம் என்ற ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்தோடு ஈட்டுறுதியுடன் கூடிய ஓய்வூதியத் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. அது 1—8—1989ல் நிறுத்தி வைக்கப் பட்டது. அதற்குக் காரணம், 1989-ஆம் ஆண்டு மே மாதம், இந்த அரசு, அந்த சிதறிக் கிடந்த திட்டங்களை யெல்லாம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க நீக்கப் பெற்றது.

ஒருங்கிணைத்து, ஒரு வழிப் பாதையாக, அதிலே சொல்லப் பட்டிருக்கின்ற அனைத்து ஷரத்துக்களையும் உள்ளடக்கி புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

அந்த அடிப்படையில், இறந்தவர்களுக்கும், கடுங்காயம் அடைந்தவர்களுக்கும் ரூபாய் 10,000 வழங்குவது என்றும், காயம் பட்டவர்களுக்கு ரூபாய் 5,000 வழங்குவது என்றும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அந்தத் திட்டத்தின் மூலமாக என்ன இலாபம், கடந்த காலத்திலே இருந்த திட்டங்களை விட இந்தத் திட்டத்திலே என்ன கூடுதல் பயன் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆல்போன்ஸ் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சில விளக்கங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அரசு அறிமுகப்படுத்திய இந்தத் திட்டத்தில் வருமான உச்ச வரம்பு இல்லை. இரண்டாவது, பணியிலே ஈடுபட்டு இருக்கின்ற போது இறந்தால் தான் கடந்த காலத் திட்டத்திலே பயன் உண்டு. இப்போது அறிமுகப் படுத்தியிருக்கின்ற இந்தத் திட்டத்தில் ஒருவர் பணியிலே ஈடுபட்டு இருக்கின்றபோது இறந்தாலும், பணியிலே ஈடுபடாமல் இருக்கின்றபோது இறந்தாலும், இந்தத் திட்டம் அவருக்கும் பொருந்தும் என் பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, பயனாளிகள் கடந்த காலத் திட்டத்தில் ரூபாய் 10 செலுத்தியாக வேண்டும். இப்போது பயனாளிகள் எந்த வித மான சந்தாவும் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதை யும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இந்த மூன்று நன்மைகள் கடந்த காலத் திட்டத்தை விட கூடுதலாக இருக்கின்ற காரணத்தினாலே தான், கடந்த காலத் திட்டம் 1—8—1989இலே நிறுத்தி வைக்கப்பட்டு, புதிய திட்டம் இப்போது அமல்படுத்தப்படுகிறது என்பதையும் தெரி விக்க விரும்புகிறேன்.

அடுத்து, 1989-ஆம் ஆண்டு மே மாதம் இன்னொரு திட்டம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களாலே அறிமுகப் படுத்தப்பட்டது. அந்தத் திட்டம் தான் குடும்பத் துயர் துடைப்புத் திட்டம் ஆகும். குடும்பத் தலைவர் இறந்து விடுவாரேயானால், 5,000 ரூபாய்க்கு உட்பட்ட வரு மானம் உள்ள குடும்பத்திலே குடும்பத் தலைவர் இறந்து விடுவாரேயானால், 2,000 ரூபாய் வழங்குவது என்கின்ற திட்ட மும், இப்போது அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டங்களின் காரணமாகத் தான் கடந்த காலத்திலே இருந்த அந்த ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வூதியத் திட்டமும், மற்றைய திட்டங்களும் நிறுத்தி வைக்கப்பட்டன என்று தெரிவிக்கின்ற அதே நேரத்தில், கடந்த காலத்திலே வசூலிக்கப்பட்ட சந்தாத் தொகையான ரூபாய் 10-ஐயும் மீண்டும்

அவர்களுக்கு, கூட்டு வட்டியுடன் வழங்குவதற்கான பணிகள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். வெகு விரைவில் நிச்சயமாக அவர்களுக்குப் பணம் மானிய மாக வழங்கப்படும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டி, அமர்கிறேன்.

10-50 மணி

(எ) மேட்டூர் அலுமினியத் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து.

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூரில் இருக்கும் மெட்ராஸ் அலுமினியம் தொழிற்சாலையில் போனஸ் கோரி 26 ஆம் தேதி முதல் கால வரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள். அது தொடர்கிறது. அவர்கள் 10 ஆம் தேதி பொது வேலை நிறுத்தம் என்று அறிவித்து ஒரு பதட்ட நிலை நிலவுகிறது. அதைத் தவிர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார் களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீரங்கன் அவர்கள் கூறிய அந்தப் பிரச்சினை குறித்து இங்கே தொழிலாளர் அலுவலர் 31 ஆம் தேதி பேச்சு வார்த்தை நடத்தி னார். பேச்சு வார்த்தையில் முடிவு காணாத சூழ்நிலையில் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. வருகிற 10 ஆம் தேதிக்குள் அந்தப் பிரச்சினை நிச்சயமாக முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஏ) சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சில சலுகைகள் அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கின்ற காரணத்தால் ஒருசில பிரச்சினை களை நான் இங்கே கிளப்ப முன்வருகிறேன். (மணியடிக்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பிரச்சினை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனுடைய ஜீவாதாரப் பிரச்சினை : மான பிரச்சினை.

அவர்களுக்கு, கூட்டு வட்டியுடன் வழங்குவதற்கான பணிகள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். வெகு விரைவில் நிச்சயமாக அவர்களுக்குப் பணம் மானியமாக வழங்கப்படும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டி, அமர்கிறேன்.

10-50 மணி

(எ) மேட்டூர் அலுமினியத் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து.

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூரில் இருக்கும் மெட்ராஸ் அலுமினியம் தொழிற்சாலையில் போனஸ் கோரி 26 ஆம் தேதி முதல் கால வரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள். அது தொடர்கிறது. அவர்கள் 10 ஆம் தேதி பொது வேலை நிறுத்தம் என்று அறிவித்து ஒரு பதட்ட நிலை நிலவுகிறது. அதைத் தவிர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீரங்கன் அவர்கள் கூறிய அந்தப் பிரச்சினை குறித்து இங்கே தொழிலாளர் அலுவலர் 31 ஆம் தேதி பேச்சு வார்த்தை நடத்தினார். பேச்சு வார்த்தையில் முடிவு காணாத சூழ்நிலையில் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. வருகிற 10 ஆம் தேதிக்குள் அந்தப் பிரச்சினை நிச்சயமாக முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஏ) சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சில சலுகைகள் அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கின்ற காரணத்தால் ஒருசில பிரச்சினைகளை நான் இங்கே கிளப்ப முன்வருகிறேன். (மணியடிக்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பிரச்சினை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனுடைய ஜீவாதாரப் பிரச்சினை : மான பிரச்சினை.

அவர்களுக்கு, கூட்டு வட்டியுடன் வழங்குவதற்கான பணிகள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். வெகு விரைவில் நிச்சயமாக அவர்களுக்குப் பணம் மானிய மாக வழங்கப்படும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டி, அமர்கிறேன்.

10-50 மணி

(எ) மேட்டூர் அலுமினியத் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து.

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூரில் இருக்கும் மெட்ராஸ் அலுமினியம் தொழிற்சாலையில் போனஸ் கோரி 26 ஆம் தேதி முதல் கால வரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள். அது தொடர்கிறது. அவர்கள் 10 ஆம் தேதி பொது வேலை நிறுத்தம் என்று அறிவித்து ஒரு பதட்ட நிலை நிலவுகிறது. அதைத் தவிர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார் களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீரங்கன் அவர்கள் கூறிய அந்தப் பிரச்சினை குறித்து இங்கே தொழிலாளர் அலுவலர் 31 ஆம் தேதி பேச்சு வார்த்தை நடத்தி னார். பேச்சு வார்த்தையில் முடிவு காணாத சூழ்நிலையில் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. வருகிற 10 ஆம் தேதிக்குள் அந்தப் பிரச்சினை நிச்சயமாக முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஏ) சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சில சலுகைகள் அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கின்ற காரணத்தால் ஒருசில பிரச்சினை களை நான் இங்கே கிளப்ப முன்வருகிறேன். (மணியடிக்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பிரச்சினை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனுடைய ஜீவாதாரப் பிரச்சினை : மான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மானம் தான் ; ஒரு பிரச்சினை தான்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். அதில் ஒன்றையாவது தாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டாமா ?

சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஜீவாதாரப் பிரச்சினை பற்றி இதற்கு முன்னால் நான் சட்ட மன்றத்தில் பேசினேன். அப்படி பேசுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்களாக மிக சாதாரணமான ஏழைத் தொண்டர்கள் எல்லாம் வந்திருக்கிறோம். நாணயம் மிக்க சட்டமன்ற உறுப்பினர்களாக, நேர்மை மிக்க சட்டமன்ற உறுப்பினர்களாக, தூய்மையான சட்டமன்ற உறுப்பினர்களாக, இளைஞர்களாக நிறைய பேர் வந்து இருக் கிறோம். இவர்கள் எல்லாம் தவறு செய்யாமல் நாணயமாக அரசியல் செய்ய வேண்டும் என்று சொன்னால், மக்களை சந்திக்க வேண்டும் என்று சொன்னால் நீங்கள் ஒரு உத்திர வாதத்தை எங்களுக்குக் கொடுத்தால் தான் நாங்கள் செய்ய முடியும். ஸ்டாம்பு எங்களுக்கு வேண்டும் என்று கேட்டோம், கிடைக்கவில்லை ; போன் செலவுக்காவது வேண்டும் என்று கேட்டோம், கிடைக்கவில்லை ; பி.ஏ. ஒருவர் வேண்டும் என்று கேட்டோம், கிடைக்கவில்லை ; டைப்ரைட்டர் ஒன்று வேண்டும் என்று கேட்டோம், கிடைக்கவில்லை ; படி ரூ. 1,550 என்பது இந்த காலத்தில் விலைவாசி ஏற்றத்தில் மிக சாதாரணமான விஷயம். இவைகளை எல்லாம் கேட்டுவிட்டு எல்லோரும் பேசிய பிறகு 200 ரூபாய் மேட்டர் ஆப் 200 ரூப்பீஸ் என்பது பொறாத காரியம். சட்டம் பாஸ் ஆகிவிட்டது நான் இப்போது சொல்லி பிரயோசனம் இல்லை.

ஆகவே, ஏழைத் தொண்டர்களாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் திடீர் என்று இறந்துவிட்டால் யார் எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுவது என்ற ஒரு வினாவை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அன்று திரு. எட்டியப்பன் அவர்கள் இறந்து விட்டார்கள் ; அவருடைய குடும்பம் இன்று ஆதரவு அற்ற நிலை யில் இருக்கிறது. இதேபோன்று பல நூற்றுக்கணக்கான தொண்டர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக இருக் கிறோம். இவர்களுக்கு எல்லாம் ஒரு உத்திரவாதம் வேண்டும். நாங்கள் எல்லாம் வீடு கட்டிக்கொள்ள வேண்டாமா? நான் ஒரு குடிசையில் தான் இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் திரு. நேரு அவர்கள் அதை பார்த்தார்கள், மாண்புமிகு அமைச்சர் டாக்டர் சந்திரசேகரன் அவர்கள் பார்த்தார்கள். ஒரு சாதாரண வாடகை வீட்டில் தான் குடியிருக்கிறேன். இதேபோன்று ஏகப் பட்ட

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஜீவனுக்குள்ள ஆதாரப் பிரச்சினையா ? அல்லது ஜீவன் போன பிறகு உள்ள ஆதாரப் பிரச்சினையா ? (சிரிப்பு)

திரு. ஆர். சிங்காரம் : ஜீவன் போன பிறகு தான். (சிரிப்பு) உங்களுக்கும் சேர்த்து தான் கேட்கிறேன். ஆகவே, ஒரு சாதாரணத் தொண்டனாகிய நான் இறந்து விட்டால்—அரசு ஊழியர்கள் இறந்து விட்டால், மீனவர்கள் இறந்து விட்டால், இன்னும் பல்வேறு வகையானவர்கள் இறந்து விட்டால் பல்வேறு வகையில் இந்த அரசு

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: அமங்கலமாகப் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன் (சிரிப்பு).

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்கூட்டியே பேசிவிட்டால் பிரச்சினை இல்லாமல் இருக்கும். ஏன் என்றால் இறந்து விடுவோமானால் நம்முடைய பேரவைத் தலைவர் ஒரு தீர்மானத்தைப் போட்டு சென்று வா என்று அனுப்பி விடுவார்கள், பிரச்சினை முடிந்து விட்டது. எங்களுடைய குடும்பம் நடு ரோட்டில் இருக்கும். ஆகவே, நாணயமிக்க தொண்டர்களாக நாங்கள் இருக்கவேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக தமிழக முதலமைச்சர் அவர்கள் நாங்கள் இறந்த பிறகு ஒரு லட்சம் ரூபாய் தொகையை இந்த அரசு எங்களுக்கு வழங்கவேண்டும். அப்படி ஒரு சட்டத்தை நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்ற வேண்டும். அதே நேரத்தில் 2 லட்சம் ரூபாய் எங்களுக்குக் கடன் கொடுத்து வீடு கட்டுவதற்கு ஒரு உதவியை இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்தப் பிரச்சினையை தமிழக முதலமைச்சர் அழகாக, நாணயமாக எல்லோருடைய கைத்தட்டல்களுக்கு இணங்க இங்கே அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. சிங்காரம் அவர்கள் நேற்றைக்கு இந்தக் கோரிக்கையை எழுப்பினார். நான் அப்போது அவையில் இல்லை. என்னுடைய அறையில் இருந்தேன். இறங்கி வந்து அதைப்பற்றி நான் விளக்கம் சொல்வதற்கு முன்பாக வேறு மசோதா இங்கே தொடங்கப்பட்டு விட்டது ; எனவே சொல்ல இயலவில்லை. இருந்தாலும் திரு.சிங்காரம் அவர்கள் இன்றைக்கு மீண்டும் அந்தக் கோரிக்கையை இங்கே வைத்து இருக்கிறார்கள். நியாயமான கோரிக்கைதான். ஆனால் கோரிக்கை வைக்கும் போது டெலிபோனுக்கு பணமே கொடுக்கவில்லை என்று சொன்னார். ஓரளவு டெலிபோன் செலவுக்கும் பணம் வழங்கப்படுகிறது என்ற உண்மையை மறைக்கக் கூடாது. இருந்தபோதிலும் அவர் எழுப்பிய பிரச்சினை சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கும்போது மறைந்து விட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு

1989 நவம்பர் 2] [டாக்டர் மு. கருணாநிதி]

10-55 மணி

நிதி உதவி தரவேண்டும் என்பது. நான் அவருடைய கோரிக்கையை ஏற்று இந்த அரசு ஆரம்பமானதிலிருந்து, அந்தக் காலக் கணக்கை எடுத்துக் கொண்டு, அப்படி சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்பொழுதே மறைந்து விடுகின்றவர்களின் குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் இதைப் பெறுகின்றவர்களாக யாரும் இருக்கக் கூடாது என்றும் நான் வாழ்த்துகிறேன்.

(ஐ) முழுஅடைப்பு நாளன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட கலவரம் தொடர்பாகக் கைது செய்யப்பெற்ற ஒருவர் மரணமடைந்தது குறித்து.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியினை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கடந்த ஆகஸ்ட் மாதம் 30 ஆம் தேதி'' பாரத் பந்த்'' நடைபெற்றது. ஆகஸ்ட் 31 ஆம் தேதி காலை 6-00 மணிக்கு நியூ ஆம்பாடி தோட்டத்தில் வேலைக்காகச் சென்ற கோபி என்கின்ற 23 வயது இளைஞன் அன்று பிற்பகல் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார். அருமனை காவல் நிலைய எல்லைக்குள் வைத்து கைது செய்யப்பட்ட அவர் அந்தக் காவல் நிலையத்தை விட்டு, திருவட்டார் காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார். அவர் மீது எந்தப் புகாரும் இல்லை. எந்த முதல் தகவல் அறிக்கையிலேயும் அவருடைய பெயர் இடம் பெறவில்லை. இருந்தும் அவரும், அவரோடு சேர்ந்து கைது செய்யப்பட்டவர்களும் திருவட்டார் காவல் நிலையத்திலே 2 தினங்கள் நீதி மன்றம் எதிலும் ஆஜர் செய்யப்படாமல் வைக்கப் பட்டிருந்தார்கள். அவர்கள் தாக்கப்பட்டதாகக் கூட சில செய்திகள் இருக்கின்றன. அப்படி கைது செய்யப்பட்ட அவர், செப்டம்பர் மாதம் 2ஆம் தேதி தான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நினைவு இழந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் நினைவு திரும்பாமலேயே ஒரு சில நாட்களில் இறந்து விட்டார். அப்படி இறந்த சூழ்நிலையில் அங்குள்ள மக்கள், இப்படிப்பட்ட ஒரு இளைஞர், ஆரோக்கிய மான நிலையில் கைது செய்யப்பட்டு மரணம் அடைந்ததைக் குறித்து மிகுந்த பீதி அடைந்து இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அவருடைய மரணம் சம்பந்தமாக அரசு ஒரு ஜுடிஷியல் என்கொயரி நடத்த வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு அநீதி எங்கு நடந்தாலும் அதை அகற்றி நீதியை நிலைநாட்டும் என்பதை நிரூபிக்கின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அதுபோல, அவரை

1989 நவம்பர் 2] [டாக்டர் மு. கருணாநிதி]

10-55 மணி

நிதி உதவி தரவேண்டும் என்பது. நான் அவருடைய கோரிக்கையை ஏற்று இந்த அரசு ஆரம்பமானதிலிருந்து, அந்தக் காலக் கணக்கை எடுத்துக் கொண்டு, அப்படி சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்பொழுதே மறைந்து விடுகின்றவர்களின் குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் இதைப் பெறுகின்றவர்களாக யாரும் இருக்கக் கூடாது என்றும் நான் வாழ்த்துகிறேன்.

(ஐ) முழுஅடைப்பு நாளன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட கலவரம் தொடர்பாகக் கைது செய்யப்பெற்ற ஒருவர் மரணமடைந்தது குறித்து.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியினை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கடந்த ஆகஸ்ட் மாதம் 30 ஆம் தேதி'' பாரத் பந்த்'' நடைபெற்றது. ஆகஸ்ட் 31 ஆம் தேதி காலை 6-00 மணிக்கு நியூ ஆம்பாடி தோட்டத்தில் வேலைக்காகச் சென்ற கோபி என்கின்ற 23 வயது இளைஞன் அன்று பிற்பகல் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார். அருமனை காவல் நிலைய எல்லைக்குள் வைத்து கைது செய்யப்பட்ட அவர் அந்தக் காவல் நிலையத்தை விட்டு, திருவட்டார் காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார். அவர் மீது எந்தப் புகாரும் இல்லை. எந்த முதல் தகவல் அறிக்கையிலேயும் அவருடைய பெயர் இடம் பெறவில்லை. இருந்தும் அவரும், அவரோடு சேர்ந்து கைது செய்யப்பட்டவர்களும் திருவட்டார் காவல் நிலையத்திலே 2 தினங்கள் நீதி மன்றம் எதிலும் ஆஜர் செய்யப்படாமல் வைக்கப் பட்டிருந்தார்கள். அவர்கள் தாக்கப்பட்டதாகக் கூட சில செய்திகள் இருக்கின்றன. அப்படி கைது செய்யப்பட்ட அவர், செப்டம்பர் மாதம் 2ஆம் தேதி தான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நினைவு இழந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் நினைவு திரும்பாமலேயே ஒரு சில நாட்களில் இறந்து விட்டார். அப்படி இறந்த சூழ்நிலையில் அங்குள்ள மக்கள், இப்படிப்பட்ட ஒரு இளைஞர், ஆரோக்கிய மான நிலையில் கைது செய்யப்பட்டு மரணம் அடைந்ததைக் குறித்து மிகுந்த பீதி அடைந்து இருக்கிறார்கள். ஆகவே, அப் படிப்பட்ட அவருடைய மரணம் சம்பந்தமாக அரசு ஒரு ஜுடிஷியல் என்கொயரி நடத்த வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு அநீதி எங்கு நடந்தாலும் அதை அகற்றி நீதியை நிலைநாட்டும் என்பதை நிரூபிக்கின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அதுபோல, அவரை

இழந்து தவிக்கின்ற குடும்பம் இன்றைக்கு வருமானம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் குடும்பத்திற்கு ஏதாவது ஒரு நிவாரண உதவியை அரசு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கோருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகஸ்ட் 30 ஆம் தேதி முழு அடைப்பு தொடர்பாக நடைபெற்ற ஒரு கலவரம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட கலவரத்தில் கைது செய்யப்பட்டவர்களிலே ஒருவர் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்கள் குறிப்பிடுகின்ற கோபி அவர்கள் ஆவார்கள். எனக்குத் தரப்பட்டுள்ள தகவல் களின்படி அவருக்கு ஏற்கெனவே சர்க்கரை வியாதி இருந்ததாக வும் அதன் காரணமாக சப்-ஜெயிலில் அவருக்கு நோய் ஏற்பட்டு சிகிச்சைக்காக குழித்துறைஅரசு மருத்துவமனைக்கு அனுப்பப் பட்டதாகவும் அங்கிருந்து நான்காவது நாள் மேலும் அவசரச் சிகிச்சைகள் தேவைப்பட்ட காரணத்தால், அத்தியாவசிய சிகிச் சைகளுக்காக, உரிய சிகிச்சைக்காக நாகர்கோயில் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டதாகவும் அங்கே சிகிச்சை பலன் அளிக் காமல்மரணம் அடைந்து விட்டார் என்றும் செய்தி வந்திருக்கிறது. பிரேத பரிசோதனையிலே அவர் மீது தாக்கப்பட்ட ஒரு சூழ்நிலை யில் எந்த அடிகளோ காயங்களோ இல்லையென்று சொல்லப் பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் இங்கே எழுப்புகின்ற இந்தக் கோரிக்கை அந்த மாவட்டத்திலும்தொழி லாளர்கள் சார்பாக எழுப்பப்பட்டுள்ள காரணத்தினால் இது குறித்து ஒரு நீதி விசாரணை நடத்த மாவட்ட நீதிபதி அளவில் திரு. இராமமூர்த்திஅவர்கள்நியமனம் செய்யப்பட்டு, விசாரணை நடத்துமாறு உத்தரவு இடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, அந்தக் குடும்ப நிதிகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அதைப்பற்றி பரிசீலித்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துரை கோரப்படும்.

(ஒ) கோவில்பட்டியையொட்டியுள்ள கிராமங்களை சங்கரன் கோவில் வட்டத்திலிருந்து பிரித்து கோவில்பட்டி வட்டத்தில் சேர்த்தல்

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு வி யத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கடந்த சட்ட மன்ற கூட்டத் தொடரின் கடைசி நாளன்று அல்லது அதற்கு முன்னாலே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பதில் சொன்னார் கள்.

இழந்து தவிக்கின்ற குடும்பம் இன்றைக்கு வருமானம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் குடும்பத்திற்கு ஏதாவது ஒரு நிவாரண உதவியை அரசு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கோருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகஸ்ட் 30 ஆம் தேதி முழு அடைப்பு தொடர்பாக நடைபெற்ற ஒரு கலவரம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட கலவரத்தில் கைது செய்யப்பட்டவர்களிலே ஒருவர் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்கள் குறிப்பிடுகின்ற கோபி அவர்கள் ஆவார்கள். எனக்குத் தரப்பட்டுள்ள தகவல்களின்படி அவருக்கு ஏற்கெனவே சர்க்கரை வியாதி இருந்ததாகவும் அதன் காரணமாக சப்-ஜெயிலில் அவருக்கு நோய் ஏற்பட்டு சிகிச்சைக்காக குழித்துறைஅரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாகவும் அங்கிருந்து நான்காவது நாள் மேலும் அவசரச் சிகிச்சைகள் தேவைப்பட்ட காரணத்தால், அத்தியாவசிய சிகிச்சைகளுக்காக, உரிய சிகிச்சைக்காக நாகர்கோயில் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாகவும் அங்கே சிகிச்சை பலன் அளிக்காமல்மரணம் அடைந்து விட்டார் என்றும் செய்தி வந்திருக்கிறது. பிரேத பரிசோதனையிலே அவர் மீது தாக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் எந்த அடிகளோ காயங்களோ இல்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் இங்கே எழுப்புகின்ற இந்தக் கோரிக்கை அந்த மாவட்டத்திலும்தொழிலாளர்கள் சார்பாக எழுப்பப்பட்டுள்ள காரணத்தினால் இது குறித்து ஒரு நீதி விசாரணை நடத்த மாவட்ட நீதிபதி அளவில் திரு. இராமமூர்த்திஅவர்கள்நியமனம் செய்யப்பட்டு, விசாரணை நடத்துமாறு உத்தரவு இடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, அந்தக் குடும்ப நிதிகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அதைப்பற்றி பரிசீலித்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துரை கோரப்படும்.

(ஒ) கோவில்பட்டியையொட்டியுள்ள கிராமங்களை சங்கரன் கோவில் வட்டத்திலிருந்து பிரித்து கோவில்பட்டி வட்டத்தில் சேர்த்தல்

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு வி யத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின் கடைசி நாளன்று அல்லது அதற்கு முன்னாலே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பதில் சொன்னார்கள்.

11.00 மணி

அழகர்சாமி தீர்மானத்திற்கு அவருக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய பதில் சீக்கிரம் சொல்லப்படும் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இப்போது இரண்டு மாவட்டங்கள் சேருகிற பகுதியில் வருகிறது. முன்னால் ஒரு மாவட்டமாக இருந்தது. கோவில்பட்டியை ஒட்டியுள்ள சில கிராமங்களை, கோவில்பட்டி தாலுக்காவுடன் இணைத்தால்தான் எங்களுக்கு பல சமூகநலன்களைக் கவனிக்க முடியும். இப்போது அந்தப் பகுதி மக்கள் தாலுக்கா அலுவலகம் செல்ல வேண்டுமென்றால் திருநெல்வேலி போன்ற 30 மைல்களுக்கு அப்பால் உள்ள அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறபடியால் அது தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அது சம்பந்தமாக 10 ஆண்டுகளுக்கு முன்னால் இதுபோன்ற கோரிக்கை வைக்கப்பட்டு அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. எனவே சீக்கிரமாக அது முடிவு செய்யப்படும் என்று சொன்னார்கள். கோவில்பட்டியை ஒட்டியுள்ள கிராமங்களை சங்கரன்கோயில் வட்டத்திலிருந்து பிரித்து கோவில்பட்டி வட்டத்தில் சேர்ப்பது என்றும், கோவில்பட்டி விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம் போன்ற 3 தாலுக்காக்களில் இருந்து சில பகுதிகளைப் பிரித்து எட்டயபுரம் தாலுக்கா என்று அமைப்பதற்கான கோரிக்கை ஒன்று ஏற்கெனவே அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா ? அந்த வட்டார மக்களின் நீண்டநாள் கோரிக்கை இது. இந்த முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அந்த ஏற்பாட்டில் ஒரு பகுதியை ஏற்கெனவே இந்த அரசு செய்து முடித்துவிட்டதென்பதை மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் அறிவார்கள் என்று நான் நம்புகிறேன். தொடர்ந்து சொன்ன அந்த பிரச்சினையை இந்த அரசு பரிசீலிக்கும். ஏனென்றால் நியாயமான கோரிக்கையை வைப்பவர் நீங்கள் என்பதை நான் அறிவேன்.

(ஓ) புதிய மோட்டார் வாகனச் சட்டத்தில் ஓட்டுநர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன ஓட்டுநர்கள் பிரச்சினையை மாண்புமிகு சட்ட அமைச்சர் மற்றும் மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் நான் கொண்டு வருகிறேன். நான் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசியிருக்கிறேன். புதிய மோட்டார் வாகனச் சட்டத்தில் ஓட்டுநர்களுக்கு கல்வித் தகுதி வேண்டுமென்று புதிதாக இயற்றி

11.00 மணி

அழகர்சாமி தீர்மானத்திற்கு அவருக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய பதில் சீக்கிரம் சொல்லப்படும் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இப்போது இரண்டு மாவட்டங்கள் சேருகிற பகுதியில் வருகிறது. முன்னால் ஒரு மாவட்டமாக இருந்தது. கோவில்பட்டியை ஒட்டியுள்ள சில கிராமங்களை, கோவில்பட்டி தாலுக்காவுடன் இணைத்தால்தான் எங்களுக்கு பல சமூகநலன்களைக் கவனிக்க முடியும். இப்போது அந்தப் பகுதி மக்கள் தாலுக்கா அலுவலகம் செல்ல வேண்டுமென்றால் திருநெல்வேலி போன்ற 30 மைல்களுக்கு அப்பால் உள்ள அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறபடியால் அது தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளைவைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அது சம்பந்தமாக 10 ஆண்டுகளுக்கு முன்னால் இதுபோன்ற கோரிக்கை வைக்கப்பட்டு அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. எனவே சீக்கிரமாக அது முடிவு செய்யப்படும் என்று சொன்னார்கள். கோவில்பட்டியை ஒட்டியுள்ள கிராமங்களை சங்கரன்கோயில் வட்டத்திலிருந்து பிரித்து கோவில்பட்டி வட்டத்தில் சேர்ப்பது என்றும், கோவில்பட்டி விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம் போன்ற 3 தாலுக்காக்களில் இருந்து சில பகுதிகளைப் பிரித்து எட்டயபுரம் தாலுக்கா என்று அமைப்பதற்கான கோரிக்கை ஒன்று ஏற்கெனவே அரசாங்கத்திலே பரிசீலனையில் இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா ?அந்த வட்டார மக்களின் நீண்டநாள் கோரிக்கை இது. இந்த முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அந்த ஏற்பாட்டில் ஒரு பகுதியை ஏற்கெனவே இந்த அரசு செய்து முடித்துவிட்டதென்பதை மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் அறிவார்கள் என்று நான் நம்புகிறேன். தொடர்ந்து சொன்ன அந்த பிரச்சினையை இந்த அரசு பரிசீலிக்கும். ஏனென்றால் நியாயமான கோரிக்கையை வைப்பவர் நீங்கள் என்பதை நான் அறிவேன்.

(ஓ) புதிய மோட்டார் வாகனச் சட்டத்தில் ஓட்டுநர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன ஓட்டுநர்கள் பிரச்சினையை மாண்புமிகு சட்ட அமைச்சர் மற்றும் மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் நான் கொண்டு வருகிறேன். நான் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசியிருக்கிறேன். புதிய மோட்டார் வாகனச் சட்டத்தில் ஓட்டுநர்களுக்கு கல்வித் தகுதி வேண்டுமென்று புதிதாக இயற்றி

யிருக்கிறார்கள். பொதுவாக கிளீனராக இருப்பவர்கள் தான் பிறகு ஓட்டுநர்களாக வருகிறார்கள் மிகவும் ஏழ்மையானவர்கள் தான் இந்தத் தொழிலுக்கே வருகிறார்கள். இது கன்கரண்ட் லிஸ்ட்டில் வருகிறது. ஆகவே மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் இந்தக் கல்வித் தகுதி என்ற சிரமத்தைப் போக்குவதற்கு ஒரு நிர்வாக உத்தரவை இடவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன். கல்வித் தகுதி என்பது, எம்.எல.ஏ.-வாக வருவதற்கும் எம்.பி.-யாக வருவதற்கும் அரசியல் சட்டத்திலேயே வைக்கப்படவில்லை. நான்ஒரு குறையாகச் இதைச் சொல்லவில்லை. ஆகவே இந்தச்சாதாரண ஏழை எளிய மக்களுக்கு இந்தப் பிரச்சினை வராமல் அரசு பாதுகாக்க வேண்டு மென்ற நிலையில் நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் மதுரைக்குச் சென்றிருந்த நேரத்தில், தமிழ் நாடு ஓட்டுநர்கள் சங்கத்தின் சார்பில் என்னிடத்தில் இதைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே ஏழை ஓட்டுநர்களுடைய கோரிக்கையை அரசாங்கம் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்ட இந்தப் பிரச்சினை ஏற்கெனவே அரசினுடைய கவனத் திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. குறைந்தபட்சக் கல்வித் தகுதி இவ்வளவுதான் வேண்டுமென்று கட்டாயப்படுத்தாமல் ஏற்கெனவே ஓட்டுவதற்கான வேறு பல தகுதிகளை அடிப்படை யாக வைத்து, நிச்சயமாக இந்த அரசு இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஔ) மின் கட்டணம் பற்றிப் புதிதாகப் போடப்பட்டுள்ள ஆணை குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மின் துறை அனுப்பியுள்ள ஒரு அதிர்ச்சி தரும் ஆணையைப்பற்றி நான் இங்கே கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு தொடர்புடைய அமைச்சர் அவர்கள் அவையில் இல்லை.

(ஃ) ஆலந்தூர் தொகுதியில் அமைக்கப்பட வேண்டிய சுரங்கப் பாதைகள் குறித்து .

திரு. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதியில் பல ஆண்டு காலமாக நங்கநல்லூர், பரங்கிமலை பகுதியில் இரண்டு சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட முடியாத நிலையில், மக்கள் அவதிக்கு ஆளாகி இருப்பதால், அவற்றைச் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

யிருக்கிறார்கள். பொதுவாக கிளீனராக இருப்பவர்கள் தான் பிறகு ஓட்டுநர்களாக வருகிறார்கள் மிகவும் ஏழ்மையானவர்கள் தான் இந்தத் தொழிலுக்கே வருகிறார்கள். இது கன்கரண்ட் லிஸ்ட்டில் வருகிறது. ஆகவே மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் இந்தக் கல்வித் தகுதி என்ற சிரமத்தைப் போக்குவதற்கு ஒரு நிர்வாக உத்தரவை இடவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன். கல்வித் தகுதி என்பது, எம்.எல.ஏ.-வாக வருவதற்கும் எம்.பி.-யாக வருவதற்கும் அரசியல் சட்டத்திலேயே வைக்கப்படவில்லை. நான்ஒரு குறையாகச் இதைச் சொல்லவில்லை. ஆகவே இந்தச்சாதாரண ஏழை எளிய மக்களுக்கு இந்தப் பிரச்சினை வராமல் அரசு பாதுகாக்க வேண்டு மென்ற நிலையில் நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் மதுரைக்குச் சென்றிருந்த நேரத்தில், தமிழ் நாடு ஓட்டுநர்கள் சங்கத்தின் சார்பில் என்னிடத்தில் இதைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே ஏழை ஓட்டுநர்களுடைய கோரிக்கையை அரசாங்கம் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்ட இந்தப் பிரச்சினை ஏற்கெனவே அரசினுடைய கவனத் திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. குறைந்தபட்சக் கல்வித் தகுதி இவ்வளவுதான் வேண்டுமென்று கட்டாயப்படுத்தாமல் ஏற்கெனவே ஓட்டுவதற்கான வேறு பல தகுதிகளை அடிப்படை யாக வைத்து, நிச்சயமாக இந்த அரசு இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஔ) மின் கட்டணம் பற்றிப் புதிதாகப் போடப்பட்டுள்ள ஆணை குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மின் துறை அனுப்பியுள்ள ஒரு அதிர்ச்சி தரும் ஆணையைப்பற்றி நான் இங்கே கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு தொடர்புடைய அமைச்சர் அவர்கள் அவையில் இல்லை.

(ஃ) ஆலந்தூர் தொகுதியில் அமைக்கப்பட வேண்டிய சுரங்கப் பாதைகள் குறித்து .

திரு. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதியில் பல ஆண்டு காலமாக நங்கநல்லூர், பரங்கிமலை பகுதியில் இரண்டு சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட முடியாத நிலையில், மக்கள் அவதிக்கு ஆளாகி இருப்பதால், அவற்றைச் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அந்த இரண்டு சுரங்கப் பாதைகளையும் கட்டுவதாக அறிவித்தார்களே தவிர, ஆளுநர் ஆட்சியில் அடுத்து எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. காரணம் நிலம் கையகப்படுத்தப்படாமலேயே டெண்டர் விடப்பட்டது. அப்படி டெண்டர் விடப்பட்டால், அந்த காண்ட்ராக்டர்கள அதற்கான நஷ்ட ஈடு கோரி வழக்குப் போடுவார்கள். எனவே நிலத்தைத் தரமாட்டோம் என்று பலர் நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தார்கள். அது நிலத்தைக் கையகப் படுத்தத் தடையாக இருந்தது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு கையகப்படுத்தும் பணியில் ஈடுபட்டு, அந்த வழக்கையும் அவர்கள் வாபஸ் பெற்றிருக்கிறார்கள். நிலத்தைக் கையகப் படுத்தும் பணியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. எனவே இந்த அரசு உடனடியாக பழைய நிலையிலேயே சுரங்கப் பாதையை அமைப் பதற்கான வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று சென்ற வாரத்தில் உத்தரவிட்டிருக்கிறது. நிலம் கையகப் படுத்திய பிறகு டெண்டர்கள் விடப்பட்டு எவ்வளவு விரைவாக அந்த வேலையை முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்கும்.

(ஔ) மின்கட்டணம் பற்றிப் புதிதாகப் போடப்பட்டுள்ள ஆணை குறித்து—தொடர்ச்சி-

11-05 மணி

திரு. குமரி அனந்தன் : மதிப்புமிகு சபாநாயகர் அவர்களே, தடங்கலுக்கு வருந்தி ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். மின்துறையிலே இருந்து வந்திருக்கின்ற ஆணையைப் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மின்துறை அமைச்சர் அவர் களும் இங்கே வருகை தந்து இருக்கிறார்கள். இப்போது ஒரு எண்ணுள்ள கட்டடத்தின் கீழ்ப் பகுதி அல்லது முன்பகுதியில் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டு மேல்பகுதியிலோ அல்லது பின்பகுதியிலோ தாங்கள் குடியிருந்து வருகிறார்கள். அதனால் இரண்டுவிதமான மின் இணைப்புகள் அவர்களுக்குக் கிடைக்கும். உதாரணத்திற்குச் சொல்லப்போனால் வீட்டிற்கு என்று தனி 'லைட் டாரிஃப்' அதாவது தனி மின் கட்டணம் யூனிட்டுக்கு 50 பைசா என்றும், கடை என்று சொன்னால் ஒரு ரூபாய் முப்பத் தைந்து பைசா என்றும், தொழிற்சாலைகள் என்றால் 95 பைசா என்றும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சிலர் ஒரே வீட்டிலேகூட மூன்றையும் வைத்து மூன்று இணைப்புகளைப் பெற்றிருப் பார்கள். அதன்படி அதற்குரிய கட்டணம் மட்டுமே செலுத்து வார்கள். ஆனால் இப்போது டிசம்பர் மாதத்திலிருந்து ஒரேஒரு இணைப்புத்தான் கொடுக்கப்படும் என்று அவர்களுக்கு மின்சாரஇலாக்கா ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறது அதாவது ஒருவர் கடை வைத்திருந்து குடியும் இருப்பாரேயானால் அவரிடத் திலே கடைக்குரிய கட்டணத்தை மின் இலாக்கா வசூலித்தால் எப்படி சரியாக இருக்கும்? குடியிருக்கிற வீட்டிற்கும்,

கடைக்குச் செலுத்துகிற கட்டணத்தையே பொதுமக்கள் செலுத்த வேண்டி வருமல்லவா ? எனவே இது பொதுமக்களுக்குப் பெருத்த இழப்பை ஏற்படுத்தும். ஆதலினால் ஏற்கெனவே இருந்து கொண்டிருக்கிற முறையே நடைமுறையில் தொடர்ந்து இருக்க லாம். புது உத்தரவுகள் பொது மக்களுக்கு மிகுந்த தொல்லையை உண்டாக்கும் என்ற என்னுடைய கருத்தை இங்கே வைத்து நமது மின்துறை அமைச்சர் அவர்களும், ஏற்கெனவே நடைமுறையில் இருந்த முறையினையே இப்போதும் நடைமுறைப் படுத்துவதற்கு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் அல்ல. தமிழ்நாடு மின்வாரிய விதிப்படி ஒரே கதவு இலக்கத் திற்குள் அல்லது ஒரே கதவு இலக்க உட்பிரிவுக்குள் ஒரு நபர் அல்லது ஒரு நிறுவனத்திற்கு ஒரே ஒரு மின் இணைப்புத்தான் வழங்கப்படும். இருப்பினும் ஒரே கதவு இலக்கத்திற்குள் அல்லது ஒரே கதவு இலக்க உட்பிரிவுக்குள் ஒரு நபருக்கு மேற் பட்ட நபர்களோ அல்லது நிறுவனங்களோ இருந்தால்அவற்றுக்குத் தனித்தனி மின்னிணைப்பு கொடுக்கலாம். ஆனால் நபர் களின் பகுதிகள் அல்லது நிறுவனப் பகுதிகள் தனிப்பட்ட அமைப்பு களாக ஒன்றுக்கொன்று சம்பந்தப்படாதவையாக நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் சொல் வதுபோல் ஒரே எண்ணுள்ள வீட்டுக்கு பல மின்னிணைப்புகள்— நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டிருந்தால் அந்த வீட்டுக்கு நிச்சயமாக கேட்கிற மின்னிணைப்புகள் தரப்படும். ஆனால் ஆங்காங்கு தடுப்புகளை வைத்துக்கொண்டு மூன்று, நான்கு மின்னிணைப்புகள் கேட்டால்தான் தர முடியாது என்பது நிபந்தனையே தவிர உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் அல்ல என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

திரு குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் தங்களுடைய வீடுகளின் முன் பகுதியைக் கடையாக வைத்துக்கொண்டு அதற்கென்று தனி இணைப்பு பெற்றுக்கொள்கிறார்கள். மேலே வீடு வைத்திருந் தால் வீட்டுக்குள்ள இணைப்பை அவர்கள் பெற்றுக்கொள் கிறார்கள்- ஆக இரண்டுக்கும் தனி இணைப்பு ஒரே எண்ணுள்ள வீட்டுக்குக் கிடைக்குமா, தொடர்ந்து என்பதே எனது வினா.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, முன்பகுதியில் உள்ள கடைக்குத் தனி மின்னிணைப்பும், மேல் பகுதியில் உள்ள குடியிருப்புக்கு தனி இணைப்பும் கிடைக்கும்.

யிருக்கிறார்கள். பொதுவாக கிளீனராக இருப்பவர்கள் தான் பிறகு ஓட்டுநர்களாக வருகிறார்கள் மிகவும் ஏழ்மையானவர்கள் தான் இந்தத் தொழிலுக்கே வருகிறார்கள். இது கன்கரண்ட் லிஸ்ட்டில் வருகிறது. ஆகவே மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் இந்தக் கல்வித் தகுதி என்ற சிரமத்தைப் போக்குவதற்கு ஒரு நிர்வாக உத்தரவை இடவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன். கல்வித் தகுதி என்பது, எம்.எல.ஏ.-வாக வருவதற்கும் எம்.பி.-யாக வருவதற்கும் அரசியல் சட்டத்திலேயே வைக்கப்படவில்லை. நான்ஒரு குறையாகச் இதைச் சொல்லவில்லை. ஆகவே இந்தச்சாதாரண ஏழை எளிய மக்களுக்கு இந்தப் பிரச்சினை வராமல் அரசு பாதுகாக்க வேண்டு மென்ற நிலையில் நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் மதுரைக்குச் சென்றிருந்த நேரத்தில், தமிழ் நாடு ஓட்டுநர்கள் சங்கத்தின் சார்பில் என்னிடத்தில் இதைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே ஏழை ஓட்டுநர்களுடைய கோரிக்கையை அரசாங்கம் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்ட இந்தப் பிரச்சினை ஏற்கெனவே அரசினுடைய கவனத் திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. குறைந்தபட்சக் கல்வித் தகுதி இவ்வளவுதான் வேண்டுமென்று கட்டாயப்படுத்தாமல் ஏற்கெனவே ஓட்டுவதற்கான வேறு பல தகுதிகளை அடிப்படை யாக வைத்து, நிச்சயமாக இந்த அரசு இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஔ) மின் கட்டணம் பற்றிப் புதிதாகப் போடப்பட்டுள்ள ஆணை குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மின் துறை அனுப்பியுள்ள ஒரு அதிர்ச்சி தரும் ஆணையைப்பற்றி நான் இங்கே கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு தொடர்புடைய அமைச்சர் அவர்கள் அவையில் இல்லை.

(ஃ) ஆலந்தூர் தொகுதியில் அமைக்கப்பட வேண்டிய சுரங்கப் பாதைகள் குறித்து .

திரு. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதியில் பல ஆண்டு காலமாக நங்கநல்லூர், பரங்கிமலை பகுதியில் இரண்டு சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட முடியாத நிலையில், மக்கள் அவதிக்கு ஆளாகி இருப்பதால், அவற்றைச் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அந்த இரண்டு சுரங்கப் பாதைகளையும் கட்டுவதாக அறிவித்தார்களே தவிர, ஆளுநர் ஆட்சியில் அடுத்து எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. காரணம் நிலம் கையகப்படுத்தப்படாமலேயே டெண்டர் விடப்பட்டது. அப்படி டெண்டர் விடப்பட்டால், அந்த காண்ட்ராக்டர்கள அதற்கான நஷ்ட ஈடு கோரி வழக்குப் போடுவார்கள். எனவே நிலத்தைத் தரமாட்டோம் என்று பலர் நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தார்கள். அது நிலத்தைக் கையகப் படுத்தத் தடையாக இருந்தது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு கையகப்படுத்தும் பணியில் ஈடுபட்டு, அந்த வழக்கையும் அவர்கள் வாபஸ் பெற்றிருக்கிறார்கள். நிலத்தைக் கையகப் படுத்தும் பணியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. எனவே இந்த அரசு உடனடியாக பழைய நிலையிலேயே சுரங்கப் பாதையை அமைப் பதற்கான வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று சென்ற வாரத்தில் உத்தரவிட்டிருக்கிறது. நிலம் கையகப் படுத்திய பிறகு டெண்டர்கள் விடப்பட்டு எவ்வளவு விரைவாக அந்த வேலையை முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்கும்.

(ஔ) மின்கட்டணம் பற்றிப் புதிதாகப் போடப்பட்டுள்ள ஆணை குறித்து—தொடர்ச்சி-

11-05 மணி

திரு. குமரி அனந்தன் : மதிப்புமிகு சபாநாயகர் அவர்களே, தடங்கலுக்கு வருந்தி ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். மின்துறையிலே இருந்து வந்திருக்கின்ற ஆணையைப் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மின்துறை அமைச்சர் அவர் களும் இங்கே வருகை தந்து இருக்கிறார்கள். இப்போது ஒரு எண்ணுள்ள கட்டடத்தின் கீழ்ப் பகுதி அல்லது முன்பகுதியில் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டு மேல்பகுதியிலோ அல்லது பின்பகுதியிலோ தாங்கள் குடியிருந்து வருகிறார்கள். அதனால் இரண்டுவிதமான மின் இணைப்புகள் அவர்களுக்குக் கிடைக்கும். உதாரணத்திற்குச் சொல்லப்போனால் வீட்டிற்கு என்று தனி 'லைட் டாரிஃப்' அதாவது தனி மின் கட்டணம் யூனிட்டுக்கு 50 பைசா என்றும், கடை என்று சொன்னால் ஒரு ரூபாய் முப்பத் தைந்து பைசா என்றும், தொழிற்சாலைகள் என்றால் 95 பைசா என்றும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சிலர் ஒரே வீட்டிலேகூட மூன்றையும் வைத்து மூன்று இணைப்புகளைப் பெற்றிருப் பார்கள். அதன்படி அதற்குரிய கட்டணம் மட்டுமே செலுத்து வார்கள். ஆனால் இப்போது டிசம்பர் மாதத்திலிருந்து ஒரேஒரு இணைப்புத்தான் கொடுக்கப்படும் என்று அவர்களுக்கு மின்சாரஇலாக்கா ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறது அதாவது ஒருவர் கடை வைத்திருந்து குடியும் இருப்பாரேயானால் அவரிடத் திலே கடைக்குரிய கட்டணத்தை மின் இலாக்கா வசூலித்தால் எப்படி சரியாக இருக்கும்? குடியிருக்கிற வீட்டிற்கும்,

3. விதி 111-இன் கீழ் வேளாண்மைத்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 111 (1)-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

5-4-1989 அன்று 1989—90 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை குறித்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசும்போது, '' அதிலே 783 மாணவர்கள் மொத்தம். அதிலே45 மாணவர்கள் நேரடியாகவிவசாயிகளுடைய பிள்ளைகள் என்று உள்ள என்னுடைய பதிலைக் கீழ்க்கண்டவாறு திருத்திப் படிக்க வேண்டுகிறேன் :

'' அதிலே வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே 783 மாணவர்கள் மொத்தம். அதிலே 40 இடங்கள் நேரடியாக விவசாயிகளுடைய பிள்ளைகளுக்கும், 5 இடங்கள் மீனவர்களுடைய பிள்ளைகளுக்காகவும் ஒதுக்கியுள்ளது.''

4. கவன ஈர்ப்பு.

பாடநூல் வெளியீட்டுக் கழகம் பாடப் புத்தகங்களை முழுமையாக வெளியிடததால் ஏற்பட்டுள்ள நிலை

திரு. உ ரா. வரதராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு பாடநூல் வெளியீட்டுக் கழகம் நடப்புக் கல்வி ஆண்டுக்கான பாடப்புத்தகங்களை முழுமையாக வெளியிடாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

தமிழ் நாடு பாட நூல் நிறுவனம் பாடப் புத்தகங்களை முழுமையாக வெளியிடவும் அதனை மாணவர்களுக்கு கிடைக்கச் செய்ய எடுத்த நடவடிக்கை விவரம் பின்வருமாறு:—

1989-90 ஆம் கல்வியாண்டிற்கு 1, 3, 5, 6, 8,10 மற்றும் 12 ஆகிய வகுப்புகளுக்கு முந்தைய ஆண்டுகளில் ஏற்கெனவே வெளியிடப்பட்ட நூல்கள் மறு பதிப்பாக முன்கூட்டியே அச்சிடப்பட்டு பள்ளிகள் திறப்பதற்கு முன்பாகவே விற்பனைக்கு

3. விதி 111-இன் கீழ் வேளாண்மைத்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 111 (1)-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

5-4-1989 அன்று 1989—90 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை குறித்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசும்போது, '' அதிலே 783 மாணவர்கள் மொத்தம். அதிலே45 மாணவர்கள் நேரடியாகவிவசாயிகளுடைய பிள்ளைகள் என்று உள்ள என்னுடைய பதிலைக் கீழ்க்கண்டவாறு திருத்திப் படிக்க வேண்டுகிறேன் :

'' அதிலே வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே 783 மாணவர்கள் மொத்தம். அதிலே 40 இடங்கள் நேரடியாக விவசாயிகளுடைய பிள்ளைகளுக்கும், 5 இடங்கள் மீனவர்களுடைய பிள்ளைகளுக்காகவும் ஒதுக்கியுள்ளது.''

4. கவன ஈர்ப்பு.

பாடநூல் வெளியீட்டுக் கழகம் பாடப் புத்தகங்களை முழுமையாக வெளியிடததால் ஏற்பட்டுள்ள நிலை

திரு. உ ரா. வரதராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு பாடநூல் வெளியீட்டுக் கழகம் நடப்புக் கல்வி ஆண்டுக்கான பாடப்புத்தகங்களை முழுமையாக வெளியிடாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

தமிழ் நாடு பாட நூல் நிறுவனம் பாடப் புத்தகங்களை முழுமையாக வெளியிடவும் அதனை மாணவர்களுக்கு கிடைக்கச் செய்ய எடுத்த நடவடிக்கை விவரம் பின்வருமாறு:—

1989-90 ஆம் கல்வியாண்டிற்கு 1, 3, 5, 6, 8,10 மற்றும் 12 ஆகிய வகுப்புகளுக்கு முந்தைய ஆண்டுகளில் ஏற்கெனவே வெளியிடப்பட்ட நூல்கள் மறு பதிப்பாக முன்கூட்டியே அச்சிடப்பட்டு பள்ளிகள் திறப்பதற்கு முன்பாகவே விற்பனைக்கு

அனுப்பப்பட்டு விட்டன. இதே வகுப்புகளுக்கான 1 முதல் 8 வகுப்புகளுக்கான இலவசப் பாட நூல்களும் முன்கூட்டியே அச்சிடப்பட்டு 418 வழங்கல் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

2, 4, 7, 9, மற்றும் 11 ஆகிய வகுப்புகளுக்கு புதிய கல்விக் கொள்கையின் கீழ் புதிதாக பாட நூல்கள் அறிமுகம் செய்யப் பட்டன. இப்பாட நூல்களில் 11 ஆம் வகுப்புக்கான மூன்றாம் பாகப் பாட நூல்கள் தவிர பிறப் பாட நூல்கள் அனைத்தும் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே அச்சிட்டு வழங்கப்பட்டன. இவ்வகுப்புகளுக்கான 1 முதல் 8 வரையிலான இலவசப் பாட நூல்களும் அவ்வாறே அச்சிடப்பட்டு விநியோக மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

11-ம் வகுப்புக்கான 3-ம் பாக பாட நூல்களுக்கான கையெழுத்துப்படி தாமதமாக கிடைத்தமையால் இவற்றின்அச்சுப் பணி குறித்த காலத்தில் நிறைவேறவில்லை. எனவே, மாணவர் கையில் எப்படியேனும் பாட நூல்களை சேர்ப்பிக்க வேண்டு மென்னும் நோக்கத்தில் இப்பாட நூல்களை இரண்டு தொகுதி களாகப்பிரித்து வெளியிட முடிவு செய்யப்பட்டது. இதன்படி முதல் தொகுதி பாட நூல்கள் ஜூலை முதல் வாரத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இவற்றின் இரண்டாம் தொகுதிகளும் செப்டம்பர் மாத இறுதியில் அச்சுப் பணி முடிந்து மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இக்கல்வியாண்டிற்கு இம்மாநிலத்தின் சிறுபான்மை மொழி களான மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது ஆகிய மொழி களில் பல்வேறு பாடங்களுக்கான பாட நூல்களை மொழி பெயர்த்து அச்சிடப்பட்டு வருகின்றன. சிறுபான்மை மொழி களில் அச்சுக் கோர்ப்பு வசதி போதிய அளவு இல்லையென்பதால் இதில் காலதாமதம் ஏற்பட்டு உள்ளது. சில பாட நூல்கள் அச்சுக்கோப்புக்காக அண்டை மாநிலங்களுக்கு அனுப்பப் பட்டுள்ளன. 2, 4, 7 மற்றும் 9 ஆகிய வகுப்புகளுக்கு வழங்கப் பட வேண்டிய 13 X 4 = 52 சிறுபான்மை மொழி பாடநூல் களில் இதுவரை 9 நூல்கள் வழங்கப்பட்டு விட்டன. எஞ்சிய நூல்களை நவம்பர் 15ஆம் தேதிக்குள் அச்சிட்டு வழங்க தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வரு கிறது. எனவே எல்லா பாடப்புத்தகங்களும் மேற்கண்ட நவம்பர் 15 ஆம் தேதிக்குள் வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வரும் கல்வி ஆண்டான 1990-91-ல் எல்லா பாடப்புத்த கங்களும் உரிய நேரத்தில் கிடைக்க தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது எனவும் தெரிவிக்கப் படுகிறது.

11-10 மணி

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு, கல்வி ஆண்டுக்கான பாடப் புத்தகங்களை கடந்த ஆண்டு முன் கூட்டியே திட்டமிட்டு அச்சிட்டு உரிய காலத்தில் அனுப்பி வைக்க அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஆட்சியாளர்கள் செயல்படாத காரணத்தினால் தவணை முறையில் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களை வழங்குகின்ற அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் இந்த ஆண்டுக்கான பாடப் புத்தகங்கள், கல்வி ஆண்டு தொடங்கி 6 மாதமாகியும் இன்னும் முழுமையாகக் கிடைக்கவில்லை. குறிப்பாக பிளஸ் 1 மாணவர்களுக்கு முதல் மற்றும் இரண்டாம் பாக பாடப் புத்தகங்கள், கணக்கு மற்றும் இரசாயன பாடப் புத்தகங்கள் இரண்டாம் பாகம், உயிரியல் இரண்டாம் பாகம் கிடைத்திருக்கிறது, முதல் பாகம் கிடைக்கவில்லை. இப்படி ஏராளமான மாணவர்களுக்கு புத்தகங்கள் கிடைக்காத நிலை இருக்கிறது. பாடப் புத்தகங்கள் கிடைக்காத நிலையில் ஆசிரியர்கள் பாடம் எடுக்க முடியாத நிலையும் மாணவர்கள் சரியாக தேர்வு எழுத முடியாத நிலையும் ஏற்பட்டிருக்கிறது. எனவே, எல்லோருககும் பாடப் புத்தகங்கள் உடனடியாகக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பாடத் திட்ட அடிப்படையில் ஏறத்தாழ பாதி வகுப்புகளுக்கு 1, 3, 5, 6, 8, 10, 12 ஆகிய வகுப்புகளுக்கு அதற்கு முந்திய ஆண்டு பாடத் திட்டத்தின் அடிப்படையில் முழு அளவில் காலத்தில் அச்சிட்டு வழங்கப்பட்டன. ஆனால், 2, 4, 7, 9 மற்றும் 11 ஆகிய வகுப்புகளைப் பொறுத்த வரையில் புதிய பாடத் திட்டத்தைத் தயாரிப்பது என்கிற முயற்சியில் ஈடுபட்ட காரணத்தால் அதிலே சற்று தாமதம் ஏற்பட்டது. 11வது வகுப்புக்கான மூன்று பாட நூல்களை தாமதமாக தயாரித்ததால் பிறகு அதனை அச்சிட்டு வெளியிடுகிறபோது தாமதம் ஏற்பட்டது. இந்த ஆண்டு நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனே ஏப்ரல் மாதமே புத்தகங்களை அனுப்பி வைக்கும் ஆரம்பப் பணி சென்னையிலே துவக்கி வைக்கப்பட்டது. ஆனாலும் ஏறத்தாழ 400 மையங்கள் மூலமாகப் புத்தகங்களை விநியோகம் செய்கின்ற முறை இருந்தாலும் கூட அந்த மையங்களிலிருந்து புத்தகங்களைக் கொண்டு போய் பள்ளிக்கூடங்களில் சேர்க்கின்ற முயற்சியில் எல்லா புத்தகங்களும் வந்த பிறகு அவைகளை ஒன்றாகக் கொண்டு போய் சேர்க்கலாம் என்று காத்திருந்த தால் அதன் காரணமாக தாமதம் ஏற்பட்டது. அதுபோல பள்ளிக்கூட தலைமை ஆசிரியர்கள் அவற்றை வாங்கிச் செல்வதில் அக்கறை காட்டாத காரணத்தால் தாமதம் ஏற்பட்டது. இப்படி இரண்டு, மூன்று வகையிலே ஏற்பட்ட குறைகளைக் களைய உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. ஆனாலும்கூட புத்தகங்கள் கிடைக்காதவர்கள்

மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிக்குத் தெரிவித்து புத்தகங்களை பெற்றுக் கொள்ளலாம் என்று வழிவகை செய்யப்பட்டது. ஒரு வேளை உறுப்பினர் சொல்வது போல யாருக்கேனும் இன்னும் புத்தகங்கள் கிடைக்கவில்லையென்றால் அதுபோல வேண்டுகோள் வந்தால்—எனக்குத் தெரிந்த வரையில் இப்பொழுது வரவில்லை—கடந்த ஒரு திங்களுக்கு முன்பு அப்படிப்பட்ட வேண்டுகோள் வந்து அந்த வேண்டுகோளும் நிறைவு செய்யப்பட்டு விட்டது. அவைகளையும் கடந்து ஏதாவது குறை இருந்தால்—பிற மொழிகளில் பாட நூல்கள் தயாரிக்கிறபோது அவைகளும் தாமதம் இல்லாமல் அச்சிடப்பட வேண்டுமென்று குறிப்பு இருந்தாலும்—வேறு மாநிலத்தில் அவைகள் அச்சிடப்படுவதன் காரணமாக அந்த மாநிலங்களுக்குச் சென்று அவைகளை அச்சிட்டு அதற்குப் பின் வழங்குவதிலே தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதுகூட இந்த மாதம் நிறைவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருந்தாலும் கூட ஒரு கருத்து. இந்த ஆண்டு அச்சிட்டு வழங்கிய மொத்த பாடப் புத்தகங்கள் 5 கோடியே, 32 லட்சத்து 53 ஆயிரம். கடந்த ஆண்டு ஏறத்தாழ $4\frac{1}{2}$ கோடி பாடப் புத்தகங்கள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. அதற்கு முந்தைய ஆண்டு ஏறக்குறைய 4 கோடி பாடப் புத்தகங்கள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. ஆக, இந்த எண்ணிக்கை அதிகமாகிவிட்ட காரணத்தினாலும், புதிய முறையில் பாடத் திட்டம் தீர்மானிக்கப்பட்டு, புதிய முறையில் பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்ட காரணத்தாலும் ஏற்பட்ட தாமதமாகும் இது. அதோடுகூட இடையிலே அச்சிடுவதாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள் கூட மின்சார வெட்டுக் காரணமாக, 5, 6 நாட்கள் அதிகம் எடுத்துக் கொண்டதால் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். எல்லாவற்றையும் விட ஏறத்தாழ 5 கோடி பாடப் புத்தகங்களை அச்சிட்டு விநியோகிக்கும் போது அதிலே மூன்றில் இரண்டு பகுதியை, இலவசமாக சத்துணவு சாப்பிடும் 65 லட்சம் குழந்தைகளுக்கு வழங்குகிறோம். மீதம் இருக்கிற 30 இலட்சம் பேர் விலைக்குப் பாடப் புத்தகங்களை வாங்குகிறார்கள். அதை விற்கிற நிலையங்களில் சில தவறுகள், அதை விநியோகிக்கிற காலக் கட்டத்தில் சில குறைகள். இவைகளை பெரிய அளவில் நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டியிருப்பதால் ஆங்காங்கே ஏற்படுகிற குறைகளை அவ்வப்போது தெரிவித்தால் உடனடியாக குறைகளைப் போக்க முடியும். இது பாட நூல் தயாரிப்புத் துறையின் பணியாக இருந்தாலும் கூட, கல்வித் துறை இதிலே மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. அந்த வகையில் வருகிற ஆண்டுகளில் குறைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்கிற வகையில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டுகளிலிருந்து எல்லா வகுப்புகளுக்கும்

முழு அளவில் பாடப் புத்தகங்கள் முன்கூட்டியே கிடைக்க என்ன உத்தரவாத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன். அத்துடன் பாட நூல் விற்பனை மையங்கள், முனைவர்கள் இல்லாத இடங்களில் அவற்றை ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சகம் ஒன்றைத் தகுந்த முறையில் உருவாக்க வேண்டுமென்ற கருத்துரு கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு முயற்சிக்கப்படுகிறது. ஆனாலும் கூட அவ்வளவு வேகமாக அது முழு அளவில் அச்சடித்துக் கொடுத்துவிடும் அளவுக்குப் பணி நடைபெற்றுவிடும் என்று கருத இயலவில்லை. வருகிற ஆண்டுகளில் முழு அளவில் அது செயலாற்றும் என்று நாம் எதிர்பார்க்கலாம். அடுத்து, உடனடியாகப் புத்தகங்களை அச்சிட்டுப் பெற டெண்டர் கேட்டுக் கொண்டிருப்பதாக நான் அறிந்து கொண்டிருக்கிறேன். அதற்கு மேல் பிறமொழிப் பாட நூல்களை தேவைக்கேற்ப அச்சிட்டு காலத்தில் கிடைக்க முன்கூட்டியே வழிவகை செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவை எல்லாம் நாள் தோறும் இத்துறை செய்ய வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

11.15 மணி

(அ) மதிப்பீட்டுக்குழு :

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறைபற்றி, மதிப்பீட்டுக்குழு அளித்த பரிந்துரையின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த, குழுவின் முதலாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை இம்மாமன்றத்திற்கு அளிக்கிறேன்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு :

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

முழு அளவில் பாடப் புத்தகங்கள் முன்கூட்டியே கிடைக்க என்ன உத்தரவாத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன். அத்துடன் பாட நூல் விற்பனை மையங்கள், முனைவர்கள் இல்லாத இடங்களில் அவற்றை ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சகம் ஒன்றைத் தகுந்த முறையில் உருவாக்க வேண்டுமென்ற கருத்துரு கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு முயற்சிக்கப்படுகிறது. ஆனாலும் கூட அவ்வளவு வேகமாக அது முழு அளவில் அச்சடித்துக் கொடுத்துவிடும் அளவுக்குப் பணி நடைபெற்றுவிடும் என்று கருத இயலவில்லை. வருகிற ஆண்டுகளில் முழு அளவில் அது செயலாற்றும் என்று நாம் எதிர்பார்க்கலாம். அடுத்து, உடனடியாகப் புத்தகங்களை அச்சிட்டுப் பெற டெண்டர் கேட்டுக் கொண்டிருப்பதாக நான் அறிந்து கொண்டிருக்கிறேன். அதற்கு மேல் பிறமொழிப் பாட நூல்களை தேவைக்கேற்ப அச்சிட்டு காலத்தில் கிடைக்க முன்கூட்டியே வழிவகை செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவை எல்லாம் நாள் தோறும் இத்துறை செய்ய வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

11.15 மணி

(அ) மதிப்பீட்டுக்குழு :

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறைபற்றி, மதிப்பீட்டுக்குழு அளித்த பரிந்துரையின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த, குழுவின் முதலாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை இம்மாமன்றத்திற்கு அளிக்கிறேன்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு :

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

முழு அளவில் பாடப் புத்தகங்கள் முன்கூட்டியே கிடைக்க என்ன உத்தரவாத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன். அத்துடன் பாட நூல் விற்பனை மையங்கள், முனைவர்கள் இல்லாத இடங்களில் அவற்றை ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சகம் ஒன்றைத் தகுந்த முறையில் உருவாக்க வேண்டுமென்ற கருத்துரு கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு முயற்சிக்கப்படுகிறது. ஆனாலும் கூட அவ்வளவு வேகமாக அது முழு அளவில் அச்சடித்துக் கொடுத்துவிடும் அளவுக்குப் பணி நடைபெற்றுவிடும் என்று கருத இயலவில்லை. வருகிற ஆண்டுகளில் முழு அளவில் அது செயலாற்றும் என்று நாம் எதிர்பார்க்கலாம். அடுத்து, உடனடியாகப் புத்தகங்களை அச்சிட்டுப் பெற டெண்டர் கேட்டுக் கொண்டிருப்பதாக நான் அறிந்து கொண்டிருக்கிறேன். அதற்கு மேல் பிறமொழிப் பாட நூல்களை தேவைக்கேற்ப அச்சிட்டு காலத்தில் கிடைக்க முன்கூட்டியே வழிவகை செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவை எல்லாம் நாள் தோறும் இத்துறை செய்ய வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

11.15 மணி

(அ) மதிப்பீட்டுக்குழு :

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறைபுற்றி, மதிப்பீட்டுக்குழு அளித்த பரிந்துரையின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த, குழுவின் முதலாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை இம்மாமன்றத்திற்கு அளிக்கிறேன்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு :

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் தீர்மானம்.

(அ) அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ளுதல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்''.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

7. சட்ட முன்வடிவுகள். (ஆய்வு)—

(அ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''11—10—1989-ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 10/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது.''

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 39/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

* 1—11—1989-ஆம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

6. அரசினர் தீர்மானம்.

(அ) அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ளுதல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்''.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

7. சட்ட முன்வடிவுகள். (ஆய்வு)—

(அ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''11—10—1989-ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 10/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது.''

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 39/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

* 1—11—1989-ஆம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1989 நவம்பர் 2]

*பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல அனுமதித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே வைக்கப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவில், கால நீட்டிப்பு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவு, உள்ளபடியே கீழ் நிலையில் இருக்கிற விவசாயிகளுக்கும், கடன்பட்டோருக்கும் கடன்காரர்களுடைய பிடியிலிருந்து விடுவிப்பைத் தருவதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒன்றாகும். 1972 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாக, கால நீட்டிப்பு கொடுக்கப்பட்டு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கக் குறிப்பிலேகூட, ''இந்தச் சட்டத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கால வரையறை இன்னும் கிராமப்புற மக்களைச் சென்று அடையவில்லை'' என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசே அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

11-20 மணி

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் நிவாரணம் பெறுவதற்காக சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது ஆண்டுக்கு ரூ. 4,800 வருவாய் என்பது வரையறையாக இருக்கிறது. சாதாரணமாக இப்போது விவசாயக் கூலிக்குக் கூட கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பம் என்று எடுத்துக் கொண்டால் அதில் ஒரு கணவன், ஒரு மனைவி என்று சொல்லுகிறார்கள். அப்படி சொல்லுகிறபோது, குறிப்பிட்ட தாசில்தார் அவர்கள், அவர்களின் மொத்த ஊதியத் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்து, அது உச்ச வரம்பிற்கு மேலே வருகிறது என்று சொல்லி கடன் நிவாரணம் பெறுவதற்கு உங்களுக்கு அருகதை இல்லை என்று சொல்லி தள்ளிவிடுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த உச்சவரம்பை உயர்த்திட வேண்டும் என்பது ஒரு கோரிக்கை. அதற்கு மேலே வங்கிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் இவர்களிடமிருந்து பெறப்பட்ட கடன்களுக்கு இதிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாகவே அரசாங்கம், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறவர்களுக்கு இந்த நிறுவனங்களிலிருந்துதான் கடன் வழங்க அனுமதிக்கிறது. அப்படிப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு அல்லது நிவாரணம் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து எல்லைகளுக்கு உட்பட்டவர்களிலே ப்ரொபஷனல் டாக்ஸ்—தொழில் வரி கட்டுகிறவர்களுக்கு இதிலே நிவாரணம் இல்லை. அவர்கள் பெட்டிக் கடை வைத்திருந்தால்கூட ப்ரொபஷனல் டாக்ஸ் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் எல்லாம் ஏழைகளாக இருக்கிறார்கள். இவைகளை எல்லாம் ஆய்வு செய்து, அவர்களுக்கு நிவாரணம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட, பெரியவர்களாக இருந்து, வீடு வைத்திருக்கிறவர்கள் வீட்டுவரி கட்டுகிறார்கள் என்பதற்காக, அவர்களுக்கு வருமானம் அதிகமென்று சொல்லி, நிவாரணம் தரப்படுவதில்லை. இவர்களுக்கு வீடு மாத்திரம்தான் இருக்கிறது. வேறு வழி வகைகள் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் கூட கடன் நிவாரணம் கிடைக்கவில்லை. இவர்களுக்கு எல்லாம் நிவாரணம் கிடைக்க வேண்டும். மேலும் தாசில்தாரை வைத்து இதை நிர்ணயம் செய்யும் போது, சில தவறுகள் நடைபெறுகின்றன. மினிமம் வேஜஸ் என்று கணக்கு எடுத்துக்கொண்டு செய்வதால் தவறுகள் நடக்கின்றன. ஆகவே வேறு வழிவகைகளைக் கண்டறிய வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மக்களுக்கு இவை விரைவிலே எட்ட வேண்டுமென்பது அரசினுடைய கருத்தாக இங்கே கூறப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லும்போது, ஒவ்வொரு ஆண்டும் இதைக் கொண்டு வருகிறோம். அதற்கு ஒரு திருத்தம் கூட நான் இங்கே கொடுத்திருக்கிறேன். அது பின்னாலே வரும். மக்களுக்கு இது போய்ச் சேர வேண்டுமென்றால் அரசின் செய்தித் துறையும், விளம்பரத் துறையும் நிச்சயமாக இதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இதுவரை அப்படி முயற்சிகளை எடுத்துக்கொள்ளவில்லை என்பதை அவர்களே ஒத்துக்கொண்டிருப்பதுபோல இருக்கிறது. சாதாரணமாக நான் பார்க்கிறேன். இந்த நாட்டிலே நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட போது நிறைய மக்கள் இதனால் பயனடைந்தார்கள் என்று அரசு குறிப்பு இருக்கிறது. ஆனால், அதற்குப் பின்னாலே இவர்கள் பயன் பெறவில்லை என்பதை அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆக மக்களை இது சென்றடையவில்லை என்று ஏற்றுக்கொள்வதா அல்லது மக்களுக்கு இது சரியாக அறிவிக்கப்படவில்லை என்று ஏற்றுக்கொள்வதா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட இதை நடைமுறைப்படுத்தும்போது மக்களுக்கு இது அறிவிக்கப்பட வேண்டும். இப்போது நான் பார்க்கிறேன். எவ்வளவோ முழுப் பக்க விளம்பரங்கள் வருகின்றன. சுவரொட்டிகள் வருகின்றன. கோடிக்கணக்கான பணம் செலவாகிறதென்று வெளியிலே சொல்கிறார்கள். இப்படி விளம்பரத்திற்காக இந்த அரசு செலவு செய்து கொண்டிருக்கிறது. அதிலே ஆயிரத்திலே ஒரு பங்காவது இந்த ஏழை மக்கள் துயர் துடைப்பிற்காக விளம்பரமாக செய்தித் தாள்களில் போட்டுவிட்டால்,

நிச்சயமாக இந்த நாளுக்குள் அவர்கள் இந்தக் கடன் நிவாரணம் பெற முடியுமென்பதை அவர்கள் அறிந்துகொள்ள முடியும். மீண்டும் மீண்டும் இந்தக் கடன் நிவாரணச் சட்டத்திற்கு கால நீட்டிப்பு கொடுத்துக் கொண்டு போக வேண்டிய அவசியம் இராது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு செய்தி, வறுமைக்கோடு என்று பார்க்கும்போது ஒரே ஒரு வறுமைக் கோடுதான் நமக்கு இருக்க முடியும். ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுக்கும்போது 300 ரூபாய் என்று வருமான வரம்பை வைக்கிறார்கள். இலவச வேட்டி, சேலை என்று சொல்கிறபோது 200 ரூபாய் என்று வருமான வரம்பு வைக்கப்படுகிறது. இதற்கு 4,000 ரூபாய் என்று வருமான வரம்பு வைக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலே ஒரே ஒரு வறுமைக் கோடு மட்டும் இருக்கட்டும். அதை நீங்கள் எப்படி வைத்தாலும் சரி 4, 5 வறுமைக் கோடுகள் இருந்தால் நிச்சயமாக யார் எந்த வறுமைக் கோட்டுக்குக் கீழ இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிவதிலே அரசுக்குக் குழப்பம் ஏற்படும் என்று தெரிவித்து, ஒரே ஒரு வறுமைக் கோடு, ஒரு குறிப்பிட்ட தொகை, அதற்குக் கீழ இருக்கிறவர்கள் வறுமையில் இருக்கிறார்கள் என்று நிர்ணயிக்கும் வகையிலே அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி, இவற்றை எல்லாம் இதிலே உள்ளடக்கச் செய்தால்தான் சரியாக இருக்குமென்று தெரிவித்து, அவைகள் இல்லை என்பதால் இதை எதிர்த்து, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்டத்தினுடைய காலத்தை நீட்டிக்கின்ற வகையில் சட்ட முன்வடிவு அவை முன் வைக்கப் பட்டிருக்கிறது. இதனுடைய ஆரம்பச் சட்டம் 1982-லே துவக்கப்பட்டு, 1989 வரை 7 ஆண்டு காலம் ஆகியும் கூட இந்தச் சட்டத்தின் மூலம் எவ்வளவு மனுக்கள் வரப் பெற்றன, எத்தனை மனுக்கள் பரிசீலிக்கப்பட்டன, இதனால் எத்தனை பேருக்கு நன்மை கிடைத்திருக்கிறது என்ற விவரம் கிடையாது. பொதுவாக இந்தச் சட்டத்தின் மூலம் ஏழை எளிய மக்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்குப் பதிலாக, அது அவர்களைப் போய்ச் சேரவில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மையாக இருக்கிறது. கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் மனுக்களைப் பரிசீலிக்கும் பணி வட்டாட்சியர் அவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. அவருக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கிற காரணத்தாலே அந்த மனுக்களை பல நாட்கள் ஒத்திப் போடுகிற சூழ்நிலை இருக்கிறது. அவற்றைப் பரிசீலித்து உண்மையாக அந்த நிவாரணம் கிடைக்கக்கூடியவர்களுக்கு அத்தகைய நிவாரணம் கிடைக்கவில்லை என்பதை அறிந்து, வட்டாட்சியர் அவர்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்காமல் தனி அதிகாரி போட்டு, மனுக்களைப்

பரிசீலித்து, விரைவாக அந்த நிவாரணத்தை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

11-25 மணி

பொதுவாக ஏழைகளுக்கு ஒரு புறத்திலே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிடைக்கும் கடன்கள் கிடைப்பதில்லை. ஐ.ஆர்.டி.பி. மூலம் வழங்கப்படும் கடன்கள் கேட்கும்போது அதற்கு ஏதோ காரணங்கள் கூறப்பட்டு, அந்தக் கடன் முழுமையும் மறுக்கப்படுகிறது. அதனால் ஏழை விவசாயிகள் தனியாரிடம் கடன் வாங்கக்கூடிய நிர்பந்தத்திற்குத் தள்ளப்படுகிறார்கள். அவர்களுக்கு நியாயமான முறையில் கடன் கிடைப்பதற்கு வகை செய்யப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒருபுறத்தில் இப்படிப்பட்ட சட்டங்களைத் தள்ளி வைப்பதன் மூலம் தொடர்ந்து அந்தக் கடனில் ஏற்படுகின்ற வட்டி அதிகரித்து கடன் சுமை அவர்களுக்கு அதிகரிக்கிறது. அதிலிருந்து அவர்கள் மீளமுடியாத ஒரு நெருக்கடி தான் அவர்களுக்கு மேலும் மேலும் வருகிறது. ஆகவே இது போன்ற கடன் சட்டங்களை நீட்டிக்கும்போது உடனடியாக அதற்குத் தீர்வு காணுகின்ற வகையில் பரிசீலித்து, விரைவாகத் தீர்வு காணப்வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டம் சாதாரண மக்களுக்குப் போய் அடைகின்ற வகையில், அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கின்ற வகையில், வருகின்ற மனுக்களை உடனடியாகப் பரிசீலித்து நிவாரணம் அளிக்கின்ற வகையில் விரைவாகத் தனி அதிகாரிகளை அதற்கு நியமித்து, ஏழை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்தக் கருத்தைத் தெரிவித்து, அமைகிறேன்.

திரு. எம். தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயக் கூட்டுறவுக் கடன் வழங்குவதைப் பற்றி ஒரு சில கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: பேரவைத் தலைவரவர்களே, இது விவசாயக் கூட்டுறவுக் கடன் பற்றியதல்ல; கடன் நிவாரணச் சட்டம் என்பதைத் தயவு செய்து தாங்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். தங்கவேல்: கடன் வழங்கும் இந்தச் சட்டத்தின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தக் கடன் வழங்கும் சட்டத்தில் நிலவள வங்கியைப் பொறுத்தவரையில் கடனைப் பெற்ற ஏழைகள் அதை முறையாகத் திருப்பித் தராமல் இருப்பதால் நிலவள வங்கிகள் தமிழகத்தில் இன்று பெரும் நஷ்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதை மாற்றுகின்ற வகையில். ஏழைகளும் முறையாக நிலவள வங்கிகளிலே கடன் பெறுவதற்குரிய வகையில் மாற்றி அவர் கள் பயனடையும் வகையிலே இந்தச் சட்டத்தை ஏற்படுத்த வேண்டும். ஏழை விவசாயிகளுக்குக் கடன் வழங்குவது என் றால் கூட அதை முறையாக நிலவள வங்கிகளிலே வழங்குவது இல்லை. இதை மாற்றி நகை போன்றவைகளை வைத்து எல்லாக் கூட்டுறவு வங்கிகளிலும் கடன்களை வழங்குவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு முறையாகக் கொடுக்கின்ற பொருள்கள் போய் சேருவது இல்லை. அதற்கு மாற்றாக அங்கு வேலை பார்க்கின்ற அதிகாரிகள் அந்தப் பொருள்களை மாற்றி சில மலிவான பொருள்களைத்தான் ஏழை விவசாயிகளுக்குத் தருகின்றார்கள். இதையும் அரசாங்கம் கண்காணித்து முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமருகின்றேன்.

திரு. ரெ. பிச்சைமுத்து: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பு கிறேன். இந்தக் கடன் நிவாரணச் சட்டம் 1982ஆம் ஆண்டு அமுலுக்கு வந்தது. இதுவரையில் அந்தச் சட்டத் தின் கீழ் ஏழை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்களிடம் உள்ள சொத்துக்களை ஈடு வைத்து கடன் பெற்று அந்தக் கடனுக்கு அவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் நிவாரணம் அடைந்து இருக்கிறார்களா என்றால் சிறிது கூட கிடையாது என்பது தான் எங்களுடைய கருத்து. காரணம் ஒரு ஏழை விவசாயி கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் தாலுகா அலுவலகத்தில் பணியாற்றுகின்ற தாசில்தாரிடம் சென்று மனுக் கொடுத்து, அந்த மனுவை அவர் பரிசீலனை செய்வதற்கே குறைந்தது 10 அல்லது 15 நாட்கள் ஆகிறது. அந்த அடிப்படையில் அதைப் பரிசீலனை செய்யும்போது அந்தத் தாசில்தார் அந்த விவசாயக் கூலியிடம் கேட்கிறார், உன்னுடைய கூலி வருமானம் என்ன என்று, அந்த விவசாயக் கூலி கூறுகின்றார். எனக்கு ஒரு நாளைக்கு கூலி 10 ரூபாய் என்று, சராசரி கணக்கை கூறுகின்றார். அந்த அடிப்படையில் அந்தக் கூலி விவசாயினுடைய அந்த ஒரு நாளைய வருமானத்தைக் கணக்கிட்டு, உன்னுடைய ஆண்டு வருமானம் இந்த வரம்புக்கு மீறிச் சென்று விடுகிறது என்று

கூறி, சரியான முறையில் அந்தக் கடன் நிவாரணம் அந்த விவசாயக் கூலிக்குக் கிடைக்காத அளவுக்குச் சென்றுவிடுகிறது. இப்படிப்பட்ட நிலையில் இந்தச் சட்டம் இருக்கின்றது. இந்தச் சட்டத்தின் பயன் அந்த விவசாயக் கூலி, விவசாயத்தைச் சார்ந்த ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த மக்களுக்குச் சென்று அடைந்திருக்கின்றதா என்றால் கண்டிப்பாகக் கிடையாது. ஆகவே, இந்தச் சட்டத்தின்கீழ் அந்த ஏழை எளிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மக்களுக்குச் சரியான முறையில் சென்றடைய வேண்டுமென்றால் இந்தக் கால அவகாசம் நீட்டிப்புக் கொடுப்பது மட்டுமின்றி இந்தக் கால அவகாசம் கூட முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. அந்த அடிப்படையில் இனிமேலாவது அந்தந்தப் பகுதிகளில் அந்தந்த தாலுக்காவைச் சேர்ந்த ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்த விவசாயக் குடும்பங்களுக்குச் சரியான முறையில் சென்று அந்த நிவாரணம் கிடைக்கப் பெற வேண்டுமென்றால் அவகாசத்தை இனிமேலாவது இங்கே அமர்ந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியில் இருக்கின்ற அந்தந்தப் பகுதியைச் சார்ந்த விவசாயக் குடும்பங்களுக்குத் தெரிவித்து, சரியான முறையில் இந்த நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்வார்கள் என்ற அடிப்படையில் கூறி, இந்த வாய்ப்பினை அளித்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்டத் திருத்தமானது வரவேற்கத் தக்கதாக இருந்தாலும் கிட்டத்தட்ட பல வருஷங்களாக இந்தச் சட்டத்தை நீட்டித்துக் கொண்டு இருக்கிறோம். அப்பவும் கடன் வாங்கியவர்களுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்றால் இன்னும் வெகு பேருக்குத் தெரியவில்லை என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். வெகுபேருக்கு, கடன் வாங்கியவர்களுக்கு இன்னும் இந்தமாதிரி சட்டம் இருப்பது தெரியவில்லை அந்த நிவாரணத்தை சரியான முறையிலே அடைய முடியவில்லை என்றுதான் இந்தத் திருத்தத்தினுடைய காரணமாகக் கருதி இதை இன்னும் நீட்டித்துக்கொண்டிருக்கிறோம். சில பேருடைய அபிப்பிராயம் சரியான விளம்பரம் பண்ண வேண்டுமென்பதாக இருந்தாலும் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று 100-க்கு 10 பேர் இன்னும் நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். எப்படியாவது நாம் பட்டிருக்கக் கூடிய கடனை, நம்முடைய குடும்பத்தில் கடன் பட்டதைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று நினைப்பவர்கள் இருப்பதால்தான் இவ்வளவு நீட்டித்துக் கொடுத்தும்கூட இன்னும் மனு போடாமல் இருக்கிறார்கள் என்பது என்னுடைய எண்ணம்.

''கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்'' என்பார்கள்; ஆனால் இப்பொழுது ''கடன் கொடுத்தார் நெஞ்சம் போல்'' என்று சொல்லக்கூடிய

அளவிற்கு மாற்றிவிட்டோம். இப்பொழுது மாறிவிட்டது. மேலும் தங்கத்தை அடகு வைக்கிறார்கள். இப்பொழுது புடவையைக்கூட அடகு வைத்து விடுகிறார்கள். ஒரு காலத்திலே பார்க்கும்பொழுது தடுக்கி விழுந்தால் ஆறு அடிக்கு ஒரு கடை இருந்தது. அந்தக் காலத்திலே மார்வாடிக் கடை என்று இருந்தது. இப்பொழுது எல்லா ஜனங்களும் கடை வைத்து விட்டார்கள். மார்வாடிதான் அடகு பிடிக்கிறார்கள் என்று பேசிக் கொள்வோம். ஆனால் இப்பொழுது யார்தான் பிடிப்பது, யார்தான் பிடிப்பது இல்லை என்று இல்லாமல் ஓடி ஓடிப் பிடித்துக் கடனைக் கொடுத்து, சாமானை வாங்கி பெட்டிக்குள்ளே வைத்துவிடுகிறான். அப்படியிருந்தும், ஏழைகளெல்லாம் கஷ்டப்படுகிறார்கள், தங்க நகைகளெல்லாம் எங்கேயோ ஓடிப்போகின்றன என்று சட்ட நிவாரணத்தைக் கொடுத்தால் இன்னும் ஜனங்களால் அதைப் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. அதைப் பயன் படுத்திக் கொள்கின்ற வகையிலே ஒரு வருஷம் அல்ல, இரண்டு வருஷம் அல்ல, பல வருஷங்கள் ஆகியும் மறுபடியும் நீட்டிக்கக்கூடிய அளவில் நம்முடைய மக்கள் இருக்கிறார்கள் என்றால் அதற்கு என்ன காரணம் என்று ஆராய வேண்டும். நாம் இன்னும் இரண்டு வருஷங்கள் நீட்டித்து, அப்படி நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள்ளேயும் மனு போடாமல் இருந்தால் மறுபடியும் நீட்டிக்கப் போகிறோம். அதற்கு ஏதாவது ஒரு முறையைக் கண்டு பிடிக்க வேண்டும்.

அவர் சொன்னார், பெரிய விளம்பரங்கள் என்று ஒரு போஸ்டர் அடிக்க இப்பொழுது பத்து ரூபாய் ஆகிறது. இப்பொழுது எலக்ஷன் போஸ்டருக்குப் போய் கேட்டால் பத்து ரூபாய்க்குக் குறைந்து போஸ்டர் அடிக்க மாட்டேன் என்கிறார்கள். அது நம்முடைய பணம், அதுவும் ஏழைகளுடைய பணம்தான் இந்த சர்க்கார் போஸ்டர் அடித்து விளம்பரம் செய்தாலும் அது யாருடைய பணம்? எல்லாம் ஏழைகளுடைய பணம்தான். அந்தப் பணத்தில்தான் நாம் போஸ்டர் அடிக்கப் போகிறோம்.

விளம்பரம் பண்ண வேண்டியதுதான். பேப்பரிலே கொடுக்கிறோம். பத்திரிகைகள் இருக்கின்றன. இப்படிக் கடன் நிவாரணச் சட்டம் இருக்கிறது, நீங்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை என்று போடக்கூடிய நிலைமை என்பது அது ஒரு முறை.

ஏதோ கடன்காரன் தங்கத்தைக்கொண்டு பிரைவேட்டாக வைத்தால் இந்த மாதிரி சட்டம். ஆனால் கூட்டுறவிலே, சர்க்கார் கடனிலே இப்படி உண்டா? பிரைவேட் பணம் என்றால் அது தங்கம் இல்லையா? அவர்களிடத்திலே வேறு எதையாவதா கொண்டுபோய் வைக்கிறான்? கடன் என்றால் அதுவும் கடன்தான், இதுவும் கடன்தான். கூட்டுறவுச்

சங்கத்திலே வைத்தால் அதற்கு நிவாரணம் உண்டா? அதுவும் கடன்தானே? அல்லது வேறு பேங்கிலே, சர்க்காருக்குச்சொந்த மான பேங்கிலே வைப்பதும் கடன்தான். ஆகையினாலே அவனுக்குச் சரியான முறையிலே நிவாரணம் அளிக்க வேண்டு மென்றால் எல்லாக் கடனையும் நிவர்த்திக்குக் கொண்டு வர வேண்டும். தனியார் கொடுத்த கடனை மட்டும், பான் புரோக்கர் கொடுத்த கடனை மட்டும் நிவர்த்திக்கிறோம் என்றால் சந்தோஷப்படுகிறோம் இருந்தாலும் கூட்டுறவு, மற்ற வங்கிகளிலே கொடுக்கின்ற கடன்களையும் நிவாரணம் செய்வதுதான் நல்லபடியாக இருக்கும்.

அதற்கு உச்சவரம்பு 4,800 ரூபாய் என்று சொல்கிறோம். ஒரு கொத்தனைக் கேட்டால் இன்றைக்கு 50 ரூபாய் கேட்கி றான். சித்தாளைக் கேட்டால் 25 ரூபாய் கேட்கிறாள். அதை யெல்லாம் கணக்குப் பார்க்கும்பொழுது அவனுக்கு மாத வருமானம் கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேலே வரும். லெஜிஸ்லேட்டார்ஸ் சம்பளம் ஒன்றுதான் கம்மியாக இருக்கிறது. பாக்கியெல்லாம் நாட்டிலே உயர்ந்துவிட்டது. அதைப் பார்க் கும்பொழுது 4,800 ரூபாய் என்றால் மாதம் 400 ரூபாய் கணக்குதானே வருகிறது. 400 ரூபாய் கணக்கு இருந்தால் தள்ளுபடி..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வாங்குகிற கடனுக்கு ஏதாவது நிவாரணம் கோருகிறீர்களா?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : எலக்ஷனிலே நாங் கள் வாங்கிய கடனை நிமிஷத்திலே அடைத்து விடுகிறோம். உடனே பின்னாலேயே வந்து விடுகிறான். யார் கடன்கொடுக் கிறார்கள்? இந்த சட்டத்தைக் கொண்டு வந்தவுடன் கடன் வாங்க வருபவனைக் கடன் கொடுப்பவன் பார்க்கிறான். கடன் வாங்கவே முடியவில்லை நாட்டிலே. அப்படி ஏதாவது கடன்வாங்கினாலும் தவறுதலாக இருக்கிறது. 500 ரூபாயைக் கொடுத்துவிட்டு 3,000 ரூபாய்க்கு எழுதிவாங்குகிறான்; இரண்டு பவுன் தங்கத்தைக் கொடுத்து விட்டு ஐந்து பவுன் என்று எழுதி வாங்குகிறான்; வெளியிலேசொன்னால் ஜாக்கிரதை என்கிறான்; தவறு செய்யாமலா இருக்கிறான்? நீங்கள் கொண்டு வந்த சட்டத்தைப்போல ஒரு இலட்சம் மடங்கு நாட்டிலே பிசினஸ் நடக்கிறது. சின்னக் கிராமத்திலே தெரியாது என்கி றார்களே, அடுத்த வீட்டுக்கு அடுத்த வீடு, அடுத்த வீட்டுக்கு அடுத்த வீடு நிச்சயம் கெந்து வட்டி இல்லாத கிராமமே கிடை யாது; கெந்து வட்டி இல்லாத கடைத் தெருவே கிடையாது. கெந்துவட்டியில்லாத பஜாரே கிடையாது. அதைத் தடுக்க முடியுமா? முடியவில்லையே? பிராக்டிக்கல் எக்ஸ்பீரியன்ஸ் என்னவென்றால், இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்தவுடன்—ஒரு பெரிய மிலிட்டரிக்காரர் ஒரு பார்ட்டியிடம் 60,000 ரூபாய் கொடுத்து விட்டு ஈட்டுக்கடன் வாங்கியிருக்கிறார். இந்தச் சட்டம் வந்தவுடன் கடன்

1989 நவம்பர் 2] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]
11.35 மணி

வாங்கியவர் என்ன செய்கிறார் என்றால் பெட்டிஷன் போடு கிறார். மிலிட்டரிக்காரர் இந்த நாட்டிற்காக உழைத்து வந்த பணத்தை ஒருவரிடம் கொடுத்து விட்டார். கடன் வாங்கியவர் தனக்கு 400 ரூபாய்க்குள் தான் வருமானம் வருகிறது, இதை நிவாரணம் பண்ண வேணடுமென்று கேட் கிறார். நான் வெகு நாட்கள் கிராம முன்சீப்பாக இருந்தவன். 25 வருடங்கள் கிராம மணியக்காரராக இருந்தவன். எல்லோருடைய நிலம், அந்த ஊர் சொத்து விவரம் எல்லாம் தெரியும். அவனுக்கு அது தெரியாது. எங்கேயிருந்தோ வந்து கடனைக் கொடுத்து விட்டு நிற்கிறான். அவனுக்கு போராடவும் சக்தி இல்லை. ஏனென்றால் 60,000 ரூபாய் கடன் வட்டியோடு 80,000 ரூபாய் ஆகிவிடுகிறது. தனக்கு விவசாயக் கடன் சட்டத்தின்கீழ் நிவாரணம் அளிக்க வேண்டும், வருமானம் இல்லை என்று சொல்கிறான். ஆனால் அவனுக்கு நியாயமான வருமானம் 2,000 ரூபாய் வருகிறது. பல இடங்களில் அவனுக்கு பல சொத்துக்கள் இருக்கின்றன. மிலிட்டரிக்காரன் கொடுத்து விட்டான். அவன் திரும்பவும் மிலிட்டரிக்குப் போக முடியாது வாங்கிய சம்பளமும் போய்விட்டது. கொண்டு வந்த பணமும் கடன் கொடுத்து போய்விட்டது. இப்போது அவனுடைய நிலைமை என்ன? பிறகு எங்களிடம் வந்து கடன் வாங்கியவருக்கு இந்த இடத்தில் இந்தச் சொத்து இருக்கிறது இவ்வளவு வருமானம் அவருக்கு வருகிறது என்று சொன்ன பிறகு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு இன்னும் ஏராளமான சட்டங்கள் உள்ளன.

திரு. ஒய. வெங்கடேஸ்வர தீட்சிதர் : நான் என்ன சொல்கிறேன்? நான் எதையும் தவறாக சொல்லவில்லையே? நீங்கள் கொண்டு வந்த சட்டத்தால் நாட்டிலே இவ்வளவு தவறு நடக்கிறது, அதற்கு ஏதாவது நிவாரணம் பண்ணுங்கள் என்று கேட்கிறேன். உச்ச வரம்பு 4,800 ரூபாய் என்பதை ஜாஸ்தியாகப் பண்ணுங்கள். அப்போது இது நடக்கும். கிராம முன்சீப்பிலிருந்து—கிராம முன்சீப்பை தவறாக சொல்லவில்லை—கீழே கிராம நிர்வாகத்திலிருந்து பெரிய ஆபீசர்கள் வரைக்கும் சர்டிபிகேட் கொடுக்கிறார்கள். என்ன சர்டிபிகேட் கொடுக்கிறார்கள், எதற்காக கொடுக்கிறார்கள் என்றால் எப்படி அவன் தப்பிக்கலாம் என்பதற்கு. இதற்கு நீங்கள் ஒரு வழி காணவேண்டும். அவன் தப்பிக்க முடியாமல் இருப்பதற்கு ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும். இதற்கு முன்னால்பான் புரோக்கர்ஸ் நிறையஇருந்தார்கள். (மணியடிக்கப் பெற்றது) ஒரு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன் கிராமத்தில் பைனான்ஸ் என்றால் இவர்களே ஆரம்பித்து விடுவார்கள். முன்பு பைனான்ஸ் என்றால் வியாபாரிகளுக்கு 2,000, 4,000 ரூபாய் என்று சின்ன கடனை பைனான்சாக கொடுத்து வாங்குகிறார்கள். அதை என்ன பண்ணப் போகிறீர்கள் ஆகவே, இந்தச் சட்டத்தினால் சரியான நிவாரணம் கிடைக்க வேண்டுமென்றால், வங்கிக் கடன், தனியார் கடன் எல்லாவற்றிற்கும்

நிவாரணம் கொடுத்து உச்ச வரம்பை உயர்த்தி இதுமாதிரி கடன் கொடுத்து வாங்குகிற, உள்நாட்டு வெளிநாட்டுக் கடன் மாதிரி, உள்நாட்டில் புழங்குகிற கடனை சரியான சட்டம் கொண்டுவந்து செய்தால் தான் திட்டங்களுக்கு பலன் இருக்கும் என்று கூறி, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிற தமிழ்நாடு கடன் நிவாரணத் திருத்தச் சட்ட முன் வடிவின் மீது கருத்துக்களைச் சொன்ன உறுப்பினர் களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத் தினுடைய மூலம் 1982-ஆம் ஆணடு நிறைவேற்றப்பட்ட சட்டமாகும் அந்த சட்டத்தினுடைய நோக்கத்தை நாம் பார்க்கும்போது "....Whereas to provide relief to certain indebted persons in the State of Tamil Nadu from the usurious practices of Pawnbrokers, moneylenders and other non-institutional sources of credit and to give relief from the debts due to such Pawnbrokers, money-lenders and other non-institutional sources of credit.." எனவே, வட்டிக்கடை வேந்தர்களிடமிருந்தும், அநியாய வட்டி வாங்குகிறவர்களிடமிருந்தும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தீட்சிதர் சொன்னதைப் போல புதியதாக ஆரம்பிக் கப்பட்டிருக்கிற (பைனான்ஸ்) நிதி நிறுவனங்கள் வசூலிக்கிற கடுமையான வட்டி போன்றவற்றிலிருந்தும் மக்களைக் காப் பாற்றுவதற்காக கொண்டுவரப்பட்ட சட்டமாகும். இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் சிறந்ததாகும். இதைத்தான் அவ் வப்போது காலத்தை நீட்டித்து சட்டத்தை நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறோம். இறுதியாக ஆகஸ்ட் 1988 முடிய இந்தச் சட்டம் அமலில் இருந்து வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தினுடைய பலனை பெறுபவர்கள் யார் என்று பார்த் தால் சமுதாயத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் தான் வருகிறார்கள். குறிப்பாக நிலமற்றவிவசாயத் தொழிலாளர்கள் கிராமங்களில் பணியாற்றக்கூடிய கைவினைஞர்கள் ஆண்டு ஒன்றிற்கு 4,800 ரூபாய் வரக்கூடிய, அதற்கு குறைவாக வருமானம் வரக்கூடியவர்களுக்கு இந்தச் சட்டத்தினுடைய சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாதம் ஒன் றுக்கு 400 ரூபாய் வரை வருமானம் பெறுபவர்களுக்கு இந்தச் சட்டத்தினுடைய சலுகைக் கொடுக்கப்படுகிறது. இந்தச்

11.40 மணி

சட்டத்தில் இப்போது 5-வது பிரிவிலும், 7-வது பிரிவிலும் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திருத்தத் தினுடைய முக்கியமான வட்கருத்து என்னவென்றால், 1988 ஆகஸ்டோடு முடிகின்ற அந்த கால அவகாசத்தை 1989 ஆகஸ்டுவரை நீட்டிப்பதற்காக அவசரச் சட்டம் பிறப்பிக்கப் பட்டது. ஆகஸ்டு மாதத்திற்குப் பிறகு மீண்டும் 3 மாத காலம், தாசில்தாருக்கு டிஸ்கிரிசன், அந்தக் கால அவகாசத்

திற்குள்ளாக விண்ணப்பம் செய்ய முடியாதவர்கள், தகுந்த காரணங்களைச் சொல்வார்களானால, இன்னும் 3 மாதம் நீட்டிப்புக் கொடுக்கலாம் என்று வகை செய்யப்பட்டு இருக்கிறது. இது இப்போது இருக்கிற சட்டத்தின் முடிவுப்படி இந்த மாதம் அதாவது 11 ஆம் மாதம் 23 ஆம் தேதியோடு முடிகிறது 23—8—1989 வரை சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற கால கெடு முடிகிறது. தாசில்தாருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற டிஸ்கிரிசன்படி 23—11—1989 வுடன் கால அவகாசம் முடிகிறது. இங்கே நம்முடைய உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்கள் இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் ஏழைகளுக்காக கொண்டுவரப்படுகிற சட்டம், நலிந்தவர்களுக்காகக் கொண்டுவரப்படுகிற சட்டம், வட்டிக் கடைக்காரர்களால், அடகுக் கடைக்காரர்களால் கொடுமைப் படுத்தப்பட்டு கஷ்டப்படுகிற மக்களைக் காப்பாற்றுவதற்காகக் கொண்டுவரப்படுகிற சட்டம். இது 1982-லே ஆரம்பிக்கப் பட்டு, 1984, 1986, 1988 என்று இந்தச் சட்டம் 1989 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

இங்கே உறுப்பினர்கள் கேட்டார்கள், சட்டத்தினுடைய பலனை மக்கள் எந்த அளவிற்குப் பெற்றிருக்கிறார்கள் என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள். 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம், 31—12—1981 அன்று முடிந்த ஆண்டில், குடும்ப வருமானம் 4,800-க்கு மேற்படாதவர்கள் 24—8—1982-க்கு முன்பு வாங்கிய கடன்கள் முழுவதுமாக தள்ளுபடி செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. கிராமப்புற மக்கள், குறிப் பிட்ட காலத்திற்குள் மனுச் செய்யவேண்டும் என்று அறியாமல் இருக்கிறார்கள் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டபோது, அவ்வப்போது இயற்றிய திருத்தச் சட்டங்களால் அந்தக் காலக் கெடு 23—8—1988 வரையில் நீட்டிக்கப்பட்டது. தகுதியான நேர்வுகளில் மேலும் 3 மாத காலம் அதாவது 23—11—1988 வரை மனுக்களைப் பெற்றுக்கொள்ள வட்டாட்சி யருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இந்தச் சட்டத்தின் செயல்பாட்டினை ஆய்வு செய்தபோது இச்சட்டத்தின் கீழ் 25,691 மனுக்கள் பெறப்பட்டு, அதில் 25,086 மனுக்கள் மீது ஆணை பிறப்பிக்கப்பட்டு 31—8—1989 வரை 66,21,697 ரூபாய் வரையில் நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது. 23—8—1988 ஆம் நாளுக்குள் கடன் நிவாரணம் கோரி மனுக்கள் கொடுக்கவேண்டும் என்பதை கிராமப்புறத்தில்இருக்கிற மக்கள் அறியாமல் இருக்கிறார்கள் என்பதை அரசு உணர்ந்தபோது, இந்தக் காலக் கெடுவை 1988-க்குப் பிறகு மேலும் ஒரு ஆண்டுக்கு நீட்டிக்கவும், தகுதியான நேர்வுகளில் மேலும் 3 மாத காலம், அதாவது 23—11—1989 வரை மனுக்களைப் பெறவும், ஏதுவாக இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்கள் வறுமைக் கோடு என்பதற்கு ஒரு கோடு நிர்ணயிக்கவேண்டும் என்று சொன்னார்கள். சில இடங்களிலே 200 ரூபாய் மாத வருமானம் என்றும், சில இடங்களிலே 300 ரூபாய் மாத வருமானம் என்றும் இருக்கிறது என்று சொல்லி, ஒட்டு மொத்தமாக ஒரே வருமானம, ஒரு குறிப்பிட்ட வருமானத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இப்போது இருக்கிற சட்டத்தின்படி மாதம் ஒன்றுக்கு 400 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கும் இந்தப் பாதுகாப்பு கிடைக்கும். ஆனால் நம்முடைய உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் சொன்னது போல, இந்தத் தீர்மானத்திலே அவர்கள் சொல்வது போல, மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் வருமானம் என்றோ, 300 ரூபாய் வரையில் என்றோ நிர்ணயித்தால் பல பேர் பாதிக்கப்படுவார்கள் என்று நினைக்கிறேன். இந்தக் 'கான்சீகுவன்ஸஸை' எண்ணிப் பார்க்காமல் சொல்லிவிட்டார் என்று தான் நினைக்கிறேனே தவிர அவருடைய நோக்கத்தை நான் எந்த விதத்திலும் குறை சொல்லவில்லை.

11.45 மணி

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைப் பற்றி இங்கே சொல்லுகிற போது, இந்தச் சட்டத்தையே நிராகரிக்க வேண்டுமென்று நான் அறிக்கை கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதை நான் கொடுத்ததிலே உள்ள நோக்கம் வேறு. அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுவதிலே உள்நோக்கம் இருப்பதாக நான் கருதுகிறேன். அப்படி நான் சொல்லவில்லை. இங்கே தரப்பட்டிருக்கிற அந்த திருத்தத்தை நிராகரிக்க வேண்டுமென்று நான் சொன்ன அதே நேரத்தில், நான் மற்றொரு திருத்தத்தையும் இங்கே தந்திருக்கிறேன். அது பின்னாலே வர இருக்கிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அது ஒன்று.

அடுத்து, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிற போது ஏதோ இந்த வருமான வரம்பு ரூ. 400 என்று இருப்பது சரியல்ல, அதைக் குறைக்க வேண்டும் என்று நான் சொன்னதைப் போல ஒரு கருத்து நிலவுகிற வகையிலே இங்கே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. இதற்கு 400 ரூபாய் வருமானம் என்று இருக்கிறது. மற்றவற்றிற்கு எல்லாம் ரூ. 200 என்றும் ரூ. 300 என்றும் சொல்லுகிறீர்கள், ஒரே நிலையாக இருக்க வேண்டுமென்று நான் சொன்ன போது, எவ்வளவு மக்கள் இதனால் அதிகப் பயன் அடைவார்கள், அதிக மக்கள் பயன் அடைவார்கள் என்ற கருத்தில், இந்த சீலிங், உச்ச வரம்பை உயர்த்த வேண்டுமென்று நான் சொல்லியிருக்கிறேன். அதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்

கொண்டு வருகிறேன். இங்கே நான் பேசியதெல்லாம் அவைக் குறிப்பிலே இருக்கிறது. ஆகையினால் தயவு செய்து தவறான எண்ணம் உறுப்பினர் மீது ஏற்படுகிற அளவிலே இங்கே எதுவும் சொல்வது சரியில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, அதனால்தான் நான் சொன்னேன், அப்படி எண்ணி இருக்க மாட்டார் நமது உறுப்பினர், ஏதோ தவறாக அப்படிச் சொன்னதாக நினைத்தேனே ஒழிய நான் ஒன்றும் உள் நோக்கம் கற்பிக்கவில்லை, இன்னும் சொல்ல வேண்டுமென்றால் உங்களைப் பற்றி பெருமையாக நினைத்துக் கொண்டு தான் நான் சொன்னேன். நீங்கள் சார்ந்திருக்கிற கட்சி, நீங்கள் சொல்லுகிற கொள்கை அடிப்படையிலே அப்படி சொல்லியிருக்க முடியாது.

இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்க வேண்டுமென்று, ''11—10—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்தம்) அவசரச் சட்டத்தை இப்பேரவை நிராகரிக்கிறது'' என்று இருக்கிறது. அப்படி என்றால் என்ன அர்த்தம்? அந்த எக்ஸ்டென்ஷன், அது தேவையில்லை என்று அர்த்தம். ஆனால் அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற எக்ஸ்டென்ஷன் தேவை என்று கருதித்தான் வலியுறுத்துகிறார் என்று நான் கருதுகிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உச்ச வரம்பு பற்றிச் சொன்னார்கள். ஆனால் அவர் எந்த அளவுக்கு வருமான வரம்பு நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அவர் சொன்ன வாதத்தை வைத்து நான் சொன்னேனே தவிர வேறு உள் நோக்கத்தோடு சொல்லுகிற பழக்கமும் கிடையாது. எனக்கு எந்த உள் நோக்கமும் கிடையாது. உள் நோக்கம் வைக்க வேண்டிய காரணமும் எனக்கு இல்லை.

அடுத்தபடியாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தீட்சிதர் அவர்கள் புதியதாக தோன்றி இருக்கிற நிதி நிறுவனங்கள் பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு இது போன்ற கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வருகிற போது, அந்தச் சட்டத்திலிருந்து எப்படி தப்பித்துக் கொள்ளலாம் என்று பல வேலைகளைச் செய்கிறார்கள். இங்கே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் அந்தச் சட்டத்திலேயிருந்து எப்படி தப்பித்துக் கொள்ளலாம் என்று பணிகள் நடைபெறுவதை நாம் என்றைக்கும் பார்ப்பதுதான். அப்படிப்பட்ட சங்கடங்கள் தோன்றும்போது அதைப் பற்றி பரிசிலித்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதிலே சர்க்காருக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது, என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இந்தச் சட்டத்தை நீட்டிக்க வேண்டுமென்ற ஒரு கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாக அறிக்கை கேட்டு இருக்கிறோம். அறிக்கை வரும்போது மக்களுக்குத் தேவை என்று கருதினால் சட்டத்தினுடைய கால அவகாசத்தை நீட்டிப்பதற்கும் அரசு தயங்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது, தாசில்தார் ஆபிசிலே காலதாமதம் ஏற்படுகிறது. சரியாக நிறை வேற்றப்படவில்லை என்று சொன்னார்கள். அந்தக் குறைபாடுகள் எல்லாம் இல்லாமல் கவனித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் தாசில்தார் அலுவலகத்திலே காலதாமதம் என்ற புகார் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி குறிப்பிட்ட புகார்கள் இருக்குமானால் அரசாங்கத்தின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும், என்பதை அவர்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களுடைய தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருமான வரம்பு என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பது உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்பே வைத்திருக்கிறேன். அது இந்த அரசால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை முன்வைத்து, இப்போது இருக்கிற விலைவாசியினுடைய அடிப்படையிலே—இது 1982 ஆம் ஆண்டிலே நிர்ணயிக்கப்பட்ட தொகை என்பதைக் கருத்தில் கொண்டு அது உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்து என்னுடைய தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

11-50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை ஒரே வரியில் சொல்லியிருந்தால் விளக்கமாக இருந்திருக்கும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 39/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று. சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு—2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

" In clause 2, in sub-clause (1), in sub-item (a), for the words 'eighty-four months' *substitute* the words ' one hundred and twenty months. "

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்று சொன்னபோது நான் இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். ஸ்பெஷல் கமிஷனர் அண்டு கமிஷனர் ஆஃப் ரெவின்யூ (அட்மினிஸ்ட்ரேஷன்) அவர்கள் 31-10-1989 ஆம் தேதிய கடிதத்தில் இந்தக் கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டுமா என்ற ஒரு கருத்தைக் கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அப்படி அந்தக் கருத்து பலம் பெற்று கால அவகாசம் தேவை என்ற கருத்து தெரிவிக்கப் படுமேயானால் இதை அரசு பரிசீலித்துப் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்தத் திருத்தத்தை இப்போது வலியுறுத்த வேண்டியதில்லை என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு-2 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 3 முதல் 5 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1989.

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''7—10—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப் பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 9/1989) இப்பேரவை நிராகரிக்கிறது.''

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. மாரப்பன் அவர்களுடைய தீர்மானமும் மாண்புமிகு அமைச்சர் அவர் களின் தீர்மானமும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன. கூட்டுறவு தொடர்பான சட்டங்கள் அனைத்தின்

*31—1 1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவுகள் 3 முதல் 5 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1989.

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''7—10—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப் பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 9/1989) இப்பேரவை நிராகரிக்கிறது.''

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. மாரப்பன் அவர்களுடைய தீர்மானமும் மாண்புமிகு அமைச்சர் அவர் களின் தீர்மானமும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன. கூட்டுறவு தொடர்பான சட்டங்கள் அனைத்தின்

*31—1 1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1989 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

மீதான விவாதங்களை ஒட்டுமொத்தமாக உறுப்பினர்கள் ஆற்றிய பிறகு அச்சட்ட முன் வடிவுகள் ஒவ்வொன்றும் பிரிவு வாரியாக பின்னர் எடுத்துக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது இது தொடர்பான உரையை முதலில் தொடங்கி வைப்பவர் திரு. பி. மாரப்பன்.

திரு. பி. மாரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சம்பந்தமான அவசரச் சட்டம் முன்னால் நடைமுறைப்படுத்தப்பட்டதிலே தனி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீண்ட நெடுங்காலமாக தேர்தல் நடைபெறாமலேயே இருந்தது. இப்போதாவது தேர்தல் நடந்திருக்க வேண்டும். அதற்கும் சில தவறான வழி முறைகளின் காரணமாக தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தத் தனி அலுவலர்களுடைய பதவிக் காலம் நீண்டு கொண்டே இருக்கிறது.

11.55 மணி

தனி அலுவலர்கள் ஆங்காங்கு ஒரு சிறிய சிற்றரசு போல் நடந்து கொண்டு உள்ளார்கள். குறிப்பாக, கவர்னர் ஆட்சிக் காலத்திலே தேர்தல் நடைபெறுவதாக இரண்டு முறை அறிவிக்கப் பட்டது. அப்போது முதலிலே புதிய மெம்பர்களைச் சேர்த்துக் கொண்டு தேர்தல் நடத்த வேண்டுமென்று ஒரு தேதி குறிப்பிடப் பட்டு இருந்தது. அதற்குப் பின்னால் ஏதோ ஒரு கோரிக்கையின் அடிப்படையிலே, உண்மைக்கு மாறான கோரிக்கையின் அடிப் படையிலே புதிய மெம்பர்கள் சேர்ப்பதற்குக் கால அவகாசம் நீட்டிக்கப்படவேண்டும் என்று சொல்லி திரும்பவும் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது. அதன் பின்னாலே, மெம்பர்கள் சேர்க்கப்பட்டார்கள்— மெம்பர்கள் சேராமல் இருந்தால்தானே சேர்வார்கள்— ஆகவே, அந்த மெம்பர்கள் சேர்க்கப்படவேண்டும் என்ற நோக்கத்திற்காக தள்ளி வைக்கப்பட்டும், அதிகமாக மெம்பர்கள் சேரவில்லை. காரணம், முன்பே அவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

ஆகவே, அப்போது தேர்தல் நடைபெறுவதாக ஒரு தேதியை அறிவித்து, சில சங்கங்களுக்கு, சில கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடைபெற்று, இன்னும் சொல்லப் போனால், போட்டி யின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்களும் கூட நிறைய உண்டு. அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்களை— திராவிட முன் னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடனே, அங்கே இருப்பவர்கள் எல்லாம் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் என்ற ஒரு தவறான கண்ணோட்டத்தில் தேர்தல் நடைபெற்ற அந்தச் சங்கங்களுக்கு எல்லாம் தேர்தலைக் கான்சல் செய்து விட்டு, ஒரு தேதியை அறிவித்தார்கள். அதற்காக புதிய மெம்பர்கள் அது வரையில் சேராதவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு, தேர்தல் அந்தத் தேதியிலே நடைபெறும் என்று அறிவித்தார்கள். ஆக, அறிவித்த தேர்தல் ஏன் நடத்தப்படவில்லை என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இப்படி மூன்று தடவை தேர்தல்

நடத்துவதற்காக, அரசிற்கு பல கோடி ரூபாய்கள் வீணாகச் செலவாகியிருக்கிறது, அரசு மட்டத்திலே, ஒவ்வொரு தேர்தலுக்கும் சுமார் 10 கோடி ரூபாய் விரயமாகியிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதே போல், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும், குறைந்த அளவு 10,000 ரூபாயிலிருந்து, 25,000 ரூபாய் வரையில் வீணாகச் செலவு ஏற்பட்டிருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது என்று நான்கருதுகின்றேன். அப்படி இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவ்வளவு பண விரயம் செய்து விட்டு, திரும்பத் திரும்ப, 3 தடவை தேர்தல் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதே; தள்ளி வைக்கப்பட்டு தனி அலுவலர்களை நியமித்தால் அந்தத் தனி அலுவலர்கள் ஒழுங்காக நிர்வாகம் செய்கிறார்களா?

அந்தத் தனி அலுவலர்கள் நிர்வாகத்திற்கு வந்த பின்னால் கூட்டுறவுச் சங்கங்களிலே நிர்வாகம் ஸ்தம்பிதம் ஆகிவிட்டது. குறிப்பாகச் சொல்லப் போனால், என்னுடைய தொகுதியிலே நெசவாளர் சங்கங்கள் ஏராளமாக இருக்கின்றன. நெசவாளர் சங்கங்களிலே நூல் விநியோகிப்பது இல்லை. கூலி கொடுப்பதில்லை. தலைவர்கள், போர்டுகள் இருக்கும்போது, அவர்கள் ஆர்வமாக சங்கம் நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஆங்காங்கு வியாபாரிகளைப் பிடித்து, சரக்குகளை விற்பதற்கு முயற்சி எடுத்தார்கள். ஆனால் இவர்கள் அடுத்த மாதம் மாறுதல் வந்து விடுமோ அல்லது அதற்கடுத்த மாதம் வந்து விடுமோ என்ற அடிப்படையிலே சரியாக வேலை செய்வதில்லை. அங்கே நெசவாளர்களுக்கு நூல் இல்லை. கூலி வாராவாரம் கொடுக்காமல், ஒவ்வொரு சங்கத்திலும் 3 மாதம், 4 மாதம் கூலி கொடுக்கப்படாமல் இருக்கிறது.

அது மட்டுமல்ல. தேர்தல் நடைபெறும்போது, மெம்பர்கள் புதியதாக சேர்க்கும் போது அங்கே நடந்த குறைபாடுகளை நான்சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1989 ஆகஸ்ட் 31ஆம் தேதி வரையில்—30 ஆம் தேதி பந்த்—அதற்கு முன்னாள் வரையில் யாரும் மெம்பர்கள் சேர்க்கப்படவில்லை. அது வரையில் அந்தச் சங்கங்களில், கூட்டுறவுச் சங்கங்களிலோ, மற்ற சங்கங்களிளோ மெம்பர்களே புதியதாகச் சேர்க்கப்பட வில்லை. திடீரென்று 31 ஆம் தேதி புயல் வந்த மாதிரி ஒவ்வொரு சங்கத்திலேயும், 200 உறுப்பினர்கள் இருக்கும் இடத்தில் 300 பேர் புதியதாக உறுப்பினர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

அப்படி 31 ஆம் தேதி சேர்ந்தார்களா என்றால் அது தான் இல்லை. 31 ஆம் தேதி வரையில் ஜனநாயக உரிமைகளே இந்த நாட்டிலே கூட்டுறவுச் சங்கங்களிலே. மறுக்கப்பட்டிருக்கின்றன. பொது மக்கள் அங்கே மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படு

1989 நவம்பர் 2] *[திரு பி. மாரப்பன்]*

வதற்கு அனுமதிக்கப்பட வில்லை. 31 ஆம் தேதிக்குப் பின்னால் ஆகஸ்டிற்குப் பின்னால், செப்டம்பர் 7, 8 தேதிகளுக்குப் பின்னால், மேலிடத்தினுடைய உத்தரவு என்று அந்தத் தனி அதிகாரிகள் சொல்லிக் கொண்டு—மேலிடத்தில் உத்தரவு இட்டார்களோ இல்லையோ அது எனக்குத் தெரியாது—அப்படிச் சொல்லிக் கொண்டு ஒவ்வொரு சங்கத்திலேயும் 300, 400 மெம்பர்களை அந்த 31 ஆம் தேதி மட்டும் சேர்த்திருக்கிறார்கள். அங்கே ஒரே நாளில் 300, 400 மெம்பர்கள்—சாதாரணமாக ஒரு சங்கத்திலே 200, 300 பேர் இருக்கிற இடத்திலே, அதுவரையில் புதிய மெம்பர்கள் சேர்க்கப்படாமல், அந்தக் குறிப்பிட்ட தேதியிலே 300 பேர் சேர்ப்பது எங்கேயாவது—வரிசையிலே க்யூவிலே நின்று மெம்பர் சேர்த்தால்கூட அவ்வளவு நேரத்திலே முடியாது—24 மணி நேரத்திலே மெம்பர்கள்...... (மணியடிக்கப் பெற்றது) ஒரு தீர்மானத்தில் தான் நான் பேசுகிறேன், உடனே முடிக்கச் சொன்னால் எப்படி முடிப்பது.......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கோ. பூவராகன்) : 2 மணித்துளிகளுக்குள் முடித்து விட வேண்டும்.

12-00 மணி

திரு. பி. மாரப்பன் : ஆக மெம்பர்களைச் சேர்க்கும் போது குறிப்பாக ஒரு சங்கத்திலே அந்தத் தனி அதிகாரி ஒரு அறிக்கை விடுகிறார். அங்கே சங்கத்தில் 31-8 வரை புதிதாக உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் அதற்கு நிபந்தனை சங்க விவகார எல்லையில் குடியிருப்பவராக இருக்க வேண்டும். தகுதியுள்ள உறுப்பினர் தறி ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் மற்றும் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும்; மற்ற விவரங்கள் சங்கத்தில் தெரிந்து கொள்ளலாம் என்று ஒரு உத்தரவு—சுற்றறிக்கை—விடுகிறார். ஆனால் ஆயிரம் ரூபாய் கொடுத்து உறுப்பினராக சேருவதற்கு யாரும் முன் வரவில்லை. ஆனால் சட்டப்படி 20 ரூபாய் பிரவேசக் கட்டணம் 50 பைசா கொடுத்தால் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அப்படி யாரும் சேர்த்துக் கொள்ளப் படவில்லை. அதற்கு பின்னால் 1 ஆம் தேதி சங்கத்திலிருந்து ரசீது புக் புதிய புத்தகம் 10 நம்பர் வாட்ச்மென் மூலம் வாங்கி வரும் நபர் வசம் கொடுத்து அனுப்பவும் என்று 1 ஆம் தேதி கையெழுத்து போட்டு அந்தத் தனி அதிகாரி கொடுத்து அனுப்பி அதற்கு பின்னால் 10 ஆம் தேதிக்கு மேல் 165 உறுப்பினர்களை அந்தச் சங்கத்தில் சேர்த்து இருக்கிறார்கள். ஆகவே இது எவ்வளவு பெரிய மோசடி என்பதை இந்த அவை சிந்தித்துப் பார்க்க வேண்டும், என்று நான் கேட்டுக் கொள்கிறேன். போகஸ் ஆக இது இருக்கிறதே அப்படி தான் சேர்த்தார்களே நெசவாளிகளாக பார்த்து சேர்த்தார்களா என்றால் அதுவும் இல்லை. பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளக் கூடிய உறுப்பினர்கள் பால் உற்பத்தியாளர்களாக இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் போகஸ் ஆக உறுப்பினர்களாக சேர்த்தால் பால் உபயோகிப்பாளர்கள் சங்கமாகத் தான் அது இருக்கும். ஆட்டுப் பாலுக்கும் மாட்டுப்

பாலுக்கும் வித்தியாசம் தெரியாதவர்களை எல்லாம் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்து இருக்கிறார்கள் (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கோ. பூவராகன்): விரைந்து முடிக்க வேண்டும். நல்ல கருத்துக்களைச் சொல்லவும்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஆட்டுப் பாலுக்கும், மாட்டுப் பாலுக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் எல்லாம் சங்கத்திலே தலைவர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எங்கேயாவது ஆட்டுப் பாலுக்கு சங்கம் இருக்கிறதா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஆட்டுப் பாலுக்கும் மாட்டுப் பாலுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தான் சொன்னேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கோ. பூவராகன்): உறுப்பினர் அவர்கள் மறுப்பு சொல்ல வேண்டாம், மேற்கொண்டு விரைந்து முடிப்பதற்கு முயற்சி எடுக்கவும்.

திரு. பி. மாரப்பன் : பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திலே உறுப்பினர்களாக இருப்பவர்கள் பால் உற்பத்தி செய்பவர்களாக ஆடு, மாடு அல்லது எருமை வைத்து பால் கறப்பவர்களாக இருக்க வேண்டும் அல்லது ஆடு மாடுகளை வளர்ப்பவர்களாக இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் ஆடு, மாடு வளர்க்காதவர்கள் அதிலே உறுப்பினர்களாக இருந்தால் அது பால் உபயோகிப்பாளர்கள் சங்கமாகத் தான் இருக்கும். (மணியடிக்கப் பெற்றது).

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, இங்கே கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய 4 சட்டங்கள் வந்து இருந்த போதிலும் கூட தனி அலுவலர்களின் நியமனத்திற்கான 2 சட்டங்கள் பற்றி மட்டும் நான் இங்கே கூற விரும்புகிறேன். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் நியமனச் சட்டம், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் நியமனச் சட்டம். இந்த தனி அதிகாரிகள் பற்றி குறிப்பிலே குறிப்பிட்டு இருப்பது போல 13 ஆண்டுகளுக்கு மேல் நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. 1976 ஆம் ஆண்டு 2 ஆண்டுகளுக்கு என்று நீட்டிக்கப்பட்டாலும் கூட—சங்கங்கள் எல்லாம் கலைக்கப்பட்ட பிறகு—அன்றிலிருந்து அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு 13 ஆண்டுகள் 4 மாதம் இதுவரை ஆகி மேலும் 9 மாதத்திற்கு இதை நீட்டிக்கக் கூடிய ஒரு சூழ்நிலையில் இந்தச் சட்டம் இப்போது இங்கே வந்திருக்கிறது.

12-05 மணி

1989 நவம்பர் 2] [திரு. சி. கோவிந்தராஜன்]

அதற்கு அடிப்படையான காரணம். கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தல்களே நடைபெறாத காரணத்தினால தனி அலுவலர்கள் நியமிக்கப்படுகின்ற சூழ்நிலையும், தொடர்ந்து அவர்கள் பதவியை நீட்டிக்கக் கூடிய சூழ்நிலையும் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு இத்தனை ஆண்டுகளாக தேர்தல் நடத்தாததற்கு இந்த அரசு பொறுப்பு இல்லை என்பதும் அனைவரும் அறிந்ததே. இந்த அரசு வந்தவுடனே அநேகமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவதற்காக ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து அக்டோபர் 31ஆம் தேதிக்குள் முடித்துவிட வேண்டும் என்று இருந்த போதிலும் கூட, இங்கே குறிப்பிலே கூறப்பட்டிருப்பது போல 1983ஆம் ஆண்டினுடைய அடிப்படைச் சட்டத்திலுள்ள வழி முறைகள் சிலவற்றைத் திருத்த வேண்டுமென்ற கோரிக்கை வந்ததும் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு அவகாசம் தேவை என்ற கோரிக்கை வந்ததும் காரணம் என்று கூறப்பட்டுள்ளது. இன்றைக்கு இருக்கக் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவர் உட்பட அந்தக் கோரிக்கையை வைத்ததாக பத்திரிகையில் செய்தி வந்ததை நானே கூட படித்தேன், அவகாசம் வேண்டுமென்று கோரி. எனவே அந்த அடிப்படையிலேதான் இது நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் உள்ள அனைவரும் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் இப்போது மீண்டும் இங்கே முதல் சட்டத்திலே மேலும், அக்டோபரிலிருந்து 9 மாதங்கள் நீட்டிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய கருத்து இந்தத் தனி அலுவலர்கள் எந்தச் சங்கத்தில் இருந்தாலும் சரி இந்தக் கால கட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தாத காரணத்தினால் பல்வேறு தவறான நிலைமைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை அனைத்து உறுப்பினர்களும் அறிவார்கள். அப்படிப்பட்ட புகார்களும் அரசுக்கு சென்று கொண்டிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால் தனி அலுவலர்களுடைய ஆதிக்கமே பல இடங்களிலே நடந்து கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஆலோசனைகளைக் கூட, பரிந்துரைகளைக் கூட, கோரிக்கைகளைக் கூட, கவனிப்பதில் தயக்கம் காட்டுவது மட்டுமல்ல கறாராக மறுத்தே விடுகிறார்கள். அதுமட்டுமல்ல. பல பிரைமரி சொசைட்டிகளில் இந்தத் தனி அலுவலர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பளத்தைக் கொடுப்பதற்குக் கூட வசதியில்லாத நிலையில் 5 சொசைடிகள், 6 சொசைடிகளுக்குச் சேர்த்து ஒரு ஸ்பெஷல் ஆபீசர் என்று சொன்னால் அவர்களுடைய மாதச் சம்பளத்தை கொடுப்பதற்கு இந்த 5 சொசைட்டிகளும் பங்கு கொடுக்க வேண்டும். அதைக் கூட கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தினால் உடனடியாகத் தேர்தலை நடத்தி தனி அதிகாரிகளுடைய நீட்டிப்பைக் குறுக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் கூற முற்படுகிறேன்

அதே போல, வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் இப்படிப்பட்ட சங்கங்கள் பல இடங்களிலே இருந்த போதிலும் கூட அந்தப் பெயரிலே எந்த விதமான பணியையும் செய்யாமல் ஆட்களும் இல்லாமல் இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலேயே நான் இருக்கக்கூடிய நகரத்திலேயே அப்படிப்பட்ட ஒரு நிறுவனம் இருககிறது. அந்த நிறுவனம் அக்ரோ சர்வீஸ். அதனுடைய பிரான்ச் இருக்கிறது. அதற்கான கட்டிடத்திற்கு வாடகை கொடுக்கப்பட்டு செலவழிக்கப்படுகிறதே தவிர அதில் விவசாயிகளுக்கான டிராக்டர் ரிப்பேர் அல்லது வேறு விதமான ரிப்பேர்கள் செய்வதற்கு வேண்டிய எந்தக் கருவியும் கிடையாது, ஆட்களும் கிடையாது. அது மட்டுமல்ல, கடலூரிலோ மற்ற இடங்களிலோ இருக்கக்கூடிய இப்படிப்பட்ட சர்வீஸ் சொசைடிகளுக்குச் சென்றால் காலாகாலத்தில் ரிப்பேர் செய்து கொடுப்பது கிடையாது. விலைப்பட்டியலும் அதிகமாகப் போடுகிறார்கள். இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் இந்த சொசைடிகளுக்கெல்லாம் தேர்தல் நடைபெற்று அங்கே வர வேண்டிய மக்களுடைய பிரதிநிதிகள் நியமிக்கப் படாததுதான். மக்களுடைய பிரதிநிதிகள் வந்தால் விவசாயிகளுடைய நலனைக் கருத்தில் கொண்டு காலாகாலத்தில் எதையெதை செய்து முடிக்க முடியுமோ அதைச் செய்வதற்கு முடியும். இன்னொன்று இங்கே பணி புரிகின்றவர்களுக்கு, ஊழியர்களுக்கு, காலாகாலத்தில் சம்பளத்தைக் கொடுப்பதில்லை, சம்பளமே மறுக்கப்படுகிறது. குறைந்த பட்ச சம்பளத்திலேயே அவர்களை வைத்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தினால்தான் இதை அதிகமாக நீட்டிக்காமல் குறைக்க வேண்டுமென்று என்னுடைய ஆலோசனையை இங்கே கூற விரும்புகிறேன். 9 மாதங்கள் தேவையில்லை. வேறு வழியில்லாமல் இன்றைக்கு நீட்டிக்க வேண்டிய சூழ்நிலை வந்திருக்கிறது என்பதை நான் ஏற்கெனவே எடுத்துக் கூறிவிட்டேன். அதற்கு இந்த அரசு பொறுப்பு இல்லை என்று சொன்னாலும் கூட, இப்போது நடைபெறக் கூடிய நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடனே, ஏற்கனவே முடிவெடுத்த பிரகாரம் பிரைமரி சொசைட்டிகளுடைய தேர்தலை ஒரு மாதத்திலேயும் அடுத்த சொசைட்டிகளுக்கான தேர்தலை அடுத்த மாதத்திலும் முடித்தால் தனி அலுவலர்களுடைய பதவி நீட்டிப்பை மேலும் நீட்டிக்காமல் இருக்கக் கூடிய நிலைமை ஏற்படும். 9 மாதங்கள் நீட்டிப்பதற்குப் பதிலாக 5 மாதங்களோ அல்லது 6 மாதங்களுக்குள்ளோ முடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் அப்படி இல்லையென்று சொன்னால் பல்வேறு விதமான ஊழல்களோ தவறுகளோ நடப்பதற்கு இந்த அரசு தான் பொறுப்பு என்ற பெயர் வருகிறது. அப்படி வேறுவிதமான

12-10 மணி

கருத்துக்கள் ஏற்படுவதற்கு வழி இல்லாமல் அதைக் கட்டுப் படுத்த இன்னும் கூட காலம் தாழ்த்தாமல் ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற எனது கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நான்கு சட்ட முன்வடிவுகளை அவையின் முன்னாலே வைத்திருக்கிறார்கள். நேற்றும் இன்றும் கடுமையான சுமையை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் அடிமட்ட அளவில் கூட்டுறவு இயக்கத்தின் முறையான வளர்ச்சிக்கு துணை செய்யும் வகையில் கூட்டுறவுச் சட்டங்கள் இருக்கவேண்டும். அடிக்கடி அரசியல் காரணங்களுக்காக தமிழ் நாட்டில் கூட்டுறவு முறை மழுங்கடிக்கப்படுவது வாடிக்கையாகிவிட்டது. அந்த வாடிக்கையின் அடிப்படையில் தான், அவசரச் சட்டம் Ordinance 3, ஆர்டினன்ஸ் 4 ஆகிய இரண்டும் 1-7-1989 அன்று பிறப்பிக்கப்பட்டன. அச்சட்டத்திற்குத் தரப்பட்ட Explanatory Statement ல்

"....The members of most of the Committees or boards of the Primary Co-operative Societies, who were elected prior ts 1976, were continuing till date...." என்றும் "The Government now considers that the continuance in office of the members of the Committees or the boards of the Primary Co-operative Soceities elected prior to 1976 would not be conducive to the orderly development of the Co-operative movement at the basic level...."

..

.... என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அப்படிச் சொல்லியுள்ளது தமிழ்நாட்டில் உள்ள பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கும் பொருந்துமா என்று நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால் இந்தச் சங்கங்களுக்கு 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முறையாக தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. என்பது எல்லோருக்கும் தெரியும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நம்புகிறேன். அந்த பால் உற்பத்தியாளர் சங்கம் நல்லபடியாக இயங்கிக் கொண்டிருந்தது. தி.மு.க. வைச் சேர்ந்தவர்களை அதில் நுழைக்க வேண்டுமென்ற தீய நோக்கத்தில் 6,000 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. 1988-ஆம் ஆண்டு நடந்த தேர்தல் அடியோடு மறைக்கப்பட்டுள்ளது. இந்த Explanatory Statement-லும் சரி, சட்ட முன்வடிவிலும் சரி, அவசரச் சட்டத்திலும் சரி, அப்படி மறைத்தது மன்னிக்க முடியாத குற்றம். அதற்குப் பரிகாரம் காண முயற்சி செய்யுங்கள் என்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னதைப்போல, ஆளுங்கட்சிக்காரர்களை அங்கே நுழைக்க வேண்டுமென்ற தீய நோக்கத்தோடு அந்தச் சங்கங்கள் கலைக்கப்பட்டன என்பதை நான் முழுமையாக மறுக்கிறேன். குறிப்பாக 6,000 பால் உற்பத்தியாளர் சங்கத்தில் 2/3 பங்கு சங்கங்களில் மட்டும் தான் முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டது. மீதி சங்கங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

தேர்தல் நடத்தப்பட்ட சங்கங்களில் கூட அன்றைய ஆளுங்கட்சிக் காரர்களையும், அதற்கு முன்னால் இருந்தவர்களையும்—குறிப்பாக ஒரு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் 200 பேர் இருக்கிறார்கள் என்றால், அதில் 25 உறுப்பினர்களுக்கு மட்டுமே ஓட்டுரிமை என்று வைத்துக் கொண்டு, வழி வழியாக பரம்பரையாக அவர்களே அந்த தேர்தல்களில் வெற்றி பெறுவது என்று இருந்த அந்த நிலையை மாற்றுவதற்காகத்தான் நாட்டில் இருக்கிற பால் உற்பத்தியாளர்கள் அத்தனை பேரையும் அந்தச் சங்கத்தில் உறுப்பினர்களாக ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் அந்தச் சங்கங்களைக் கலைத்து, இன்றைக்கு தேர்தல் நடத்துவதற்கு முன்பு அனைத்து உறுப்பினர்களுக்கும் வாக்குரிமை கொடுக்க வேண்டுமென்று இந்தச் சட்டத்தை திருத்தியிருக்கிறதே அல்லாமல் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களை மட்டுமே அங்கே கொண்டு வர வேண்டுமென்று அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி: பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பால் உற்பத்தியாளர் சங்கத்தைக் கலைத்து விட்டு அதற்கும் சேர்த்து தேர்தல் வைப்பதற்காக ஏற்பாடு செய்வோம் என்று சொன்னார்கள். மற்ற சங்கங்களுக்குத்தான் தேர்தல் வைக்க முனைந்தார்களே தவிர பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு தேர்தல் வைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாநம்பி அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற சங்கங்களுக்குத் தேர்தல் வைக்கும்படி நோட்டிபிகேஷன் வந்தபோதே, பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கும் வைக்கும்படி 24-ந் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்பே இந்த அரசு பல்வேறு உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, இந்தத் தேர்தலை வைக்க முடியாமல் போனதே தவிர, தேர்தல் நடத்துவதற்கு ஆயத்தமாகவே எப்போதும் இருக்கிறது.

12-15 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கோ. பூவராகன்): உறுப்பினர்களும், அமைச்சர்களும் இடையிடையே குறுக்கிட்டுப் பேசுவதால் காலம்தான் கடந்துகொண்டிருக்கும். ஆகவே இடையிடையே குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, தேர்தல் அறிவிக்கப்படவில்லை, பால் உற்பத்தியாளர்களுடைய சங்கத்தைப் பொறுத்தவரையில் என்பது மறுக்க முடியாத உண்மை. என்றாலும் புதிய உறுப்பினர்களைச் சேர்த்து அவர்

களையும் நிர்வாகத்தில் பங்குபெறச் செய்ய வேண்டும் என்று காரணம் காட்டினார் அமைச்சர். பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு இது நிச்சயமாகப் பொருந்துமா என்பது புரியவில்லை. நேஷனல் டெய்ரி டெவலப்மெண்ட் போர்டு அறிவுரைப்படியும், தமிழ்நாடு கோவாப்பரேட்டிவ் ஆக்ட் 1983 செக்ஷன் 12-ன் படியும், Proviso (ii) to Section 26 (l) (c) of the Tamil Nadu Co-Operative Societies Act, 1983 which says that "the Government may make rules restricting the right of a member to vote in any specified matter in specified circumstances" என்பதன் படியும் தமிழ் நாட்டிலுள்ள 6,000 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ' பைலா ' 5 (B 2) உண்டாக்கப்பட்டது. அதன்படி அந்த உறுப்பினர்கள் முந்தைய ஆண்டில் கூட்டுறவுச் சங்கத்திற்கு 120 நாட்கள் அல்லது 300 லிட்டர் பால் வழங்கா விட்டால் மற்ற எந்த உரிமைகளையும் பெற முடியாது. அதாவது மற்ற உரிமை என்பதில் ஓட்டுப் போடுவது, தேர்தலில் போட்டியிடுவது ஆகியவை அடங்கும். ஆதலால் புதிய சட்டப்படி 31-8-1989-க்குள் உறுப்பினர்களைச் சேர்த்தாலும் அவர்கள் அவசரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளபடி ஓட்டளிக்க முடியாது; பங்குபெற முடியாது என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும். ஆகவே செக்ஷன் 2 (12) என்பதன்படி 1-9-1988 முதல் 31-8-1989 முடிய ஒரு கூட்டுறவு ஆண்டாகும். அந்தக் குறிப்பிட்ட ஒரு ஆண்டில் 120 நாட்கள் பால் வழங்கிய அல்லது 300 லிட்டர் பால் வழங்கிய உறுப்பினர்கள் தான் சங்க நிர்வாகத் தேர்தலில் பங்குபெறவோ அல்லது வாக்களிக்கவோ முடியும். மேற்படி 'பைலா' நேஷனல் டெய்ரி டெவலப்மென்ட் போர்டு கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசுக்குத் தரப்பட்ட அதிகாரத்தின் கீழ் பதிவாளர் ஏற்படுத்திய ' பைலா '. அதனால்அவசரச் சட்டத்தின் 'எக்ஸ்பிளேனேட்டரி ஸ்டேட்மெண்ட் ' மூன்றாவது பாராவில் நியாயமான, நேர்மையான தேர்தலில் புதிய உறுப்பினர்களும் பங்கு பெற்று 31—10—1989--க்குள் நடந்து முடிந்துவிடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது ' என்று குறிப்பிடப்பட்டு இருந்தது அல்லவா ? அது உண்மையாக இருக்க முடியாது. அது ஒரு ஏமாற்று வேலை.

அரிசன மக்களுக்கும், பெண்களுக்கும் முறையே 18 சதவீதம் மற்றும் 30 சதவீதம் ஒதுக்கீடு செய்வதுதான் சங்க நிர்வாகத்தைக் கலைக்கக் காரணமாக இருப்பது என்பது நியாயம் அல்ல. போதிய அளவுக்கு அவர்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை என்றால் பதிவாளரே நியமனம் செய்யலாம். The Registrar may nominate என்று இருக்கிறது. சுலபமாக நியமிக்க வழி இருக்கும்போது கலைத்தது ஏன் என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். புதிய உறுப்பினர்கள் வாக்களிக்கவேண்டும் என்பதற்காகக் கலைத்தோம், புதிய உறுப்பினர்கள் நிறைய பேர் சேர்க்கப் படுகிறார்கள்: புதிய வாக்காளர்கள் வருகிறார்கள், அவர்களும் பங்கு பெற்றுத் தேர்தல் நடத்தப்பெறும் என்று சொல்கிற வாதம் ஆபத்தான வாதம், என எச்சரிக்க விரும்புகிறேன்.

இந்தச் சூழ்நிலையில் நியமிக்கப்பட்டுள்ள தனி அதிகாரிகள் ஆலோசனைக் குழுக்களை நியமித்து இருக்கிறார்கள். கிளைக் கழகத்திலிருந்து ஒன்றியக் கழகத்திற்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது போல் நியமனங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. எனவே நியமிக்கப்பட்டுள்ளவர்களில் எவ்வளவு பேர் பால் உற்பத்திக்குச் சம்பந்தம் இல்லாதவர்கள் என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் 1988 ஆம் ஆண்டு ஆளுநர் ஆட்சிக் காலத்தில் இரண்டுமுறை கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டபோதும் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒத்திவைக்கப்பட்டது. ஆகவே புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதையே ஆபத்தானது என்று காங்கிரஸ் கட்சியின் கொறடா அவர்கள் சொல்வது ஏற்றுக் கொள்வதற்கில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அந்த வாதத்திலே இருக்கிற ஆபத்தை நிச்சயமாக நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன். ஆளும் கட்சியும் புரிந்துகொள்ளும் என்று நிச்சயமாக நம்புகிறேன். இந்தச் சூழலில் உறுப்பினர்கள் சேர்ப்பு என்ற பெயரால் அடிக்கடி ரிஜிஸ்ட்ரார் அவர்கள் யார், யாரெல்லாம் உறுப்பினர்களாகச் சேர விரும்புகிறார்களோ அவர்கள் அத்தனை பேர்களும் சேர்க்கப்படுவார்கள் என்று அன்றைக்கு சொன்னார்கள் பால் உற்பத்தியாளர்களை வைத்துக் கொண்டு சொன்னார்கள், ஆனால் அவர்கள் கலைந்து சென்றவுடனே சங்க உறுப்பினர்களை வைத்துக்கொண்டு, சங்க நிர்வாகிகளை வைத்துக்கொண்டு யாரெல்லாம் ஆலோசனை போர்டிலே உறுப்பினர்களாகஇருக்கிறார்களோ அவர்கள் சொல்கிறபடிதான் உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும் என்று. . . .

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு தடவைகள் இந்த அரசின் மீது அநீதியாகவும், அமைச்சர்கள் மீது அநீதியாகவும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டும். எனவே நேரத்தைக் கடத்துவதற்காக நான் சொல்லவில்லை. இங்கே சொன்னார்கள். தேசிய பால்வள நிறுவனத்தின் மூலம் இங்கே இருக்கிற பதிவாளர் அவர்களை

வைத்துக் கொண்டு ஒரு சட்டத்தை இயற்றி அந்தச் சட்டத்திற்குப் புறம்பாகக் கலைத்தது என்று சொன்னார்கள். புனிதமானது என்று சொல்லக்கூடிய அரசியல் சட்டத்தையே கூட பல்வேறு முறை திருத்தியவர்கள் (குறுக்கீடு). இந்தக் காலத்திற்கு ஏற்ப, இவர்கள் சொன்னார்களே, இவர்களைப் போன்றவர்களும், இதற்கு முன்னோரும் அந்தப்பால் உற்பத்தியாளர் சங்கத்தில் தலைமைப் பொறுப்பில் எங்கே நாம் வரமுடியாமல் போய்விடுவோமோ என்ற எண்ணத்தில் தான் ஆளும் கட்சியை இன்றைக்கு அநியாயமாக குற்றஞ் சாட்டிக் கொண்டிருக்கிறார்கள். புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது ஆபத்து என்று சொல்லுகிறார்கள். 18 வயதானவர்களைச் சேர்த்து தேர்தல் நடத்த வேண்டுமென்று சொன்னவர்கள்தான் இப்போது புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது ஆபத்து என்று இங்கே சொல்லுகிறார்கள். புதியவர்களும் வர வேண்டும். அனைவரும் பங்கு பெற வேண்டும். பால் உற்பத்தி செய்கின்ற எந்த ஒரு நபரும் அதில் உறுப்பினராகி, ஓட்டுப்போடும் உரிமையையும் பெற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடுதான் அந்தச் சங்கம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தத் தயாராக இருக்கிறது அரசு என்பதை மிகப் பணிவன்புடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

12-20 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கோ. பூவராகன்) : தயவுசெய்து உறுப்பினரும் அமைச்சரும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கு நேரம் இல்லை. தொடர்ந்து உறுப்பினர் பில்லில் உள்ள கருத்துக்களைக் கூறி விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஒரு வினாடி கூட வீணாக்காமல் பேச வேண்டுமென்று விரும்புகிறேன். ஒவ்வொரு வார்த்தைக்கும் அவர் பதில் சொல்ல வேண்டுமென்று நினைத்தால் தனியாக பேசிக் கொள்ளலாம். நான் சொல்வது, அவர் சொல்லிவிட்டு வந்ததற்குப் பின்னாலே உறுப்பினர்கள் சேர்க்கப்படவில்லை. நியமிக்கப்பட்டிருக்கிற ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள் அத்தனைபேரும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. உதாரணமாக கடைசியாக ஒரு தேதி குறிப்பிட்டு, அந்தத் தேதிக்குள் உறுப்பினர்கள் பதிவு செய்யலாம் என்று சொல்லி கோவை மாவட்டம் முழுவதும் மற்றும் தமிழகம் முழுவதும் பல உறுப்பினர்கள் தங்களுடைய 'பாரங்கள்' கொடுத்திருக்கிறார்கள். நான் பகிரங்கமாகவே சொல்ல விரும்புகிறேன். இன்றுவரையில் அவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படவில்லை. ஏன்? அவர்கள் பால் உற்பத்தியாளர்கள். மாடு, எருமை வைத்திருக்கிறார்கள். அவர்களை ஏன் சேர்க்கவில்லை என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். அவர்களை அப்படியே வைத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருப்

பதற்கு ஆதாரம் வைத்திருக்கிறார்கள். ஒருசில இடங்களில் எழுதி வாங்கியிருக்கிறார்கள். எழுதிக் கொடுத்த செக்கரட்டரி களை மிரட்டியிருக்கிறார் டெப்டி ரெஜிஸ்ட்ரார். ஏன் எழுதிக் கொடுத்தாய், எழுதிக் கொடுக்கும் அதிகாரத்தை உனக்கு யார் கொடுத்தது என்று அவர் மிரட்டியிருக்கிறார். (குறுக் கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கோ. பூவராகன்) : உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்பு வது.... (குறுக்கீடு). அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அமரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு) நான் பதில் சொல்ல வேண்டும் அல்லவா ? (குறுக்கீடு)

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் அப்படி துள்ளி எழும்போது எங்களுக்கு பயமாக இருக்கிறது. எங்கள் பயத்தை நீக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ** அத்தகைய வார்த்தை களை இங்கே உபயோகப்படுத்துவது முறையல்ல. அதை மறுக்க அமைச்சருக்கு உரிமை உண்டு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கோ. பூவராகன்) : நான் ஒன்று சொல்கிறேன். உறுப்பினர் அவர்கள் தயவு செய்து தனிப்பட்ட முறையில் அதிகாரிகள் பற்றியோ அமைச்சர்கள் பற்றியோ இதை எல்லாம் செய்தார்கள் என்று பேசுவது இந்த பில்லில் வராது. பில்லில் என்ன குறைகள், அவற்றை நிவர்த்தி செய்வது எப்படி என்பதை மட்டும் இங்கே சொன்னால் போதும். விரைந்து முடிக்க வேண்டும்,

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சேர்க்கப்படவில்லை என்று சொல் வதில் தவறு கிடையாது. ஆகவே, சேர்க்கப்படவில்லை என்பதை சொல்ல விரும்புகிறேன். அதுபோல ஆலோ சனைக் குழுவை ஏற்படுத்தி இன்றுவரையில் அவர்கள் சேர்க்கப் படவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்பு கிறேன். அதுபோல ஆலோசனைக் குழுவை ஏற்படுத்தியதன் விளைவு என்னவென்றால் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் கலைக்கப்பட்டதற்கு பிறகு....

** மாண்புமிகு பேரவைத் தலைவருடைய ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். ** என்று சபைக் குறிப்பிலே இடம் பெறுகிற அளவுக்கு உறுப்பினர் பேசியிருக்கிறார். இது சபைக் குறிப்பிலே இடம் பெறுவது நியாயமா என்ற தீர்ப்பை நீங்கள்தான் தர வேண்டும். (குறுக்கீடு) அதாவது இப்படி பேசுவதுதான் முறை என்று சொன்னால் யாரைப் பற்றி வேண்டுமானாலும, ஆதாரம் இல்லாமல் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று ஆகி விடும் அல்லவா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கோ. பூவராகன்): தனிப்பட்ட முறையில்** என்று எல்லாம் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கலைப்பதற்கு முன்னர் நாள் ஒன்றுக்கு மாநிலம் முழுவதும் 13 லட்சம் லிட்டர் பால் வந்துகொண்டிருந்தது. இந்த இரண்டு மாதங்களில் அது 11 லட்சம் லிட்டர் பாலாகக் குறைந்துவிட்டது. அதுபோல கோவை மாவட்டத்தில்....

திரு. இரா. மோகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் பணிவன்போடு உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் ** என்று சொன்ன அந்த வாசகம் அவைக் குறிப்பில் இடம் பெறக்கூடாது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கோ. பூவராகன்) : முன்கூட்டியே அமைச்சருக்கும் உறுப்பினருக்கும் சொல்லியிருக்கிறேன். அதுமாதிரி தனிப்பட்டமுறையில் ஒருவருக்கொருவர் மாற்றுக் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டு இருக்க வேண்டாம்.

12-25 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : On a Point of order தலைவரவர்களே, இப்போது மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா அவர்கள் ** என்று பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் அவர்கள் குறிப்பிட்டதுபோல அது அப்படியே இடம் பெறுமானால், மாலையிலே பத்திரிகையில் ** என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் பேசினார் என்று வருகிறபோது அது ஒரு தவறான உள் நோக்கத்தைக் கற்பிக்கக்கூடும். ஆகவே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதுதான் முறையாக இருக்கும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. குமரி அனந்தன் : On a point of order தலைவரவர்களே, இதைப் பொறுத்து நீங்கள் ஒரு தீர்ப்பு வழங்கி விட்டீர்கள் இப்போது, அந்தத் தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு, அதனை மாற்றுவது என்பதோ அல்லது மாற்ற வேண்டுமென்று சொல்வதோ அவையில் ஒரு முறையான பழக்கமல்ல, மரபல்ல, (குறுக்கீடு).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கோ. பூவராகன்) : உறுப்பினர்கள் தயவு செய்து அமருங்கள். (குறுக்கீடு) தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, 4 சட்ட முன்வடிவுகள் இங்கே நிறைவேற வேண்டியிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் வாதங்களைத் தவிர்த்து நல்ல கருத்துக்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசிய பேச்சும், அதையொட்டி பால் வளத்திற்குப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் மாண்புமிகு திரு. நேரு அவர்கள் சொன்ன கருத்துக்களும் இப்போது அப்படியே அவைக்குறிப்பிலே இருக்கின்றன. இந்த ஆட்சிக்கு விரோதமாக அவை பத்திரிக்கைகளிலே செய்திகளாக வந்துவிடுமென்ற அச்சம் எங்களைப் பொறுத்தவரையிலே இல்லை. அவர் பேசியதும் சபைக்குறிப்பிலே இருக்கட்டும், இவர் மறுத்ததும் சபைக் குறிப்பிலே இருக்கட்டும். தொடர்ந்து உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1988-ல் கூட்டுறவுத் தேர்தல்களுக்கு முன் . . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. கே. ரமணி : On a point of order தலைவரவர்களே, இங்கே சட்டம் பற்றி பேசப்படுகிறது. இதிலே point of order கிளப்ப முடியாது என்று சொல்வது சரியாகாது. இங்கே கிளப்பப்பட்டிருக்கும் point of order முக்கியமான அவையினுடைய உரிமை மீறலைத் தடுப்பதற்காக சபாநாயகர் அவர்கள் அனைவருக்கும் உரிமை வழங்க வேண்டிய பிரச்சினையாகக் கிளப்பப்பட்டிருக்கிறது. திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஓரளவுக்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சட்டம் எல்லாம் தெரிந்தவர். அவர் என்ன சொல்லியிருக்கிறார்?** என்று சொன்னதாக ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறார். அது தப்பு என்று ஒரு ஆட்சேபணையை திரு. வரதராசன் அவர்கள் கிளப்பியதற்குப் பிறகு, ** என்று இரண்டாவதாக அவர் பேசுகிறபோது சொல்லியிருக்கிறார்கள். அது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமென்று விவரம் தெரிந்த திரு. குமரி அனந்தன் போன்ற தலைவர்கள் சொல்லுகிறார்கள். அப்படி என்றால் நாங்கள் அத்தனை பேரும் அந்த நாகரீகத்திற்கு எங்களைக் கீழே கொண்டு போக வேண்டியிருக்கும். அது சரியல்ல. அது அவையினுடைய மரபுகளுக்கும், முறைகளுக்கும் தவறானது. ** அதில் பிரச்சினை இருக்கிறது. அதற்கு சபாநாயகர் அவர்களின் தீர்ப்பு வேண்டும். இது சபையினுடைய உரிமையைக் காப்பாற்றுவதாகும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1988-ல் கூட்டுறவுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னால் கோவை மாவட்டத்திலே நாள் ஒன்றுக்கு வந்து கொண்டிருந்த பாலின் அளவு 60,000 லிட்டர். தேர்தலுக்குப் பின்னால், நிர்வாகக் குழு கலைக்கப்படுவதற்கு முன்பாக 1,20,000 லிட்டராக அது அதிகரித்தது. இப்போது சங்கங்கள் கலைக்கப்பட்டதற்குப் பின்னால் மீண்டும் 90,000 லிட்டராகக் குறைந்திருக்கிறது. இந்த நிலைமை நீடித்தால் இன்னும் குறைய வாய்ப்பு உள்ளது. உதாரணமாக என்னுடைய சொந்த ஊரில் சுல்தான்பேட்டையில் 1988-ல் நாள் ஒன்றுக்கு 500 லிட்டர் பால் தான் வந்து கொண்டிருந்தது. தேர்தல்கள் முடிந்து, நிர்வாகக் குழு கலைக்கப்படுவதற்கு முன்னால் 2,300 லிட்டராக உயர்ந்தது. இப்போது சங்கம் கலைக்கப்பட்டு, தனி அதிகாரி பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு நாள் ஒன்றுக்கு வரும் பாலின் அளவு 1,700 லிட்டர். அவசரச் சட்டம் எண். 4, பிரிவு 5 (1)-ன் கீழ் பார்வை 2-ல் காணும் அரசு ஆணையின்படி ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக— Members of the Advisory Board 25—8—1989லிருந்து 31—10—1989 வரை நியமித்துள்ளது. இந்தக் குழுவை மேலும் நீட்டிக்காமல், பழைய நிர்வாகத்திடமே— நல்லமுறையில் பரிபாலனம் செய்துகொண்டிருந்த பழைய நிர்வாகக் குழுக்களிடமே உடனடியாக நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும். தேர்தலை நடத்தும்போதும் அந்த நிர்வாகக் குழுக்களை வைத்துக் கொண்டே தேர்தலை நடத்திவிடலாம் என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

12-30 மணி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதைப் போலவே, கடந்த ஆண்டு பேச்சுவார்த்தையின் போது ''லீன் சீசனுக்கு'' பால் உற்பத்தியாளர்களுக்கு, பாலின் ஒரு கிலோ திடப் பொருளுக்கு 2 ரூபாய் உயர்த்திக் கொடுக்கலாம் என்று அரசு ஒப்புக் கொண்டது. பலமுறை கேட்டுக் கொண்டும், அது உயர்த்திக் கொடுக்கப்படவில்லை. இடுபொருள்களின் விலையோ உயர்ந்திருக்கிறது. எனவே, பால் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிர்வாகத் திறமை இன்மையால், முன்பு எப்போதும் இல்லாத வழக்கமாக, பால் உற்பத்தியாளர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்வதற்கு 30-லிருந்து 40 நாட்களாகின்றன. பலமுறை நாங்கள் கேட்டாகிவிட்டது. இந்த தீபாவளியின்போதும் கூட, முழுத் தொகையையும் வழங்கவில்லை. பால் உற்பத்தியாளர்கள், சின்னஞ்சிறு விவசாயிகள். பால் உற்பத்தியாளர்கள் கிராமங்களில் உள்ள சாதாரணமான நிலமற்ற தொழிலாளர்கள். அவர்களுக்கு இவ்வளவு சிரமத்தைக் கொடுப்பது முறையல்ல. எனவே உடனடியாக அவர்களுக்குப் பணம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே, தேசிய பால் வள நிறுவனத்தால், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 68 கோடியாகும். அந்த நிறுவனத்தின் தலைவர் டாக்டர் குரியன் அவர்கள் ''பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு இந்தத் தொகை வழங்கப்பட வேண்டுமென்று சொன்னால், தேர்தல்கள் அவற்றிற்கு முறைப்படி நடத்தப்பட வேண்டும்—விதிகளின்படி அவற்றிற்கான தேர்தல்கள் நடந்து முடிந்தால்தான் அந்தத் தொகை கொடுக்கப்படும்'' என்று நிபந்தனை விதித்திருந்தார். அதன் படிதான் 1988-ஆம் ஆண்டில் பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு முறைப்படி தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டு, ஒன்றியங்களுக்கான தேர்தல்கள் முடிக்கப்படாமல் இருந்தது. இந்த அரசு, ஒன்றியங்களுக்கு மட்டும் தேர்தலை நடத்தி இருந்தால், பால்வள வாரியத்திலிருந்து—என். டி. டி. பி-யிலிருந்து—ரூ. 68 கோடி தொகையைப் பெற்றிருக்கலாம். தற்போதைய சூழ்நிலையில் அந்த ரூ. 68 கோடி பணம் நமக்குக் கிடைக்குமா என்பதே கேள்விக் குறியாக இருக்கிறது. (மணி அடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 20 மணித்துளிகளுக்கு மேலாகிறது. இன்னும் ஒரே ஒரு மணித் துளி மட்டும் தருகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அதில் 10 நிமிஷங்களை மற்றவர்களே எடுத்துக் கொண்டுவிட்டார்கள். எனவே இதற்கும் அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கக் கடமைப்

பட்டிருக்கிறார்கள். அதே போல, நகரத்தில் பால் உற்பத்தியையும் விற்பனையையும் அதிகப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். விற்பனை மையங்கள் அதிகரிக்கப் பட வேண்டும். சென்னை நகரத்தில் மட்டுமல்ல. மற்ற எல்லா நகரங்களிலேயும் அவை திறக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர் சங்கங்களைப் பொறுத்தவரையில்—கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் திடீரென்று ஒரு பழக்கம் மாற்றப்பட்டிருக்கிறது, உற்பத்தியாளர் சங்கங்களுக்கு முன்பு 10 பைசா கமிஷன் தொகையாகக் கொடுக்கப்பட்டது. அதுதான் அவர்கள் கொள்முதல் செலவுக்கு வைத்துக் கொண்டிருந்த பணம். இப்போது திடீரென்று ஒரு சர்க்குலர் போட்டு இருக்கிறார்கள். அதன்படி இனி 5 பைசா தான் கமிஷன் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கையொப்பமிட்டிருக்கிற சுற்றறிக்கையிலே அப்படி சொல்லப்பட்டிருக்கிறது. எனவே 21—10—1989 முதல் 5 பைசா தான் கொடுக்கப்படும் என்று அந்த சர்க்குலரிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி பார்த்தால், பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு நஷ்டம் வரும். இல்லாவிட்டால், பால் உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கிற பணத்தில்தான் சங்கங்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். இதனால் பால் உற்பத்தியாளர்களின் வருமானம் குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே, பால் உற்பத்தியாளர் சங்கங்களிலே பணி புரியும் ஊழியர்கள் பெரும்பாலும்....(மணி அடிக்கப் பெற்றது) என்னுடைய நேரத்தை மற்றவர்களே எடுத்துக் கொண்டார்கள். என்றாலும் சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன். 1977-ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தச் சங்கங்களில் பெரும்பாலும் குறைந்தபட்ச தேவையான கல்வித் தகுதி உள்ளவர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், அனுபவத்திலும் குறுகிய கால கிராம ஊழியர் பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் திடீரென்று கூட்டுறவுப் பயிற்சியும் பெற்றிருக்க வேண்டும் என்று சொன்னால் அவர்கள் வேலை இழக்கிற நிலைதான் வரும். செகரட்டரி தான் அனைத்தையும் செய்கிறார். அவர் தான் கணக்கு வழக்குகளை வைத்திருக்கிறார். ''டே புக்''-ஐ அவர்தான் மெயின்டெயின் செய்கிறார். அவரைப் பொறுத்தவரையில் அவர் கூட்டுறவு பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்பது நியாயம்—முறையானது. ஆனால் அதே நேரத்தில், அங்குள்ள அத்தனைப் பணியாளர்களும் கூட்டுறவு பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்பது முறையல்ல. அது அவசியமில்லை என்பதைக் கூறி இறுதியாக மீண்டும் ஒன்றை மட்டும்

வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களைப் பொறுத்த வரையில், நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருந்த சங்கங்களுடைய பழைய குழுக்களை நிர்வாகக் குழுக்களை மீண்டும் அவைகள் பணியாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்தி அமைகிறேன்.

12-35 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் இங்கு குறிப்பிட்டபோது, தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டுகளைக் கலைத்த பிறகு தமிழ்நாட்டில் பால் உற்பத்தி மிகவும் குறைந்துவிட்டது; இதே நிலை நீடித்தால் நமக்குச் சிரமமாக இருக்குமென்று ஒரு தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். இப்போது தமிழ்நாட்டில் நாள் ஒன்றுக்கு 13 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி ஆகிறது; சென்னையில் மட்டும் 6 இலட்சம் லிட்டர் பால் இன்றைக்கு விற்பனை ஆகின்றது. பால் உற்பத்தி என்பது, 6 மாதத்தில் பால் உற்பத்தி அதிகமாகவும், அதுபோல் 6 மாதத்தில் பால் உற்பத்தி குறைவாகவும் தான் இருக்கும். அந்த அளவிலே தான் ஒரு சில இடங்களில் வித்தியாசம் இருக்குமே தவிர, இந்த புதிய அட்வைசரி போர்டு போட்ட காரணத்தால் தான் பால் உற்பத்தி குறைகிறது என்று சொல்வதை நான் வன்மையாக மறுக்கிறேன். அதுபோல அவர்களுடைய எண்ணத்தை இங்கே எடுத்துத் தெரிவித்தார்கள். ''நீங்கள் உங்களுடைய ஆட்களைப் போட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்'' என்ற ஒரு தவறான தகவலை அவர்கள் சொன்னாலும், எங்களையே மீண்டும் நியமிக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். உள்ளபடியே அத்தனை பேரையுமே உறுப்பினராக ஆக்கி இருக்கின்றோம். நிச்சயமாக விரைவிலே தேர்தல் நடைபெறும். நீங்களும் போட்டியிட்டு முடிந்தால் வெற்றி பெற்றுக் கொள்ளுங்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலசுப்பிரமணியத்திற்கு இதில் என்ன மறுப்பு? (குறுக்கீடு) இது ஒருவருக்கு ஒருவர் பதில் அளிப்பதற்காக அல்ல. பால் வளத் துறை அமைச்சர் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பால் உற்பத்தியாளர்களுக்கு ஏற்கெனவே அரசு ஒப்புக் கொண்டபடி நிச்சயமாக நல்ல விலையைத் தரும் என்றும், இப்போது புதிதாகப் போடப்பட்டிருக்கின்ற அட்வைசரி போர்டுக்கு பிறகு தான் பல்வேறு இடங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையில் நடைபெறுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. இந்த கூட்டுறவு சங்க சட்டத்திலே கொண்டுவரப்பட்டு இருக்கின்ற திருத்தங்கள் சம்பந்தமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன். பெண்களுக்கும், பட்டியல் சாதியினர், பழங்குடியினருக்கும் ஒதுக்கீடு செய்வதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் ஒரு சிறிய பிரச்சினை இருக்கிறது. சில ஊழியர்கள் அமைத்துக்கொள்கின்ற கூட்டுறவு அமைப்புகளில் அல்லது சில நிறுவனங்களில் ஊழியர்கள் வேலை பார்த்தால் அவர்கள் கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கங்களை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். சில நிறுவனங்களிலே ஆண் தொழிலாளர்கள் மாத்திரம் வேலை பார்த்து வருகிறார்கள். அப்படி ஆண் தொழிலாளர்கள் மாத்திரமே வேலை பார்த்து வருகிற அப்படிப்பட்ட நிறுவனங்களிலே இருக்கின்ற கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கங்கள் மற்றும் உள்ள அமைப்புகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்பது சாத்தியம் இல்லாமல் இருக்கிறது. இது குறித்து என்ன செய்வது என்று அரசு ஆராய்ந்து அப்படிப்பட்ட சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு சட்டத் திருத்தத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல சில இடங்களில் கைவிட்டு எண்ணக்கூடிய அளவிலே ஒன்றிரண்டு பெண்கள் வேலை பார்க்கின்ற நிறுவனங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஊழியர்களுடைய கூட்டுறவு சங்கங்கள் எல்லாம் கூட இந்த 30 சதவீதம் என்பதை நிறைவேற்றுவதில் இருக்கின்ற சிரமத்தைக் களைவதற்கு அரசு இந்தத் திருத்தத்திலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல கூட்டுறவு நிறுவனங்களில் நீண்ட காலம் தேர்தல்கள் நடைபெறாமல் இருந்தன. 13 ஆண்டுக் காலத்திற்கு மேலாக தேர்தல் நடைபெறவில்லை என்று அரசே குறிப்பிட்டு இருக்கிறது. 14 ஆண்டுக் காலம் ஜனநாயகம் கூட்டுறவிலிருந்து பிரிக்கப்பட்டு வனவாசத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இந்த அரசாவது கட்டாயமாக மீண்டும் ஜனநாயகத்தை அழைத்து வந்து பட்டாபிஷேகம் நடத்தி அங்கே ஜனநாயகம் மலருவதற்கு வழி வகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். நீண்ட காலமாகத் தொடர்ந்து தேர்தல்கள் அறிவிப்பதும் திடீரென்று தேர்தல்கள் நிறுத்துவதும் என்பது தொடர்கதையாக இருக்கிறது. விட்டலாச்சார்யா திரைப்படத்தில் வருகின்ற மாயாஜால வித்தைகள் போல திடீர் திடீர் என்று தேர்தல்கள் வருவதும், பல்லாயிரக் கணக்கான பணம் செலவழிக்கப்படுவதும், திடீரென்று அவர்களை அறியாமலே தேர்தல்கள் மாய்ந்து போவதும் வழக்கமாக இருக்கிறது. நான் கேட்டுக்கொள்வது எல்லாம் இது, எந்த ஆட்சியிலே நடைபெறுகிறது என்பது முக்கியமல்ல நீண்ட காலமாக இப்படிப்பட்ட நிகழ்ச்சி— கவர்னர் ஆட்சியில்

கூட நடந்து கொண்டிருக்கிற நிகழ்ச்சி ... இது. ஆகவே தவறுகள் இனிமேல் நடைபெறாமல் தொடர்ந்து ஜனநாயகம் பறிக்கப்படாமல், கூட்டுறவு என்பது உறுப்பினர்கள் கூட்டுச் சேர்ந்து நடத்தப்படுகின்ற ஒரு அமைப்பாக இருந்து, அது தனி அலுவலர்கள் ராஜ்யமாக இல்லாமல் ஒரு ஜனநாயகப் பூர்வமான கூட்டுறவு அமைப்பாக மலர்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு சிரமப்பட்டு சில கூட்டுறவு அமைப்புகளுக்கு தொடர்ந்து 10 ஆயிரம், 20 ஆயிரம் இலட்சக் கணக்கில் கூட செலவு ஏற்பட்டு இருக்கின்ற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் மீண்டும் வராமல் கட்டாயமாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அங்கு மீண்டும் அந்த அங்கத்தினர்களுக்கு ஜனநாயக பூர்வமான உரிமைகள் கொடுக்கப்பட்டு அவர்களாகவே அந்த அமைப்புகளை நடத்துகின்ற நிலைமை ஏற்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல கூட்டுறவு அமைப்புகள் இல்லாத காரணத்தால் அவர்களிடத்தில் பல ஒழுங்கீனங்கள் நடந்து இருக்கின்றன. தனி அதிகாரிகள் காலத்தில் பல ஒழுங்கீனங்கள், ஊழல்கள், முறைகேடுகள் எல்லாம். . . .

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : இந்த சட்ட முன்வடிவு விவாதுக்கப்படும்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இங்கே இருந்தால் நாங்கள் சொல்கிற கருத்துக்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள ஏதுவாக இருக்கும்.

12-40 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருபவர் உணவு அமைச்சர்—கூட்டுறவு அமைச்சர். அவர் அவையில் இருக்கிறார்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : பால் சொசைட்டிதான் நிறைய.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது துணை. பால் அவரிடத்தில் இருக்கிறது : கூட்டுறவு இவரிடத்தில் இருக்கிறது.

திரு. செ. நூர்முகமது : ஆகவே, அப்படிப்பட்ட தனிஅதிகாரிகள் காலத்திலும், அதேபோல சில தனி நபர்கள் காலத்திலும், கூட்டுறவு அமைப்புகளிலே பல்வேறு முறைகேடுகள், ஊழல்கள் நடைபெற்று இருக்கின்றன. அது அரசினுடைய கவனத்திற்கும் இப்பொழுது கொண்டுவரப் பட்டிருக்கிறது. நான் அரசை மிகப் பணிவோடு கேட்டுக் கொள்வேன், அநீதிகளை மறப்போம் என்ற நிலை வரக்கூடாது. அநீதிகளைக் களைவோம் என்பதோடு மாத்திரமல்ல ; எங்கே அநீதிகள், அக்கிரமங்கள்,

அராஜகங்கள் நடந்திருக்கின்றனவோ, அங்கே குற்றம் செய்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். எதிர்காலத்திலே இப்படிப்பட்ட ஊழல்களுக்கு இந்த அரசு இடம் அளிக்காது என்பதை உத்தரவாதப்படுத்துகின்ற வகையில் அரசு சரியான நடவடிக்கைகளைத் துணிச்சலாக எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அது போல இன்றைக்குக் கூட்டுறவு நிறுவனங்களிலே பணி செய்யக் கூடிய ஊழியர்களைப் பற்றியும் நான் பேசாமல் இருக்க முடியாது. இன்றைக்குப் பல இடங்களில் தனி அதிகாரிகள் காலத்தில், அலுவலர்கள் காலத்தில் அல்லது தனி நபர்களாகவே தங்களுடைய குடும்பச் சொத்தாக அந்தக் கூட்டுறவு நிறுவனங்களை நடத்திக் கொண்டிருந்த காலத்திலே எந்த முறைகளும் இல்லாமல் பல நூற்றுக்கணக்கான ஊழியர்களை நியமனம் செய்தார்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் இல்லாமல், இன்டர்வியூ இல்லாமல், தனக்கு வேண்டியவர்களையெல்லாம் பல்வேறு காரணங்களுக்காக அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக அவர்களை நியமனம் செய்தார்கள். அப்படி நியமனம் செய்யப் பட்டவர்கள் நீண்ட காலமாக, இன்றைக்குப் பத்து வருஷங்களாகப் பணிபுரிந்த பிறகு முறைகேடாக நியமனம் செய்யப் பட்டார்கள் என்று சொல்லி அந்த ஊழியர்கள் வெளியே தள்ளப் படுகிறார்கள். என்னுடைய கவலையெல்லாம் தவறு செய்தவர்களுக்குத் தண்டனை கொடுப்பதற்குப் பதிலாக அங்கே பாதிக்கப் படுபவர்கள் தொழிலாளர்கள். எய்தவனை விட்டுவிட்டு அம்பை நோவது என்பது சரியானது அல்ல என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, அந்த ஊழியர்கள் வெளியேற்றப்படுவதற்குப் பதிலாக ஊழியர்கள் நியமனத்தை அங்கே தொடர வேண்டும்; அவர்களுடைய வாழ்க்கையிலே பாதிப்பு ஏற்படக் கூடாது. மாறாக முறைகேடான நியமனங்களை யார் செய்தார்களோ, அதிகாரிகளாக இருந்தாலும் சரி அல்லது அந்த நிறுவனங்களை நடத்திக் கொண்டிருந்தவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமே ஒழிய அந்த ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பக்கூடாது, அவர்களுடைய வயிற்றில் அடிக்கக்கூடாது. அப்படி ஏதேனும் நடந்திருந்தால் அதைக் களைவதற்கு அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, பல நிறுவனங்களில் நீண்ட காலமாகப் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்குச் சீரான சம்பளங்கள் இல்லை. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமாக இருந்துகொண்டிருக்கின்றது. அந்த ஊழியர்கள் நீண்ட காலமாகச் சொற்பக் கூலியிலே வாழ்ந்து வருகிறார்கள்; சலுகைகள் இல்லாமல் இருக்கிறார்கள். இதையும் ஒரே சீராக்க வேண்டும். அவர்களுக்கு ஓரளவு நல்ல வாழ்க்கை நடத்துகின்ற ஒரு உத்தரவாதமான சம்பளத்திற்கும் அரசு ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களை எந்த நேரத்திலும் பிரித்து விடலாம் என்கின்ற ஒரு நிலைமையை மாற்றி அவர்களுக்குப் பணிப்பாதுகாப்பு அளிப்பதற்கும் அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநில அரசு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே இருக்கின்ற ஊழியர்களுக்கு ஐந்தாவது சம்பளக் கமிஷனுடைய பரிந்துரையை அமல்படுத்தி இருக்கிறது. அந்த ஊழியர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள. அதுபோல பால்வள நிறுவனங்களிலே டணி புரிகின்ற ஊழியர்களுக்கும் இன்றைக்கு ஐந்தாவது பே கமிஷன் அமல்படுத்தப்பட்டிருக்கிறது; அறிவித்திருக்கிறது. ஆனால் ஒரு சில மாவட்டங்களில், கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற கன்னியாகுமரியிலே டணிபுரியக்கூடிய ஊழியர்களுக்கு முறைப்படி அரசின் அறிவிப்புப்படி ஐந்தாவது சம்பளக் கமிஷன் பரிந்துரை ஏற்கப்பட்டு அமல்படுத்தப்பட வேண்டிய நிலை வந்த பிறகும் அவர்களுக்கு அது மறுக்கப்பட்டிருக்கிறது. அரசினுடைய அறிவிப்பு, சொன்னதைச் செய்வோம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்; நாங்களும் நம்புகிறோம், நம்பிக் கொண்டேயிருக்கிறோம். ஆகவே, அரசு சொன்னதை அந்த நிர்வாகம் அமல்படுத்த மறுக்கின்ற காலத்திலே அரசு உடனடியாகக் குறுக்கிட்டு, அறிவிப்புக்குக் குந்தகம் ஏற்படாமல் அதை சரியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட முறையில் இந்தக் கூட்டுறவு நிறுவனம் என்பதை உண்மையான கூட்டுறவாக, ஜனநாயக பூர்வமான கூட்டுறவாக, தனி நபர் சொத்து என்றில்லாமல் பொது நலனுக்குரிய ஒரு சொத்தாக மாற்றியமைக்கின்ற பொறுப்பை இந்த அரசு ஏற்று உடனடியாக அமலாக்க வேண்டும் என்று கூறி முடிக்கிறேன், நன்றி வணக்கம்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தமாக நான்கு மசோதாக்கள், சட்டத் திருத்தங்கள் நம்முடைய கூட்டுறவு அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதிலே தொடர்ந்து தனி அதிகாரிகளுடைய நிர்வாகத்திலே 1976 ஆம் ஆண்டு முதல் பல்வேறு சங்கங்கள் இருந்து கொண்டு வந்திருக்கின்றன. அதற்குப் பின்னாலே இப்பொழுது ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நியமித்து இருக்கிறார்கள். பொதுவாக கூட்டாக நிர்வகிக்கக்கூடிய ஒரு ஸ்தாபனம்தான் கூட்டுறவு என்று பெயரே தவிர, தனியார் என்று சொன்னால் தனி நிர்வாகமாக இருக்கும்பொழுது அவரே விஷயத்தைக் கொண்டு வர வேண்டியது, தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டியது, இப்படி ஒரே ஆளுடைய—ஒன் மேன் ஷோவாக அது போய்க்கொண்டிருக்கிறது என்பது இங்குள்ள அனைவருக்குமே நன்றாக தெரியும். ஆகவே, அதற்கு இப்பொழுது வேறு வழி கிடையாது. ஆகவே, கூடிய சீக்கிரம் இதற்கு முடிவு ஏற்படக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட வேண்டும், எந்தக் காரணத்தை முன்னிட்டும்

12-45 மணி

தனியாருடைய நிர்வாகத்தில் தொடர்ந்து பத்து ஆண்டுக்காலமாக இருந்து பல்வேறு நிறுவனங்கள் சிறப்பாக இல்லாதது மட்டுமலல, சிறப்பான கூட்டுறவுச் சங்கங்கள்கூட சிறப்பு குறைந்து வந்திருக்கிறது என்பதையெல்லாம் நாம் பார்க்கிறோம். இப்போது நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பல்வேறு விஷயங்களைச் சொன்னார்கள். அரசியல் காரணங்களுக்காக கூட்டுறவுத் துறையில் தலையீடு இருக்கக் கூடாது என்று சொன்னார்கள்.

முதன்முதலாக 1976-ஆம் ஆண்டில் கவர்னர் ஆட்சிக் காலத்தில் தான் கூட்டுறவுகளில் எல்லாம் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் நிர்வாகத்தில் இருக்கிறார்கள் என்பதற்காக அனைத்தையும் கலைத்தார்கள். கலைத்து அந்த தனி அதிகாரிகள் இன்றுவரைக்கும் நீடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதற்கு ஒரு முடிவு ஏற்படவேண்டும். நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சட்டங்களில் பல்வேறு திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கூட்டுறவு சம்பந்தமாக வரக்கூடிய சட்டங்களைத் திருத்த நான் இரண்டு தடவைகள் இரண்டு அமைச்சர்களின் கீழே பொறுக்குக் குழுவிலே பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று வந்தேன். இந்தச் சட்டங்களில் பல்வேறு திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். அதிலே சிலவற்றை நாங்கள் அப்போதே கூடாது என்று வாதாடியிருக்கிறோம். இன்றைக்கு பெண்களுக்கு 30 சதவீதம் ஒதுக்கப்படவேண்டும் என்பதை வரவேற்கிறேன். அதைக் கட்டாயமாகச் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும். அதைப்போல தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் நிர்வாக போர்டில் வாய்ப்பு இருக்க வேண்டும் என்பது. அது சரியான திருத்தமாகும்.

அடுத்து இன்றைக்கு ஐந்து சங்கங்களில் ஒருவர் நிர்வாக போர்டில் இருக்கலாம் என்று சொல்கிறார்கள். முன்னால் மூன்று என்று தான் இருந்தது. இது ஐந்தாக இருக்கலாமா? புதுப்புது ஆட்களுக்கு நிர்வாகத்தில் வாய்ப்பு கொடுப்பதற்கு ஏற்ற முறையில் மூன்று என்பது போதாதா என்பது என்னுடைய அபிப்பிராயம். அமைச்சர் அவர்கள் அது சம்பந்தமாக முடிவு செய்து கொள்ளட்டும்.

அடுத்து மூன்று சங்கங்களில் தலைவராக இருக்கலாம் என்று இருக்கிறது. முன்னாலே ஒரு சங்கத்திலே தலைவராக இருந்தால் போதும் என்று சட்டத்தில் ஒரு விதி இருக்கிறது. அதை இப்போது மூன்று சங்கங்களில் தலைவராக இருக்கலாம் என்று சொல்கிறீர்கள். தொடர்ந்து ஒருவர் கூட்டுறவின் ஆதிக்கத்தில் வந்து விட்டால் அவரை மாற்றுவது கஷ்டம்

[திரு. சோ. அழகர்சாமி] [1989 நவம்பர் 2

அது எல்லோருக்கும் தெரியும். ஏனென்றால் தான் இருப்பதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்துகொண்டே வருவார். ஆகவே ஒரு பீரியட், இடைக்காலத்தில் ஆறு ஆண்டுகாலம் அவர் இருக்கக்கூடாது என்று சொல்லிவிட்டால் சரியாக இருக்கும். இதை ஏற்கெனவே பல நாடுகளில் சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே நாமும் இரண்டு பீரியட் இருந்துவிட்டால் மறுபடியும் ஒரு ஆறு ஆண்டுக்காலம் தலைவராக இல்லாமல் செய்யலாம். வேறு ஆள் வரட்டுமே என்று சொல்லக்கூடிய முறையில் இருந்தால் நல்லது. அதை அரசு யோசிக்கலாம். ஏனென்றால் இப்போது எல்லா வற்றையும் மாற்றிக்கொண்டு வந்திருக்கிறீர்கள். தனி அதிகாரிகளை நியமிப்பதன் காரணமாக புதியதாக சட்டங் களில் திருத்தம் கொண்டு வந்து, புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்காகத் தான் இப்படி ஒத்திவைத்துக் கொண்டு வருகிறோம் என்றும் சொல்கிறார்கள். புது உறுப்பினர்கள் ஏற்கெனவே சேர்ந்துவிட்டார்கள். உறுப்பினர்கள் சேர்ப்பதில் சம்பந்தம் இல்லாதவர்களையெல்லாம் உறுப்பினர்களாக சேர்க்கிறார்கள். சம்பந்தம் இல்லாதவர்கள் என்று சொன் னால் நெசவாளர்கள் சங்கத்தில் நெசவாளர்களாக இல்லா தவர்கள், பால் உற்பத்தியாளர் சங்கத்தில் பால் உற்பத்தி பண்ணாதவர்கள் இவர்கள் எல்லாம் சேர்வதால் சங்கம் சிறப்பாக நடக்காது. அந்தக் கூட்டுறவு ஸ்தாபனம் சரியாக வளராமல் போய்விடும். ஆகவே அது சம்பந்தமாகவும் யோசிக்க வேண்டும்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் நான் ஒரு சங்கத்திற்கு தலைவராக இருக்கிறேன். அதிலே 500 பேர் மெம்பர்களாக இருக்கிறார்கள். அது தொடர்ந்து 30, 35 வருடங்களாக—1961, 1962-ம் ஆண்டிலிருந்து இருக்கிறது. இன்றைக்கு இதை எப்படியோ மாற்ற வேண்டும் என்பதற்காக இரண்டாயிரம் மெம்பர் களை புதியதாக சேர்த்திருக்கிறார்கள். 2,000 மெம்பர்களில் 2, 3 பேர்கள்தான் மெம்பர்களுக்குண்டான பணத்தைக் கொடுத்துச் சேர்த்து இருக்கிறார்கள். பரவாயில்லை, சேரட்டும் என்று விட்டாகி விட்டது. இதை உதாரணத்திற்கு தான் சொல்கிறேன். அதை கலைத்து தனி அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். அதில் அட்வைசரி பாடியை போட வேண்டிய அவசியம் இல்லை. மற்ற சங்கங்களில் எல்லாம் அட்வைசரி பாடி இல்லை. வேறு ஹவுசிங் சொசைட்டி போன்ற சங்கங்களுக்கு இது போடப்படவில்லை. இன்றைக்கு பால் சங்கத்திற்கு மட்டும் தான் இந்த அட்வைசரி பாடியைப் போட்டிருக்கிறார்கள். பால் கறக்கிறவர்கள் 4, 5 பேர்களைப் போட்டாலும் பரவாயில்லை. சம்பந்தம் இல்லாதவர்களை எல்லாம் போட்டிருக்கிறார்கள். அதை யெல்லாம் அரசு யோசிக்க வேண்டும் என்பதற்காகச் சொல் கிறேன். சம்பந்தப்பட்ட அந்தந்த சங்கங்களில் நெசவாளர்கள் என்றால் நெசவாளர்கள் சேரட்டும். விவசாயி என்றால் விவசாய கூட்டுறவுச் சங்கங்களில் சேரட்டும். அதுமாதிரி

பால் உற்பத்தியாளர் சங்கம் என்றால் பால் உற்பத்தியாளர்கள் மட்டும் சேரவேண்டும். அப்படியிருக்கிற வகையில் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். காரணம் கூட்டுறவு தான் நம் நாட்டில் எதிர்காலத்தில் சோஷியல் சமுதாயத்திற்குப் போவதற்கு ஒரு அடிப்படையான பயிற்சிப் பள்ளி என்று சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரிய கூட்டுறவு வங்கி போன்ற நிறுவனங்களையெல்லாம் சிறப்பாக நிர்வகித்தவர்கள். ஆகவே நன்கு ஆலோசனை செய்து சம்பந்தப்பட்ட திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும்.

12-50 மணி

நான் சில ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறேன். அவை சரியாக இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். அந்த வகையில் திருத்தங்களைச் செய்யலாம். அடுத்து அந்தந்த கூட்டுறவு சங்கத்திலே தலைவராக இருப்பவர்களே நேரடியாக பிரதிநிதிகளாக போக வேண்டுமென்று இருக்கிறது. பிரதிநிதிகளாக வேறு ஆட்களைத் தேர்தெடுப்பதில் தவறு இல்லை. இதே தலைவர் அங்கேயும் தலைவராக இருக்க முடியாது. இரண்டிலும் தலைவராக இருந்தால் நிர்வாகம் செம்மையாக நடக்க முடியாது. கூட்டுறவு சங்கத்தை பெருமையாக நிர்வகிக்க வேண்டுமென்றால் ஒன்றில் இருந்தால் தான் அவர்கள் பல்வேறு வேலைகளுக்கு மத்தியில் சிறப்பாக நிர்வகிக்க முடியும். ஆகவே அந்த முறையிலே இதைச் செய்ய வேணடும். இன்றைக்கிருக்கிற அட்ஹாக் கமிட்டியை இதோடு முடித்துவிட்டு மேற்கொண்டு எலக்ஷன் வைக்கட்டும். புதிதாக, அந்தந்தத் துறையிலே உள்ளவர்கள் வரட்டும். நெசவாளர்கள் சங்கத்தில் வேறு ஆட்கள் வந்து விட்டார்கள் என்ற புகார் வருகிறது. அதேபோல் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் பால் உற்பத்தி பண்ணாதவர்கள் எல்லாம் சேர்ந்துவிட்டதாகப் புகார் வந்திருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்லிவிட்டேன். பல்வேறு இடங்களில் இருந்து நமக்குப் புகார்கள் வருவதின் காரணமாக, கூட்டுறவு சங்கங்கள் சிறப்பாக அமைவதற்கு திருத்தங்களைக் கொண்டு வருகிறோம். பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம் கட்டாயம் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் திருத்தம் கொண்டு வந்துள்ளோம். அப்படியிருக்கும் போது, சரியான நிர்வாக போர்டு அமையகூடிய சீக்கிரத்திலே நல்ல நிர்வாக அமைப்பு ஏற்படுத்துவதோடு, எதிர்காலத்தில் ஸ்பெஷல் ஆபீசர்கள் வராமல் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வரும் வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். போர்டு சரியில்லையென்றால், நிர்வாகத்தில் உள்ளவர்கள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் நடவடிக்கைகள் எடுக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. உறுப்பினர்களைச் சேர்க்கமாட்டேன் என்று சொன்னால், உறுப்பினர்களைக் கட்டாயம் சேர்க்க வேண்டுமென்று சொல்ல நம்முடைய பதிவாளருக்கும், துணைப்

பதிவாளருக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது அவர்கள் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றால், சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆகவே., அந்த முறையிலே அதிகாரங்கள் இருக்கின்ற காரணத்தால், தனி அதிகாரிகள் என்பதற்குப் பதிலாக, ஒரு போர்டு கலைக்கப்பட்டால், புதிய நிர்வாக போர்டு வரக்கூடிய முறையில் ஏற்பாடு செய்து, சிறப்பான முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடைசியாக, வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. அப்படியிருந்தாலும் கூட தனியார்களுடைய மேற்பார்வையில், பிரைவேட்டாக இருப்பவர்கள், 4 டிராக்டர்கள் வைத்து, விவசாயிகளுக்கு வாடகைக்கு விடும்போது, வேளாண் பணிக் கூட்டுறவு சங்கங்கள் எந்தவிதமான காரியங்களும் செய்யாமல் இருக்கின்றன. அவர்களுக்கும் கூடுமான வரையில் டிராக்டர் ஸ்ப்ரேயர் போன்ற பொருள்களை வாங்கிக் கொடுத்து, சாதாரண ஏழை எளிய, விவசாயிகள் எல்லாம் குறைந்த வாடகையிலே இவற்றை வாங்கக்கூடிய முறையிலே, சிறப்பான நிதி உதவி செய்ய வேண்டும். அதோடு, அந்த வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்களும் சிறப்பாகச் செயல்பட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஸ்பெஷல் ஆபீசர்கள் பதவிகளை நீட்டிக்கவும் திருத்தங்கள் வந்திருக்கின்றன. ஆகவே, நாங்கள் தெரிவித்த ஆலோசனைகளை எல்லாம் ஏற்று, வரக்கூடிய காலத்திலே, கூட்டுறவு சங்கங்கள் சிறப்பான முறையிலே செயல்பட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறி, அமைகிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தலையும் தள்ளி வைக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை நான் ஆட்சேபிக்கிறேன். ஏனென்றால் கூட்டுறவுச் சங்கம் என்பது அந்தந்த கிராமத்திலேயிருக்கிற அத்தனை மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு மிகச் சிறப்பான முறையில் செயல்படக்கூடிய ஒரு அமைப்பாகும். பல்வேறுவகையான பிரச்சினைகள் அதிலே இருக்கும். அதிலே விவசாயிகள் அத்தனை பேரும் கடன் வாங்கக்கூடிய முறையிலே செயல்படக்கூடிய ஒரு நல்ல சங்கமாக அமைய வேண்டுமென்றால் அந்த கிராமத்திலே இருக்கக்கூடிய கட்சிமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு நல்ல நண்பர்களாக, நாணயமிக்க நண்பர்களாக, அந்த நாணய சங்கத்திற்குத் தலைவராக வர வேண்டும். அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட கட்சி உறுப்பினர்களை மட்டும்தான் அதிலே சேர்க்க வேண்டுமென்ற முறை மிகவும் கண்டனத்திற்குரியது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் கூட்டுறவுச் சங்கத்திலே தலைவராக வந்தால் கெட்ட பெயர்தான் வருமே தவிர, நல்ல பெயர் நிச்சயமாக வராது.

1989 நவம்பர் 2] [திரு. ஆர். சிங்காரம்]

யாராவது ஒருவர் தவறு செய்தாலும் அந்தக் கூட்டுறவுச் சங்கத் தலைவருக்குத்தான் பொறுப்பு வந்து சேரும். ஆகவே, ரூ. 5,000, ரூ. 10,000 , ரூ. 25,000, ரூ. 50,000, ரூ. 1,00,000 என்று எல்லாம் ஒரு சுமை ஏற்பட்டு அந்தச் சங்கத் தலைவர் உள்ளே போகக்கூடிய சுமைதான் ஏற்படும்.

பால் வழங்கு சங்கங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் அவர்கள் அந்தச் சங்கங்களுக்கு அட்வைசரி கமிட்டி போட்டிருக்கிறார்கள். எல்லா கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகளைப் போட்டால் நிச்சயமாக அந்தச் சங்கம் சிறப்பான முறையில் செயல்படும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை இனி மேலாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தவரையில் புதிய உறுப்பினர்களுக்குக் கடன் இல்லையென்றும் பழைய உறுப்பினர்களுக்குத்தான் கடன் வழங்கப்படுகிறது என்றும் சொல்கிறார்கள். நானே, தொலைபேசி மூலமாக, கூட்டுறவுச் சங்கச் செயலாளரைக் கேட்டதற்கு, பழைய உறுப்பினர்களுக்குத்தான் கடன் வழங்கவேண்டும் புதிய உறுப்பினர்களுக்குக் கடன் வழங்க முடியாது என்றும் ஆணை பிறப்பித்திருப்பதாகச் சொன்னார்கள். அதை மாற்றி, புதிய உறுப்பினர்களுக்கும் இனி மேலாவது கடன் வழங்கவேண்டும். விரைவிலே தேர்தல் நடத்தப்பட வேண்டும். தமிழகத்திலே இருக்கிற அத்தனை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடத்துகின்ற பொழுது, பத்திரிகைகளிலே முன்கூட்டியே விளம்பரம் செய்து, எல்லா மக்களுக்கும் எல்லா கட்சிக்காரர்களுக்கும் தக்க முறையில் விளம்பரப்படுத்தி, எல்லோரும் அந்தத் தேர்தலிலே பங்கு பெறுகிற அளவில், எல்லா கட்சியினரும் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்கின்ற வகையிலே, நீங்கள் வகை செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

12-55 மணி

அப்படி இல்லாமல் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டும் சேர்த்ததால் ஆங்காங்கே இருக்கிற** கூட்டுறவுச் சங்கத் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டதாக நான் அறிகிறேன். இந்த நிலைமைகளை பல்வேறு கிராமங்களில் பார்த்தால் தெரியும். பக்கத்தில் இருக்கிற ஊர்களில் எல்லாம் இரண்டு.**

திரு. இரா. மோகன் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது இந்த மசோதாவுக்குச் சம்பந்தமில்லாத ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டார்கள்.** என்று பேசினார்கள். இவை எல்லாம் அவைக் குறிப்பில் இடம் பெற வேண்டுமா? அவர் இப்படியே பேசுவதாக இருந்தால் எல்லோரும் பேசலாம்.** என்பது எல்லோருக்கும் தெரியும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் இந்த சட்ட மன்றத்தில் அரசு கொண்டுவந்திருக்கிற சட்ட முன்வடிவின்மீது பேசுகிறார்கள். இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்ட முன்வடிவு அல்ல** என்ற பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : ** என்பதையும் நீக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பகுதியும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம் : தலைவரவர்களே, நான் பாசிட்டிவாகத்தான் சொல்லுகிறேனே தவிர நெகட்டிவாகச் சொல்லவில்லை. அதே நேரத்தில் தேர்தல் ஏன் நின்றது என்பதற்கான உண்மையான காரணத்தைச் சொல்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவு கூட்டுறவுச் சங்கத் தேர்தலைப் பற்றியதாகத்தான் இருக்கிறது. அப்படி வரும்போது எல்லாச் செய்தியும் வரத்தான் செய்யும். அதற்காக ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்டுக்கொண்டிருந்தால் அது முறையல்ல. ஆகவே, கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தும்போது தயவுசெய்து முன்கூட்டியே பேப்பரில் விளம்பரம் செய்து, கூட்டுறவுச் சங்கத் தேர்தலைப் பற்றி எல்லோரும் அறிந்துகொள்ள ஏற்பாடு செய்துவிட்டு அதற்குப் பின்னாலே தேர்தலை நடத்த வேண்டும்; அதுவும் விரைவிலே நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் நான் முன்பே கவர்னர் உரையில் பேசியிருக்கிறேன். கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் எல்லாம் கடன் சுமையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கடனைத் தள்ளுபடி செய்துவிட்டு தேர்தலை நடத்த வேண்டும். நான் சொன்ன இரண்டில் இந்த அரசாங்கம் ஒன்றைச் செய்திருக்கிறது. அதாவது எல்லா உறுப்பினர்களுக்கும் ஓட்டுரிமை இருக்கவேண்டுமென்று சொன்னதை நிறைவேற்றியிருக்கிறது இந்த அரசாங்கம். எல்லோருக்கும் ஓட்டுரிமை கொடுத்து விட்டார்கள். ஆனால் கடன் சுமை அப்படியே இருக்கிறது. கடனை ரத்து செய்து, அவர்களை அந்தக் கடன் சுமையிலிருந்து விடுவிக்க வேண்டும். விடுவித்த பின்னால் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்துவதுதான் நன்றாக இருக்கும். அதற்கு விரைவிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

1989 நவம்பர் 2] [திரு. ஆர். சிங்காரம்]

கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் என்றால் அது விவசாயிகளுடைய பிரச்சினை. விவசாயிகளுடைய பிரச்சினை என்று சொல்லும்போது அவர்கள் பயிர் செய்ய, பலன் பெற போதுமான அளவுக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டும். ஆனால் தண்ணீர் கிடைக்கவில்லை. தண்ணீர் கிடைக்காமல் வறட்சி அல்லது பெரு மழையினால் வெள்ளம் ஆகியவற்றின் காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக வாங்கிய கடனைக் கட்ட முடியவில்லையே தவிர வேண்டுமென்றே கட்டாமல் இருக்கவில்லை. ஆகவே, அவர்களுடைய கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும். விவசாயிகள் பெரும்பாலும் வறட்சியால்தான் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் பேராவூரணி, பட்டுக்கோட்டை, திருவாடானை போன்ற பகுதிகளில் கடைமடைப் பகுதியில் தண்ணீர் போகவில்லை. கடைமடைப் பகுதிகளில் தண்ணீர் வருவதே இல்லை என்று சொல்லுகிறார்கள். இங்கே சம்பந்தப்பட்ட அமைச்சரும் இருக்கிற காரணத்தாலே நான் குறிப்பிட விரும்புவது, கர்நாடக அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி இப்பொழுது விடுகின்ற தண்ணீரைவிட கொஞ்சம் கூடுதலாகத் தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கூடுதலாகத் தண்ணீரைப் பெற்று, கடைமடைப் பகுதிகளுக்கும் போதுமான அளவுக்குத் தண்ணீர் கிடைக்கச் செய்தால் விவசாயம் நன்றாக இருக்கும்.

இப்போது கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் போய்ச் சேராததால் நாற்றுவிட முடியவில்லை. நாற்று விட்டாலும் பட்டுப் போகிறது, இப்போதுகூட கடைமடைப் பகுதிகளில் தண்ணீா கிடைக்காமல் நடவு பட்டுப்போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே, கடைமடைப் பகுதிகளில், குறிப்பாக பேராவூரணி, பட்டுக்கோட்டை போன்ற பகுதிகளில் தண்ணீர் கிடைக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை எதிர்த்து, விரைவிலே தேர்தலை நடத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் தனி அலுவலர்கள் நியமனம் சம்பந்தமாக அவை முன்னால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தச் சட்டத்திற்கு சில ஆலோசனைகளைக் கூறலாம் என்று நினைக்கிறேன். ' கூட்டுறவே நாட்டின் உறவு '' என்று நாடாளவந்தவர்கள் கூறினார்கள்.

[13-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கபடுகிறது.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : ஆனால் கடந்த 12 ஆண்டுக் காலமாக இந்த நாட்டின் உறவை வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கி எறிந்துவிட்டார்கள். மீண்டும் இந்தக் கூட்டுறவு அமைப்புகளிலே ஜனநாயகம் தழைத்து, நேரடியாக மக்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை நான் வரவேற்பதோடு, நான்கு திங்கள் ஒத்தி வைக்கப்பட்டு இருக்கிற இந்தக் காலத்தை வெறுமனே ஒத்தி வைத்தால், மீண்டும் இந்தப் பிரச்சினை எழ ஏதுவாகும் என்ற காரணத்தினால், இந்த நான்கு திங்களுக்குள்ளாக இந்தத் தேர்தலை நடத்தி முடிப்பதற்கு திட்டவட்டமான குறிப்பு இந்தத் திருத்தச்சட்டத்தில்இருக்கவேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். காரணம் மீண்டும் உறுப்பினர்களைச் சேர்ப்பது என்ற பிரச்சினையின் அடிப்படையிலே இது காலதாமதம் ஆவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், இந்த 4 திங்களுக்குள்ளாக தேர்தல் நடத்துகிற ஒரு திட்டமிட்ட வரையறையோடு இந்தத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவது அவசியம் என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

இந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்திற்கு கழக அரசு 35 கோடி ரூபாயை நல்ல நோக்கத்திற்காக கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் ஒரு நல்ல மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக ஒதுக்கியிருக்கிறது ஆனால் தனி அதிகாரிகளின் நியமனம் அரசின் இந்த நல்ல நோக்கம் நிறைவேறுவதற்குத் தடையாக இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே அவைகளை தனி அதிகாரிகளுடைய பொறுப்பிலிருந்து விடுவித்து மக்களின் நேரடியான நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர வேண்டும். இந்த தனி அதிகாரிகளுடைய ஊதியம், அந்தக் கூட்டுறவு நிறுவனத்தில் செலவில் அதிகமான செலவாக, பெரும்பகுதியாக அமைந்துவிடுகிறது. ஆகவே, இந்தக் கூடுதல் செலவையும், அரசின் கவனத்திற்கு நான்கொண்டு வருவதோடு, அவைகளை முறையாக நிர்வகிப்பதற்கு, நேரடியாக மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகள், சலுகைகள், கடன் வசதிகள் காலத்திலே, நேரத்திலே கிடைப்பதற்கு இந்த மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு, இந்தத் திருத்தச் சட்டத்தை இறுதிப்படுத்த வேண்டும் எனக் கேட்டு அமைகிறேன்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கிகள், குறிப்பாக மாவட்டத் தலைநகரங்களில் செயல்படுகின்றன. இந்த மத்திய கூட்டுறவு வங்கிகளில் செயலாளர் பதவி என்று ஒரு பதவி இருக்கிறது. அந்தப் பதவி, மாறுதலுக்கு உட்படாத ஒரு பதவியாக இருக்கிற காரணத்தால், மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணிபுரிகிற தனி அதிகாரிகள் மற்ற அதிகாரிகள் எல்லாம் மாறுதலுக்கு உட்படுகிற போது, அவர்களை மாறுதல் செய்கிறபோது, இந்தச் செயலாளர் மட்டும்—மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றுகிற அந்தச் செயலாளர் மட்டும்—மாறுதலுக்கு உட்படவில்லை என்ற ஒரு

நிலை இருக்கிற காரணத்தால், அவர்கள் அங்கே எதேச்சாதிகாரப் போக்கில் தனக்கு உட்பட்ட பல்வேறு நிலைகளை ஏற்படுத்திக் கொண்டு, பல்வேறு ஊழியர்களையும், மற்றவர்களையும் பழிவாங்குகின்ற நோக்கத்தோடு, தனக்குத்தான் மாறுதல் செய்கின்ற நிலை இல்லையே என்ற போக்கில், தீய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நிலையிருக்கிறது. இதைப்பற்றி நான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை ஏற்கெனவே கேட்டபோது, அவர்களை மாறுதல் செய்கின்ற நிலை ஏற்படுமானால், அரசுக்குச் செலவு ஏற்படும் என்று சொன்னார்கள். ஆனால் நான் இதைப்பற்றி விசாரித்தபோது, இதுபோன்ற கூடுதலான செலவு ஏற்படாது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. மத்திய கூட்டுறவு வங்கி என்பது ஒரு மாவட்டத்தினுடைய தலைநகரத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற வங்கி. இது ஜனநாயக ரீதியாக அத்துணை மக்களும் எளிதில் அணுகுகின்ற ஒரு அமைப்பாக இருக்கவேண்டும். ஆனால் அங்கே மாறுதலுக்கு உட்படாத அதிகாரிகள் இருக்கிற காரணத்தால், எளிதில், ஜனநாயக முறையில் அவர்களை அணுக முடியாத ஒரு சூழ்நிலையும், மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள், கிடைக்க முடியாத சூழ்நிலையும் இருக்கிற காரணத்தால், அங்கே செயலாளராக இருப்பவர்களை மாறுதலுக்கு உட்படுத்தவேண்டும். நாமும் மாறுதலுக்கு உட்படுவோம் என்ற அச்சம் அவர்களுக்கு இருக்குமானால், நிச்சயமாக ஜனநாயக முறையில், ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்க வேண்டிய சேவைகளைச் செய்வார்கள் என்று கூறி, மத்திய கூட்டுறவு வங்கிகளில் செயலாளராகப் பதவிகளை ஏற்றுக்கொண்டு இருப்பவர்களை மாறுதல் செய்கின்ற உத்தரவை அரசு இடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

13-05 மணி

இன்றையதினம் வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் செயல்படாத சூழ்நிலையில் நலிந்து கிடக்கின்றன. இந்த வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குத் நல்ல பல சலுகைகளை, நல்ல பல திட்டங்களை நிறைவேற்றுகிற ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தால் வேளாண் கூட்டுறவு சங்கங்கள் சிறந்த முறையில் பணியாற்றினால்தான் உண்மையான சலுகைகளை, உண்மையான நலன்களை விவசாயிகளுக்குத் தேடித்தர முடியும். ஆகவே, அந்த வேளாண் கூட்டுறவுச் சங்கங்களைச் சீர் படுத்த செம்மைப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்றவர்கள் குறிப்பாக வினியோக சங்கங்களில் பணியாற்றுகின்றவர்கள் தலைசிறந்த முறையில் பணியாற்றினால்தான் ஒரு ஆட்சிக்கு தலைசிறந்த பெயரைத் தேடிக் கொடுக்க முடியும். கீழ் மட்டத்தில் இருக்கிற மக்களுக்கு சரியான முறையில் வினியோகம் கிடைக்குமானால் இந்த ஆட்சி சிறப்பாக நடைபெறுகிறது என்று பேசுவார்கள்

அங்கேயிருக்கிற கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகிறவர்கள், வினியோகம் செய்கிற அதிகாரிகள் எல்லாம் செய்கிற தவறுகளி னால், ஆட்சியை அங்கே குறை சொல்லுகிற நிலை இருக்கிற காரணத்தால், அங்கே பணிபுரிகின்றவர்களுக்கு உரிய சம்பளம் கொடுக்கின்ற நிலையை அரசு ஏற்பாடு செய்து அவர்கள் மேலும் தவறுகள் செய்யாத அளவுக்கு, குறிப்பாக ஆட்சிக்கு ஒரு நல்ல பெயரை ஏற்படுத்தித் தருகிற அளவுக்கு அவர்கள் சரியான முறையிலே வினியோகம் செய்கிறார்களா என்பதைக் கண்டு அறிய திடீர் திடீரென்று செக் அப் செய்வதன் மூலம், திடீர் நடவடிக்கைகள் மூலம் அவர்களைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, அவர்கள் தவறு செய்யாத அளவுக்கு உரிய வகையில் நல்ல சம்பளங்களை கூட்டுறவு சங்க ஊழியர் களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியை, அதிகாரிகளுக்கு மட்டும் அள்ளிக் கொடுக்கிற ஆட்சி என்ற பரவலான பேச்சு அங்கே அடிபடுகிறது. விவசாயிகள் மத்தியில் அதிகாரிகளுக்கு மட்டும் அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்களே, விவசாயிகளுக்கு அள்ளிக் கொடுக்க வேண் டாமா என்ற ஏக்கப் பெருமூச்சு அங்கே கிராமப்புறங்களில் இருக்கிறது. அதை எங்களிடம் சொல்லுகிறார்கள். மக்கள் கருத்தை நாங்கள் நேரடியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இன்றைய தினம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 69 கோடி ரூபாய் கடனை ரத்துச் செய்திருக்கிறது இந்த அரசு. இந்த 69 கோடி ரூபாய் கடனை ரத்துச் செய்திருப்பதன் மூலம் இங்கே ஏராளமான விவசாயிகள் பயன் அடையாத நிலை இருக்கிற காரணத்தால், மேலும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயன் அடைகிற நிலையில் அவர்களுக்கு இருக்கிற கடன் சுமையை ரத்துச் செய்ய வேண்டுமென்று விவசாய மக்கள் எதிர்பார்க் கிறார்கள். எனவே அதிகாரிகளுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கிற இந்த அரசு ஏழை எளிய விவசாயிகளையும் கவனிக்க வேண்டு மென்ற ஏக்கப்பெருமூச்சை ஏற்று நிச்சயமாக ஏழை எளிய மக்க ளுடைய கூட்டுறவுக் கடன்களை மேலும் ரத்துச் செய்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுச் சங்க தேர்தல்கள் நடத்து வதை மேலும் நீடிக் காமல், இந்தத் திருத்தத்தோடு முடித்துக்கொண்டு மிக விரை விலே கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்தி ஒரு சிறந்த பெயரை எல்லோருக்கும் ஏற்படுத்தி தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, விவாதத்தின்போது இங்கே இந்த அவையிலே உபயோகப்படுத்தப்பட்ட சில வார்த்தை கள், அந்த வார்த்தைகள் நமது அவையினுடைய மரபுக்கும், முறைக்கும் சரியானது அல்ல என்ற முறையில் அந்த வார்த்தை

களை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும், அவைக் குறிப்பில் இருக்கக்கூடாது என்று நான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பி இருக்கிறேன். தங்கள் மூலமாக அதற்கு முடிவு தேவை. ஏனென்றால் அதுதான் நாங்கள் பின்னாலே பின்பற்றி நடக்க உதவும். அந்த முடிவு வேண்டுமென்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் கவனிக்க வேண்டியது பொதுவாகவே அவையில் ஏதாவது ஒரு தீர்மானத்தின்மீது பேசுகிறபோது வன்மையாகப் பேசுவது அல்லது கடுமையாக விமர்சிப்பது என்பது வேறு. கடுமையான சொற்களை கையாளுவது என்பது வேறு. எனவே பாராளுமன்ற மரபுக்கு மாறாக அது போன்ற சொற்களை வருங் காலத்தில் அனைவரும் தவிர்க்க வேண்டும். இது எல்லோருக்கும் பொருந்தும் என்ற முறையில் சொல்லிக்கொண்டு, திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்ன ** அந்தப் பகுதியும், அதற்கு அமைச்சருடைய மறுப்பு மட்டும், அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது, இங்கே மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் எழுந்து பதில் சொல்வதற்கு முயன்றார்கள். அப்போது தலைவர் அவர்கள் அமரும்படி சொன்னதற்கு ** என்று சொன்னதும் அவைக் குறிப்பிலே இருக்கும். தயவு செய்து அதையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, ** அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தால் அந்தப் பகுதி அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படும்.

13-10 மணி

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த அவையிலே வைக்கப் பட்டு இருக்கின்ற கூட்டுறவு சம்பந்தமான 4 சட்ட முன்வடிவுகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 8 பேர் வழங்கிய நல்ல கருத்துக்களை இந்த அரசு மனதிலே கொண்டு அவர்கள் சொன்ன கருத்துக்களுக்கு விடையளிப்பதன் மூலமும், ஏன் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்தோம் என்பதை விளக்குவதன் மூலமும் எதிர் காலத்திலே கூட்டுறவுச் சங்கங்கள் மிகச் சிறப்பாக ஜனநாயக முறையிலே நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற அடிப் படையிலும் நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரப்பன் அவர்கள் பேசுகின்றபோது கவர்னருடைய ஆட்சியிலே தேர்தல் இரண்டு முறை தள்ளி வைக்கப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

பட்டது. இந்த ஆட்சி சொன்னதைச் செய்வோம் என்றார்கள். ஆனால் இந்த ஆட்சியிலும் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு இருக்கிறதே என்று ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்த ஆட்சி பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனே 6 மாத காலத்திற்கெல்லாம் தேர்தலை நடத்த வேண்டும் என்று முயற்சி எடுத்திருக்கிறது என்பதை யாரும் மறக்க மாட்டார்கள். 31-1-1976 அன்று ஆட்சியைக் கலைத்ததற்குப் பிறகு தமிழ்நாட்டிலே அண்ணா தி.மு.க. ஆட்சியில் இருந்த 11 ஆண்டு காலத்திலே தேர்தலை நடத்துவதற்கு எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால் ஆளுநருடைய ஆட்சியிலாவது 2 முறை அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே 6 மாத காலத்திற்குள்ளாக தேர்தலை நடத்த வேண்டும் என்று முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இந்தத் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்களும் மாண்புமிகு அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்த உறுப்பினர்களும் இங்கே கேட்டார்கள். நான் அதை முதலிலேயே விளக்கி விடுவது நல்லது என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையிலே அக்டோபர் மாதம் 31-ந் தேதிக்குள் எப்படியும் தேர்தலை நடத்திவிட வேண்டும் என்பதற்காகத்தான் அவசரச் சட்டமே பிறப்பித்து தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு இருந்தோம்.

ஆனால் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மதிப்புக்குரிய திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் செப்டம்பர் மாதம் 26-ந் தேதி ஏதோ இந்த அரசாங்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களை மட்டும்தான் கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாகச் சேர்த்து தேர்தலை நடத்துவது போன்ற ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அப்படி வெளியிட்ட நேரத்தில் அவர் சொல்லியிருக்கின்ற அந்த வாசகத்தை அப்படியே படிப்பது, ஏன் இந்த அரசாங்கம் தேர்தலை ஒத்தி வைத்தது என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். சேலத்தில் மலைவாழ் மக்கள் பெரும் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் 10 உள்ளன. இந்த ஆட்சியில் சட்டம் திருத்தப்பட்டு முன்பு மலைவாழ் மக்களில் 9 பேர் இயக்குநர்கள் என்றும் 2 பேர் மலைவாழ் மக்கள் அல்லாதவர் என்றும் துணைப் பதிவாளர் ஒருவரை நியமிக்கலாம் என்றும்—மொத்தம் 12 பேர் இருந்தனர். இப்போது தி.மு.க. ஆட்சியிலே 12 இயக்குநர்கள் எண்ணிக்கையை 7-ஆக குறைத்து உள்ளனர் என்று பேச ஆரம்பித்து முன்பு கூட்டுறவுத் தேர்தல் என்றால் உறுப்பினர்கள் சேர்ந்து இயக்குநர்களைத் தேர்ந்தெடுத்தால் அதே நாளில் உடனடியாகத் தலைவர் தேர்தல் நடக்கும். ஆனால் இப்போது அரசு வெளியிட்டுள்ள விளம்பரத்தில் தலைவர் தேர்தல் பற்றி குறிப்பிடவில்லை. இயக்குநர்களாக அவர்கள் ஆட்கள் வெற்றி பெறாவிட்டால் அதிகாரிகள் மூலம் கோ-ஆப்ஷன் செய்து வேறு இயக்குநர்களை நியமித்து அதன் மூலம் தலைவர் தேர்தலிலே போட்டியிடாதவர்களை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள் இப்படிக் கூட்டுறவுத் தேர்தல் மூலம் ஜனநாயகப் படுகொலை

நடப்பதை முதலமைச்சர் கருணாநிதி தடுக்க வேண்டும். எனவே கூட்டுறவுத் தேர்தலைத் தள்ளி வைப்பதோடு திருத்தப்பட்ட விதிகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் பேசியிருந்தார். ஆக ஒரு பெரிய, மத்தியிலே ஆளுகின்ற கட்சியினுடைய தலைவர் இப்படிப்பட்ட ஒரு வேண்டுகோள் விடுத்ததற்குப் பிறகு அதை மீறி நடத்தினால் ஏதோ இந்த அரசாங்கத்திற்கு ஜனநாயகத்திலே நம்பிக்கை இல்லை என்று மக்கள் மத்தியிலே பிரச்சாரம் செய்வதற்கு ஏதுவாக இருக்குமே என்று எண்ணித்தான் இந்தத் தேர்தலைத் தள்ளி வைப்பதற்கு யோசித்தோம். அதுமட்டுமல்ல. அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த நாடாளுமன்றக் குழுத் தலைவர் பி. குழந்தைவேலு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய ஜாயின்ட் செக்ரட்டரி டி. சி. ஸ்ரீனிவாசன், அண்ணா தி.மு.க.வினுடைய ஜாயின்ட் செக்ரட்டரி செங்கல்பட்டு காஞ்சி பன்னீர்செல்வம், காஞ்சிபுரம் டவுன் காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவர் பன்னீர் செல்வம், அதைப்போலவே எஸ். டி. உகம்சந்த் ஆகியோர் இந்தத் தேர்தலிலே ஏதோ ஆளும் கட்சிக்காரர்களைத்தான் உறுப்பினர்களாக சேர்க்கிறார்கள். இதை உடனே தடுத்து நிறுத்த வேண்டுமென்று 9—9—1989 அன்று ஆளுநரைச் சந்தித்து அங்கே ஒரு வேண்டுகோள் வைத்தார்கள், எழுத்து மூலமாக. அதையும் இந்த

13-15 பணி

அரசாங்கம் பரிசீலித்தது. அதைப் போலவே, இன்னும் சிலர் இந்தத் தேர்தலைப் பற்றி, அதிலே உறுப்பினர்களைச் சேர்ப்பதைப்பற்றி குறைபாடுகள் சொன்ன காரணத்தினால் அந்தக் குறைபாடுகளையெல்லாம் போக்குவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே தான் இந்தத் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதே தவிர, தேர்தலை நடத்துவதிலே இந்த ஆட்சிக்கு எந்த விதமான சந்தேகமும் இல்லை, நடத்துவதில் எந்தவிதமான கோளாறும் இல்லை என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், உறுதியாகச் சொல்றேன், பிப்ரவரி மாதத்திற்குள்ளாக ஆரம்பக்கூட்டுறவு சங்கங்களுடைய தேர்தல்கள் நிச்சயமாக நடத்தி முடிக்கப்படும் அதிலே உறுப்பினர்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் தேவையில்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, ஏதோ இந்தத் தேர்தல் தள்ளி வைக்கப்பட்ட காரணத்தினாலே, திரு. மாரப்பன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே — அரசாங்கத்திற்கு 10 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆளுநர் ஆட்சிக் காலத்திலே இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்டதற்கு 2 கோடி ரூபாய் செலவு ஆயிற்று. என்ன காரணம் என்றால், அப்போதிருந்த விதிமுறைப்படி தேர்தல் நடத்துவது என்றால் ஜெனரல் பாடி கூட்டுவதற்கு ஒவ்வொருவருக்கும் பதிவு

தபால் மூலம் தகவல் தரவேண்டும் என்று இருந்தது. அதனாலே ஒவ்வொருவருக்கும் ரிஜிஸ்தர் தபால் அனுப்பிய காரணத்தினாலே இரண்டு கோடி ரூபாய் செலவாயிற்று. இந்த அரசாங்கம் வந்த உடனே அந்த விதிமுறைகளை மாற்றி, தனிப்பட்ட முறையிலே ஒவ்வொருவருக்கும் தனி ரிஜிஸ்தர் தபால் அனுப்ப வேண்டிய தில்லை. பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்துவிட்டால் போதும் என்று சொல்லி, மாற்றிய காரணத்தினால் இப்போது அவ்வளவு செலவு ஆகவில்லை. மொத்தச் செலவே, இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில், பத்திரிகைகளுக்கு 15 இலட்சம் ரூபாய் தான் ஆகியிருக்கிறது. எனவே, நிச்சயமாக 10 கோடி ரூபாய் செலவு ஆகவில்லை என்ற ஒரு கருத்தை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போலவே, தனி அலுவலர்கள் ஒழுங்காக நிர்வாகம் செய்கிறார்களா என்று ஒரு கேள்வியை திரு. மாரப்பன் அவர்கள் கேட்டார்கள். நல்ல கேள்விதான். நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இந்த அரசாங்கம் வந்து யாரையும் தனி அலுவலர்களாக நியமித்து விடவில்லை. 12 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே, ஆளுநர் ஆட்சியிலே ஆரம்பித்து, பிறகு 11 ஆண்டுக் காலம் இந்த நாட்டை ஆண்டவர்கள்தான் தனி அலுவலர்களை நியமித்தார்களே தவிர, ஏதோ இந்த ஆட்சி வந்து, ஜனவரி மாதம் 27 ஆம் தேதி பதவி ஏற்றுக்கொண்டு அந்த 21,000 சொசைட்டிகளிலே தனி அதிகாரிகளை நியமித்துவிட்டார்கள் என்று சொல்லப்படுகின்ற கருத்து உண்மை இல்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, கைத்தறி நெசவாளர்கள் சொசைட்டி களில் உறுப்பினர்களாக ஆவதற்கு ஒவ்வொரு தறிக்கும் ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும் என்று ஏதோ ஒரு அதிகாரி தெரிவித்ததாக இங்கே சொன்னார்கள். அப்படி எந்த உத்தரவையும் இந்த அரசாங்கம் பிறப்பிக்கவில்லை. அதைப்பற்றிய தகவல்களை உறுப்பினரிடத்திலேயிருந்து கேட்டு அப்படி அவர் உத்தரவு பிறப்பித்து இருப்பாரேயானால் அவர் மீது இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்த ராஜன் அவர்கள் இங்கே ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். ஊழியர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டவுடனே அந்த ஊழியர்களுக் கிடையிலே இருக்கக்கூடிய சம்பள வேறுபாடுகள், இவைகளை யெல்லாம் மாற்றுவதற்கு எல்லா யூனியன் தலைவர்களையும் கூப்பிட்டுப் பேசி எந்த அளவிற்கு நியாயமான சம்பளம் வழங்க முடியுமோ அந்த அளவிற்கு நிச்சயம் வழங்கியிருக் கின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின்

1989 நவம்பர் 2] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சம்பளத்தைக் கூட அச்சங்கங்களாலே கொடுக்க முடிவதில்லை என்ற ஒரு கருத்து சொல்லப்பட்டது. எங்கெங்கே அந்தச் சங்கங்களால் கொடுக்க முடியவில்லையோ, அங்கெல்லாம் அரசாங்கம்தான் அவர்களுககு சம்பளத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட புகார்கள் தனப் பட்ட முறையிலே தெரிவிப்பார்களானால், அவை நிவர்த்தி செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பால சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், ஏதோ ஆளும் கட்சிக்காரர்களை நுழைப்பதற்காக, இந்தத் தேர்தலுக்காக உறுப் பினர்களைச் சேர்த்தார்கள் என்ற குற்றச்சாட்டு எல்லாம் சொன்னார்கள். பொதுவாக, ஆளுங்கட்சி எதுவாக இருந் தாலும் எதிர்க்கட்சிகள் சொல்லக்கூடிய வழக்கமான குற்றச் சாட்டுகள் தவிர—உண்மையிலேயே சொல்கிறேன், எந்த இடத்திலே என்னிடத்திலே புகார் செய்திருந்தாலும், அவ களுக்கு நான் வாய்ப்பைக் கொடுத்திருக்கின்றேன். நாகர் கோயிலிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒருநாள் வந்தார்கள். எங்களுடைய ஊரிலே அந்த சொசைட் டியிலே உறுப்பினர்களைச் சேர்ப்பதிலே, காங்கிரஸ்காரர் களை உறுப்பினர்களாகச் சேர்க்க மறுக்கிறார்கள் என்று சொன்னார்கள். உடனடியாகத் தொடர்பு கொண்டு அதிகாரிகளைக் கேட்டு, அப்படி ஏதாவது குற்றச் சாட்டு இருக்குமானால் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு இடம் தரக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்து இருக்கிறோமே தவிர திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தான் இந்த சொசைட்டிகளிலே இருக்கவேண்டும் என்று இந்த அரசு நினைக்கவில்லை. எல்லோரும் சேர்ந்து ஒரு நல்ல கூட்டுறவு நிர்வாகத்தை சிறப்பாக நடத்த வேண்டும் என்று இந்த அரசு நினைத்துக்கொண்டிருக்கிறது.

13-20 மணி

அதைப்போலவே பால் உற்பத்தியைப் பொறுத்தவரையில் இப்போது இந்த சங்கங்களைக் கலைத்து விட்ட காரணத் தால் உற்பத்தி குறைந்து விட்டது என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டார்கள். ஆனால் ஒன்றை மட்டும் சொல்கிறேன், என்.டி.டி.பி. என்ற நிறுவனம் இந்தத் தேர்தல் நடத்தாததன் காரணமாக 68 கோடி ரூபாய் இந்த அரசுக்கு கொடுக்க வேண்டியதை கொடுக்காமல் இருக்கிறது என்ற கருத்து சொல்லப்பட்டது. அது உண்மை இல்லை. அந்த என்.டி.டி.பி.யின் தலைவர் மதிப்பிற்குரிய திரு. குரியன் அவர்கள் தமிழகத்திற்கு நிதி கொடுப்பது பற்றி சில வினாக்களை எழுப்பினார்கள். உடனே பால் வளத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. நேரு அவர்களும், அதனுடைய மேனேஜிங் டைரக்டர் திரு. நாகராஜன் அவர்களும் அவரை நேரில் போய் சந்தித்து அவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு

எல்லாம் பதில் சொல்லி அப்படி சொன்னதற்குப் பிறகு அவர் முழு மனதோடு தமிழகத்திற்கு சேரவேண்டிய அந்தப் பணம் விரைவில் ஒதுக்கித் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதைப்போலவே சங்கங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற கமிஷன் 10 பைசாவிலிருந்து 5 பைசாவாகக் குறைக்கப் பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே சங்கங்கள் ஒரு வேலையும் செய்யாமல் பால் உற்பத்தியாளர் களிடமிருந்து வாங்கி அதை வினியோகிக்கின்ற இடத்திலே ஒரு லிட்டருக்கு 10 பைசா வைப்பதன் மூலம் அந்தச் செலவை மறுபடியும் மக்கள் மீது தான் சுமத்த வேண்டியிருக்கிறது. 5 பைசாவாகக் குறைத்த காரணத்தால் எந்த சங்கமும் நஷ்டத்தில் இயங்குவதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட புகார்கள் வருமானால் அதையும் இந்த அரசு பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்கள் பேசும்போது பெண்களுக்கும், தாழ்த்தப் பட்டவர்கள் பழங்குடியினர் இவர்களுக்கு எல்லாம் தேர்தலில் முறையே 30 சதவீதம் 18 சதவீதம் என்ற இட ஒதுக்கீடு செய்து இருப்பது வரவேற்கத் தக்கது தான் என்றாலும் கூட சில சங்கங்களில் ஆண் ஊழியர்கள் மட்டுமே பணியாற்றக் கூடிய நிறுவனங்களில், பெண்கள் இல்லாமல் இருக்கிறார்களே அந்த இடங்களில் எப்படி நீங்கள் 30 சதவீதம் ஒதுக்கு வீர்கள் என்று கேட்டு இருக்கிறார்கள். இது ஒரு நல்ல கேள்வி தான். இதை அரசும் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. எங்கெல்லாம் பெண்கள் இல்லையோ அப்படிப்பட்ட சங்கங் களில் அவர்களுக்கு விதி விலக்கு கொடுப்பது பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதையும் அதைப்போலவே சில சங்கங்களுக்கு இதிலிருந்து விதி விலக்கு தரப்படும் என் பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே தனி அதிகாரிகள் மூலம் முறைகேடுகள் நடக்கின்றன. அப்படி நடக்கிற நேரத்தில் அநீதிகளை மறப் போம் என்ற ஒரு நிலை வந்து விடக்கூடாது என்று சொன் னார்கள். நான் இந்த அவைக்குச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன், தனி அதிகாரிகள் யாராக இருந்தாலும் எந்த முறைகேடுகளை நடத்தியிருந்தாலும், அவர்கள் தயவு தாட்சண்யம் இன்றி நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள். அதற்கு உதாரணமாக கோவையில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் 72 லட்சம் ரூபாய் அளவுக்கு கடந்த 5 ஆண்டுக் காலத்தில் ஊழல் நடைபெற்றிருக்கிறது. அந்த ஊழலை அதிகாரிகள் கண்டு பிடிக்கவில்லை. நான் சுற்றுப் பயணம் செய்கிற நேரத்தில் ஒவ்வொரு சங்கத்தினுடைய நிர்வாகி களையும் பார்க்கும்போது உங்களுடைய சங்கம் லாபத்தில்

இயங்குகிறதா? நஷ்டத்தில் இயங்குகிறதா? என்று கேட்பது வழக்கம். அப்படி சொல்கிற நேரத்தில் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். சிந்தாமணி கூட்டுறவு அங்காடி, அதிலும் இந்தியாவிலே மிகச் சிறந்த அங்காடி என்று பெயர் பெற்ற அந்த சிந்தாமணியில் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் நஷ்டம் என்று சொன்னவுடனே என்னால் நம்ப முடியவில்லை. உடனே சென்னைக்கு வந்து அதிகாரிகளோடு பேசி அங்கே இருக்கக்கூடிய அதிகாரியை மாற்றி விட்டு வேறு அதிகாரியை நியமிக்கச் சொன்னேன். புதிய அதிகாரி பொறுப்பு ஏற்றுக்கொண்ட 2 நாளில் அங்கே 72 லட்ச ரூபாய் அளவுக்கு கடந்த ஆட்சிக் காலத்திலே இருந்து தொடர்ந்து ஊழல் நடைபெற்று இருக்கிறது. அதனைக் கண்டுபிடித்த உடனே அதிலே சம்பந்தப்பட்டவர்களை எல்லாம் கைது செய்யும்படியும் அதிலே அதிகாரிகளாக இந்த 5 ஆண்டுக் காலத்தில் யார் யார் ஜாயின்ட் ரிஜிஸ்ட்ிராராக இருந்தார்களோ அவர்களுக்கு நேரடியாக பொறுப்பு இருக்கிறதோ இல்லையோ ஆனால் அவர்களும் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள்; அவர்களையும் தற்காலிக வேலை நீக்கம் செய்து இந்த அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதையும் எனவே அநீதிகளை மூடி மறைக்க இந்த அரசு முயற்சிக்காது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் கன்னியாகுமரி மாவட்டத்தில் 5-வது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளை எல்லாத் துறைகளிலும் உள்ள ஊழியர்களுக்கு நிறைவேற்றியிருக்கிறீர்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்களுக்கு அது நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னார்கள். அதைப்பற்றி விசாரித்து அப்படி நிறைவேற்றப்படாமல் இருந்தால் நிறைவேற்ற உரிய ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

13-25 மணி

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்; 30 சதவீதம் பெண்கள் என்பது வரவேற்கத்தக்கது; 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் 6 ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கக் கூடாது என்ற சட்டத்தை ஏன் மாற்றினீர்கள்; அது இருந்தால் நல்லதுதானே என்று. நாங்களும் அதைப் பரிசீலித்தோம். முதல் அமைச்சர் அவர்கள் கூட அதைப் பரிசீலித்தார்கள். அதிலே என்ன சட்டப் பிரச்சினைகள் வந்தது, ஏன் அதை மறுபடியும்

நாங்கள் பரிசீலித்தோம் என்றால், ஒரு சட்டமன்ற உறுப்பினர் எத்தனை ஆண்டுக்காலமானாலும் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருக்கலாம்; ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் எத்தனை ஆண்டுக்காலமானாலும் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கலாம். ஆனால், பாவம், பரிதாபத்திற்குரிய கூட்டுறவுச் சங்கத்திலே மட்டும் அவர்கள் 6 ஆண்டுக் காலத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்று சொன்னால், அனுபவம் வாய்ந்த திறமையுள்ள நல்ல கூட்டுறவாளர்களை இந்த நாடு இழக்க வேண்டிய ஒரு நிலை ஏற்படும். எனவேதான் அதை மீண்டும் பரிசீலித்தோமே தவிர, இந்தச் சட்டம்கூட 1961-ஆம் ஆண்டுச் சட்டம்; காங்கிரஸ் ஆட்சியிலே இருந்தபோது கொண்டுவரப்பட்ட சட்டம். அதைத்தான் நாங்கள் மீண்டும் கொண்டு வந்திருக்கிறோமே தவிர வேறு ஒன்றும் இல்லை. எனவே, நல்ல திறமையானவர்கள், அனுபவசாலிகளுடைய அந்தச் சேவையைப் பயன்படுத்திக்கொள்வதற்காகத்தான் அதை இந்த அரசாங்கம் திருத்தியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பால் சங்கங்களிலே இன்றைய தினம் அட்வைசரி போர்ட் போட்டு இருக்கிறீர்களே, அது தேவைதானா என்று ஒரு கருத்து சொல்லப்பட்டது. நான் இதைச் சொல்லுகின்ற காரணத்தினாலே அரசியலாக யாரும் நினைக்கக் கூடாது. புதிய உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தவுடனே, இதற்கு முன்பு பால் சொசைட்டிகளில் இருக்கக்கூடியவர்கள் பெரும்பாலோர், பெரும்பாலோர் என்ன, 100க்கு 100 பேர் அவர்கள் ஏற்கனவே ஆட்சியிலே இருந்தவர்களுடைய நியமனத்தாலே வந்தவர்கள்; அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களைச் சேர்க்கவே மாட்டோம் என்று ஒரு உறுப்பினரைக் கூட தமிழ்நாட்டிலே சேர்க்காத ஒரு நிலை இருந்தது. அதுமட்டுமல்ல புதிய உறுப்பினர்களையும் சேர்க்க மாட்டோம்; ஏற்கனவே இருக்கின்ற உறுப்பினர்களை வைத்துத் தான் நாங்கள் தேர்தலை நடத்துவோம் என்று சொன்னார்கள். அதனால்தான் ஒரு அட்வைசரி போர்ட், பால் சொசைடிகளுக்கு மட்டும் போடப்பட்டதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இதிலே திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களை மட்டும் போட்டு விட்டீர்கள் என்பது தவறு. அரசியலுக்கு அப்பாற்பட்டு எந்தக் கட்சியையும் சேராதவர்களை இந்த அட்வைசரி போர்டிலே நியமித்து இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் எப்பொழுதுமே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவிப்பதைப் போல இந்த அரசாங்கத்திற்கு உதவி செய்வதற்கு என்றே சிலர் கருத்துக்களைச் சொல்வார்கள். அவரால்

1989 நவம்பர் 2] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சொல்லப்பட்ட கருத்து, விவசாயிகளுடைய கடன்களை முழுவதும் ரத்து செய்து விட்டு தேர்தலை நடத்துங்கள் என்பது. இந்த அமைச்சரவை ஆட்சிக்கு வந்தவுடனேயே விவசாயிகளுக்கு 106 கோடி ரூபாய் அளவிற்கு சிறு விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்திருக்கிறது. ஆனால் மத்திய அரசாங்கத்தின் கீழ் இருக்கக் கூடிய 'நபார்ட்' நிறுவனம், எப்படி எங்களைக் கேட்காமல் நீங்கள் அந்த 106 கோடி ரூபாய் கடன்களை ரத்து செய்தீர்கள்? அதனாலே இனிமேல் உங்களுக்கு, தமிழ் நாட்டுக்கு நாங்கள் கடனே கொடுக்க மாட்டோம் என்று கதவை மூடி விட்டார்கள். 10, 15 நாட்கள் முதலமைச்சருக்கும் தூக்கம் இல்லை. எனக்கும் தூக்கம் இல்லை. நிதித் துறை செயலாளர், உணவுத் துறை செயலாளர் இவர்களையெல்லாம் பம்பாய்க்கு அனுப்பி அந்த 'நபார்ட்' நிறுவனத்தினுடைய தலைவர் மற்றும் மேனேஜிங் டைரக்டர் இவர்களையெல்லாம் சந்திக்கச் சொல்லி, ஒரு முறைக்கு மூன்று முறை பேச்சு வார்த்தை நடத்தி இனிமேல் தமிழ் நாட்டிலே கூட்டுறவுக் கடன்களை உங்களைக் கேட்காமல் நாங்கள் ரத்தே செய்ய மாட்டோம் என்று எழுதிக் கொடுத்து, இதை நாங்கள் ரத்து செய்து இருக்கிறோம். சரி, உங்களைக் கேட்டுக் கொண்டாவது நாங்கள் ரத்து செய்கிறோம் என்று சொன்னால் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்களா என்றால், 'நபார்ட்' நியமித்திருக்கிற ஒரு நிபந்தனை, எந்தக் காரணத்தைக் கொண்டும் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தால் அது ரத்து செய்யப்படும் என்று அறிவிப்பதே தவறு; அது கூட்டுறவு இயக்கத்தினுடைய கொள்கைக்கே முரணானது என்று திட்டவட்டமாகச் சொல்கிறார்கள். இதை நமக்கு மட்டும் சொல்ல வில்லை. அகில இந்தியாவிலே இருக்கக் கூடிய எல்லா மாநிலங்களுக்கும் இந்தக் கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே 'நபார்ட்' இடத்திலே தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் முறையிட வேண்டுமே தவிர, இந்த ஆட்சி இடத்திலே முறையிட்டு எந்தவிதமான பயனும் இல்லை.

13-30 மணி

எனவே இந்தக் கடனைப் பொறுத்த வரையில் 'நபார்டு' நமக்குக் குறுக்கே இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போலவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வல்லாசு அவர்கள் ஏதோ அரசாங்க ஊழியர்களுக்கு வாரி வாரிக் கொடுத்து விட்டீர்கள். விவசாயிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்பது போன்ற ஒரு கருத்தை வெளியிட்டார்கள். நான் அவருக்கும், இந்த நாட்டுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்கு

ரூ.106 கோடி கூட்டுறவுத் துறையில் கடன்களை ரத்து செய்திருக்கிறோம். முன்பு அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்குப் போட்ட அபராத வட்டியை தி.மு.க. ஆட்சிக்கு வந்த உடனேயே ரத்து செய்திருக்கிறோம். அதன் மூலம் இந்த அரசாங்கத்திற்கு ரூ. 5 கோடி இழப்பு ஏற்பட்டு இருக்கிறது.

அதைப் போலவே, இப்போது 9 லட்சம் பம்ப் செட்டுகளுக்கு —5 எச். பி.க்கு கீழே உள்ள எல்லா பம்ப் செட்டுகளுக்கும், 1 எச்.பி.க்கு 75 ரூபாய் என்று இருந்ததை, 50 ரூபாயாகக் குறைத்திருக்கிறோம். அது மட்டுமல்ல, விவசாயிகள் உற்பத்தி செய்கிற நெல்லுக்கு ரூ. 165 என்று தான் கொள் முதல் விலை இருந்தது. பிறகு ரூ. 175 ஆக உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசாங்கம் சொன்னது. அப்படிச் சொன்னவுடனேயே மத்திய அரசாங்கம் அதை 1-10-1989 முதல் அமல்படுத்த வேண்டுமென்று ஆணை பிறப்பித்தது. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1-9-1989 லிருந்தே அதை அமல் படுத்தலாம் என்றும், அதோடு ஊக்கத் தொகையாக ஒரு குவிண்டாலுக்கு ரூ. 35 கொடுக்கலாம் என்றும் ஆணை பிறப்பித்ததன் மூலம் ஒரு ஆண்டுக்கு 35 கோடி ரூபாய் இந்த அரசாங்கம் சப்சிடியாக—உதவித் தொகையாக விவசாயிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே இன்றுள்ள பொருளாதார நிலையில் எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு இந்த அரசு உதவி செய்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்னமும் முடியுமானால் இந்த அரசாங்கம்—குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைசசர் அவர்கள் விவசாயிகளுக்கு முடிந்த வரையில் உதவி செய்ய வேண்டுமென்று நினைக்கக் கூடியவர்களே தவிர அவர்களுக்கு உதவி செய்யக்கூடாது என்று நினைக்கக் கூடியவர் அல்ல. அப்படிப்பட்ட நிலையில் உதவிகளை இந்த அரசு செய்து கொண்டுதான் இருக்கிறது.

கூட்டுறவு வங்கிச் செயலாளர்கள் மாற்றத்தைப் பற்றிச் சொன்னார்கள். இன்றுள்ள நிலைமையில் மாற்றுவதற்கு சட்டத்தில் இடமில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை இந்த அரசாங்கம் எதிர்காலத்திலே பரிசீலிக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டத் திருத்தங்கள் ஏன் வந்தன என்பதைச் சொல்வதன் மூலம் இந்தச் சட்டத் திருத்த்தின்

அவசியத்தை உங்களால் உணர முடியும். இந்தியாவிலேயே இது வரையில் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களிலே நியமனம் செய்வதற்கும், பங்கு ஏற்பதற்கும் வாய்ப்பு இல்லாமல் இருந்தது. இப்போது நாம் புதிய கண்ணோட்டத்தோடு சமுதாயத்திலே நலிந்திருக்கிற பிரிவினருக்கு இப்படிப்பட்ட அமைப்புக்களில் வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிற காரணத்தினால் பெண்களுக்கு, தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டம் பிரிவு 33(1), (2)ல் பெரும்பாலான நிர்வாகக் குழுவில் 30 சதவீதம் மகளிருக்கும், 18 சதவீதம் ஆதி திராவிடர்—பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று முதல்வர் அவர்கள் நினைத்தார்கள். ஏனென்றால், எந்த கிராமமாக இருந்தாலும் சரி, அங்கே தாழ்த்தப்பட்டவர்கள் நுழைந்தாலேயே அது தீட்டு என்ற நிலை தமிழகத்தில் இருந்தது. அப்படிப்பட்ட மனப்பாங்கைப் போக்க வேண்டும். இந்த சமுதாயத்திலே எல்லோரும் ஒன்றுதான் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் வளர வேண்டுமென்றுதான் இப்படிப்பட்ட சட்டத் திருத்தத்தை இந்த அரசு கொண்டு வந்தது.

அதைப் போலவே, 1961ம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்தில் ஐந்து சங்கங்களில் நிர்வாகக் குழு உறுப்பினராக ஒருவர் இருக்கலாம் என்று இருந்தது. அது காங்கிரஸ் ஆட்சியிலே கொண்டு வந்த சட்டம், அதையே இப்போது இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. 1983-ஆம் ஆண்டு சட்டத்தில், இந்த எண்ணிக்கை மூன்றாகக் குறைந்ததை, மீண்டும் 5 ஆக உயர்த்தி, 5 சங்கங்களில் ஒருவர் நிர்வாகக் குழு உறுப்பினராக இருக்கலாம் என்று கொண்டு வந்திருக்கிறோம். 1983-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்தில் ஒருவர் ஒரே சங்கத்தில்தான் தலைவராக இருக்கலாம் என்று இருந்ததை மாற்றி இப்போது 3 சங்கத்தில் அவர் தலைவராக இருக்கலாம் என்று கொண்டு வந்திருக்கிறோம். 1983-ஆம் ஆண்டு கூட்டுறவு சட்டத்தில் ஒரு நபர் தொடர்ந்து 6 ஆண்டு தான் கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருக்கலாம் அதற்கு மேல் இருக்கக் கூடாது என்ற தடையை நான் ஏற்கனவே சொன்ன காரணத்திற்காக இப்போது நீக்கியிருக்கிறோம்.

அதைப் போலவே, 1983-ஆம் ஆண்டு கூட்டுறவுக் சட்டத்தில் ஒரு சங்கத்தின் தலைவராக, துணைத் தலைவராக இருப்பவர் மற்ற சங்கத்தின் பிரதிநிதியாக—டெலிகேட்டாக—இருக்க முடியாது என்று இருந்த அந்தத் தடையை இப்போது நீக்கியிருக்கிறோம்.

இன்னுமொன்று. இந்தத் திருத்தங்களை எல்லாம் நாங்களாகவே கொண்டு வந்து விட்டோம் என்ற பெருமையைக் கூட நாங்கள் தேடிக் கொள்ள விரும்பவில்லை. 30 சதவீதம்

பெண்களுக்கு, 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்ற அந்த திருத்தம் தான் நமது முதலமைச்சர் அவர்களால், இந்த நாட்டின் நன்மைக்காக, சமுதாயத்தின் நன்மைக்காகக் கொண்டு வரப்பட்டதே தவிர, மற்ற சட்டத் திருத்தங்கள் எல்லாம் ஏற்கனவே நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் அங்கே சொன்னதையொட்டியும், இன்னும் கூட்டுறவுச் சங்கங்களைச் சீர்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு நியமித்த அர்த்தநாரீஸ்வரர் குழுவினுடைய பரிந்துரையையும், தேசிய பால்வள நிறுவனத்தின் தலைவர் டாக்டர் குரியன் அவர்கள் செய்த பரிந்துரையையும் ஏற்றுத்தான் இந்தத் திருத்தங்களைச் செய்திருக்கிறோமே தவிர வேறொன்றும் இல்லை.

13-35 மணி

எனவே கூட்டுறவுச் சங்கங்களில் ஜனநாயகம் தழைக்கவும், நல்ல கூட்டுறவு இயக்கங்கள் இந்தத் தமிழகத்தில் நிலவிடவும் இந்தத் திருத்தங்களைச் செய்திருக்கிறோம். இங்கே திரும்பத் திரும்பச் சொன்னார்கள், தனி அலுவலர்களைத் தொடர்ந்து நீட்டித்தால் ஊழல் நடைபெறாதா என்று, ஊழலில் ஈடுபட்டிருந்தவர் யாராக இருந்தாலும் இந்த அரசு தயவுதாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்போது நான்கு மாத காலம்தான் அவகாசம் கேட்டிருக்கிறோம். இந்த நான்கு மாத காலத்திற்குள்ளாக நிச்சயமாகக் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை இந்த அவைக்குத் தந்து இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற திருத்தங்கள் அத்தனையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும் போது கடந்த ஆட்சிக் காலத்தில் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு கூட்டுறவு அங்காடியிலே சில பணியாளர்கள் கையாடல் செய்ததை வைத்துக் கொண்டு ஒரு ஆட்சிக் காலத்தில் ஊழல் நடைபெற்றது என்று சொல்வது பாராளுமன்றச் சம்பிரதாயத்திற்கு உட்பட்டதா? இது முறையா? எனவே இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல் அவர்கள் சவால் விடுவது போல் யாரையும் நாங்கள் சேர்க்க மாட்டோம் என்று சொன்னதில்லை என்று சொன்னார்கள். நான் பட்டியலைத் தருகிறேன் எந்தெந்த ஊரிலே எவ்வளவு பேர்கள் என்று. அவர்கள் சேர வேண்டுமென்று தாங்கள் கொடுத்திருந்த மனுவை இன்னும் திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் எல்லாம் சேர்க்கப்படவில்லை. அவர்களை எல்லாம் கண்டிப்பாகச் சேர்த்துக் கொள்வேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, நான் எந்த ஆட்சியையும் குறிப்பிடவில்லை (குறுக்கீடு) எல்லா ஆட்சியிலும் அமைச்சர்கள் நேரடியாக ஊழல் செய்வது இல்லை. ஊழியர்கள் செய்வார்கள், அதிகாரிகள் செய்வார்கள். ஆனாலும் அரசுக்குத்தான் பொறுப்பு. தி.மு.க. ஆட்சிக் காலத்திலே ஊழல் என்று சொன்னீர்களே, அப்போது யார் செய்தார்கள்? அப்போதும் அதிகாரிகள் தான் செய்திருப்பார்கள். நடவடிக்கை எடுத்திருப்போம். எனவே ஒரு ஆட்சியிலே நடந்த ஊழலைச் சொல்லும்போது ஆட்சியிலே இருப்பவர்கள்தான் பொறுப்பு என்று சொல்வதில்லை. நடைபெற்றது ஊழல் என்பது உண்மை. 72 இலட்சம் ரூபாய்க்கு ஊழல் நடந்திருக்கிறது. அதனை ஊழியர்கள் செய்திருக்கிறார்கள். அதிகாரிகளும் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதைத்தான் சொன்னேன்.

ஏதோ பட்டியலை வைக்கிறேன் என்று சொன்னார்கள். அதற்காகத்தான் தேர்தலையே ஒத்திப் போட்டு இருக்கிறோம். இப்போதுகூட அவகாசம் இருக்கிறது. உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் எந்தெந்தக் கிராமத்தில் யார் யாரைச் சேர்க்கவில்லை என்ற விவரத்தைத் தருவார்களேயானால் நிச்சயமாக அவர்களை எல்லாம் சேர்ப்பதற்கு இந்த அரசு முயற்சிக்கும், நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே பெண்களுக்கு 30 சதவீதமும், அரிசனங்களுக்கு 18 சதவீதமும் ஒதுக்கி இருப்பதாக அறிவித்தார்கள். மிக்க நன்றி. அதை வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் தலைவராக வருவதற்கும் வழி இருக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக மட்டும் ஆக்கிவிட்டுப் போய்விடக் கூடாது. தலைவர்களாக வந்து பணி செய்வதற்கான வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, உறுப்பினராக வந்து விட்டால் தலைவர்களாக ஆவதற்கும் இடம் இருக்கிறது. இந்த அரசும் இதை மனதில் வைத்துக் கொண்டு தேர்தல் நடைபெறுகின்ற காலத்தில் எங்கெங்கே தாழ்த்தப்பட்டவர்கள் தலைவர்களாக வர முடியுமோ அங்கே எல்லாம் வருவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, பெண்களுக்கு 30 சதவீதம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் என்று இந்தியாவிலேயே முதல் முறையாக

சட்டத்தை இங்கே கலைஞர் அவர்கள் அறிவித்து கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அது மகிழ்ச்சிக்குரிய ஒன்று தான். 15 தினங்களுக்கு முன்னாலே நாடாளுமன்றத்திலே மாண்புமிகு ராஜிவ் காந்தி அவர்கள் கொண்டு வந்த சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்து வாக்களித்து விட்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்து அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துச் சட்டம் குறித்த திருத்த மசோதா குறித்துத்தான் அவர்கள் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். ஆனால் நாங்கள் அங்கே எதிர்த்தது எந்தச் சட்டத்தை என்றால் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே அவர்கள் எண்ணப்படி செய்யப்பட்ட ஒரு காரியம், அடுத்து அண்ணா அவர்கள் எண்ணி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செய்த ஒரு காரியம், அதைத் தொடர்ந்து மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் செய்யப்பட்ட ஒரு காரியம். இவ்வளவுக்கும் நேர்மாறாக அந்தப் பஞ்சாயத்துச் சட்டத் திருத்தம் வந்த காரணத்தால்தான் அதாவது காமராஜர் கருத்துக்கு மாறாக, அண்ணா அவர்களின் கருத்துக்கு மாறாக, எங்களுடைய கருத்துக்கு மாறாக, எம்.ஜி.ஆர். அவர்களின் கருத்துக்கு மாறாக, இருந்த காரணத்தால்தான் அதை நாங்கள் எதிர்த்தோம்.

திரு. உ. ரா. வரதராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்ற போது ஒன்றைக் குறிப்பிட மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். கலைக்கப்பட்ட இயக்குநர்கள் குழு இருந்த காலத்தில் பணியமர்த்தப்பட்ட ஊழியர்கள் அந்த முறை சரியானது அல்ல என்ற காரணங்களுக்காக அந்த ஊழியர்கள் பல்லாண்டு காலமாக பணியாற்றியும்கூட அவர்களுடைய பணி உத்தரவாதம் இல்லாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. முறைகேடுகள் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறபோது பணி செய்து கொண்டிருக்கின்ற ஊழியர்கள் பாதிக்கப்படக் கூடாது என்று சொன்ன அந்தக் கருத்துக்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

13-40 மணி

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஊழியர்களை வேலையிலிருந்து நீக்க வேண்டுமென்ற ஒரு கருத்துரு அரசுக்கு வந்தது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்தனை ஆண்டுகள் அவர்கள் பணியாற்றியதற்குப் பிறகு வீட்டுக்குப் போகலாம் என்று அனுப்ப வேண்டியதில்லை. அவர்களைத் தேர்வாணையத்திற்கு அனுப்பி தேர்வு எழுதச் சொல்லி, தேர்விலே யார் யார் எல்லாம் தேறுகிறார்களோ அவர்களை எல்லாம் வேலையில் நியமித்துக் கொள்ளலாம் என்று ஆணை

பிறப்பித்திருக்கிறார்கள். அந்தத் தேர்வும் கடந்த மாதம் 15ம் தேதி நடைபெற்றிருக்கிறது. அதனுடைய முடிவு வந்த தற்கு பிறகு எத்தனை பேர் தேறுவார்கள், எத்தனை பேர் தேற மாட்டார்கள் என்று தெரியும். எனவே, இந்த அரசைப் பொறுத்த வரையில் அவர்களை அப்படியே வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று நினைக்கவில்லை என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கக் கடன்களைப் பற்றி இப்போது இந்த அவையில் பேசினோம். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருக் கிறார்கள். ஆகவே, மிக அவசர அவசரமான ஒரு விஷயம். அது விவசாயிகள் சம்பந்தப்பட்ட இக்கட்டான பிரச்சினை. (மணி அடிக்கப் பெற்றது.)

திரு. செ. நூர்முகம்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் கட்டாயமாக தேர்தல் நடத்தப்படும் என்று குறிப்பிட்டார்கள். கலைஞர் அவர்கள் நீண்ட காலம் வாழப் போகிறார்கள். எனவே, அவருடைய பதிலிலிருந்து உடனடியாக தேர்தல் நடத்தப்படுமா இல்லையா என்கிற விவரம் இல்லை. ஆகவே, இந்த குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக தேர்தல் நடக்கும் என்கிற உத்திரவாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு அதையும் அறிவித்துவிடுவது நல்லது என்று கருதுகிறேன். உறுப்பினர் களை எல்லாம் அங்கே சேர்க்கவில்லை என்றும் சொன்னார்கள். 31—12—1989 வரை மறுபடியும் விடுபட்ட உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள். 31—1—1990 வரை தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெறும், 28—2—1990-க்குள் பிரைமரி சொசைட்டிகளுக்கான தேர்தல் நடத்தி முடிக்கப்படும் என்ற உறுதியை அவைக்குத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆர் பால சுப்பிரமணியம் அவர்கள் எழுப்பிய பிரச்சினைகள், அதற்கு அமைச்சர் அவர்கள் தந்த பதில்கள், இவை எல்லாமே முறையாக இருக்கின்றன என்ற அடிப்படையில் எதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவாதம் முடிவுற்றது, திரு. பி. மாரப்பன் அவர்கள் தீர்மானத்தை வலியுறுத்துகிறார்களா?

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்துவதை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வலியுறுத்துகிறீர்களா இல்லையா?

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலியுறுத்துகிறேன். அதற்கு முன்னாலே சில கருத்துக்களை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை இல்லை, கருத்துக்களை எல்லாம் ஏற்கெனவே சொல்லிவிட்டீர்கள்.

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நான் சொல்ல ''சான்ஸ்'' கொடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே நீங்கள் பேசிவிட்டீர்கள். ஒரே வரியில் சொல்லுங்கள்.

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடைபெறும் போது இரகசிய வாக்கெடுப்பு என்ற முறை(மணி அடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே நீங்கள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் நிறைய சட்டங்கள் இருக்கின்றன. வலியுறுத்துகிறீர்களா இல்லையா என்பதை மட்டும் சொல்லுங்கள். இல்லையென்றால் நான் அடுத்ததற்குப் போய் விடுவேன். (குறுக்கீடு) ஏற்கெனவே நீங்கள் பேசியிருக்கிறீர்கள். நேரிடையாக வாக்கியத்திற்கு வாருங்கள்.

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னங்கள் ஒதுக்கி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றதாகக் கருதப்படுகிறது என்று அறிவிக்க வேண்டியிருக்கும். நீங்கள் வலியுறுத்துகிறீர்களா இல்லையா என்பதை மட்டும் தெரிவிக்க வேண்டும். ஏதாவது ஒன்றைச் சொல்லுங்கள். பேச மாட்டேன் என்கிறீர்களா? (குறுக்கீடு).

திரு. பி. மாரப்பன் அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

1989 நவம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 37/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 37/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், பி. மாரப்பன், பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோர் ''1—7—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1989) இப்பேரவை நிராகரிக்கிறது'' என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

''1—7—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1989) இப்பேரவை நிராகரிக்கிறது.''

1989 நவம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 37/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 37/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், பி. மாரப்பன், பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோர் ''1—7—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1989) இப்பேரவை நிராகரிக்கிறது'' என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

''1—7—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப் பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1989) இப்பேரவை நிராகரிக்கிறது.''

தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண். 40/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வாக்கெடுப்பு. திரு. எஸ். ஆர் பாலசுப்பிரமணியம் அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 40/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 15 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

*1—11—1989 ஆம் தேதிய **தமிழ்நாடு** சிறப்பு **அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.**

1989 நவம்பர் 21]

(ஈ) வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1989.

திரு. பி. மாரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''27—9—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்ட எண். 7/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது''.

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வாக்கெடுப்பு. திரு. பி. மாரப்பன் அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 41/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

*1-11-1989 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 41/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(உ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை திருவாளர்கள் எஸ். ஆர். பால சுப்பிரமணியம், பி. மாரப்பன், பேராசிரியர் க. பொன்னு சாமி ஆகியோர் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை மொழிவார்.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1—7—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 4/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது.''

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர்கள் நியமனம்) *சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வாக்கெடுப்பு. பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

*1—11—1989ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 41/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(உ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை திருவாளர்கள் எஸ். ஆர். பால சுப்பிரமணியம், பி. மாரப்பன், பேராசிரியர் க. பொன்னு சாமி ஆகியோர் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை மொழிவார்.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1—7—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 4/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது.''

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர்கள் நியமனம்) *சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வாக்கெடுப்பு. பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

*1—11—1989ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 11 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஊ) ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன் வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 43/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன்மீது விவாதத்தை தொடங்கி வைப்பவர் திரு. என. பழனிவேல் அவர்கள்.

*1—11—1989 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 11 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஊ) ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன் வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 43/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன்மீது விவாதத்தை தொடங்கி வைப்பவர் திரு. என. பழனிவேல் அவர்கள்.

*1—11—1989 ஆம் தேதிய **தமிழ்நாடு** சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

13-50 மணி

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளுடைய 3-வது திருத்த சட்டமான ''ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஆயுளை 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தவும், பெண்களுக்கு 30 சதவீத இட ஒதுக்கீடு செய்யவும், நிதியாதாரங்களைப் பெருக்குவதற்கு வல்லுநர் குழு ஒன்றை அமைப்பதற்குமான'' இந்த மசோதா வின்மீது, நான் சில கருத்துக்களை இங்கே முன்வைக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் என்பவை இன்றைக்கு நிதியாதாரம் இல்லாமல் மிகவும் சிரமமான நிலையில் இருக்கின்றன. ஒரு ஊராட்சி ஒன்றியம் என்பது சட்டமன்றத் தொகுதியில் ஏறத் தாழ பாதி அளவுக்கு இன்றைக்கு இருக்கிறது. அதனுடைய கட்டுப்பாட்டில் 10 கிலோ மீட்டர் நீளமுள்ள பல சாலைகள் இருக்கின்றன. அந்த சாலைகளையெல்லாம் செப்பனிட வேண்டும் என்று சொன்னால், ஊராட்சி ஒன்றியங்களிலே நிதி வசதி கிடையாது. அதனால் பல சாலைகள் இன்றைக்கு மராமத்து செய்ய முடியாமல், அவைகளெல்லாம் இன்றைக்கு உபயோகத்திற்கே லாயக்கற்ற நிலையில் இருக்கின்றன. அதன் காரணமாக அந்தப் பகுதி மக்களுக்குப் பேருந்து வசதியும் செய்து கொடுக்க முடியவில்லை. காரணம் போக்குவரத்திற் கான சாலைகள் சரியாக இல்லை. அங்கே இருக்கிற அலுவலர் களிடம் தெரிவித்தால் ''நீங்கள் பணத்தைக் கேட்டு வாங்கி வாருங்கள், எங்களால் ஒன்றும் செய்ய முடியாது'' என்று கையை விரிக்கிறார்கள். அதே சமயத்தில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு நான்கு பஞ்சாயத்து ஆணையாளர்கள் இருக்கி றார்கள். ரெகுலர், திட்டம், சாண எரி வாயு என்று சொல்லி ஒவ்வொன்றுக்குமாக 4 ஆணையாளர்கள் இருக்கிறார்களே தவிர அங்கே வேலை எதுவும் நடப்பதற்கான சூழ்நிலையோ, நிதி யாதாரமோ கிடையாது. ஆகவே, நம்முடைய அரசு இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, வல்லுநர் குழு ஒன்றை அமைத்து, அதன் மூலமாக நிதியாதாரங்களை கொண்டு வரு வார்கள் என்று கருதுகிறேன். அந்த வல்லுநர் குழு ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு அதற் கான நிதியாதாரங்களையும் ஒதுக்கி அவர்கள் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாக இன்றைக்கு பல்வேறு இடங்களிலிருந்தும் ஒரு குறை சொல்லப்படுகிறது. பல ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிலவரி மூலமாக வரக்கூடிய நிதி, காலாகாலத்தில் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். குறிப்பாக நாகப்பட்டினம் பஞ்சா யத்து யூனியனில் அதற்கு வர வேண்டிய ரூ. 32 லட்சம் நிலவரி இதுவரை வரவில்லை என்று சொல்லுகிறார்கள். இதைப் போல பல்வேறு மாவட்டங்களிலே இருந்தும் ஊராட்சி ஒன்றி யங்களுக்கு வர வேண்டிய நில வரி உரிய காலத்தில் வராத காரணத்தால், ஒன்றிய வேலைகள் தடைப்பட்டு நிற்கின்றன. ஆகவே, அந்த நிதியை உடனடியாக அந்தந்த ஊராட்சி ஒன்றி யங்களுக்கு அனுப்பி வைக்க அரசு முயற்சி எடுக்க வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல மீன்பாசி, கல் குவாரி மற்றும் அந்தப் பகுதியில் இருக்கிற புளிய மரம் போன்ற மகசூல் தருகிறவைகள் எல்லாம் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு வருமானத்தைத்தேடித் தரும் வழிவகைகளாகும். அவைகளையெல்லாம் பஞ்சாயத்து ஒன்றியங்கள் பயன்படுத்திக் கொள்ள இந்த அரசு ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் பஞ்சாயத்துக்களிலே வேலை செய்ய வேண்டுமென்று சொன்னால், பஞ்சாயத்து யூனியன் மூலமாகத்தான் செய்ய வேண்டும். அங்கே கிராமப் பஞ்சாயத்தில் பணம் கிடையாது. ஒரு சாக்கடை கட்ட வேண்டுமென்றாலும், பள்ளிக்கூடம் கட்ட வேண்டுமென்றாலும், சத்துணவுக் கூடம் கட்ட வேண்டுமென்றாலும், பெண்களுக்கு ஒரு கக்கூஸ் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றாலும் அல்லது இதுபோன்ற அத்தியாவசியத் தேவைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்றாலும் கூட, கிராமப் பஞ்சாயத்துக்களில் பணம் கிடையாது. அதற்கெல்லாம் ஊராட்சி ஒன்றியங்களைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது. எனவே ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அதற்குத் தேவையான நிதியாதாரங்களையும் உதவிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒன்றியத்தில் உள்ள திட்டப் பணிகள் முழுவதும் நிதியாதாரம் இல்லாத காரணத்தால் தேங்கிக் கிடக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களில் பார்த்தால் யாரும் இருக்கமாட்டார்கள். குடும்பக் கட்டுப்பாடு கேஸ் பிடிக்கப் போய் இருக்கிறார் அல்லது சிறு சேமிப்புக்கு நிதி வசூல் செய்யப் போயிருக்கிறார் என்று இந்த இரண்டு காரணங்களைத்தான் சொல்லுகிறார்களே தவிர அபிவிருத்திப் பணி நடக்கிறது, அதைப்பார்க்கப்போகிறேன். என்று பதில் வருவதேயில்லை. இதற்கெல்லாம் காரணம் நிதியில்லாததுதான். ஆகவே நம்முடைய அரசு.....(மணி அடிக்கப் பெற்றது) இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐ. ஆர். டி. பி. லோன் கொடுக்கிறோம்—200 பேருக்குக் கடன் கொடுக்கிறோம் என்று அறிவித்து இருக்கிறார்கள். ஊரெல்லாம் மனுக்களை வாங்கி 6 மாதம் ஆகிறது. சில பேங்குகளில் இன்னும் ஒரு பைசா கூட கொடுக்கவில்லை. பஞ்சாயத்து யூனியனிலிருந்து கொடுக்கிற சப்சிடியைக் கொடுத்தும், கமிஷனர் சிபாரிசு செய்தும், பேங்க் வாசலிலே போய் நின்றால், பேங்க் மானேஜர் பல மாதத்திற்கு லீவ் போட்டுவிட்டு போய் விடுகிறார். அது மட்டுமல்ல, லோன் கொடுப்பதற்கு முன்பு அந்த ஏரியாவில் இருக்கிற எல்லா பேங்குகளிலிருந்தும் கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட் வாங்கிவா என்கிறார்கள். ஒரு 3,000 ரூபாய் 4,000 ரூபாய் கடன் வாங்க, சிறு தொழில் செய்கிறவர்கள் 10 வங்கிகளிலே போய்—அந்த

ஏரியாவிலே இருக்கிற எல்லா பேங்குகளிலிருந்தும் கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட் வாங்கி வா என்கிறார்கள். அதுமட்டுமல்ல. உனக்குக் குழந்தைகள் எத்தனை இருக்கின்றன? எத்தனை மனைவி என்றெல்லாம் கேட்கிறார்கள். அதுமட்டுமல்ல. கணவன் இருக்கிறபோதே மனைவி மனு போட்டால் நீ ஏன் மனுப்போட்டாய் என்று பெண்களைக் கேட்டு அசிங்கப்படுத்து கிறார்கள். இதற்கெல்லாம் காரணம், பஞ்சாயத்து யூனியன் களுக்கு அதிகாரம் குறைவு என்பதால்தான். அதனாலே தான் வங்கி அதிகாரிகள்கூட எந்தவிதமான சலுகைகளையும் கொடுப்பதற்குத் தயங்குகிறார்கள். ஆகவே நம்முடைய அரசு இந்தச் சலுகைகளை எல்லாம் உடனடியாகக் கிடைப்ப தற்கு யார் தடையாக இருக்கிறார்களோ அவர்களோடு தொடர்புகொண்டு அவை உடனடியாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண்களுக்கு 30 சதவீதம் இடஒதுக்கீடு என்பது உண்மையிலேயே வரவேற்கவேண்டியது. அவர்கள் ஆரம்ப காலத்தில், இன்று பஞ்சாயத்துக்களுக்கு மெம்பர்களாகப்போனால், எதிர் காலத்தில் அவர்கள் மேலும் பல பதவிகளுக்குப் போவதற்கு அவர்களுக்கு அது ஒரு பயிற்சிக்கு நல்ல வழி வகையாக அமைந்து இருக்கிறது. ஆகவே இதையும் நான் வரவேற்று அமைகிறேன்.

13-55 மணி

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி கள் மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவின் மீதான இந்த விவாதத்தில் பங்குகொண்டு சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி சொல்லக்கடமைப்பட்டு இருக்கிறேன். இதில் பேசுவதற்கு முன்னால் ஒரு சிறிய கருத்து, ஊராட்சி ஒன்றியங்களில் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு கட்டாய மான பிரதிநிதித்துவம், ஊராட்சி ஒன்றியம் மற்றும் பஞ்சாயத்து களில் பெண்களுக்கு 30 விழுக்காடு பிரதிநிதித்துவம், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுதல் மற்றும் பார்வை யிடுதல் ஆகியவற்றில் அதிகப் பிரதிநிதித்துவம் ஆகிய தத்துவங்கள் இந்தச் சட்ட முன்வடிவில் இடம் பெற்று இருப்ப தாகச் சொல்லப்படுகிறது. இந்தத் தத்துவங்களிலே எங்களுக்கு மாறுபாடான கருத்துக் கிடையாது. இப்படி ஒரு சட்டத்தினை அவசரமாகக் கொண்டுவர வேண்டிய கட்டாயத்திற்கு இந்த அரசு தள்ளப்பட்டு இருப்பதிலே ஆச்சரியப்படுவதற்குரிய விஷயம் ஒன்றும் இல்லை. இதே தத்துவங்களின் அடிப்படையில் சமீபத் தில் பாராளுமன்றத்தில் வந்த அந்த சட்டத்தினைத் தோற்கடித்த இங்கே ஆளுகின்ற பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கிற நீங்கள் இதனால் பொது மக்களுக்கு உங்கள் மீது ஏற்பட்டு இருக்கும் வெறுப்பினைப் போக்க இப்படி ஒரு மாய்மால சட்டத்தினைக் கொண்டு வந்துள்ளீர்கள் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

திரு. இரா. மோகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்ன ஒரு மாய்மாலம் நீங்குகிறது. (குறுக்கீடு)

மாய்மாலம் நீங்குகிறது என்று சொன்னேன். நீங்கள் சொல்ல வருவது தெரிகிறது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : I have every right to say.

திரு. இரா. மோகன் : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே இதைப்பற்றி ஒரு உறுப்பினர் இங்கே பேசி, மிகத் தெளிவான விளக்கத்தை நம்முடைய முதல்வரவர்கள் தந்ததற்குப் பின்னால் பாராளுமன்றத்தில் அதைத் தோற்கடித்தவர்கள் என்று மீண்டும் அதைப் பற்றி ஒரு உறுப்பினர் வலியுறுத்துவது எந்த வகையில் நியாயம் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'பாராளுமன்றத்திலே தோற்கடித்தவர்கள்' என்று சொல்வதிலே தவறு இல்லை. அது நாடு அறிந்த உண்மை என்பதனால் அது குற்றம் ஆகாது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, நம்முடைய உறுப்பினர் திரு. ஆல்போன்ஸ், இந்த அரசு சில சலுகைகளைக் கொண்டு வந்து மாய்மாலம் செய்வதாகச் சொன்னார்கள் நான் அறிய விரும்புவது காங்கிரஸ் கட்சி இந்த நாட்டிலே 42 ஆண்டு காலமாக ஆண்டு கொண்டிருக்கிறது; அவர்கள் இதுவரை அந்த மாதிரி சட்டங்களை எல்லாம் கொண்டுவராமல் இப்போது கொண்டு வருகிறார்களே, இது என்ன மாய்மாலம் என்று அவர்கள் விளக்குவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : அது பாராளுமன்றத்தில் கேட்கப்படவேண்டிய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நண்பர் நழுவக்கூடாது என்று அவர் சொல்கிறார். இருந்தாலும் பாராளுமன்றத்தைப்பற்றி, மத்திய அரசைப் பற்றிச் சொல்லும்போது எல்லாம் திடீர் திடீர் என்று நீங்கள் எழுந்துகொள்வதால் உங்களுக்கு அதில் பொறுப்பு இருக்கிறது என்று நம்புகிறார். இல்லை, மத்திய அரசுக்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை என்று நீங்கள் கருதி விட்டால் விட்டுவிடலாம்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : கட்சி உறுப்பினர் என்கிற முறையிலே அரசு கொண்டுவருகிற சட்டத்தினை

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பாய்ன்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் ஆல்போன்ஸ் பேசுவதிலே 'Point of order' கேட்கிறீர்களா? அல்லது தனி 'Point of order கேட்கிறீர்களா?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: இல்லை உறுப்பினர் திரு. பழனிவேல் பேசியதில். தலைவரவர்களே, இப்போது திடீரென்று கொண்டுவந்துவிட்டதாகச் சொன்னார்கள். கடந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்கும் அதிகமாக நாடு முழுவதும் ஒரு பொது விவாதத்திற்கு வைக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியிலும் இருக்கின்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் டிஸ்ட்ரிக்ட் கமிஷனர்கள் அழைக்கப்பட்டு ராஜீவ் காந்தி அவர்கள் விவாதம் நடத்தி இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் கோவையிலே அந்தக் கருத்தரங்கு நடைபெற்றது. அது போல நாடு முழுவதும் 4 இடங்களில் அது நடைபெற்று பொது மக்களுடைய கருத்துக்கு விடப்பட்டு, அனைத்து முதலமைச்சர்களையும் அழைத்து அங்கே விவாதம் நடத்தி, அதற்குப்பிறகு தான் சட்டமாக்குவதற்கு கொண்டுவரப்பட்டது திடீரென்று ஏதோ தேர்தலுக்காக கொண்டுவரப்பட்டது என்பது சரியல்ல. மக்களுக்கு அதிகாரம் வழங்க.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பொது விவாதம் நடத்தப்பட்டதாக நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் சொல்கிறார். அது தவறு. பொது விவாதம் நடத்தப்படவில்லை. பொது விவாதம் நடத்தப்பட வேண்டுமென்று முன்னாள் மத்திய அமைச்சராகவும், இங்கே நிதி அமைச்சராகவும் பணியாற்றிய சி. சுப்பிரமணியம் அவர்கள் கூட பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்குக் கடிதம் எழுதி, அது எல்லா ஏடுகளிலும் வெளிவந்து இருக்கிறது. முதலமைச்சர் என்கின்ற முறையில் நானும் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுக்குக் கடிதம் எழுதி, இதில் பொது விவாதம் நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அது மாத்திரம் அல்ல. பொதுவாக முதலமைச்சர்களை அழைத்துப் பேசினால் போதுமானது அல்ல; இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய ஒவ்வொரு ஷரத்தும் முதலமைச்சர்களுடைய மாநாட்டிலே விவாதிக்கப்படவேண்டும்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதுவும் பிரதமரால் நிராகரிக்கப்பட்டுவிட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

14-00 மணி

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சமீபத்திலே மத்திய அரசு போட்ட ஒரு சட்டத்தைக்கூட முதல்வரவர்களே கூட கறுப்புச் சட்டம் என்று அழைத்தார்கள். அது அவர்களுக்குள்ள உரிமை. அதைப் போல. . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் அப்படிச் சொன்னதாக ஒரு தவறான கருத்தைத் திருநெல்வேலியிலே உள்ள இளைஞர் காங்கிரசார் பரப்பி, அதற்காக நான் அங்கே சென்றபோது காக்காய் பிடித்து—காக்காய்களைப் பிடித்தார்கள், அதைக்கூடப் பத்திரிகையிலே காக்காய் பிடிக்கிறார்கள் என்று விளையாட்டாய் எழுதினார்கள். நான் கறுப்புச் சட்டம் என்று என்றைக்கும் அந்தச்

சட்டத்தைப் பற்றிச் சொல்லவில்லை. அது காக்காய் பறக்க விடுவதற்காக, நான் அப்படிச் சொன்னதாக ஒரு கற்பனை யாகச் செய்து கொண்டார்கள்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : அதாவது எதிர்க்கட்சித் தலைவர் என்கிற முறையிலே முதல்வரவர்களுக்கு அதில் உள்ள உரிமை, அரசு ஒரு சட்டத்தை இயற்றுகின்றபோது. அந்தச் சட்டத்தைப் பற்றி விமர்சனம் செய்யலாம். அதைப் போல நான் சொல்கிறேன். இந்தச் சட்டம் ஒரு மாய்மாலச் சட்டம் என்று சொல்கிறேன். There is nothing unparliamentary. It is my basic right. As an Opposition Member of the House, I have got a right to criticise the Government's act in whatever terms, in a decent way. That, I think, I have done my duty.

அதற்கடுத்து இன்று பஞ்சாயத்து ராஜ் என்கிற சட்டம் பாராளுமன்றத்திலே விவாதிக்கப்பட்டது. அதிலே சொல்லப் பட்டிருக்கின்ற கருத்துக்களை மிகவும் தெளிவாக, மிகவும் ஆணித்தரமாக, மிகவும் அழகான குறிப்புகளுடன் அந்தச் சட்டங்கள் வந்தன. ஆனால் அந்தச் சட்டம் பாராளு மன்றத்தில் தோற்கடிக்கப்பட்ட பிறகு இப்பொழுது ஒரு புதிய பார்வையிலே ஒரு புதிய கோணத்திலே இங்கே நீங்கள் அமல்படுத்திக்கொண்டு வருவது, கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் தன் பொல்லாச் சிறகை விரித்து என்று சொல்வார்களே அதைப்போல பாரதப் பிரதமர்— இனிய பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் தன்னுடைய அழகிய தோகையை விரித்து ஆடப் பொறுக்காத வான்கோழிகள் கொண்டு வந்த சட்டமாக இது இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

66-A பிரிவிலே சில திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"66-A. Save as otherwise provided in Section 66, the covernment may, subject to such conditions and restrictions as may be specified, entrust all or any of the schemes, programmes and activites for economic development, whether such schemes, programmes and activities are to be executed or implemented either by the Govern-tment or by any statutory body, or other agency to the Panchayat' Union Council for its execution or implementation. . . . என்று சொல்கிறார்கள். அதாவது அரசு கொண்டு வருகின்ற நல்வாழ்வுத் திட்டங்களை, சிறப்புத் திட்டங்களை, ஊராட்சிகளின் மூலமாக, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகச் செயல் படுத்த வேண்டுமென்று இந்தச் சட்டம் சொல்கிறது. இதைத் தான் அந்தச் சட்டத்திலேயும் சொல்லியிருக்றோம் ஜவஹர்

ரோஜ்கார் யோஜனா என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் மத்திய அரசிலே. அந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டிய பொறுப்பை யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள் என்றால், உள்ளாட்சிகளுக்கு, உள்ளாட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அப்பொழுது என்ன சொன்னீர்கள். இது மாநில அரசைக் காய் அடிக்கின்ற சட்டம் என்று சொல்லிவிட்டு அதைப்போல, அதே திட்டத்தினை அமல்படுத்துகின்ற பணியினை நீங்கள் கொண்டு வந்து சொல்கின்றபோது ஏதோ மாமியார்....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மத்திய அரசு நேரடியாகப் பஞ்சாயத்து நிர்வாகத்திலே தலையிடுவதற்கு வழி செய்கிற சட்டமாக அது பாராளுமன்றத்திலே வந்த காரணத்தால்தான் மத்திய அரசே தலையிடுகிற ஒரு முறை மாநில சுயாட்சிக்கு எதிரானது என்ற காரணத்தால் பலமுறை நாங்கள் கண்டித்திருக்கிறோம். அது தொடரும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மத்திய அரசு நிர்வாகத்திலே தலையிடுகிறது என்று சொல்வது தவறு. மத்திய அரசு சில திட்டங்களினுடைய உதவிகளை அந்த ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்தைத் தான்....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் மாநிலத்திலே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களை, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நேரடியாக அவரே அழைத்து மாநாடு கூட்டுவது என்ற அந்த முறையிலேயே மாநில சுயாட்சிக்கு ஊறு செய்யத் தொடங்கினார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: இன்று இந்தச் சட்டம் எதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நான் ஒரு அடிப்படையான கேள்வியை எழுப்ப ஆசைப்படுகிறேன். ஒரு தேர்தலைக் கண்ணிலே வைத்துக்கொண்டு அந்தத் தேர்தலிலே மக்களை சந்திப்பதற்காக பஞ்சாயத்து ராஜ் சட்டத்தைப் பாராளுமன்றத்திலே தோற்கடித்தவர்கள் அந்த முகத்தோடு மக்கள் மத்தியிலே போக முடியாது என்ற காரணத்தினால் இப்படியொரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். எப்படி இராமாயணத்திலே சீதாப்பிராட்டியை

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு தேர்தலை மனத்திலே வைத்துத் தேர்தலில் ஆதாயம் பெற வேண்டுமென்பதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம்தான் பஞ்சாயத்து ராஜ் சட்டம் என்பதால் நாங்கள் எதிர்த்தோமே தவிர எதிர்ப்பு தேர்தலை மனதிலே வைத்துக் கொண்டு என்று சொல்வது முறையான குற்றச்சாட்டாகாது.

1989 நவம்பர் 21] 14-05 மணி

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : இராமாயணத்திலே சீதாப் பிராட்டியை மாரீச மானைக் காண்பித்து ஏமாற்ற நினைத்ததைப் போல, தமிழக வாக்காளப் பெருமக்களை இந்தச் சட்டத்தைக் காண்பித்து ஏமாற்றலாம் என்று நினைக்கிறார்கள். கிராமத் திலே கூட சொல்வார்கள். ஆனால் இந்தச் சட்டம் உண்மை யிலேயே நாம் நினைத்த பலனைத் தருகிறதா, ஊராட்சி ஒன்றி யங்களுக்கு என்பதைக் கவனிக்க வேண்டும். அப்படி நீங்கள் ஒருவேளை சட்டத்தின் மூலம் நீங்கள் நினைத்திருக்கிற அதிகாரங்களைக் கொடுக்க முடிந்தது என்று சொன்னால் அதற்கு நாங்கள் முழுவதும் உடன்பாடு உடையவர்கள். பிரிவு 66-ல் நீங்கள் சொல்கிறபோது அந்த அதிகாரத்தைக் கூட ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுப்பதற்கு நீங்கள் தயாராக இல்லை. அதை எப்படிச் சொல்கிறீர்கள் என்றால். . ''The Government may subject to such conditions and restrictions as may be specified...'' திட்டங்களை அமல்படுத்துவதற்கு அதிகாரங்களை கேட்கிற அமைப்பாக இந்த அமைப்பு இருக்க வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். ஊராட்சி ஒன்றியங்கள் அடிப்படையான ஜன நாயக அமைப்புகள். இவை உண்மையிலேயே ஆண்மையுள்ள அமைப்புகளாக இருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய வாதம். நீங்கள் அந்த அதிகாரத்தைக் கொடுப்பதாகச் சொல்லி யிருக்கிறீர்களே தவிர You offer only lip service.

"... may subject to such conditions and restrictions...." என்று தான் சொல்லியிருக்கிறீர்கள். அதிலே நாங்கள் மாறுதல் வேண்டுமென்று கேட்கிறோம்.

Without any condition these powers should be given to the local bodies and they should be able to discharge their duties subject to the needs and wants of the local public. இதுதான் எங்களுடைய சட்டம். அதைத்தான் நாங்கள் கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறோம். ஊராட்சி ஒன்றியங்கள் உண்மையிலேயே ஆண்மையானதாக இருக்கவேண்டுமென்று நினைக்கிறோம். நீங்கள் மேல் சொக்காயை மட்டும் மாட்டுகிறீர்கள். புற்று நோய்க்கு சரியான மருந்து வேண்டுமென்று சொல்கிறோம். புற்று நோய்க்கு சரியான மருந்து பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே இருக்கிறது. ஆனால் நீங்கள் ஆஸ்ப்ரோ வில்லையை கொடுத்துவிட்டு புற்று நோயை குணப் படுத்த வேண்டுமென்று எண்ணுகிறீர்கள்.

திரு. கோ. வீரையன் : பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த நாட்டினுடைய சமஷ்டி அமைப்பு என்ற இந்த அடிப்படையை தகர்த்து எறிந்து ஒரு உறுப்பு ஆட்சி என்ற அளவிற்கு கொண்டு வரக்கூடிய முறையில் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு கொண்டுவரப்பட்ட 67-வது திருத்தம் தான் மயிலின் தோகை என்று குறிப்பிடுகிறாரா? சமஷ்டி அமைப்பை தகர்க்கக்கூடிய அதுதான் சிறந்த பஞ்சாயத்து ராஜ்யம் என்று குறிப்பிடுகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து ராஜ் சட்டம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வைக்கப்பட்டது. அதனுடைய நகல் கூட நம்முடைய நூலகத்தில் இருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தார்கள் என்றால், அதிலே சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்கள் எவ்வளவு அழுத்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை உறுப்பினர் அவர்கள் அறிந்து கொள்வார்கள் என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நமது நூலகத்தில் இந்த படிகள் இருக்கின்றன. நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் இப்படி சட்டத்தில் நீங்கள் அதிக அதிகாரம் கொடுத்தீர்கள் என்று சொன்னால் நாங்கள் அதை ஒப்புக்கொள்கிறோம்.

66-A, 66-B ஆகிய இரண்டு தான் புதிய செக்ஷன்கள், அதில் நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றால் கவர்ன்மெண்ட் அதிக அதிகாரம் கொடுப்பதைப் போல சொல்லிவிட்டு, உண்மையில் அதிகாரத்தை நீங்களே வைத்துக் கொள்கிறீர்கள். இரண்டாவது பாயின்ட் என்னவென்றால் "The Panchayat Union Council may, if so notified by the Government, review the schemes, programmes and other activities...." என்று சொல்கிறார்கள். ஆனால் ஊராட்சி ஒன்றிய அமைப்புகளுக்கு தங்கள் பகுதியில் நடக்கிற வேலைகளை மேற்பார்வையிடுகிற அதிகாரங்களைக் கூட நீங்கள் கொடுக்க விரும்பவில்லை. Only "may and if notified by the Government',.... நாங்கள் என்ன சொல்ல விரும்புகிறோம் என்றால், அந்தப் பகுதியில் நடக்கிற வேலைகளை மேற்பார்வையிடுவதற்கு அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு அடிப்படையான உரிமையை கொடுக்க வேண்டும். அது எப்படி இருக்க வேண்டுமென்று சொன்னால் "The Panchayat Union Councils shall review the schemes, programmes and other activities of the Government...." என்று இருக்க வேண்டும். அந்தச் சட்டத்தில் எந்தவிதமான மாறுதலைக் கொண்டு வர வேண்டும். அப்படி மாறுதலைக் கொண்டுவந்தால் இந்தச் சட்டம் உண்மையாக எதற்காக நீங்கள் முதலில் நோட்டிபிகேஷன் கிளாசில் சொல்கிறீர்களோ—Purpose of the Act, Purpose of the Amendment அந்த காரணம் உண்மையிலேயே நிறைவேறும். அப்படிப்பட்ட திட்டங்களை அமல் படுத்தவேண்டும்.

நான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டேன். டாஸ்க் போர்ஸ் கமிட்டியில் சட்டமன்ற உறுப்பினர்களை நியமிக்க வேண்டுமென்று கோரினேன். அதை முதலமைச்சர் அவர்கள் உடனே ஒப்புக் கொண்டு உத்தரவுகளைப் போட்டார்கள். ஆனால் இன்று நீதி மன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்து அந்த உத்தரவிற்கு ஸ்டே ஆர்டர் வாங்கியிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை இதிலே சேர்த்துக் கொண்டோம் என்றால் அது இலகுவாக இருக்கும் என்று சொன்னோம். ஆனால் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களில் சிலபேர் நீதிமன்றங்களுக்குச் சென்று அந்த உத்தர

விற்கு ஸ்டே வாங்கி, பணிக்குழு என்று சொல்கிற அந்த டாஸ்க் போர்ஸ் செயல்பட முடியாத நிலையில் இருக்கிறது. அதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

எனவே, உண்மையாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக அதிகாரம் வர வேண்டும் என்பது தான் எங்களுடைய நோக்கம். அதற்காக மேலோட்டமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வராமல், ஆழமாகச் சிந்தித்து அந்த பஞ்சாயத்து ராஜ் சட்டம் என்ன உணர்விலே ஏற்பட்டதோ, அதைப்போன்ற உணர்வில் ஒரு சட்டம் அமையவேண்டுமென்று கோரி, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமைகிறேன்.

14-10 மணி

திரு. கோ. பூவராகன்: தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற சட்டமுன்வடிவில் பஞ்சாயத்துகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்த வேண்டும். இடையில் தலைவர்கள் யாராவது இறந்துவிட்டால் அல்லது அந்த மன்றம கலைக்கப்பட்டால் தேர்தல் ஆறு மாதங்களுக்குள் வைக்க வேண்டுமென்று அந்த நியதியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பெரிதும் வரவேற்கிறேன். அதோடு, 30 விழுக்காடு பெண்களுக்கு பஞ்சாயத்திலே, பஞ்சாயத்து ஒன்றியத்திலே இடம் அளிக்கவேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க ஒன்று. அதோடு ஏற்கனவே இருந்த பஞ்சாயத்துச் சாலைகள், பூங்காக்கள், அல்லது பஞ்சாயத்துக்குரிய இடங்களுக்கு இறந்துவிட்டவர்களுடைய பெயர்களைத் தான வைக்க வேண்டும் என்று இருப்பதை மாற்றி, தற்போது உயிரோடு இருப்பவர்களுடைய பெயரைக்கூட வைக்கலாம். அதிலே ஒன்றும் தவறு இல்லை என்று கொண்டு வந்திருக்கிறார்கள். நான் இந்த சமயத்திலே சொல்லிக்கொள்வது, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து ஒன்றியங்கள் மிகப் பெரிய அளவிலே இருப்பதை மாற்றவேண்டும். 5 ஆண்டுக்காலம் நீங்கள் இருக்கப் போகிறீர்கள். இன்னும் 2 ஆண்டுக்காலம் இருக்கிறது, தேர்தல் வருவதற்கு. எனவே இந்த இரண்டு ஆண்டுக்காலத்திற்குள்ளே பஞ்சாயத்து ஒன்றியங்கள் பெரிய அளவிலே இருப்பதைத் திருத்தி அமைத்து ஒரு அளவாக, திட்டவட்டமாக இருக்கிற அளவாக அதை வைப்பது நல்லது.

அதேபோன்று பஞ்சாயத்துக்களில் கூட பெரிய பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவைகள் இருக்கின்ற வருவாயை வைத்துக்கொண்டு, அத்தனை சாலைகளையும், மற்றும் பள்ளிக்கூடங்கள் பொதுச்சுகாதார வசதிகள் போன்றவற்றை எல்லாம் பராமரிக்க முடியாத நிலைமை இருப்பதால், அந்தப் பஞ்சாயத்துக்களைக் குறுகிய அளவிலோ, அல்லது

ஜனத்தொகை அமைப்பிலோ, திருத்தி அமைப்பதற்கு' இந்த இரண்டு ஆண்டுக்கால அவகாசத்திற்குள் நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும் இருக்கிற பொது இடங்கள் இன்றையதினம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருக்கிறது. அந்தப் பஞ்சாயத்துகளின் தீர்மானம் இல்லாமலேயே பொதுமக்கள் அந்த இடங்களை ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். பொதுவாக அந்த இடங்கள், அந்தந்த பஞ்சாயத்துக்கள் மற்றும் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு இருக்கவேண்டும் என்பதை திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும். அதிலே எந்தவிதமான குறுக்கீடும் இருக்கக்கூடாது. அப்படி யாராவது ஆக்கிரமிப்பு செய்திருந்தால், விரைவிலே ஒரு சட்டம் இயற்றி, அந்த ஆக்கிரமிப்புகளை எடுத்து விடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர், நீங்கள் ஏதோ ஒன்றை எதிர்பார்த்து, பாராளுமன்றத்திலே அவர்கள் சொன்னதைப் பார்த்து காப்பி அடித்து சட்டம் இயற்றிவிட்டீர்கள் என்று சொன்னார்கள். அவர்கள்தான், பாராளுமன்றத்திலே இருக்கிற இடம் தெரியாமல், ஏற்கனவே பல மாநிலங்களில் இருக்கிற சட்டத்தை முழுமையாக அப்படியே காப்பி அடித்து —பாராளுமன்றத்திலே பல வேலைகள் இருக்கின்றன— அந்த வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு, இந்தப் பஞ்சாயத்திலே அவர்கள் புகுந்து இருக்கிறார்கள்— ஏதோ பெரிய அளவிலே இந்தப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்களுக்கும், ஊர் மக்களுக்கும், மக்களாட்சியை நேரடியாகக் கொண்டு வருவதைப் போன்ற ஒரு பாவனையில் அவர்கள் இன்றையதினம் சென்று கொண்டிருக்கிறார்கள். இதை மக்கள் விரும்பவில்லை. அவர்கள் ஏதோ மாய்மாலம் என்று சொன்னார்கள். இதை நான் வேறுவிதமாகச் சொல்ல வேண்டும் என்று விரும்பவில்லை. இப்போது கொண்டு வந்திருக்கிற நேரம், கொண்டுவந்திருக்கிற ஆள், கொண்டு வந்திருக்கிற இடம், ஆகியவற்றை மக்கள் நம்புவதாக இல்லை. எத்தனையோ வேலைகள் இருக்கின்றன. பொதுமக்களுக்கு ஆற்றவேண்டிய நல்ல பல காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அந்தக் காரியங்களை எல்லாம் விட்டு விட்டு, பஞ்சாயத்துக்களை கவனிக்கவேண்டிய பொறுப்பு, அந்தந்த மாநிலத்திலே உள்ளவர்களுக்கு, தலைமைப் பொறுப்பிலே உள்ளவர்களுக்கு உண்டு. நன்றாக இடம் அறிந்தவர்கள் மக்களை நன்றாகப் புரிந்தவர்கள், சூழ்நிலை அறிந்து அந்தந்த மாநிலத்திற்கு ஏற்றவாறு சட்டத்தை இயற்றுவதற்கு அவர்களுக்கு உரிமை அளித்து, அவர்கள் அந்தச் சட்டங்களை ஏற்றுக்கொள்வதற்கு ஒரு முன்னோடியாக ஏதாவது வழிவகை

அல்லது கைட்லைன்ஸ் கொடுக்கலாமே தவிர, இதுபோன்ற காரியங்களை எல்லாம் பாராளுமன்றத்திலே எடுத்து வைத்து, முழுமையாகச் செய்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது.

நம்முடைய முதல்வர் அவர்கள் கூட அடிக்கடி சொல்வார்கள். மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. மக்கள் மனநிலை வேறுபடுகிறது. இருக்கிற சூழ்நிலை வேறுபடுகிறது. அந்த நிலைமைக்கு ஏற்றவாறு, அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு, அந்தந்த மாநிலங்களுக்கு அதிகாரத்தை அளித்து உதவவேண்டும்.

பொதுவாக 5 ஆண்டுகளில் தேர்தலை நடத்தவேண்டும். நிதி ஆதாரங்கள் செய்து தர வேண்டும். தேர்தல் நடந்ததற்குப் பிறகு ஏதாவது காலி இடங்கள் ஏற்பட்டால் அந்த 5 ஆண்டு வரையறைக்குள்ளே அந்தத் தேர்தலை முடித்து வைக்கவேண்டும் என்பது போன்ற கருத்துக்களை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். அதை விட்டுவிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரை அழைப்பது, நாங்கள் நேரடியாக நிதி ஆதாரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிப்போம், அவர்கள் கொடுத்துவிடுவார்கள் என்று சொல்வது போன்றவைகளை எல்லாம் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை என்பதைத்தான் என் போன்றவர்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

நான் இன்றையதினம் சொல்லிக் கொள்வதெல்லாம், பஞ்சாயத்து மற்றும் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு டீ-லிமிட்டேஷன் கொண்டுவந்து, இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில், அவற்றைச் சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக வேலை நடக்கின்ற பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்களிலே மேற்பார்வையை யாரிடுவது, பஞ்சாயத்தா, பஞ்சாயத்துத் தலைவரா என்ற நிலையில்லாமல், பார்த்துக்கொள்ளவேண்டும். பொதுமக்கள் எல்லோரையும் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். தவறான காரியங்களில் ஈடுபடுகிறபோது, அதைக் கண்டிக்கக்கூடிய பொறுப்பை நாம் கட்டாயமாக ஏற்படுத்தியாகவேண்டும். இந்த நிலை எவ்வாறு ஏற்பட்டது? கடந்த 12 ஆண்டுக் காலமாக பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு தேர்தலே இல்லை. அவைகளை தனிப்பட்ட அதிகாரிகள் தான் நிர்வகித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன செய்தார்கள் என்பது பொதுமக்களுக்குத் தெரியாது. கடைசி காலத்திலே ஒரு ஆட்சி மாறுகிறபோது, அந்தச் சமயத்திலே பஞ்சாயத்துத் தலைவர்களை எல்லாம் கலைத்து விட்டார்கள். அந்தக் கணக்கு எல்லாம் எங்கே போவது என்றே தெரியவில்லை. புதியதாக தேர்தல் நடந்து, புதிய பஞ்சாயத்துத் தலைவர்கள் வந்தபிறகு, புதுக் கணக்கு எழுதிக் கொண்டு

இருக்கிறார்கள். அந்தப் பழைய கணக்கு என்னவாயிற்று? அந்தப் பணம் என்னவாயிற்று? தற்போது அவர்களுக்குக் கொடுத்த பொறுப்புகளை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். 12 ஆண்டுகளுக்கு மேலே தனிப்பட்டவர்கள் கையிலேயிருந்த பஞ்சாயத்துப் பணங்கள், அந்தப் பஞ்சாயத்துக் கணக்குகள் இல்லாததால், புதிதாக வந்தவர்கள், மிகவும் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

14-15 மணி

சில இடங்களிலே ஒரு செக் புக்கும் 100 ரூபாயும் கொடுத்து ஒரு புதிய புத்தகத்தை அரிச்சுவடி புத்தகம் மாதிரி ஏதோ கொடுத்து நீங்கள் எல்லாம் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிற நிலை திரும்பவும் வந்து விடக் கூடாது. அந்தக் கணக்கு வழக்குகளை சரி பார்ப்பதற்கு ஒரு அமைப்பு சரியாக இருக்க வேண்டும். அதை நீங்கள் சட்டத்தின் மூலமாகக் கொண்டு வருவது நல்லது என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். அண்ணாநம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சி நிர்வாகம் பற்றிய சட்டத் திருத்தத்தின் மீது என் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக இந்தச் சட்டத் திருத்தம் அறிஞர் அண்ணாவினுடைய கொள்கைக்கு புறம்பாக கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே ஞாபகப் படுத்த விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் இருக்கிறபோது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் அவர்கள் தவறு செய்தால் திரும்ப அழைக்க வேண்டுமென்ற அந்த எண்ணத்தை இந்த நாட்டுக்கு வெளிப்படுத்தினார்கள். அதனை உணர்ந்துதான் மறைந்த எங்களுடைய தலைவர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதை உள்ளாட்சித் துறையிலே—அறிஞர் அண்ணாவின் கருத்தைப் புகுத்திப் பார்க்க வேண்டுமென்ற அந்த அடிப்படையிலே தான் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் நிர்வாகத்திலே தவறு செய்வார்களேயானால் அது நிரூபிக்கப்படுமேயானால் அவர்களை திரும்ப அழைக்க வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : அந்தச் சட்டம் எப்போது கொண்டு வரப்பட்டது. அதனுடைய எண் என்ன என்ற விவரங்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி : எனக்கு எண் ஞாபகம் இல்லை. ஆனால் அது நடைமுறைக்கு வந்தது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : அந்தச் சட்டம் எப்போது கொண்டு வரப்பட்டது என்று எதிர்கட்சித் துணைத் தலைவராவது சொன்னால் பயன் உள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இது மாதிரி பொறுப்புக்களை எல்லாம் தட்டிக் கழிக்க மாட்டார். எனவே அவர் சொல்லி விடுவார். (சிரிப்பு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது வந்திருக்கிற சட்ட முன்வடிவின்மீது பேசுவார். (சிரிப்பு).

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லாம் தெரிந்தவர்கள். ஆனால் நான் மிகக் குறைவாகத் தெரிந்தவன். ஆனால் அதே நேரத்தில் இது நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எண் எனக்குத் தெரியவில்லை. அது என்னுடைய குறையாகவும் இருக்கலாம். ஆனால் எண்ணம் சரியான எண்ணம் என்பதைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆக அண்ணாவினுடைய கொள்கையின் அடிப்படையிலே அதைக் கொண்டு வந்து செயல்படுத்தினோம். ஆனால் இன்றைக்கு அதை மாற்றி யார் தவறு செய்தாலும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை என்ற அளவுக்கு அவர்களைக் காப்பாற்றுகிற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆனால் அதே நேரத்திலே இன்னொன்றையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய பெயரை வைக்க மதுராந்தகம் நகராட்சி மன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அதிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரை அந்த மதுராந்தகம் நகராட்சிக்கு உட்பட்ட அங்காடிகளுக்கும் அங்கிருக்கிற பஸ் நிலையத்திற்கும் வைக்க வேண்டுமென்ற அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறது. ஆனால் அந்தத் தீர்மானம் இதுவரையில் அரசால் அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால் இன்றைக்கு ஒரு புதிய அறிவிப்பு அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. உயிரோடு இருப்பவர்கள் பெயரையும் அரசு கட்டிடங்களுக்கு பெயராக வைத்துக் கொள்ளலாம் என்று. அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. யார் வேண்டுமானாலும் யாருடைய பெயரை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளட்டும்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயராலே அந்தக் கட்டிடங்களுக்கு பெயர் வைக்க வேண்டுமென்று ஏகமனதாக மதுராந்தகம் நகராட்சி, தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியபோது அந்தத் தீர்மானத்தை ஒரு ஆண்டுக்காலம் ஆகியும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) அனுப்பப்பட்டு இருக்கிறது. அதைத் தாங்கள் பரிசீலிக்க வேண்டும்.

14-20 மணி

மாண்புமிகு தலைவர் அவர்களே, பஞ்சாயத்து ராஜ் சட்டத்தைப் பொறுத்தவரையில் எங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதைப் போல தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றினார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வரையில் பண ஒதுக்கீடு செய்து அதிலே பாதை அமைத்தல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தை உருவாக்குதல், சாலைகள் அமைத்தல், சிறு சிறு பாலங்கள் அமைத்தல் என்று பல்வேறு கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கினார்கள். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தையும் நகர பாலிகா சட்டத்தையும் கொண்டு வந்து நாடாளுமன்றத்திலே வைத்த போது நாங்கள் அதை ஆதரித்து இருக்கிறோம். அப்படி ஏழை எளிய மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்கள் கிராமப்புறத்திலே வாழ்கின்ற அந்த மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும், அவர்களுடைய அன்றாடத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும், வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ராஜீவ் காந்தி அவர்கள் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே போல இந்த 30 சதவீதம் பெண்களுக்கு உரிமை என்றும் ஆதிதிராவிட மக்களுக்கு 18 சதவீதம் என்றும் இருப்பதை பஞ்சாயத்ராஜ் சட்டத்திலும் நகர்பாலிகா சட்டத்திலும் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அதை நம்முடைய தமிழகத்தை ஆளுகின்ற திராவிட முன்னேற்றக் கழகம் அங்கே நாடாளுமன்றத்திலே எதிர்த்துவிட்டு, இன்றைக்கு அதிலே ஒரு பகுதியான 30 சதவீதம் பெண்களுக்கு என்றும் 18 சதவீதம் ஆதிதிராவிட மக்களுக்கு என்றும் கொண்டு வருகின்ற ஒரு திட்டத்தை இங்கே இன்றைக்குச் சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்காமல் இருக்க முடியாது. ஆனால் நீங்கள் நாடாளுமன்றத்திலே அந்தச் சட்டத்தை, நகர மக்களுக்கும் கிராமப்புற மக்களுக்கும் கொண்டு வந்த சட்டத்தை எதிர்த்துவிட்டு, நாளை நடைபெறுகின்ற நாடாளுமன்றத் தேர்தலை உங்களால் சந்திக்க முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

1989 நவம்பர் 2]

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் அதை அங்கே, நாடாளுமன்றத்திலே எதிர்த்ததாகச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்தைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்த்து வாக்களித்திருக்கிறாரே, அதைப்பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : எதிர்த்து வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர் இராஜாங்கம் அனைத்திந்திய அண்ணா தி.மு.கவில் சேரவில்லை. அவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. எச். பாண்டியன், (சிரிப்பு) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஜானகி இராமச்சந்திரன் அணி பிரிவுத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன்.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துச் சட்டம் அரசியல் சட்டப் பிரிவு 40ன் கீழ் நீங்கள் இங்கே கொண்டு வந்திருக்கின்ற காரணத்தால் நான் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே கொண்டுவரப்பட்ட மசோதா கூட்டாட்சி தத்துவத்திற்கு ஏற்ப மாநில அரசு செய்ய வேண்டிய பணியை மாநில அரசு தான் செய்ய வேண்டும் என்று அரசியல் சட்டப் பிரிவு 40-ல் "The State shall take steps to organise village panchayats and endow them with such powers and authority as may be necessary to enable them to function as units of self-government." என்று கூறப்பட்டதற்கு ஏற்ப நீங்கள் இங்கே கொண்டு வந்திருக்கின்ற காரணத்தால் சட்டப்படி நான் இங்கே வரவேற்கிறேன். நம்முடைய ஆல்போன்ஸ் அவர்கள் பேசிக் ரைட்ஸ் என்பதைக் குறிப்பிட்டு இந்தச் சட்டத்தை ஒப்பிட்டு அவர்கள் பேசினார்கள். பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட அந்த சட்டத்தின்படி——பவர் டு பீப்புள்—மக்களுக்கு அதிகாரம் கிடைக்கிறது. மக்களுடைய அடிப்படை உரிமையே அதன் மூலமாகக் கிடைக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். அரசியல் சட்டத்தில் பல்வேறு பிரிவுகளை இது வரை நிறைவேற்றாத மத்திய அரசாங்கத்தின் இந்த பஞ்சாயத்து சட்டத்தை நிச்சயமாக மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. அரசியல் சட்டப் பிரிவு 32 கிளாஸ் 1 "The right to move the Supreme Court by appropriate proceedings for the enforcement of the rights," i. e., fundamental rights, "conferred by this Part,." i. e. Part III, "is guaranteed." அதாவது ஜீவாதார உரிமைகளுக்காக நேரடியாக உச்ச நீதி மன்றத்திற்குச் செல்வதற்கான ஒரு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதை உச்ச நீதிமன்றத்தில் கொண்டு போய்

நீங்கள் நிலைநாட்டலாம் என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அதிலே கிளாஸ் 3-ல் "Without prejudice to the powers conferred on the Supreme Court by clauses (1) and (2), Parliament may by law.. இதுதான் முக்கியம். "may by law...." இதுவரை செய்யவில்லை. "..empower any other Court to exercise within the local limits of its jurisdiction all or any of the powers exercisable by the Supreme Court under clause (2)." அதாவது உச்சநீதிமன்றத்தின் அதிகாரத்தையே, நம்முடைய இந்தியாவில் இருக்கக்கூடிய எந்த நீதிமன்றமானாலும், பாராளுமன்றம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அந்த அதிகாரத்தை வழங்கலாம் என்று அரசியல் சட்ட மேதைகள் எழுதியிருக்கிறார்கள். 1950-வது ஆண்டிலிருந்து இது நாள் வரையில் இந்தியாவில் மக்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்கு, மக்களுடைய பேசிக் ரைட்ஸ் என்று போர்ஸ் பண்ணுவதற்கு பாராளுமன்றம் முன்வரவில்லை. சாதாரண மனிதன் அங்கே போய் சொல்வதற்கு இதுவரை முட்டுக்கட்டை போட்டார்கள் என்பதையே சொல்லியாக வேண்டும். செப்டம்பர் மாதம் 18-ஆம் தேதி வரை 1019— அரசியல் சட்டப்பிரிவு—32—ரிட் மனுக்கள் அங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. 1019 தான். அதாவது ஒரு நாளைக்கு மூன்றே மனுக்கள்தான். 60 கோடி மக்கள் வாழக்கூடிய இந்த இந்தியத் திருநாட்டில் (குறுக்கிடு) 80 கோடி உச்சநீதிமன்றத்திற்கு உரிமையை நிலைநாட்டிக்கூடியவர்கள் மூன்றே பேர் ஒருநாளைக்கு. ஏன் என்றால் அவ்வளவு தூரம். இந்தப் பஞ்சாயத்துச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்குப் பதிலாக, 'ரைட் டு ரெமடி'. அதைக் கொண்டு வந்திருக்கலாம். 'பவர் டு ப்யூப்புள்' பிரயோசனமே கிடையாது. எங்கே பவர்? ஒட்டுப்போடுகிற அன்றைக்கு காசு கொடுத்தால்தான் ஓட்டுப் போடுகிறான். பவர் எங்கே? மிஸ்யூஸ் பண்ணுவதற்கா? அது மட்டுமல்ல, இன்னும் பல்வேறு பிரிவுகள் (குறுக்கீடு) முடித்து விடுகிறேன்.

14-25 மணி

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். காசு கொடுத்தால்தான் ஓட்டுப் போடுவார்கள் என்று சொன்னார்கள். நமது முன்னாள் சபாநாயகர் அவர்கள் தொகுதியிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள். காசு கொடுதுதான் ஓட்டு வாங்கினார்களா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : இந்தக் கேள்வி கேட்டதற்கு நன்றி. என்னுடைய சேரன்மாதேவி தொகுதியில் முக்கூடலுக்கு அருகாமையில் கலியங்குளம் என்ற ஒரு கிராமம். அந்த ஊருக்கு குடிப்பதற்குக் தண்ணீர்த் தொட்டி கட்டினேன். ஒரு சிறிய ஆஸ்பத்திரி கட்டினேன். 300 வாக்காளர்கள். பெட்டியைத் திறந்து எண்ணுவதற்காக பார்க்கும் போது எனக்குக் கிடைத்த வாக்கு ஒரே வாக்குதான். யார் அங்கே பணம் கொடுத்து வாக்குப் பெற்றிருக்கிறார்கள் என்பதை..

1989 நவம்பர் 2]

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, அங்கே ஒரு தண்ணீர்த் தொட்டி கட்டினேன். ஒரு ஆஸ்பத்திரி கட்டினேன் என்று சொன்னார்கள். அவர்களுடைய சொந்தப் பணத்திலே இருந்து கட்டினாரா? அப்படிக் கட்டியிருந்தால் நிச்சயமாக அவருடைய தேர்தல் செல்லுபடியாகாது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலசுப்பிரமணியம் தொகுதியில் நடந்ததெல்லாம் எப்படி அரசாங்கத்திற்குச் சொந்தமோ, அதுபோல்தான் சேரன்மாதேவியிலும் அரசாங்கத்திற்குச் சொந்தம். ஒருவேளை பாலசுப்பிரமணியம் தொகுதியில் எதுவுமே நடக்கவில்லை என்றால், இன்னும் சொந்தப் பணத்தை நீங்கள் செலவழிக்கவில்லை என்று பொருள்.

திரு. பி. எச். பாண்டியன் : சொந்தப் பணத்தில் கட்ட வேண்டுமேயானால், உள்நாட்டு வங்கியில் பணம் வைத்திருக்க முடியாது. அவ்வளவு பணம் போதாது, ரொம்ப வேண்டும். அரசியல் சட்டப் பிரிவு 262-இன் கீழ், 'Parliament may by law' இது ஒரு சட்டம். 'For the adjudication of any dispute or complaint with respect to the use, distribution or control of waters.

காவிரி பிரச்சினை எத்தனை ஆண்டுக் காலமாக நடைபெறுகிறது? இந்த அரசியல் சட்டப் பிரிவு 262-இன் கீழ், இது வரை ஒரு 'அட்ஜுடிகேட்டிங் கவுன்சில்' நியமிக்கப்படவில்லை. அதற்கு எல்லாம் நேரம் கிடையாது. அரசியல் சட்டப் பிரிவு 263—'இன்டர்-ஸ்டேட் கவுன்சில்', அதாவது ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் பிரச்சினை இருக்குமேயானால், அதற்கு கவுன்சில் நியமிக்கப்பட வேண்டும். 263-அதன்படி எதுவும் நியமிக்கப்படவில்லை. 40 ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. ஆகவே தான் தேர்தலுக்காக இதுபோன்ற சட்டங்கள், சாதாரண மனிதனுக்கு இந்த 262 தெரியாது, 263 தெரியாது, அரசியல் சட்டப் பிரிவு 32-கிளாஸ் 3 தெரியாது. பஞ்சாயத்து என்று சொன்னால் அவனுக்குப் புரியும். ஏனென்றால் அவன் கையிலே பவர் கொடுக்கப் போகிறோம். அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான், சென்டிரல் கவர்ன்மென்ட் பவர் கையிலே வரப்போகிறது என்று. எங்கே, ஊரிலே இருக்கிற பஞ்சாயத்துக்கா? மாநிலத்திற்கே கிடையாது, பாமாலின் இறக்குமதி செய்வதற்கே அதிகாரம் கிடையாது. அங்கே போய் பஞ்சாயத்துச் சட்டத்தை நிறைவேற்றுவதா? நம்முடைய உணவுப் பொருளைப் பெறுவதற்கு, ஜீவாதார உரிமையாக மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறமுடியவில்லை. We have no right to life, right to food, right to shelter.

அதற்கெல்லாம் வழி கிடையாது. எதற்கு இது? காரணம் பாமர மக்கள், படிக்காதவர்கள், விவரம் தெரியாதவர்கள் வாக்காளர்களாக இருக்கின்ற காரணத்தினாலேதான். இப்படி இதுபோன்ற சட்டங்களைக் கொண்டு வந்து கிராம மக்களை ஏமாற்றிவிடலாம் என்று இருந்த அந்தக் காலக்கட்டத்தில் இங்கே மாநில அரசு அரசியல் சட்டப் பிரிவு 40-இன் கீழ் இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, புரிந்து கொள்ளவேண்டும். அரசியல் வேண்டாம். இன்றைக்கும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்குகின்ற காரணத்தினால் இங்கே பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டதை கேட்டுக்கொண்டு இருந்தேன். இன்னும் மக்களை ஏமாற்றா தீர்கள். புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஏதோ பஞ்சாயத்துக்கு பணம் வரப்போகிறது ஊரில் இனிமேல் வளம் கொழிக்கப் போகிறது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் முன்னேறவில்லை.

4-30 மணி

நம்முடைய நாட்டில் இன்னும் சின்னத்தைப் பார்த்து வாக்கு அளித்துக்கொண்டு இருக்கிற ஏழை எளிய மக்கள் ஏமாறத் தயாராக இல்லை என்பதை இதுபோன்ற சட்டங்கள் இன்றைக்கு காட்டிக்கொண்டிருக்கின்றன. தேர்தல் பாணிக்காக, அதனுடைய யுக்திக்காக இதுபோன்ற நகராட்சிகள், பஞ்சாயத்துக்கள் சட்டங்களை கொண்டு வந்தது வேறு எந்த நாட்டிலாவது இருக்குமானால் அங்கே அவர்கள் தோற்கடித்து இருப்பார்கள். ஆகவே இங்கே சாதாரண சாமான்ய மக்களுக்காக வழங்கப்படுகிறது 'பவர் டு பியூப்புள்' என்று நாம் ஏமாற்றக்கூடாது. வாக்குப் பெட்டியில் வாக்குப் போட்ட உடனே அவனுடைய அதிகாரம் போய்விடுகிறது. வாக்குப் பெட்டியில் போடும் வரை அவனைப் பார்த்தால் உங்களுடைய அனுபவம் உங்களுக்குச் சொல்லும். வாக்குப் பெட்டியில் வாக்கு போட்ட உடனே அவனுடைய அதிகாரம் போய் விடுகிறது. இது பாராளுமன்றத்துக்கே. பாராளுமன்ற நடவடிக்கைகள் நம்முடைய நாட்டு மக்களுக்கு இன்னும் தெளிவாகத் தெரியாது. இன்னும் புரியவில்லை. பாராளுமன்றம் என்றால் யாரோ சில பேருக்குச் சொந்தம் என்ற நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. மத்திய அரசின் சாதனங்கள் அவர்களுக்குத்தான் சொந்தம் என்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றவேண்டும். நாட்டு மக்களிடம் எழுச்சியை ஊட்ட வேண்டும். இன்னும் சொல்லப்போனால் புரட்சி வேண்டும். இன்னும் சாப்பிடுவதற்கு வழி கிடையாது. எதற்கு தேர்தல்? யாரோ ஒரு சிலர் அமைச்சர்களாக வருவதற்கு— வேலை வருவதற்கா தேர்தல்? நாட்டு மக்களுக்கு இந்த பாராளுமன்றத் தேர்தலால் நன்மை இல்லை என்பதை மட்டும் நான் இங்கே தெரிவித்து இந்தச் சட்டத்தை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

[1989 நவம்பர் 2

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டு இருக்கின்ற 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவிலே கருத்தினை சொல்வதற்கு அழைக்கப்பட்டு இருக்கின்ற நேரத்தில், முன்னால் பல கருத்துக்கள் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களால் சொல்லப்பட்டது என்பதையும் அவைகள் பல்வேறு திசைகளை நோக்கிய தாக்குதல்களாகவும் சில நேரங்களில் தாங்குதல்களாகவும் இருந்தன என்பதையும் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அறிவீர்கள்.

இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கின்ற இந்த மசோதா, இந்த மசோதாவினுடைய பல்வேறு பிரிவுகள் அவைகளைப் பற்றி பேசுகின்ற குரலைப் பார்க்கின்றபோது ஒரு 15 நாட்களுக்கு முன்பு டெல்லி மாநகரத்திலே பாராளுமன்றத்திலே ஒலித்த குரல் தான் இது. சில வேறுபாடுகள் இருக்கின்றன. அந்த வேறுபாடுகளோ. அந்த மாறுபாடுகளோ நன்மைக்காகத்தான் இருக்கின்றனவா என்று கூட நாம் பரிசீலிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏன் என்றால் சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் என்று தான் இந்த அரசு தன்னுடைய தாரக மந்திரமாக எடுத்துச் சொல்லி வந்து கொண்டிருக்கின்றது. ஆனால் இங்கே எல்லோரும் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த மசோதா பற்றி சுட்டிக்காட்டிய காரணத்தாலே நானும் அதனைக் கொஞ்சம் சுட்டிக்காட்டுவது தவறாக இருக்காது என்ற காரணத்தால் சொல்ல விரும்புகிறேன். அங்கே இருக்கின்ற மசோதாவையும் நாம் படித்துப் பார்த்தோம். இங்கே இப்போது வந்து இருக்கின்ற இந்தச் சட்டமுன் வடிவையும் படித்துப் பார்க்கிறோம். 5 ஆண்டுகள் ஆயுள் காலம் பஞ்சாயத்தினுடைய ஆயுள் காலம். 6 மாதத்திற்கு இடையிலே—5 வருடம் முடிவதற்கு இடையில் ஏதாவது ஒரு பஞ்சாயத்து யூனியன் கலைக்கப்பட்டால், 6 மாதத்திற்குள் மீண்டும் அது ஏற்படுத்தப்பட வேண்டும். பெண்களுக்கு 30 சதவீதம் கொடுக்கப்பட வேண்டும். வாக்காளர்களுடைய அடிப்படையில் ஷெட்யூல்டு வகுப்பினருக்கும், ஷெட்யூல்டு பழங்குடியினருக்கும் வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும். வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பது எல்லாம் பாராளுமன்றத்திலே பாரதப் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களால் கொண்டுவரப்பட்ட அந்த மசோதாவில் இருந்த அந்த செய்திகள் தான். 15 நாட்களுக்கு முன்பு அந்த செய்திகள் பாராளுமன்றத்தில் வந்த போது இந்த அரசினுடைய சார்பில் அங்கே இருந்து கொண்டு இருந்தவர்கள் அல்லது அரசாங்கத்தை ஆண்டு கொண்டு இருந்த கட்சியினுடைய சார்பில் இருந்து கொண்டு இருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்பதை ஏற்கெனவே முன்னால் பேசியவர்கள் பேசினார்கள். அதனை எதிர்த்து விட்டு இன்று எந்த தார்மீக உரிமையின் அடிப்படையில் இதனை இங்கே கொண்டு வந்தார்கள் என்பதே ஒரு கேள்விக் குறியாக இருக்கிறது.

14.35 மணி

அப்படிக் கொண்டு வந்ததிலே கூட நான் சொல்ல விரும்புகிறேன், எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு முன்னாள் சபாநாயகர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் இந்தப் பாராளுமன்றத்தினுடைய தேர்தலேகூட தேவைதானா அல்லது நன்மை பயக்குமா என்றெல்லாம் கேட்டார்கள். படித்தறியாத பாமர மக்கள் இருக்கின்ற இந்த நாட்டில் என்று சொல்லி, ஒரு சின்னத்தை வைத்துத்தானே இன்னும் வாக்குகளை சேகரிக்கிறார்கள் என்று சொன்னார். ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஒப்புக்கொள்ளப்பட்ட, நம்மாலே விரும்பப்படுகின்ற சின்னங்களையும், நம்மால் விரும்பப் படுகின்ற பாராளுமன்ற நடைமுறையையே அது கேலி செய்வதாக இருந்தது என்பதையும், அந்தப் பாராளுமன்றத்திலே கொண்டு வந்த அந்த மசோதாவிலே இருந்தவைகளிலே பல இருக்கின்றன; சில மாறுபட்டு இருக்கின்றன என்று சொல்கிறேன். அதை நன்மைக்காகத்தான் சொல்கிறேன். பெண்களுக்கு 30 சதவீதம் ; பாரதப் பிரதமர் கொண்டு வந்த அந்த மசோதாவிலும் 30 சதவீதம்தான். ஆனால் அந்த 30 சதவீதத்திற்கும் இந்த 30 சதவீதத்திற்கும் இருக்கின்ற வேறுபாடு என்னவென்று சொன்னால் ஒரு பஞ்சாயத்திலே இருக்கின்ற வார்டுகளிலே சுழற்சி முறையிலே பெண்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்தத் தடவை ஒன்றாவது வார்டுக்கு ஒதுக்கப்படுமானால் அடுத்த தடவை இரண்டாவது வார்டுக்கு ஒதுக்கப்படும். 4 தேர்தல்கள் வருகின்ற நேரத்தில் அந்த பஞ்சாயத்தில் இருக்கின்ற ஒவ்வொரு அங்குலம் மண்ணையும் ஒரு பெண்ணே ஆண்டிருப்பாள். அந்த அளவிற்கு பெண்ணுக்கு உரிமை கொடுக்கின்ற வகையிலே ரொட்டேஷன் சிஸ்டம் என்று சொல்லுகின்ற, சுழற்சி முறையிலே அங்கே கொடுக்கப்படுகிறது.

அதைப்போல, தாழ்த்தப்பட்ட மக்கள், அவர்களுக்கு உரிமை கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறபொழுது, பாராளுமன்றத்திலே கொண்டுவந்த மசோதாவிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால் மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலே மக்கள் தொகையினுடைய அடிப்படையிலே அவர்களுக்கு இடங்கள் கொடுக்கப்பட வேண்டும் ; அவர்கள் தேர்தலிலே போட்டியிட்டு வெற்றிபெறுகின்ற வாய்ப்பினைத் தரவேண்டும். அப்படியே ஒருவர் போட்டியிடுகின்ற அளவுக்கு மக்கள் தொகை இல்லையென்று சொன்னால், ஒருவருக்காவது கொடுத்தாக வேண்டும் ; எப்படியேனும் கொடுத்தாக வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் அந்த இடத்திலே போய் அமர்ந்தாக வேண்டும் என்று சொல்லுகின்ற ஆதங்கம் அங்கே இருந்ததை நாம் பார்க்கின்றோம். அப்போது கூட, அப்படி வருகின்றவர்கள் மக்களினுடைய எண்ணிக்கையின் அடிப்படையிலே வருகின்ற அந்தத் தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியிலே கூட 30 சதவீதம் பெண்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஒருவேளை இரண்டே

இரண்டு பேர் வருகிறார்கள் என்று சொன்னால், தாழ்த்தப்பட்ட வர்கள் இரண்டே பேர் வருகிறார்கள் என்று சொன்னால், 30 சதவீதம் என்பதை எப்படி கணக்குப் பார்ப்பது என்று கணக்கு பார்க்காமல் ஒரு பெண்ணாகவும் ஒரு ஆணாகவும் இருக்க வேண்டு மென்பது அந்த மசோதாவில் கொணடு வந்திருக்கிற குறிக்கோள். இந்தக் குறிக்கோள்களெல்லாம் அங்கே இருக்கின்றன. அவை களெல்லாம் இங்கே விடப்பட்டிருக்கின்றன என்பதையும் சுட்டிக் காட்டி, அடுத்துச் சொல்லவிரும்புவது என்னவென்று சொன்னால் மாநில அரசாங்கத்தினுடைய உரிமைகளை எடுக்கிறது என்று சொல்வது எந்தவகையிலேயெல்லாம் பொருந்துகிறது என்பதை யும் நாம் பார்க்க வேண்டும்.

இந்த மசோதா நமக்கு முன்னாலே இருக்கிறது. நாம் எல்லோரும் படித்திருக்கிறோம். பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்வு செய்கிற முறையை முடிவு செய்ய வேண்டியது எது என்றால் இந்த மாநில சட்ட சபை. ஒரு பஞ்சாயத்திலே இருக் கின்ற வார்டு எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டியது இந்தச் சட்டப் பேரவை. வாக்காளர் பதிவு, எப்படி இருக்க வேண்டும் ; வாக்காளர் பதிவு என்று சொன்னால் நான் சொல்வது வாக்காளர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று சொல்லி 18 வயதுக்கு மேற்பட்டவர்களைக் கணக்கிலே எடுக்கிறார்களே அது எப்படி எடுக்கப்பட வேண்டும் ; எந்த வகையிலே எடுக்கப்பட வேணடும் என்பதையெல்லாம் முடிவு செய்ய வேண்டியது இந்த மாநில சட்டசபை. ஒரு பஞ்சாயத்து கலைக்கப்படுகிறது என்று சொன்னால், என்ன காரணங்களாலே கலைக்கப்பட வேண்டும் என்று சொல்வதற்கு உரிமை படைத் திருப்பது இந்த மாநில சட்டசபை. ஆக, இவைகளெல்லாம் இந்த மாநில சட்டசபைக்கே விடப்பட்டிருக்கின்றனவே தவிர, இந்த மாநில சட்டசபைக்கே கொடுக்கப்பட்டிருக்கின்றதே தவிர வேறு எங்கோ, யாரோ எடுத்து வைத்துக் கொள்ளவில்லை. அதைப்போலத்தான் இங்கே நிதி ஆதாரம் வேண்டுமென்று சொன்னால் மாண்புமிகு ஆளுகின்ற கட்சியினுடைய தோழமைக் கட்சியாக இருந்து கொண்டிருக்கிற நம்முடைய அருமைக்குரிய கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே கூட சொன்னார்கள், நிதிப் பற்றாக்குறைதான் பெரிய பிரச்சினை என்று. அந்த நிதிப் பற்றாக்குறைக்கு என்னென்ன செய்ய வேண்டும். தலைவிதியே என்று இருந்துவிட வேண்டாம். அங்கே இருந்துகொண்டு இருக்கின்றவர்கள் உங்களுக்கு இன்னின்ன வகை யிலே நீயே விதித்துக் கொள்ளலாம் ; வரி விதித்துக் கொள்ளலாம் என்று சொல்லுகின்ற அளவிற்கு வரி விதிப்பு உரிமையினை நீங்கள் அங்கே கொடுங்கள். சுங்க வரி வசூலிப்பதை நீங்கள் அங்கே கொடுங்கள். பாலங்கள் கட்டி இடையிலே சுங்கச்சாவடி போட்டிருக்கிறது என்று சொன்னால் எங்கோ இருக்கின்ற ஒருவன் மூங்கில் கம்பைப் போட்டு காரை நிறுத்தி காசை வசூல் செய்தால்,

அது போக வேண்டிய இடம் வேறு என்பதற்குப் பதிலாக அது எந்த இடத்தில் வசூல் செய்யப்படுகிறதோ அந்த இடத்திற்கே கொடுங்கள் என்று சொல்லி, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுடைய வளத்தைப் பெருக்குகின்ற சூழ்நிலையிலே எதெது அவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்கின்ற உரிமையை இந்த மாநில அரசாங்கத்தினுடைய சார்பில் இந்த சட்டசபையே ஏற்றுக்கொள்ளலாம். எனவே இந்த சட்ட சபையிலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களுமாகச் சேர்ந்து முடிவு செய்ய வேண்டும். அதைப்போலவே மத்தியிலேயிருந்து வந்த அந்த மசோதா என்ன சொல்லுகிறது? 29 காரியங்களை, 29 செயற்திட்டங்களை, பஞ்சாயத்துக்களுக்குக் கொடுப்பது என்று முன் வருகிறது. நீர்ப்பாசனமா, இனிமேல் பஞ்சாயத்தே செய்யலாம்; நிலம் மேம்பாடா, பஞ்சாயத்தே செய்யலாம். சாலைகள் போடுவதா; பஞ்சாயத்தே செய்யலாம். மின் விளக்கு அமைப்பதா; பஞ்சாயத்தே செய்யலாம். சுகாதாரத்தைப் பேணிக் காப்பதா; பஞ்சாயத்தே செய்யலாம். சமூகக் காடு வளர்ப்பா; பஞ்சாயத்தே செய்யலாம். மீன் வளர்ப்பா; பஞ்சாயத்தே செய்யலாம். ரேஷன் கடை வைப்பதற்குரிய பொறுப்பும், விநியோகிக்கின்ற பொறுப்புமா; அதைக்கூட பஞ்சாயத்தே செய்யலாம். குடிநீர் வழங்குவதா? இந்த பஞ்சாயத்தே செய்யலாம், என்பதற்குரிய அந்த வழி காட்டுதலுக்கான நெறிகளை மத்திய மசோதா சொல்கிறது. இதிலே எவையெவைகளைக் கொடுப்பது என்று முடிவு செய்வது மாநில சட்டப் பேரவையின் உரிமை. ஆகவே வழிகாட்டுகிற நெறிகளைக் கொடுத்துவிட்டு, இங்கே இருக்கிற மாநில சட்டசபை அதைக் கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறதா? அதிலேதான் வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறதா? அந்த மக்களுக்கு அதைக் கொடுக்க வேண்டுமென்று அல்லது, வேண்டாமென்று நினைக்கிறார்கள் என்று முடிவு செய்கிற உரிமை இங்கே இருக்கிற மாநில சட்டப் பேரவைக்கு இருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது).

14-40 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணி 2-40 ஆகிறது.

திரு. குமரி அனந்தன் : காலையிலிருந்தே என் நேரத்தைக் குறைத்து விடாதீர்கள் என்று கேட்டுக் கொண்டேயிருந்தேன். இப்போது 2.40 மணி ஆகிறது. எதற்கு எவ்வளவு நேரம் ஆனது? நான் எடுத்துக் கொள்வது சில மணித் துளிகள் அல்லவோ? மிக விரைவாகக்கூட நான் போய்க் கொண்டிருக்கிறேன். எனவே, எல்லாவற்றையும் எடுத்துக்கொள்கிறார்கள் என்று சொல்பவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். தயவு செய்து கொஞ்சம் பார்க்கவேண்டும். மத்திய அரசின் உரிமையான அஞ்சல் துறை பற்றிச் சொன்னால் பஞ்சாயத்து-பஞ்சாயத்தில் இருக்கிற அதிகாரம்— தலைவர்களுக்கு

இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்துகிற அளவுக்கு-—எட்டி, கிட்ட, இருப்பதைப் பார்த்துக் கொள்கிற மக்களுக்கு வசதிகளைச் செய்கிற சூழ்நிலை இருக்கிறது. அஞ்சல் துறை அதிகாரம் மத்திய அரசுக்கு இருந்தாலும், இனிமேல் பஞ்சாயத்து கட்டிடங்களிலேயே தபால் சேவை இருக்கலாம் என்று உரிமையை விட்டுக்கொடுப்பதற்குக் காரணம் என்ன? மக்களுக்கு அதிகாரம் வேண்டும் என்பதற்காக, மக்களுக்கு வசதி வேண்டுமென்பதற்காக அஞ்சல் தலை விற்பது மட்டுமல்ல, மணியார்டர் உரிமையைக் கூட பஞ்சாயத்து கட்டிடத்திலேயே விடக்கூடிய அளவுக்கு வசதிகளையும் வாய்ப்புகளையும் அது செய்து கொடுக்கிறது. எங்கே அதைச் செய்து கொடுக்கப் போகிறோம் என்ற கேள்விக் குறியோடு இங்கே நின்று கொண்டிருக்கிறோம். அந்தக் கேள்வியின் அடிப்படையில்தான் இந்த 29-ல் எதை எதைக் கொடுக்கிறோம், எதை எதைக் கொடுக்கவேண்டுமென்று சொல்வதோடு நிற்கவில்லை மத்திய மசோதா. இதற்கு மேலும் ஏதாவது கொடுக்கவேண்டுமென்று மாநில அரசு விரும்பினால், மாநில சட்ட சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி சட்டமாக்கிக் கொடுங்கள், நீங்களும் கொடுங்கள் என்று வாரி வாரிக் கொடுக்கிற வள்ளலாகத்தான் ராஜீவ் காந்தி தனது கருத்துக்களைத் தந்திருக்கிறாரே தவிர, உங்களைக் குறைத்துச் சொல்லவில்லை.

அடுத்த செய்தியாகச் சொல்ல விரும்புவது என்னவென்று சொன்னால், பாராளுமன்றத்திற்கு தேர்தலை நடத்துகிற உரிமையா? அதற்கு ஒரு தேர்தல் கமிஷன் அவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். சட்டப் பேரவைக்கு எலெக்ஷன் நடத்த வேண்டுமா? அந்த எலெக்ஷன் கமிஷனுக்கு உண்டு அதிகாரம். அதே நேரத்தில்

திரு. இரா. மோகன் : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, ஏற்கெனவே டி.வி.யிலும் வானொலியிலும் பஞ்சாயத்து ராஜ் பற்றிக் கேட்டு கேட்டுப் பைத்தியம் பிடிக்கிற நிலையில் இருக்கிறது. மறுபடியும் அதைப் பற்றியே இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். தினமும் டி.வி.யிலேதான் கேட்கிறோமே? இந்த மசோதா பற்றி உறுப்பினர் பேசலாம். திரும்பத் திரும்ப பஞ்சாயத்து ராஜ், பஞ்சாயத்து ராஜ் என்று டிவியைப் பார்த்து நமக்கு ஒரு மாதிரியாக ஏற்கனவே ஆகிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருடைய பேச்சைக் கேட்டு நாம் கிறுகிறுத்துப் போய் இருக்கிறோம். பசிக் கிறுகிறுப்பு. (சிரிப்பு).

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசும் போது இங்கே பணம் வந்து கொட்டுவது போல

சொன்னார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது பஞ்சாயத்து ராஜ் வந்தால், மாநில அரசின் கையில் ரிசர்வ பாங்கைக் கொடுத்து நோட்டை அடிததுக்கொள்ளுங்கள் என்று சொல்லப் போகிறார்களா? என்று கேட்க விருமபுகிறேன். 30 சதவீத ஒதுக்கீட்டைப் பற்றிச் சொன்னார்கள், பஞ்சாயத்து, நக ராட்சிச் சட்டத்துனகீழ். அப்படி உண்மையிலேயே பாவர்டடி பியூப்பிள் 30 பர்சென்ட் வரவேண்டுமென்று நினைத்திருப்பீர் களேயானால் பாராளுமன்றத்தில் ஏன் ஒதுக்கீடு சட்டததைத் திருத்தவில்லை? சட்ட மன்றததிற்கு 30 சதவீதம பெண்கள் இருககலாம் என ஏன் சட்டத்தைத் திருத்தவில்லை என்பதை நான் தெரிந்து கொளள விரும்புகிறேன.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, காஙகிரஸ் கட்சியின் துணைத் தலைவர் பேசு கிறபோது, பாரதப் பிரதமர் ராஜவ் காநதி அவர்கள் வள்ளலாக வாரி வாரிக் கொடுங்கள் என்று சொல்வதாக இங்கே சொல்கிறார்கள். கொடுப்பதால் மத்திய அரசுடைய அதிகாரத்தை அவர் வாரி வாரி மாநில அரசுக்குக் கொடுதத திருந்தால் அவர் வள்ளல் ஆவார். மாநில அரசு கொடுக கட்டும், அடுத்தவர் பையில் இருந்து கொடுப்பதற்கு இவருக்கு ஏன் வள்ளல பட்டம் என்பதை அறிய விரும்புகிறேன.

திரு. குமரி அனந்தன் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்த கேள்வியைத் திருப்பிக் கேட்கிறேன். உங்களுக்கு மட்டும் அதிகாரம் வேண்டும், என்னுடைய அதிகாரத்தில் கையை வைக்காதீர்கள் என்று சொல்கிறவர்கள், மக்களுக்கு அதிகாரம் கொடுக்கிற பஞ்சாயத்து ராஜ் சட்டத்தைக கொண்டு வருகிற நேரத்திலே மட்டும் ஏன் குறுக்கே நிற்கிறீர்கள்? வாரி வாரி வழங்குவது என்று சொல்கிற நேரத்தில் கருத்தைக் குறித்துத்தான் சொன்னேன். நான் பணப் பிரச்சனைக்கு இன்னும் வரவில்லை. வருகிற நேரத்தில் வருகிறேன். (சிரிப்பு).

14-5 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்றரை மணிக்கு வருவீர்களா ? (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே தாங்கள் அனுமதி கொடுத்தால் அந்த நேரத்திற்கு வருகிறேன். (சிரிப்பு) அடுத்து நான் ஸ்டேட்டஸ் பற்றிச் சொன்னேன். நான் வாரி, வாரி வழங்குகிற வள்ளல் என்று சொல்கிறபோது சொன்னேன். நல்ல வார்த்தை கூட நன்மையளிக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். '' நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் ; நிதி குறைந் வர் காசுகள் அருளீர் ; எதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர் '; என்றான் பாரதி. எனவே வாய்ச்சொல் அருளுவது கூட, நல்ல கருத்துக்களை அருளுவது கூட நல்லது தான். காசு அழியும் ;

கருத்துக்கள் அழிவதில்லை. எனவேதான் அந்த அளவில் சொல்கிறேன். ஒரு கருத்து இங்கே வைக்கப்பட்டு இருக்கிறது. பாராளுமன்றத்திற்குத் தேர்தல் நடத்துவதா ? அது 'எலக்ஷன் கமிஷன்'. அப்படி ஒரு பெருமை வருகிறது. சட்டமன்றத்திற்குத் தேர்தல் நடத்துவதா ? அது 'எலக்ஷன் கமிஷன்' அப்படி ஒரு பெருமை வருகிறது. அதே பெருமையைத்தான், டாக்டர் அம்பேத்கார் பாராளுமன்றத்திற்கு என்ன பெருமையைக் கொடுத்தாரோ, டாக்டர் அம்பேத்கார் சட்டப் பேரவைக்கு என்ன பெருமையைக் கொடுத்தாரோ அதே பெருமையைத்தான் கிராமத்தில் இருக்கின்ற பஞ்சாயத்துக்குக் கொடுக்க வேண்டும் என்று வந்திருக்கிறது. டாக்டர் அம்பேத்கார் அவர்களின் ஆசைக் கனவுகள் எல்லாம் படிப்படியாக, விரைவாகச் செய்யப்படுகிறது என்பதைத்தான் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே அருமைக்குரிய கலைஞர் அவர்களைப் பொறுத்தவரையில் அவர் அதிகாரப் பகிர்வை என்றைக்குமே எதிர்த்தவர் அல்ல. எனவே அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்று சொல்கிறோம். அந்த அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்பதிலேதான் இங்கே முதலிலே சில செய்திகளைச் சொல்லியிருக்கிறார்கள். திடீரென்று கொண்டுவரப்பட்டது என்று சொல்கிறார்களா ? நான் கேட்கிறேன். இரண்டு அவைகளும் கூடுகிற நேரத்தில் ஜனாதிபதி அவர்களின் உரை நிகழ்த்தப்படுகிற நேரத்திலேயே இப்படிப்பட்ட ஒரு மசோதா வரப்போகிறது என்ற குறிப்பு பாராளுமன்றத்திலே கொடுக்கப்பட்டது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு. ஆனால் இங்கே அப்படிப்பட்ட ஒரு மசோதா வருகிறது என்று ஒரு குறிப்பு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? 1958ஆம் ஆண்டு மூலச் சட்டத்தை இரண்டாவது தடவையாக நாம் போட்டுக்கொண்டிருக்கிறோம் எற்கெனவே ஒரு தடவை 3 ஆண்டு என்று இருந்ததை 5 ஆண்டு என்று மாற்றிய நேரத்தில் இந்தச் செய்திகள் எல்லாம் ஏன் அங்கே வரவில்லை? அவ்வாறு மாற்றுகிறநேரத்திலே இந்தக் கருத்துக்களை ஏன் வைக்கவில்லை ? ஏனென்றால் உங்களுக்கு அப்போது தோன்றவில்லை. இப்போது தோன்றியதற்குக் காரணம் தோன்றிற் புகழொடு தோன்றுக என்று சொல்கிற ஒருவன் அந்த தோன்றாத் துணையோடு அங்கே பாராளுமன்றத்திலே இந்த மசோதாவைக் கொண்டு வந்த காரணத்தால் உங்களுக்கும் தோன்றியதே தவிர வேறல்ல. இல்லை என்றால் தோன்றுவதற்கு வாய்ப்பு இல்லை.

மூன்றை ஐந்தாக ஆக்குவதற்கு நீங்கள் சட்டத் திருத்தம் கொண்டுவந்த நேரத்திலேயே இவைகளை எல்லாம் சுட்டிக்காட்டியிருக்கலாம் அல்லவா ? செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம் என்றாவது சொல்லி இப்படி நாங்கள் கொண்டு வருவோம் என்று, அதாவது இந்த மசோதாவைக் கொண்டு வருவோம் என்று நீங்கள் சொன்னதுண்டா ? கிடையாது. இரண்டாண்டுக் காலமாக

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது சீக்கிரம் முடியுங்கள்.

திரு. குமரி அனந்தன் : இரண்டாண்டுக் காலமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களை எல்லாம் கூப்பிட்டுப் பேசியதாகச் சொன்னீர்கள். முழுமையாக அல்ல. நான்கில் ஒரு பகுதியினரை, அரசாங்கமே நீங்கள் அனுப்புங்கள் என்று சொல்கிற அளவுக்கு அனுப்பினோம். அதைப்போலவே முதலமைச்சரிடமும் இதை நீங்கள் உங்களுடைய கருத்துக்கள் என்று சொல்லுங்கள் என்று சொன்னோம். நான் கேட்கிறேன். இங்கே சில கருத்து மாறுபாடுகள் இருக்கலாம். உண்மை. அதை ஏன் பாராளுமன்றத்திலே நம்முடைய உறுப்பினர்களை வைத்து, தமிழ்நாட்டிலே இருந்து சென்ற உறுப்பினர்களை வைத்து — நான் நம்முடைய உறுப்பினர்கள் என்று சொல்வது கட்சி பேதம் இல்லாமலேதான் சொல்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கட்டும்— அல்லது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியாக இருக்கட்டும்— ஏன் உங்களுடைய கருத்துக்களை அங்கே வைக்கவில்லை? எடுத்து வைத்தால் அதனுடைய திருத்தங்களைத் தொடர்ந்து கொடுத்து கொண்டிருக்கலாமே, அதைவிடுத்து வெளியே வந்ததற்குக் ரணம் என்ன? நான் சொல்வது மக்களவையிலே செய்ததைச் சொல்கிறேன். மக்களவையிலே எடுத்து வைத்து இன்னின்ன காரணங்களுக்காக நாங்கள் இந்தத் திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லி திருத்தத்தைக் கொடுத்திருக்கலாம் அல்லவா? அந்தத் திருத்தத்தைக் கொடுக்காமல் வெளியே ஓடி வந்ததற்கு என்ன காரணம் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். ஏதோ ராஜீவ் காந்தியினுடைய கரத்தைத் தடுத்து நிறுத்திவிட்டதாக யாரும் நினைக்க வேண்டாம். ராஜீவ் கொடுப்பதற்கு நீட்டிய கரத்தை நீங்கள் தடுத்து விட்டதாக நினைக்க வேண்டாம். அந்தக் கரத்தை யாரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. ஆனால் ஒன்றை மறந்துவிடக் கூடாது. அவர் நீட்டிய கரத்தால் கொடுக்கிற அதிகாரத்தைப் பெறுவதற்கு என்று இந்தப் பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் கையை நீட்டினார்களே, அந்தக் கரத்தைத் தான் நீங்கள் தடுத்து இருக்கிறீர்கள் என்கிற அச்சம் உங்களுக்கு இருக்கிற காரணத்தால்தான் இந்த மசோதாவை இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். இல்லை என்றால் தார்மீக உரிமை என்ன இருக்கிறது? 15 நாட்களுக்கு முன்பு வேறு ஒரு வகையிலே நடந்துவிட்டு, அதை எதிர்த்தவர்களைக் கூடப் பாராட்டிவிட்டு, இப்போது இந்தக் கருத்தைச் சொல்கிறீர்களே, மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் தன்னுடைய உள்ளத்திற்குக் கூட உகந்ததாக நினைத்து இதைச் செய்கிறார் என்று கூட நான் கருதவில்லை. ஏனென்றால் அவரே சொல்லியிருக்கிறார். 1971—72-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லி இருக்கிறார். மக்கள் சக்தியின் கருவிகளாக உள்ள

1989 நவம்பர் 2] [திரு. குமரி அனந்தன்]

அமைப்புக்களிடம் தேவையான நிதி வாயில்களும், அதிகாரங்களும் அளிக்கப்பட வேண்டும் என்பதையே சோஷலிச தத்துவத்தின் ஒரு பகுதியாகக் கருதுகிறேன் என்று சொன்னார். மீண்டும் கலைஞர் பேசியதை நான் இங்கே நினைவுபடுத்த வேண்டிய தில்லை. எல்லோரும் தெரிந்து வைத்திருப்பார்கள். எனவே இப்படிப்பட்ட சிறப்பான ஒன்று அங்கே வருகிற நேரத்தில் அதை எதிர்த்துத் தோற்கடித்து விட்டோம் என்று சொல்லி இங்கே வந்து அதே போன்ற ஒரு மசோதாவை நீங்கள் கொண்டு வருகிறீர்கள் என்று சொன்னால் என்ன பொருள்? தமிழே ஆட்சியாக வேண்டும் என்று சொல்கிறோமே, தமிழனே ஆட்சி புரிய வேண்டும் என்று சொல்கிறோமே, அந்தப் பஞ்சாயத்துக்களுக்கெல்லாம் இந்த அதிகாரம் கிடைத்தால் தமிழ்தானே ஆட்சிமொழியாக இருக்கும். தமிழ்தானே ஆட்சி செய்துகொண்டு இருக்கும். தமிழனே ஆட்சி செய்வான். தமிழே ஆட்சி செய்யப் போகிறது. அதற்கு வேண்டிய நிதி வாயில்களும் கிடைக்கிறது என்று சொன்னால் அதனை எதிர்த்துவிட்டு அதேபோன்ற ஒன்றினை முழுமையாகக் கூட இல்லை. (குறுக்கீடு)

14-50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நம் ஊராட்சி மன்றங்கள் எல்லாம் French மொழியிலா நடந்துகொண்டிருக்கின்றன.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாய்ன்ட் ஆஃப் ஆர்டர், நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசுவதைப் பார்த்தால் எனக்கு சந்தேகம் ஏற்படுகிறது, அவர்கள் இங்கே தேர்தல் பிரச்சாரத்தின் ஒத்திகையை நடத்திக் கொண்டிருக்கிறார்களா அல்லது சட்டத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்களா? இங்கே அவர்கள் எவ்வளவுதான் பேசினாலும் யாரும் வாக்களிக்கமாட்டார்களே. அவர்கள் இங்கே இப்படி எல்லாம் பேசி நேரத்தை வீணாக்க வேண்டியதில்லை. அவர்கள், இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவு பற்றிப் பேசினால் உதவிகரமாக இருக்குமென்றும் தேர்தல் பிரச்சாரத்தின் ஒத்திகையை வெளியிலே வைத்துக்கொள்ளலாம் என்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து ராஜ் சட்டம் பற்றிப் பேசினாலே வருகிற தேர்தலில் மக்கள் வாக்களித்து விடுவார்களோ என்கிற ஐயம் உங்களுக்கு இருக்கிறது என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. முழுமையாக இது காங்கிரசுக்கோ அல்லது அதனுடைய கூட்டணிக்கோ போய் விடக்கூடாது என்பதற்காக நீங்கள் மிரள்

கிறீர்கள் என்பதும் இதிலிருந்து தெரிகிறது. நான் இங்கே கேட்க விரும்புவது எல்லாம் ஒரே ஒரு கேள்விதான். (மணி அடிக்கப் பெற்றது) இன்னும் ஒரு மணித் துளிக்குள்ளாகப் பேசி முடித்து விடுகிறேன். அங்கே கொண்டு வந்திருக்கின்ற ஒன்றை இங்கே நீங்களும் கொண்டுவருவதிலே புதுமை ஒன்றும் இல்லை. ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பெயர் சூட்டுகின்ற உரிமையைக் கொடுத்திருக்கிறீர்கள். மணிமுடியைக் கொண்டு போய் மக்களுக்குக கொடுக்கின்ற நேரத்தில் அதைத் தட்டி விட்டுவிட்டு இப்போது மொட்டைத் தலைக்கு பூச்சூடுகின்ற காரியத்தைச் செய்வதைப் போல பெயர் சூட்டுகின்ற காரியத்தை மட்டும் நீங்கள் செய்வதற்காக இதிலே புதிதாக ஒன்றைச் சொல்லியிருக்கிறீர்கள். அந்தப் பெயர் சூட்டுவதைக் கூட எப்படிச் சொல்லியிருக்கிறீர்கள் என்றால் புதிய சாலை, புதிய ஊராட்சி சாலை என்று ஓரிடத்தில் வருகிறது, மற்ற இடங்களில் எல்லாம் பூங்காக்கள் என்றும் இன்னும் மற்றவைகளும் வந்துகொண்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் புதிதாக வருமா இல்லை ஏற்கெனவே இருப்பதற்கு பெயர் சூட்டுவார்களா என்றும் எனக்குத் தெரியவில்லை. புதிதாக வந்ததற்குப் பெயர் சூட்டுவதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஏனென்றால், அன்றைக்கு இலங்கையை வென்று வந்த சோழன், வென்று வந்ததற்கு அடையாளமாக ஒரு வாய்க்காலை வெட்டி, அதற்கு சுந்தரமுடையான் வாய்க்கால் என்று அன்றைக்கே பெயர் சூட்டியிருக்கிறான், தாராபுரத்திற்கு அருகில். எனவேதான், வெற்றி பெறுகின்றவர்கள் கூட நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு காரியங்களைச் செய்ய வேண்டும். இதற்கு நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். உங்களுக்கெல்லாம் தெரியும், நான் இதை எதிர்க்கவில்லை. இதில் கொண்டு வந்திருக்கின்ற நல்ல கருத்துக்களையும் நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் இதனைக் கொண்டுவந்த காரியகர்த்தாக்கள் இருக்கிறார்களே அவர்கள் எதற்காக இதனைக் கொண்டு வந்தார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இச்சட்டத்தின் ஆக்கத்தை நாங்கள் எதிர்க்கவுமில்லை, சந்தேகிக்கவும் இல்லை. ஆனால் இதைக் கொண்டு வந்தவர்களுடைய நோக்கத்தை நான் சந்தேகிக்கிறேன். என்ன காரணத்திற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று. இதிலே 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் வரும் என்று சொல்வதிலும் கூட அதைக்கூட எழுதுவதற்கு நேரம் இல்லாமல் அவசர அவசரமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவேதான் இப்படி அவசரக் கோலத்திலே கொண்டு வந்திருப்பதானது மொத்த பெருமையும்—மீண்டும் சொல்கிறேன்—மொத்த ஆதரவும் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கே போய் விடக் கூடாது என்பதற்காகவே இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால் மக்களுக்கு எது அசல், எது நகல் என்று தெரியுமாதலால் ஒன்றைச்சொல்லுகிறேன் நீங்கள் அவசரப்பட்டுக்கொண்டு வந்திருக்கிற காரணத்தினால் இதனை செலக்ட் கமிட்டிக்கு விடுமாறு நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே கேட்டு அமைகிறேன்,

1989 நவம்பர் 2]

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றும் நேற்றும் பல சட்டமுன் வடிவுகள் இங்கே சட்டங்களாக நிறைவேற்றப்பட்டன. அவைகள் எல்லாம், சட்டமன்றம் இல்லாத அந்த 6 மாதக் காலத்திலே மாநில ஆளுநரின் ஆட்சிக் காலத்திலே ஆர்டினன்ஸ் ஆக உத்தரவு இடப் பட்டு, இப்போது சட்டமன்றம் கூடியிருக்கிற காரணத்தால் கண்டிப்பாக சட்டமன்றத்தில் இதனைக் கொண்டுவர வேண்டு மென்ற விதியிருப்பதன் காரணமாக அதற்கு உட்பட்டு இப்போது நிறைவேற்றப்படுகின்றன. இன்னும் சில சட்ட முன்வடிவுகள், கூட்டு றவுச் சங்கம் சம்பந்தப்பட்ட சட்ட முன்வடிவுகள், அதுபோல மாநகராட்சியிலுள்ள தனி அதிகாரிகளுடைய பதவிக் கால நீட்டிப்பு, இன்னும் இவைபோன்ற சட்ட முன்வடிவுகள் எல்லாம் ஏற்கெனவே அவர்களுடைய பதவிக் காலங்கள் முடிகிற காரணத் தினால், தேர்தல் நடைபெறாத காரணத்தால், கண்டிப்பாக கால நீட்டிப்பை நீட்டித்தாக வேண்டுமென்ற நியாய அடிப்படையில் கொண்டுவரப்பட்டவை.

ஆனால் இந்தச் சட்ட முன்வடிவு மட்டும் அரசியல் நோக்கத் தோடு, தேர்தலை மனதிலே கொண்டு தேர்தலுக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதைப் போல நானும் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். காரணம் இதற்கு முன்னாலே இதுபற்றி ஆர்டினன்ஸ் எதுவும் இஸ்யூ பண்ணப்படவில்லை. திடீரென்று மூன்று நாட் களுக்குள்ளாக அவசர அவசரமாக இவ்வளவு சட்ட முன்வடிவு களைக் கொண்டு வந்து— இப்போதே 3 மணி ஆகிறது— இந்த நேரத்தில் எங்களை எல்லாம் பசியோடு உட்கார வைத்து— இவை அத்தனையையும் நிறைவேற்றி முடித்துவிட்டுத் தான் செல்ல வேண்டும் என்கிற கண்டிப்பான சூழ்நிலையிலே நீங்கள் நடந்து கொள்வதைப் பார்த்தால் வருகிற பாராளுமன்றத் தேர்தலை மனதிலே கொண்டுதான் இதனைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்பதிலே நிச்சயமாக இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. இதிலே பெரிய திருத்தங்கள் எதையும் கொண்டு வரவில்லை. ப்போது அதுபோன்ற நிலைமையும் இல்லை. எங்கேயாவது ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர் இறந்ததாலோ அல்லது கலைக்கப்பட்டதாலோ-அதன் காரணமாக உடனடி யாகத்தேர்தலை வைத்தாக வேண்டுமென்ற சூழ்நிலை எதுவும் இப் போது இல்லை. மாநகராட்சிகளுக்கான தேர்தலை நேற்று தள்ளி வைத்துப் பேசுகிறபோது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான காரணத்தைச் சொல்லும்போது மத்தியிலே அதற்கான சட்டம் வருகிற காரணத்தால் அதற்காக அரசியல் சட்டத் திருத்தம் வந்தால், நாம் தேர்தலை நடத்தினாலும்,

14-55 மணி

அதற்கு ஏற்ப மாநிலச் சட்டமும் திருத்தப்பட வேண்டியிருக்கும் என்கின்ற காரணத்தாலே இப்போது அவசரப்பட வேண்டாம் என்று தள்ளி வைத்திருக்கிறோம் என்று காரணம் சொன்னார். அது இதற்கும் பொருந்தாதா என்று நான் இன்றைக்குக் கேட்க விரும்புகிறேன். மத்தியிலே பாரதப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி

அவர்கள் பஞ்சாயத்துகளுக்கு நிதி வழங்குகின்ற, அதிகாரம் வழங்குகின்ற சட்டத்தைக் கொண்டு வந்து, அது தோறகடிக்கப் பட்டிருக்கிறது. அதாலே திராவிட முன்னேற்றக் கழகமும் கலந்து கொண்டு, அந்தச் சட்டததை மத்தியிலே தோற்கடிததத காரணத் தாலே, இப்போது பாராளுமன்றத் தேர்தலின்போது மக்களைச் சந்திக்கிறபோது மக்களுக்கு வர வேண்டிய நல்ல காரியங்களை, மக்கள் நலப் பணிகள் நடைபெறுவதை, மத்திய அரசிடமிருந்து வர இருந்த நிதியை திராவிட முன்னேற்றக் கழகம் கெடுத்து விட்டது என்ற அவப் பெயர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வருமே என்ற அச்சத்தின் அடிப்படையில், குழப்பத்தின் அடிப படையில், அங்கே எதிர்த்து வாக்களித்து விட்டதால் இங்கே, தமிழகத்தில் பாதிப்பு ஏற்படுமே என்று மனதிலே கொண்டு, அவசரம் அவசரமாக இந்தச் சட்டத் திருத்தத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்ட முன்வடிவால உடனடியாக தமிழ்நாட்டு மக்களுக்கோ, ஊராட்சி ஒன்றியங்களுககோ, ஊராட்சி மன்றங்களுக்கோ என்ன நன்மை 6 மாதங்களுக்குள் ஏற்படப் போகிறது? ஏன் இந்த அவசரம்? அதிகாரத்தைப் பரவலாகக் கொடுக்கிறோம் என்று சொல்கிற போதுகூட, நீங்கள் எந்த அதிகாரத்தையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஏற்கெனவே பேசிய உறுப்பினர்கள் அவற்றைப் பற்றி விளக்கமாகச் சொல்லி யிருக்கிறார்கள். நேரம் கருதி மீண்டும் நான் படிக்க விரும்ப வில்லை. விதி 66-லே சில வரம்புகளுக்கு உட்பட்டு, நடைமுறை களுக்கு உட்பட்டு, 'ஸ்கீம்ஸ்' என்று போட்டு, அதாவது சில திட்டங்களிலே ஒரு பகுதியையோ அல்லது சிலவற்றையோ கொடுக்க இருக்கிறோம் என்று மொட்டையாகப் போட்டிருக் கிறீர்கள். சட்டத்தைத் திருத்த வேண்டுமென்பதற்காக, விதி 66-ஐத் திருத்தி, சில அதிகாரங்களைத் தரப் போகிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் என்னென்ன அதிகாரம் என்று சொல்லவில்லை. 'சிலவற்றைத் தரப் போகிறோம்' என்று திருத்தம்.

இன்னொரு மிகப் பெரிய திருத்தம், காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல, ஏற்கெனவே உயிரோடு இருக்கிறவர்கள் பெயரை, சாலை, பாலம், பூங்கா இவற்றுக்கெல்லாம் வைக்கக்கூடாது என்று இருந் ததை மாற்ற ஒரு திருத்தம் கொண்டு வந்து, அது விடுபட்டு விட்ட தென்று சொல்லி இருக்கிறார்கள். இப்போது சாலை, பூங்கா, விளையாட்டு மைதானம் போன்றவற்றுக்கு உயிரோடு இருக்கிற வர்களுடைய பெயரை வைக்கலாம் என்பது இன்னொரு திருத்தம். இதனால் என்ன நன்மை கிராம மக்களுக்கும், பஞ்சாயத்துக் களுக்கும் போய்ச் சேரப் போகிறது? ஏறக்குறைய 150, 160 ஊராட்சி ஒன்றியங்களிலே இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பெரும் தலைவர்களும், சுமார் 60 முனிசி பாலிட்டிகளில் தி.மு.க.-வைச் சேர்ந்த தலைவர்களும் இருக்கி றார்கள். இந்த உத்தரவு வந்தவுடன் அங்கே கட்டப்போகிற கட்டிடங்கள், பூங்கா, சாலைகள் எல்லாவற்றுக்கும் மாண்புமிகு

முதல்வரவர்கள் பெயரையோ அல்லது அமைச்சர் பெயரையோ அல்லது தலைவர்கள் பெயரையோ வைத்துக்கொள்ளலாமே தவிர இதனால் பொது மக்களுக்கோ, பஞ்சாயத்துக்களுக்கோ என்ன நன்மை வரப்போகிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன். இதனால் நேரடியாக மக்களுக்கு நன்மை இல்லை. வேறு எந்த நன்மையும் இல்லாதபோது, இந்த நேரத்தில் இதைக் கொண்டு வந்திருப்பது அரசியலுக்காகத்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே நாடாளுமன்றத்திலே இதனைத் தோற்கடித்த காரணத்தால், இப்போது தேர்தல் நேரத்திலே மக்களைச் சந்திக்கும்போது, நாங்கள் இதில் முன்னோடியாக இருக்கிறோம், பஞ்சாயத்துகளுக்கு, ஒன்றியங்களுக்கு அதிக அதிகாரங்கள் தருவதில் நாங்கள் பின் தங்கவில்லை என்று சொல்வதற்காகவே இதை அவசர அவசரமாகக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதில் வேறு விதமான, முக்கியமான, நன்மை தரக்கூடிய ஷரத்துக்கள் இல்லை. இது அரசியலுக்காகக்கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற காரணத்தாலே இதை ஆட்சேபித்து இதை விட்டுவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். பின்னாலே பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தான் மீண்டும் பாரதப் பிரதமராக வரப் போகிறார். நாடாளுமன்றத்திலே மீண்டும் பஞ்சாயத்துராஜ் சட்டம் நிறைவேற்றப்பட்டு, அரசியல் சட்டம் திருத்தப்பட்ட பிறகு, அந்த ஷரத்துக்களோடு அவற்றை உள்ளடக்கி இங்கே சட்டம் கொண்டு வரலாமென்று சொல்லி, அமைகிறேன்.

15-00 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று எதிர்க் கட்சிகளினுடைய தலைவர்களும், தோழமைக் கட்சிகளினுடைய உறுப்பினர்களும் இந்தத் திருத்தம் குறித்து தங்களுடைய கருத்துகள் பல வற்றை எடுத்து வைத்திருக்கின்றனர். நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தால் விரைவிலே சில விளக்கங்களை அவர்களுடைய உரைகளுக்குப் பதிலாக அளிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். 1989 ஆம் ஆண்டு ஜனவரியில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற்றபோது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கையிலே ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், பொதுவாக உள்ளாட்சி மன்றங்களின் உரிமைகள் பற்றி அந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறோம். அதிலே, மிக முக்கியமாக ஒரு பகுதியில் ''கடந்த சில காலமாகவே மாவட்ட அளவில் திட்டமிடல் என்கின்ற பெயரில், மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் செயல் நடைபெற்று வருகிறது. அதற்கு முதல் படியாக, மாநில அரசுகளை ஒதுக்கிவிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பிரதமர் கூட்டிப் பேசுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதை 15—12—1987 அன்று கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் அல்லாத கட்சிகளைச் சேர்ந்த 7 முதலமைச்

சர்கள் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். மாவட்ட அளவில் திட்டமிடுவதற்கோ உள்ளாட்சி மன்றங்களைத் தன்னாட்சி மன்றங்களாக்குவதற்கோ நாங்கள் எதிரிகள் அல்ல. ஏதோ காங்கிரஸ் கட்சி மத்திய ஆட்சி மட்டும் தனக்கு நிரந்தரமானது என்று எண்ணிக்கொண்டு, மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும் முயற்சியிலும், மாநில அரசுகளில் பணியாற்றும் அதிகாரிகளுடைய '' டியூயல் லாயல்டி '' இரட்டை விசுவாசத்தை ஏற்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டு, கூட்டாட்சித் தத்துவத்திற்கு மாறாக, நடந்திடும் போக்கினை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசியல் சட்டத்திற்கும் கூட்டாட்சி முறைக்கும், ஜனநாயகத்திற்கும் விரோதமான இந்தச் செயலை, தமிழ்நாட்டு மக்கள் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கழகம் வலியுறுத்த விரும்புகிறது '' என்று தேர்தல் அறிக்கையிலேயே குறிப்பிட்டு இருக்கின்றோம்.

இந்தப் பின்னணியில், பின்வரும் உறுதிமொழிகளைக்கூட தேர்தல் அறிக்கையிலேயே தெரிவித்திருக்கிறோம். ஏதோ திடீரென்று ஏற்பட்ட ஞானோதயம் என்றெல்லாம்கூட இங்கே பேசினார்கள், அல்ல, இந்த உறுதிமொழிகளைத் தேர்தல் அறிக்கையில் எவ்வாறு இணைத்திருக்கிறோம் என்றால் '' கடந்த காலத்தில் நகராட்சிகளிடமிருந்தும், ஒன்றியங்களிடமிருந்தும், பஞ்சாயத்துகளிடமிருந்தும் பறிக்கப்பட்ட அதிகாரங்கள் திருப்பிக் கொடுக்கப்படுவது மட்டுமல்ல, மேலும் மக்களுக்குப் பணியாற்றும் விதத்தில் அதிக அதிகாரங்களும், நிதியாதாரங்களும் வழங்கப்படும். மாநில சுயாட்சி கோருகிற எங்களால்தான் உள்ளாட்சிகளுக்குத் தன்னாட்சி தர முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். கடந்த காலத்திலே நகராட்சி, ஒன்றியம் மற்றும் பஞ்சாயத்து உறுப்பினர்களுடைய 5 ஆண்டுப் பதவிக் காலம் 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. ஜனநாயகத்திற்கு நேர்ந்த இந்த இடையூறை மாற்றி, அவர்களது பதவிக் காலம் முன்புள்ளதைப் போலவே அமைய, மேலும் 2 ஆண்டு நீடிப்போம் '' என்றும் அறிவித்தோம்.

ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு 7—2—1989 அன்று நகராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், அனைவரையும் கூட்டி, சென்னையிலே ஒரு மாநாடு நடத்தினோம். அந்த மாநாட்டினுடைய கோரிக்கைகள், அவர்கள் எடுத்து வைத்த கருத்துக்கள் இவைகளின் அடிப்படையில் மேலும் மக்களுக்குப் பணியாற்ற தேவைப்படும் அதிகாரங்களும், நிதியாதாரங்களும் உள்ளாட்சி மன்றங்களுக்கு மீண்டும் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. 11—2—1989 அன்று இந்த மாமன்றத்திலே ஆளுநர் அவர்கள் சட்ட சபையைத் துவக்கி வைத்துப் பேசிய உரையில் அரசின் கொள்கை பின்வருமாறு வெளியிடப்பட்டது.

"உள்ளாட்சி மன்றங்கள் மிகவும் நலிவுற்று இருப்பதால் அவை வளர்ச்சிப் பணிகளில் முழுமையாக ஈடுபட முடியாத நிலையில் உள்ளன. உள்ளாட்சி மன்றங்கள், வளர்ச்சி அடைந்து விரைந்து செயல்படுவதற்கு ஏற்றதொரு சூழலை உருவாக்கத் தேவையான பல சீர்திருத்தங்களைச் செய்ய இவ்வரசு விழைகிறது. நகராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆகியோரின் பதவிக் காலத்தை, மூன்று ஆண்டுகளிலிருந்து மீண்டும் ஐந்து ஆண்டுகளாக உயர்த்துவதற்கான சட்டம் இயற்றப்படும்" என்று அறிவித்ததோடு அதனுடைய தொடர் நடவடிக்கையாக, அவ்வாறே 5 ஆண்டுக் காலம் என்று உயர்த்தப்பட்டு, பின்னர் மதிய உணவுத் திட்டம், தொடக்கக் கல்வி, நல்வாழ்வுத் துறையின் துணை நிலையங்கள், விவசாய இடுபொருள்களின் விநியோகம், விவசாய விரிவாக்கப் பணிகள், குடிநீர் வழங்குதல் போன்ற மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை மேற்பார்வையிடும் அதிகாரங்கள் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அளிக்கப்பட்டன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், சமுகக் காடுகள் திட்டம், மற்றும் வறுமை ஒழிப்புப் பணிகள் போன்றவற்றின் மூலம் கிட்டும் நன்மைகள் உரியவர்களுக்குக் கிடைக்கச் செய்யும் பொறுப்பு ஊராட்சிகள் வசமும் ஊராட்சி ஒன்றியங்கள் வசமும் ஒப்படைக்கப்பட்டன.

15.05 மணி

இந்தச் சூழலிலேதான் 5—5—1989 அன்று பஞ்சாயத்து ராஜ் குறித்து, முதலமைச்சர்களுடைய மாநாட்டை டெல்லியிலே பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் கூட்டினார்கள். அதற்கான அழைப்பு வந்தபோது— எனக்குத் தொலைபேசி மூலமாகக்கூட 'வருகிறாயா?' என்று கேட்டபோது, நான் சொன்னேன். "இந்த மாமன்றத்திலே பொன் விழா தேதி குறிப்பிடப்பட்டு நடைபெறுகிற காரணத்தால் நான் வர இயலாது. தேதி மாற்றப்படுவதாக எனக்குச் சில செய்திகள் வந்தன. அப்படி முதல் நாளோ அல்லது மறு நாளோ வைத்துக்கொள்ளப் படுமேயானால் நான் நிச்சயம் வந்து கருத்துக்களைத் தெரிவிப்பேன் என்று சொன்னேன். அதைப்பற்றி யோசிப்பதாகச் சொல்லிவிட்டு அதே தேதியிலே தான் அந்த மாநாடு நடைபெறுவதாகத் திடீரென்று அறிவிக்கப்பட்டு பிறகு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்களை அரசின் சார்பாக அனுப்பி வைத்தோம். அவர்கள் அந்த மாநாட்டில் பேசும்போது "தமிழ்நாடு அரசு உள்ளாட்சி மன்றங்களைப் பலப்படுத்தும் வேலையில் யாருக்கும் பின்தங்கியது இல்லை; அதேநேரத்திலே மாநில சுயாட்சியை விட்டுக் கொடுக்க நாங்கள் தயாராக இல்லை. இந்தச் சூழ்நிலையில் தான் மாநிலங்களின்

அதிகாரங்களைப் பறிக்கும் முறையில் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள அரசியல் சட்ட திருத்தங்களை நாங்கள் எதிர்க்கும் நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது'' என்று விளக்கம் தரப்பட்டது. அந்த மாநாட்டில் மத்திய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள சட்டத் திருத்தத்தின் விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. பொதுவாக, திருத்தம் வரப்போகிறது என்று சொல்லப்பட்டதே தவிர, என்ன திருத்தங்கள் என்று எதுவும் அந்த மாநாட்டிலே வெளியிடப்படவில்லை. அதற்குப் பிறகு 15—5—89 அன்று 64-வது அரசியல் சட்டத் திருத்த மசோதா பிரதமரால் நாடாளுமன்றத்திலே அறிமுகப்படுத்தப்பட்டது. அதையடுத்துமசோதாவின் ஷரத்துக்களை நன்கு ஆராய்ந்த பிறகு முதலமைச்சர் என்கின்ற முறையில் 25—5—89-ல் பிரதமருக்கு விரிவாக ஒரு கடிதம் என்னால் எழுதப்பட்டது. அந்த நீண்ட கடிதம் முழுவதையும் நான் படிக்க இங்கே நேரம் இல்லை என்றாலும், அதிலே குறிப்பிடப்பட்ட சில முக்கியமான விவரங்களை மாத்திரம் இங்கே சொல்ல விரும்புகிறேன். அதில்,

''(1) தமிழ்நாடு அரசு உள்ளாட்சி மன்றங்களைப் பலப்படுத்த வேண்டுமென்ற கொள்கையிலே தீவிரமாக உள்ளது. புதிய அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட குறுகிய காலத்திலேயே தமிழ்நாட்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகமான அதிகாரங்களையும், பொறுப்புகளையும், நிதி ஆதாரங்களையும் பெறுவதற்கான பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(2) அரசியல் சட்டத்தில் ஊராட்சிகள் பற்றி தனி ஒரு அத்தியாயம் கொண்டுவரப்படுவதன் மூலம் இந்த மசோதா அரசியல் சட்டத்தின் கட்டமைப்பிலே ஒரு அடிப்படையான மாறுதலைக் கொண்டு வருகிறது. மேலும் இந்த மசோதாவில் உள்ளடங்கிய ஷரத்துக்கள் பெரும்பாலும் மாநில அரசின் 7-வது அட்டவணை, இரண்டாவது பட்டியலில் 5-வது நுழைவில் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டம் இயற்ற அதிகாரங்களுக்கு உட்பட்ட விஷயங்கள் தொடர்பானவைகள் ஆகும். எனவே இந்தத் திருத்தங்கள் மாநில அரசுகளின் பிரத்தியேக அதிகாரங்களையும், சுயாட்சித் தன்மையையும் கொள்கையளவிலும், பொருள் அளவிலும் பாதிப்பதாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாடு அரசு அரசியல் சட்டத் திருத்தங்களை கொள்கையளவில் எதிர்க்க வேண்டிய நிலையிலே இருக்கிறது.

(3) பஞ்சாயத்து ராஜ் என்பதைப் பொறுத்த வரையில் அனைத்து இந்திய அளவில் ஒரே மாதிரியான செயல்பாடுகளை வகுப்பது விவேகமான ஒன்றல்ல. தங்களுடைய சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகளுக்கு ஏற்ப பஞ்சாயத்துகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கும் முயற்சியில் ஒவ்வொரு மாநிலமும் செயல்பட விட்டுவிட வேண்டும்.''

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டேன். "(4) 1958 ஆம் ஆண்டு காமராசருடைய ஆட்சியில் இயற்றப் பட்ட சட்டத்தில் கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர்கள் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படவும்—அப்போது பஞ்சா யத்து போர்டு மெம்பர் மாத்திரம் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்—அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஊராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கவுமான நிலைமை இருந்தது—உறுப்பினர்கள் ஊராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் நிலைமை இருந்தது—அந்தக் காலக் கட்டத்தில் எதிர்க கட்சியிலிருந்த அண்ணா அவர்கள், ஊராட்சி மன்றத் தலைவரும், ஊராட்சி ஒன்றியத் தலைவரும் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும், மறைமுகத்தேர்தல் காரணமாக வரக்கூடிய முறை கேடுகள் குறித்தும் விளக்கி இருக்கிறார்.

அடுத்து 1970 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முதற் கட்டமாக இந்தச் சட்டம் திருத்தப்பட்டு ஊராட்சித் தலைவர்களுக்கு நேரிடையாகத் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அதைப்பின்பற்றி, அதற்குப் பிறகு 1978 ஆம் ஆண்டு இரண்டாம் கட்டமாக திரு. எம். ஜி. ஆர். அவர்களுடைய ஆட்சியில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிக்கும் நேரிடைத் தேர்தலைக் கொண்டுவர சட்டத் திருத்தம் செய்யப்பட்டது.

64-வது திருத்த மசோதா, ஊராட்சி ஒன்றியத் தலைவர் நேரிடையாகத் தேர்தலைச் சந்திப்பதை மாற்றுகிறது. மறைமுகத் தேர்தலைக் கொண்டுவர வழி வகுத்துள்ளது. இபபடிச் செய்வதால் மீண்டும் பல முறைகேடுகள, கிராமங் களிலும், ஒன்றியங்களிலும் நடக்க வழி வகுப்பதோடு தொடர்ந்து தமிழ்நாட்டில் ஆண்டு வந்த அரசுகளும், அதனை ஆண்ட பல்வேறு அரசியல் கட்சிகளும் தடுக்க முற்பட்ட முறைகேடுகளுக்கு இது வாய்ப்பு அளித்துவிடும்—இங்கே தான் கவனிக்க வேண்டும்—ஏற்கெனவே ஊராட்சி உறுப்பினர்கள் மாத்திரம் மக்களால் நேரிடையாகத் தேர்ந் தெடுக்கப்பட்டு அந்த உறுப்பினர்களைக் கொண்டு பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

15.10 மணி

அதற்குப் பிறகு 1970-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நான் முதமைச்சராக இருந்தபோது, காமராஜர் அவர்கள் ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு நேரடித் தேர்தல் என்று வைத்திருந்ததை, மேலும் விரிவாக்கி, 1970-ஆம் ஆண்டு கழக ஆட்சியில் ஊராட்சி மன்றத் தலைவர் களுக்கும் நேரடித் தேர்தல் என்று வைக்கப்பட்டது. பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச் சராக இருந்தபொழுது ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நேரடித் தேர்தல், தலைவர்கள் தேர்தல்; நகராட்சித் தலைவர்களுக்கும் நேரடித் தேர்தல் என்று கொண்டு வந்தார்.

ஆனால் மக்களுக்கு அளிக்கப்பட்ட அந்த உரிமை, மக்களதான் ஊராட்சி ஒன்றியத் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள்; மக்கள்தான் நகராட்சி மன்றத் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுப்பார்கள்; மறைமுகத் தேர்தல்—இன்டைரக்ட் எலக்ஷன்—கிடையாது என்று கொண்டு வரப்பட்ட அந்தத் தத்துவங்களைப் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தால் டெல்லியிலே முறியடிக்கப்பட இருந்த காரணத்தினாலேதான் அதை நான் பிரதமருக்கு முதலமைச்சர் என்கிற முறையிலே சுட்டிக்காட்டி அவைகளையெல்லாம் விலக்கிக் கொள்ள, அவைகளையெல்லாம் மாற்றிக்கொள்ள முதலமைச்சர்களையெல்லாம் அழைத்துப் பேசுங்கள், ஷரத்து வாரியாகப் பேசலாம் என்று சொன்னதை அவர்கள் கேட்கவில்லை.

1. மேலும் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி மன்றத் தலைவர்களைக் கொண்டு அமையும் அமைப்பாக இருப்பதனால் கிராம அளவிலே உள்ள ஊராட்சிகளுக்கும், வட்ட அளவிலே உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு நல்ல தொடர்பு ஏற்பட தமிழகத்திலே உள்ள பழைய சட்டம் வழி செய்கிறது, ஏற்கெனவே இருப்பது. ஊராட்சி மன்றத்தினுடைய தலைவர்கள்தான் ஒன்றியத்திலே போய் கவுன்சிலர்களாக இருப்பார்கள். இது இப்பொழுதுள்ள சட்டம்.

டெல்லியிலே இந்தச் சட்டம் வந்திருக்குமேயானால், நாங்கள் எதிர்க்காமல் அது நிறைவேறியிருக்குமேயானால் என்னவாகும் என்றால், ஊராட்சி மன்றத் தலைவர்கள் அந்தத் தகுதியின் காரணமாக ஊராட்சி ஒன்றியக் கவுன்சிலர்களாக இருக்க முடியாது. வேண்டுமானால் அதிலே பத்துப்பேர்களை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை கிடையாது. இப்படி ஊராட்சிமன்றத் தலைவர்களுடைய வாக்களிக்கும் உரிமையையே பறித்துக் கொள்கின்ற ஒரு சட்டத்திற்குப்பெயர், உரிமை வழங்கும் சட்டமா என்பதைத் தயவு செய்து இந்தச் சட்டத் திருத்தத்தை விமர்சிக்கின்ற, கடுமையாக விமர்சிக்கின்ற நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசுகின்றபொழுது நான் விளக்கத்திற்காக மட்டுமே எழுந்து நிற்கின்றேன்; வாதத்திற்காகக்கூட அல்ல. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மீது அளவற்ற பற்று கொண்டவர்கள்தான் நாம் அனைவரும். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஒரு மறைமுகத் தேர்தல—உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினர்கள் மூலம் பஞ்சாயத்துத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று வைத்திருந்த ஒன்றினைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறிது மாற்றி நேரடியாகவே தேர்ந்தெடுக்க

லாம் என்று அவர்கள் ஒன்றைக் கொண்டு வருகிறார்கள் என்று சொன்னால் பெருந்தலைவர் மீது அவர்கள் வெறுப்பு கொண்டு அந்தக் காரியத்தைச் செய்கிறார்கள் என்பது இல்லை. அனுபவத்தில் ஏற்பட்டு இருக்கின்ற அந்தக் காரியத்தை வைத்துக் கொண்டு, பெருந்தலைவர் போட்டிருந்த அடித்தளத்திலே ஒரு மாளிகையை அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அதைப் போலவே, இராஜீவ்காந்தி அவர்களும் எழுப்பியிருக்கலாம் அல்லவா? 30 விழுக்காடு பெண்களுக்கும். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இன்டைரக்ட் எலக்ஷன்—மறைமுகத் தேர்தலை அறிமுகப்படுத்தினார்கள். அண்ணா அவர்கள் நேரடித் தேர்தல் வேண்டுமென்று சொன்னார். அண்ணாவினுடைய எண்ணத்தை நான் முதலமைச்சராக இருக்கும்பொழுது சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றினேன். அண்ணாவினுடைய எண்ணத்தை மேலும் பரவலாக, எம். ஜி. ஆர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்பொழுது மறைமுகத் தேர்தல் யூனியனுக்கும் வேண்டாம், நகராட்சிக்கும் வேண்டாமென்று நேர்முகத் தேர்தலாகக் கொண்டு வந்தார்.

ஆக, மக்களுடைய உரிமைகள், மக்கள் வாக்களிக்கின்ற உரிமைகள் மக்களிடத்திலே அவர்களுடைய கையிலே அதிகாரம் கொடுப்பது பரவலாக ஆக்கப்பட வேண்டுமேயல்லாமல், மேலும் மேலும் வளர்க்கப்பட வேண்டுமேயல்லாமல், அண்ணா அவர்கள் கொண்டு வர எண்ணி, அதை நான் செயல்படுத்தி, எம். ஜி. ஆர். செயல்படுத்தி, நேரடியாகத்தான் யூனியன் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று மக்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிக அதிகாரத்தை முடக்கிப்போட்டு ஊராட்சி மன்றத் தலைவர்களெல்லாம் ஒன்று கூடி ஒன்றியத் தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம்; நகராட்சியிலே இருக்கின்ற கவுன்சிலர்கள் எல்லாம் கூடி நகர் மன்ற சேர்மனைத் தேர்ந்தெடுக்கலாம் என்று சொன்னால், மக்களிடத்தில் தரப்பட்ட அதிகாரங்கள் பறிக்கப்பட்டு விடுகின்றன அல்லவா என்பதைத்தான் நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதை நம்முடைய இலக்கியச் செல்வர் வாதத்திற்காக இங்கே வைத்தாரே அல்லாமல் உண்மையை உணர்ந்திருப்பார் என்றே நான் திடமாக நம்புகிறேன்.

அடுத்து, நான் குறிப்பிட்டது. ஏற்கெனவே ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியத்திலே கவுன்சிலர்களாக அந்தப் பதவிப் பொறுப்பாலேயே அமர்கிற தகுதியைப் பெற்றிருந்தார்கள். இது மிக முக்கியம். ஊராட்சிமன்றத் தலைவர்கள் தங்களுடைய பதவியின் தகுதியாலேயே ஊராட்சி ஒன்றியத்திலே கவுன்சிலர்கள். ஆனால் இந்தச் சட்டப்படி ஊராட்சி மன்றத் தலைவர்கள் அங்கே செல்ல முடியாது. ஒரு ஒன்றியத்திலே 30 அல்லது 40 ஊராட்சி மன்றத் தலைவர்கள் இருந்

தால் அதிலே ஒரு நான்கைந்து பேரை இவர்கள் தேர்ந்தெடுத்து அங்கே வைத்துக் கொள்ளலாம். அவ்வளவுதான். அவர்களுக்கு ஓட்டுரிமை கிடையாது. பிறகு அங்கே யார் கவுன்சிலர்கள் என்றால் தனியாக அதற்கு ஒரு தேர்தல்; அதிலே வெற்றி பெறுபவர்கள் கவுன்சிலர்கள். அந்தக் கவுன்சிலர்கள் தான் பஞ்சாயத்து யூனியன் சேர்மனை— தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இப்படிப்பட்ட முரண்பாடுகளால் முறைகேடுகள் நிறைய விளையக்கூடும் என்ற காரணத்தினாலேதான் நாம் இந்தப் பகுதிகளையெல்லாம் எதிர்க்க நேரிட்டது. அவைகளைப் பற்றியெல்லாம் அவர்கள் ஆராய்ந்து இருப்பார்களேயானால், அழைத்து வைத்துப் பேசியிருப்பார்களேயானால், இங்கே சொன்னார்களே செலக்ட் கமிட்டி என்று, அதைப்போல ஒரு செலக்ட் கமிட்டிக்கு விட்டு வரட்டும் என்கிற ஒரு பரந்த நோக்கம் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுக்கு இருந்திருக்குமானால் இவ்வளவு சங்கடங்கள் ஏற்பட்டிருக்காது என்பது தான் என்னுடைய கருத்தாகும்.

15.15 மணி

அடுத்து, நான் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தெளிவாக ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், பெண்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் ஆகியோர்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதை வரவேற்கிறோம். எதிர்க்கவில்லை. கடிதத்திலே குறிப்பிட்டிருக்கிறேன் வரவேற்கிறோம் என்று. தமிழ்நாடு சட்டத்திலும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று ஒவ்வொரு மாநிலமும் முடிவு செய்ய வேண்டுமேயல்லாமல், அனைத்திந்திய அளவில் அதை நிர்ணயிப்பது சரியாகாது.

அடுத்து, தமிழ்நாடு அரசு ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் ஒழுங்காக நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது. மேலும் அந்த அமைப்புகளைக் கலைக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டால் மீண்டும் ஆறு மாதங்களுக்குள்ளாக தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற கொள்கையும் நமக்கு ஏற்புடைய கொள்கையே. மேற்கூறியவாறு அந்த மசோதாவில் குறிப்பிடப்பட்ட பெண்களுக்கு 30 சதவீதம் ஆதிதிராவிட மக்களுக்கு குறிப்பிட்ட இட ஒதுக்கீடு, அதைப் போலவே ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கட்டாயம் தேர்தல் நடைபெற வேண்டுமென்ற அந்தக் கருத்து, ஒரு மன்றம் கலைக்கப்பட்டு விடுமேயானால் ஆறு மாதங்களுக்குள்ளாக மறு தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற அந்தக் கருத்து, அத்தனையும் அன்றைக்கு நம்முடைய அரசால், இந்த அரசை நடத்துகிற கழகத்தால், ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களேயாகும்.

நான் மேலும் திரு. ராஜீவ் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன், அந்தக் கடிதத்தில், 'இந்தச் சூழ்நிலையில் இந்த மசோதாவில் கண்டுள்ள விஷயங்களை ஒரு வழிகாட்டியாகக் கருதி அதன் அடிப்படையில் மாநிலங்கள் தங்களது உள்ளாட்சிச் சட்டங்களை சீரமைக்கலாம், மாற்றலாம் என்ற முறையிலே விட்டுவிடுவதே நல்லதாகும். அதற்கு மாறாக இந்த மசோதாவை சட்டமாக ஆக்க முயன்றால், ஒருமைப்பாடு இருக்கவேண்டிய இடத்தில் தேவையற்ற சச்சரவுகள் ஏற்படுகிற நிலை உருவாகிவிடும்' என்றும் குறிப்பிட்டு இருந்தேன்.

மறுபடியும் சொன்னேன், 'இந்த யோசனை ஒரு வேளை ஏற்றுக்கொள்ளப்பட முடியாவிட்டால் மறுபடியும் முதலமைச்சர்களுடைய கூட்டத்தைக்கூட்டி, இந்த அரசியல் சட்டத் திருத்தங்களைப் பற்றி விவாதிக்க ஒரு வாய்ப்பை உருவாக்கித் தாருங்கள்' என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் என்னுடைய கடிதத்திற்குப் பிரதமர் எந்தவிதமான பதிலும் அளிக்கவில்லை. கடிதம் வந்து சேர்ந்தது என்றுகூட ஒரு பதில் எனக்கு வரவில்லை. கடிதத்தில் உள்ள கருத்தும் பொருட்படுத்தப்படவில்லை என்பது உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். எனவே, மாநிலங்கள் அவையில் 13—10—1989 அன்று அந்த 64 வது சட்டத் திருத்த மசோதா தோற்கடிக்கப்பட்டது. அப்போது கூட முரசொலி பத்திரிகையில், நான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டேன். அதிலே ராஜீவ் காந்தி மசோதா தோற்கடிக்கப்பட வேண்டும்; ராஜீவ் காந்திக்கு தலைக்குனிவு ஏற்பட வேண்டும் என்பதல்ல நமது நோக்கம். இந்த ஒருமுறை அந்த மாற்றம் அரசியல் சட்டத்தில் ஏறி விடுமேயானால் பின்னர் இந்தத் தீமையை அரசியல் சட்டத்திலிருந்து நீக்கிட நாடாளுமன்றத்திலும், மாநிலங்கள் அவையிலும் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் கிடைத்தாக வேண்டும். இப்போது மாநிலங்கள் அவையில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளுக்கு ஓரிரு வாக்குகள் குறைந்த காரணத்தால் தான் வரவிருந்த அபாயம் தவிர்க்கப்பட்டது' என்றும் நான் குறிப்பிட்டு இருக்கிறேன்.

எனவே, நாங்கள் அந்த மசோதாவில் எந்தெந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டோமோ அந்தக் கருத்துக்கள் மாத்திரம் போதுமானது என்ற அளவில் அரசியல் சட்டத்தை மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டுகிற வகையில் அவர்கள் திருத்தாமல், ஒரு வழிகாட்டி முறை என்ற அளவில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மாநில முதலமைச்சர்களை எல்லாம் அழைத்துப் பேசி ஒரு முடிவை எடுத்திருப்பார்களேயானால் நாங்கள் அதை வரவேற்று இருப்போம். எனவே, எப்படியோ அந்த மசோதா தோற்கடிக்கப்பட்டு விட்டது. நாங்கள் அந்த மசோதாவில் எந்தெந்தக் கருத்துக்கள் நல்ல கருத்துக்கள் என்று சொன்னோமோ அவைகளை இங்கே திருத்தமாகக் கொண்டு வந்து உங்களிடம் ஆதரவைக் கேட்கிறோம். இப்போது

வைக்கப்படுகிற வாதத்தில் என்ன சாராம்சம் என்றால், ராஜீவ் காந்தி சொன்னதைத்தானே நீ சொல்கிறாய் என்று. ஆமாம், அதை ஏன் மறுக்கிறீர்கள்? அவர் சொன்னதைத்தான் நான் சொல்கிறேன். அதை ஏன் மறுக்கிறீர்கள்? ராஜீவ் காந்தி சொன்னபோதே, எதை எதிர்த்தேனோ, அதை விட்டுவிட்டு எதைஎதை ஆதரித்தேனோ அதைத் தான் இன்றைய தினம் இங்கே சட்டமாகக் கொண்டுவர, சட்டமுன்வடிவாக உங்கள் முன்னால் வைத்திருக்கிறோம். ராஜீவ் காந்தி அவர்களால் கொண்டு வரப்பட்ட 64-வது மசோதா தோல்வி அடைந்து விட்டது என்றாலும், நாங்கள் இதைக் கொண்டு வருவதன் நோக்கத்தைக் குறிப்பிடுகிறேன். உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகமான பொறுப்புகளும், அதிகாரங்களும் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் மூலமாக மக்கள் வளர்ச்சிப் பணிகளி லும், நல்வாழ்வுப் பணிகளிலும் ஆக்கபூர்வமாக ஒத்துழைக்க வேண்டுமென்ற கொள்கையிலே நாம் தெளிவாகவும், திண்ண மாகவும் இருக்கிறோம். இந்தக் கொள்கையை மேலும் நல்லமுறையில் செயலாக்க தற்போது கொண்டு வரப்படும் சட்டத்தில் பின்வரும் முக்கிய திருத்தங்கள் அடங்கி உள்ளன.

15-20 மணி

அதையும் சுருக்கமாகச் சொல்வது என்னுடைய கடமை.

(1) தற்போது இருக்கும் சட்டத்தில், ஊராட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பதவிக் காலம் 5 ஆண்டுகள் என்று குறிப்பிடப்பட்டு இருந்தாலும், இந்தப் பதவிக் காலத்தில் உள்ள ஒரு வருட கால வரை யறைக்குள் கூட்டவோ, அல்லது குறைக்கவோ அரசுக்கு இதுவரையில் அதிகாரம் இருக்கிறது. 5 ஆண்டு என்பதை 4 ஆண்டாகக் குறைக்கவும், அதை மேலும் 6 ஆண்டாக நீட்டிக்கவும் அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த விதியை நீக்கிவிட்டு, கட்டாயமாக 5 வருடத்திற்கு ஒரு முறை மேற்குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்ற திருத்தத்தைச் செய்ய முன் வந்திருக்கிறோம். அதுதான் உங்கள் முன்னிலையிலே இருக்கிற சட்ட முன்வடிவு.

(2) தற்போதைய சட்டத்தில் ஊராட்சிகள் கலைக்கப் பட்டால் அது ஒரு குறிப்பிட்ட தேதியிலிருந்து கலைக்கப்பட்டு, உடனடியாகவோ அல்லது இன்னொரு குறிப்பிட்ட தேதியி யிலிருந்தோ, மீண்டும் கொண்டுவரப்படவேண்டும். ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த மட்டில், அவைகள் கலைக்கப் பட்டால் ஓர் ஆண்டு காலத்திற்குள் மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும். இந்த ஓர் ஆண்டு காலத்தை மேலும் நீட்டிக்க அரசுக்கு ஏற்கெனவே அதிகாரம் இருக்கிறது. ஆனால் இப்போது மாற்றப்பட்டு ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் பதவிக் காலம் முடியும் முன்பு கலைக்கப்பட்டால், கலைக்கப் பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற திருத்தம் இப்போது கொண்டு வரப்பட்டிருக் கிறது.

1989 நவம்பர் 2] [டாக்டர் மு. கருணாநிதி]

(3) தற்போதைய சட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சியிலும் பெண்களுக்காக ஒரு உறுப்பினர் பதவி மாத்திரமே ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இதை மாற்றி ஒவ்வொரு ஊராட்சியிலும், மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 30 சதவீதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய திருத்தம் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(4) தற்போதைய சட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சியிலும் பட்டியல் ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மக்கள் தொகை அடிப்படையில் 3 உறுப்பினர்கள் பதவிகளுக்கு இட ஒதுக்கீடு செய்யலாம். ஊராட்சி ஒன்றியங்களில் பெண்கள் அல்லது பட்டியல் ஜாதியினர், பழங்குடியினர் உறுப்பினர்களாக இல்லாமல் இருந்தால், அல்லது அவர்களுடைய எண்ணிக்கை மூன்றுக்குக் குறைவாக இருந்தால், ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் 3 பெண்களும், 3 பட்டியல் ஜாதியினர், பழங்குடியினர் இருக்கும் வகையில், அவர்களை ஒத்து தெரிவு முறையில், கோ-ஆப்ட் முறையில் சேர்த்துக் கொள்ளலாம். இந்த விதிமுறைகளின்படி ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும், பட்டியல் ஜாதியினர், பழங்குடியினர் ஆகியோருக்கும், ஊராட்சி மன்றங்களிலே பெண்களுக்கும் தொடர்ந்து ஒதுக்கீடுகள் செய்யப்படும்.

(5) ஊராட்சி ஒன்றியங்களுக்கு, அரசாலோ, அல்லது குடிநீர் வாரியம் மின்சார வாரியம் போன்ற அரசு நிறுவனங்களினாலோ மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப் பணிகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைப்பற்றி அவ்வப்போது ஆய்வு செய்யும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(6) அரசு, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் விதிக்கும் வரி முதலியவைகள், இந்த அமைப்புகளுக்கு அரசு வழங்கும் மானியம் மற்றும் அவைகளினுடைய நிதிநிலைமைகள், இவைகளை மேம்படுத்துதல் போன்றவற்றை 5 ஆண்டுக்கு ஒரு முறை ஒரு நிபுணர் குழு மூலம் ஆராயப்படும் என்ற திருத்தமும் உங்கள் முன்னாலே வைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து பெயர்களைப் பற்றி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் கூடச் சொன்னார்கள். பெயர்களை வைப்பதற்காக இவ்வளவு அவசரப்பட்டு திருத்தம் கொண்டுவரவேண்டுமா என்று. பல பெரிய திருத்தங்களைக் கொண்டுவரும்போது, அதற்காகத் தனியாக ஒரு திருத்தம் கொண்டு வரவேண்டாம் என்பதற்காகத்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதே அவையிலேகூட கடந்த கால ஆட்சியில் உயிரோடு இருப்பவர்களுடைய பெயர்களை வைக்கக் கூடாது என்ற ஒரு சட்டமும், அதற்குப்பிறகு அதே ஆட்சியில் உயிரோடு இருப்பவர்களுடைய பெயர்களை வைக்கலாம் என்று ஒரு

சட்டமும் வந்ததை அமைச்சராக இருந்த நம்முடைய எதிர்க்கட்சி துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் நன்றாக நினைவு கூர்வார்கள் என்றே நான் நம்புகிறேன். ஏதோ முதலமைச்சருடைய பெயரை வைத்துக்கொள்வதற்காக இவைகள் எல்லாம் நடைபெறுகிறதா என்று கேட்டார்கள். உயிரோடு இருப்பவர்களுடைய பெயரை வைக்கக் கூடாது என்று சட்டம் இருந்தபோதே, ஆலந்தூர் நகராட்சி மன்றக் கட்டிடத்திற்கு உயிரோடு இருக்கிற திரு.மோகனரங்கம் அவர்களுடைய பெயரை சூட்டியதை யாரும் மறந்து இருக்க முடியாது. அன்னை தெரசா அவர்களைப் பக்கத்திலே உட்கார வைத்துக்கொண்டே தெரசா பல்கலைக்கழகம் என்று பெயர் வைக்கப்பட்டது. அப்போது எல்லாம் உயிரோடு இருப்பவர்களின் பெயர்களை வைக்கக் கூடாது என்று சட்டம் இருந்தபோதும் கூட அவைகளுக்கு எல்லாம் விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

நான் என்னுடைய நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய பெயரை வைத்துக் கொள்வதற்காக அல்ல. ஒன்றைக் கூறினால் உங்களுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அது நம்முடைய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவருக்குப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். 1969-ல் அண்ணா மறைந்த பிறகு நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற நேரத்தில், திருவள்ளூர் நகராட்சி மன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் பெருவாரியான இடங்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றி, திராவிட முன்னேற்றக் கழக நகராட்சி மன்றத்தலைவர் அங்கே பொறுப்பேற்றார். பொறுப்பேற்றவுடனே அவர்கள் ஒரு தீர்மானம் போட்டார்கள். என்ன தீர்மானம் என்றால் அதற்கு முன்பு இருந்த நகராட்சி மன்றத்தினுடைய தலைவர் ஆளவந்தார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், அவருடைய பெயரால், திருவள்ளூர் நகராட்சி மன்றத்திற்கு 'ஆளவந்தார் நகராட்சி மன்றக் கட்டிடம்' என்று பெயர் சூட்டப்பட்டு இருந்தது. அந்தப் பெயரை மாற்றி, 'அண்ணா நகராட்சி மன்றக் கட்டிடம்' என்று நகராட்சி மன்றத்திலே ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி, அதற்கு அரசு ஒப்புதலுக்கு அனுப்பியிருந்தார்கள். நான் அந்தக் கோப்பிலே என்ன எழுதினேன் என்றால், அண்ணாவிற்கு எத்தனையோ இடங்களிலே பெயர்களை, எங்கும் வைக்கலாம், ஆளவந்தார் அந்த ஊரில் தலைவராக இருந்தவர், நகராட்சித் தலைவராக இருந்தவர், அவர்கள் காங்கிரஸ் கட்சிக்காரராக இருந்தாலும் கூட, அந்தப் பெயரை மாற்றி, இந்தப் பெயரை வைக்கத் தேவையில்லை, இது அண்ணாவுக்கே இழுக்கு, எனவே, அந்தப் பெயரை மாற்றத் தேவையில்லை என்று சொல்லி, அந்தப் பெயரே வைக்கப்பட்டது. எனவே இதிலிருந்து என்னை நீங்கள் உணர்ந்துகொள்ளலாம், என்னுடைய பெயரையோ

(15.25) மணி

அமைச்சர்களுடைய பெயர்களையோ வைப்பதற்காகக்கொண்டு வரப்பட்டதல்ல இது. ஒவ்வொரு ஊரிலும் கூட ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதாக இருந்தால் சில பேர் நிதி உதவி செய்ய முன்வருகிறார்கள். அப்படி நிதி உதவி செய்ய முன் வருகிறவர்கள் ஒரு ஊராட்சியில் தங்களுடைய பெயரை அல்லது தங்களுடைய தந்தையார் பெயரை வைத்தால் இரண்டு லட்சமோ அல்லது மூன்று லட்சமோ அந்தப் பள்ளிக் கட்டடத் திற்காகத் தருவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அங்குள்ள ஊராட்சி மன்றங்களில், நகராட்சி மன்றங்களில், அந்தப் பெயரை வைக்க முடியாத காரணத்தால், உயிரோடு இருப்ப வர்களுடைய பெயரை வைக்க சட்டம் இடம் தராத காரணத் தால் அவைகளைப் புறக்கணிக்க வேண்டியதாக இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட பள்ளிக் கட்டிடங்கள், மருத்துவ மனைக் கட்டிடங்கள் போன்றவைகளுக்கு நன்கொடையாகத் தர யாராவது முன் வருபவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காகத்தான் இந்தத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் எடுத் துக்கூறி இது தேர்தல் பிரச்சாரத்திற்காக அல்ல என்பதை நம் முடைய நண்பர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர் களுக்குச் சொல்லி—என்னதான் சொன்னாலும் வெளியிலே போய் அவர் அதைத்தான் சொல்லப் போகிறார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்—என்றாலும் கூட ராஜீவ் காந்தி அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில் அவர் கொண்டு வந்த மசோதாவில் எதை எதை இந்த அரசு ஏற்றுக்கொண்டதோ அதைத்தான் இன்றைக்குச் சட்ட முன்வடிவாக கொண்டு வந்து, சட்டமாக ஆக்குவதற்காக உங்களுடைய அனுமதியைக் கோரு கிறோம் என்பதை மாத்திரம் எடுத்துரைத்து இந்த அளவிலே அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திருத்தம் குறித்து தெளிவான விளக்கத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப் படையிலே, நம்முடைய பீட்டர் ஆல்போன்ஸ் ஒரு கருத்தை மட்டும் சொன்னார். அதற்கு மட்டும் நான் முதலமைச்சர் சொன்ன கருத்தை ஒட்டி தெரிவிக்க விரும்புகிறேன். 64-வது அரசியல் சட்டத்தில் இந்த பஞ்சாயத்து நகர பாலிகா சட்டம் கொண்டு வந்தபோது அதிகாரங்கள் வழங்குவதற்கு Shall என்று இருந்தது. ஆனால் நீங்கள் May என்று இந்தத் திருத்தத்திலே கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று சொன் னார். ஆனால் அந்தச் சட்டத்திலேயும் May என்றுதான் போடப்பட்டிருக்கிறது. பிரிவு 243 (இ) என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்தலைவர் மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் ஒரு திருத்தத்தைத் தந்திருக்கிறார்கள். 17(2) இல் ஊராட்சி சட்டப் பிரிவில் ஊராட்சிகளில் சாதாரண காலி இடங்கள் ஏற்படுவதற்கு 3 மாதங்களுக்கு முன்னரே தேர்தல் அதிகாரி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பிரிவு17(2)இல் உள்ளது. இந்தக் கால அளவு தற்போது 6 மாதமாக ஆக்கப்பட்டிருக்கிறது. இது தான் அவர் தனது திருத்தமாகக் குறிப்பிட்டு இருப்பது. ஆகவே, அந்தத் திருத்தத்தை அவர் வலியுறுத்தத் தேவையில்லை என்பதை எடுத்துச் சொல்லி இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்தை அனைவரும் ஏற்று, இந்தச் சட்டத் திருத்தத்திற்கு ஆதரவாக முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, அந்த உணர்வின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஜனநாயக உரிமை வழங்கப்படுகிற இந்தச் சட்டத்தை அனைவரும் ஏற்று நிறைவேற்றித்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகிற நேரத்திலே நான் புதியதாகப் பெயர் சூட்டுவதைப்பற்றிச் சொன்னதை மனதிலே வைத்துக் கொண்டும், மற்றவர்கள் சொன்னதை வைத்துக் கொண்டும் அவர்கள் ஒரு நல்ல பதிலைச் சொன்னார்கள். ஆனால் அப்போது கூட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பெரும்பான்மையைக் கொண்டிருந்த திருவள்ளூர் நகரசபை சரியாகத் தான் ஒரு தீர்மானத்தைப் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். ஆளவந்தார் பெயர் சூட்டுவது என்று தானே அவர்கள் சொன்னார்கள். அண்ணா அவர்கள் பெயரைச் சூட்ட வேண்டுமென்று சொன்னாலும் இரண்டு பேருக்கும் அது பொருத்தமாக இருக்கும் என்று கூட கருதுகிறேன்.

இங்கே நான் இப்பொழுது எழுந்தது, நான் அந்தத் திருத்தத்தைக் கொடுக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களே, நான் கொடுத்த திருத்தம் In clause 2 in the proposed new Section 12-A, add the following at the end of sub-section (1):—

Panchayats shall be re-constituted before the expiry of the life of those Panchayats under normal circumstances.

அதாவது 6 மாத காலத்திற்குள் காலி ஆகிற இடத்தையோ நாம் கலைக்கின்ற இடத்தையோ நிரப்ப வேண்டுமென்று இருப்பதைப் போலவே 5 ஆண்டு முடிவதற்குள் அடுத்த தேர்தல் வந்து அமைந்துவிட வேண்டுமென்று சொல்லுகிற, ஸ்பெசிபிக்காக அது இல்லை என்பதற்காக அந்தத் திருத்தத்தைக் கொடுத்தேன், வேறு ஒன்றும் இல்லை.

(15.30) மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 43/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In clause 2, in the proposed new section 12-A add the following at the end of sub-section (1):—

Panchayats shall be reconstituted before the expiry of the life of these Panchayats under normal circumstances."

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, திருத்தம் அதிலே இணைக்கப்பட வேண்டும் என்று கருதுகிறேன். அப்பொழுதுதான் அது செம்மைப்படும் என்ற காரணத்திற்காக. (குறுக்கீடு) அதனை நாங்கள் மனதிலே கொண்டு அதற்குத் தகுந்தவாறு செய்கிறோம் என்று சொல்கிறார்கள். நமக்கு வேண்டியது காரியம் தானே.

திரு. குமரி அனந்தன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றது.

[1989 நவம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 2 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 3 முதல் 11 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8. அறிவிப்பு.

கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு, 1989 [ஆ. இ.].

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 44/1989) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 2 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 3 முதல் 11 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

8. அறிவிப்பு.

கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு, 1989 [ஆ. இ.].

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 44/1989) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு)—தொடர்ச்சி,

(எ) கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை தி . எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களும், பேராசிரியர் . பொன்னுசாமி அவர்களும் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை முன்மொழிவார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகச் சட்ட முன் வடிவு மீது மிகச் சுருக்கமாக நான் என்னுடைய உரையை நிகழ்த்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறகு பேசலாம். முதலில் முன்மொழியுங்கள்

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

‘‘19-9-1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழக அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 6/1989) இப் பேரவை நிராகரிக்கின்றது.’’

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

‘‘1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.’’

*1—11—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களின் தீர்மானமும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன. நேரத்தின் அருமையை உணர்ந்து திரு.எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் பேச வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவிலேயும் சரி, சட்டத்திலே யும் சரி சான்ஸலர் என்பதற்கு செக்ஷன் 9-ல் "The Governor shall be chancellor of the university....." என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. சான்ஸலருக்கு என்ன அதிகாரம்? அவருக்கு சுயேச்சையாக செயல்பட அதிகாரம் கிடையாது. அனுமதிக்கப் படவில்லை. அவரிடம் தரப்படுகின்ற மேல்முறையீடுகள் மனுக்கள் எதுவாயினும் மாநில அரசிடம் தான் அவர்கள் கேட்க வேண்டும். தப்பித்தவறி அவர்கள் ஏதாவது சுதந்திரமாக முடிவு செய்தாலும் கூட "like nomination to the Senate" மாநில அரசின் கருத்துக்கு விரோதமாக செயல்பட்டார் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. அரசு கருத்துக்கு மாறாக செயல்பட்டார் என்று குற்றச்சாட்டு வருகிறது. யுனிவர்சிட்டி அட்டானமஸ் என்பது பெயரளவில் தான். நிர்வாகத்தை உண்மையில் அரசாங்கம் நடத்துகிறது. எனவே போர்ட் ஆஃப் மேனேஜ்மெண்ட் என்று இதிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. கிளாஸ் 1எக்ஸ்-அபிஷீயோ மெம்பர்ஸ் என்று கூறி Secretary, Animal Husbandry & Fisheries, Secretary, Finance, Secretary Law, Director of Animal Husbandary, Director of Fisheries and Registrar என்று அத்தனை பேர்களும் நியமனமாகப் போடப்பட்டிருக் கிறது. அதேபோல கிளாஸ் 2 அதர் மெம்பர்ஸ் நான்-அபிஷியல் என்று இருக்கிறது. மற்ற பல்கலைக்கழகங் களில செனேட் மற்றும் சிண்டிகேட் என்று இருப்பதைப் போல் இதில் போர்ட் ஆப் மேனேஜ்மென்ட் முழுவதும் நியமிக்கப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் முழு அதிகாரம் அங்கே குவிக்கப்பட்டிருக்கிறது. இந்த போர்ட் எடுத்த முடி வின் மீது கவர்னருக்கு அப்பீல் செய்தால், ஆளுநர் அதை சட்ட இலாக்காவிற்குத் தான் அனுப்பி வைக்க வேண்டும். ஆலோசனைக்கு, லா செக்ரட்டரி, போர்ட் ஆப் மேனேஜ் மெண்டில் மெம்பர். எனவே அவரும் உட்கார்ந்து எடுத்த முடிவிற்கு எதிராக நிச்சயமாக சட்டத்துறை செல்லாது. எனவே போர்ட் ஆப் மேனேஜ்மென்ட் முழுக்க முழுக்க அவருடைய ஆதிக்கத்திலே இருக்கிறது. அதைப்போல எக்ஸ்-அபிஷயோ மெம்பர்ஸுக்கு வோட்டு போடும் உரிமை உண்டு. கிளாஸ் 2 மெஜாரிட்டி பை நாமினேஷன். அதிலும் அரசின் ஆதிக்கம் நம் மாநிலத்தில் தான் எல்லா பல்கலைக் கழகங்களுக்கும்

1989 நவம்பர் 2] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

15-35 மணி

கவர்னர் சான்ஸலராக இருக்கிறார் எனவே, இதன் காரணமாக அரசு செய்யும் தவறுகள் அனைத்தையும் கவர்னர் தலையில் போடுகிறார்கள். Governor is the head of the State. அவருக்கு இது தேவையில்லை என்று நான் கருதுகிறேன். குறிப்பாக நம் இந்தியாவை எடுத்துக் கொண்டால், பல பல்கலைக்கழகங்களிலே சான்சலராக, வேந்தர்களாக, மற்றவர்கள் இருக்கிறார்கள். ஜவஹர்லால் நேரு யூனிவர்சிட்டி, நியு டெல்லி—சான்சலர், பிரைம் மினிஸ்டர்: சாந்தி நிகேதன் யூனிவர்சிட்டி, கல்கத்தா—சான்சலர், பிரைம் மினிஸ்டர், பாண்டிச்சேரி யூனிவர்சிட்டி—சான்சலர், ப்ரெசிடெண்ட்; காந்திகிராம் யூனிவர்சிட்டி—சான்சலர், வைஸ்-ப்ரெசிடெண்ட்; ஆந்திராவில் உள்ள தெலுங்கு யூனிவர்சிட்டி—சான்சலர், சீஃப் மினிஸ்டர், இங்கேயும் ஏதேனும் ஒரு யூனிவர்சிட்டிக்கு சான்சலராக முதலமைச்சர் இருக்கலாம். தவறு கிடையாது என்கின்ற என்னுடைய கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

செக்ஷன் 10(2)—'ப்ரோ-சான்சலர்' யார் என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது.'.... Minister in charge of the Portfolio of Animal Husbandry and Fisheries' என்று இருக்கிறது. அதிலே டிராப்டிங்கிலே என்ன குறை என்று சொன்னால், இன்றைய தினம், ..'Portfolios of Animal Husbandry and Fisheries may be vested with the same Minister But to-morrow there may be two Ministers. Actually they are two departments It is not one department. அதுவே குறை. அப்படியே மொழி பெயர்க்கப்பட்டு தமிழிலேயும் இருக்கிறது. 'துறை' என்கிற சொல் இருக்கிறது. அது 'போர்ட்போலியோஸ்' என்று இருக்கவேண்டும். 'ப்ரோ-சான்சலர்'-க்கு என்ன அதிகாரம், என்ன வேலை என்று செக்ஷன் 10 (2) சொல்லியிருக்கிறது. 'இந்தச் சட்டத்திலேயே சொல்லியுள்ளபடி' என்று இருக்கிறது, இந்தச் சட்டத்திலே தேடிப் பார்த்தால் ஒரு அதிகாரமும் இல்லை. ஒரு வேலையும் இல்லை. மற்ற பல்கலைக் கழககங்களுக்கு 'ப்ரோ-சான்சலர்' இணை வேந்தர், கல்வியமைச்சராகத் தான் இருப்பார். இங்கே அதுவும் இல்லை. இச்சூழ்நிலையில் மாநில அரசிற்கு இந்தப் பல்கலைக் கழகத்தில் உண்மையான ஈடுபாடு இருக்கவேண்டும் என்று சொன்னால் முதலமைச்சர் தான் சான்சலராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதிகாரிகள் வைத்தது சட்டமாக இருக்கும். அவர்களும் டெபுட்டி செகரட்டரியை அனுப்பிவிடுவார்கள். இந்தச் சட்டத்திலே அதற்கு இடம் இருக்கிறது. சான்சலர் என்பதற்கு 'வேந்தர்' என்ற மொழி பெயர்ப்பு எப்படிச் சரியாக இருக்கும் என்று புரியவில்லை. சான்சலர் என்று சொன்னால் அவர் வேந்தராக இருக்கமுடியாது. மொழி பெயர்ப்பிலே பல குறைகள் இருக்கின்றன. குறிப்பாக இந்தச் சொல், பல ஆண்டுகாலமாகப் பயன்படுத்தப்பட்டு

வருகின்றது. 'சான்சலர்' என்று சொன்னால், வெஸ்ட் ஜெர்மனியிலே ஒரு மாநிலத்திலே 'முதல்வரை' சான்சலர் என்று சொல்கிறார்கள். அதுவே இங்கிலாந்திற்கு வந்தால், 'தி லார்டு ஹை-சான்சலர்' என்று சொன்னால், He is the Chairman of the House of Lords. Chancellor of the Exchequer. என்று சொன்னால் அவர் நிதி அமைச்சர். அதேபோல் பிரிட்டீஷ் எம்பசி அஃபிஷியல், செகரட்டரிக்கு என்ன சொல்கிறார்கள் என்றால் 'சான்சலர்' என்று சொல்கிறார்கள். ஆகவே, சான்சலர் என்கிற சொல்லுக்கும், வேந்தர் என்கிற சொல்லுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. நிச்சயமாக இந்தச் சொல் தவறாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. அதற்கு ஒரு நல்ல மொழி பெயர்ப்பினை....

மாண்புமிகு திரு. துரைமுருகன் 'சான்சலர்' என்பதற்கு 'வேந்தர்' என்பதுதான் இப்போது நடைமுறையிலே இருக்கின்ற ஒரு பழக்கம்.இது தவறு என்று திரு. பாலசுப்பிரமணியம் தெரிவிக்கிறார். அதற்கு ஒரு மாற்றுக் கருத்தைச் சொன்னால் வரவேற்கலாம். குறை சொல்வது பெரிதல்ல. மாற்றுக் கருத்தைச் சொல்வது எதிர்க்கட்சியினுடைய மகத்தான காரியம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிச்சயமாகக் குறை சொல்லவில்லை. இந்த மன்றத்திலே, இந்த அவையிலே தமிழ் கற்ற தமிழ்ப் பேராசிரியர்கள், இலக்கியச் செல்வர்கள், சொல்லின் செல்வர்கள் இருக்கிறார்கள். நான் மேல் கல்வியை முறையாகத் தமிழிலே பயின்றவன் அல்ல என்பது நண்பர் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே, உங்களைப் போன்ற பேராசிரியர்கள் அதற்கு நல்ல சொல்லினைக் கண்டுபிடிக்க வேண்டும். சொல்லினை நீங்கள் எடுத்துச் சொல்லவேண்டும். என்ற நோக்கத்தோடுதான் நான் இங்கே குறிப்பிட்டேன்.

அதேபோல், 'டிராப்டிங்கிலே' பல குறைகள் வருகின்றன. அந்தக் குறைகள் மீண்டும் வரக்கூடாது.

The Law Department should be pulled up. I understand that there is a proposal to bifurcate the Law Department as

1. Law Secretary, Drafting.
2. Law Secretary, Opinion.

என்று ஒரு புரப்போசல் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அது முதலமைச்சர் அவர்களிடத்திலே வந்து இருப்பதாகச் சொல்கிறார்கள். உடனடியாக அதை நிறைவேற்ற

வேண்டும். ஏனென்று சொன்னால், இரண்டு 'லா-செக்ரட்டரிகள்' இருப்பது நல்லது என்ற நல்ல எண்ணத்தோடு தான் நான் சொல்கிறேன். அதேபோல், மொழி பெயர்ப்பிற்கும், மொழி பெயர்ப்பு தெரிந்தவர்கள் அந்தப் பதவியிலே இருக்கவேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்னாலே, ஒரு நபரை மொழி பெயர்ப்பிற்கு என்று போட்டு இருந்தார்கள். அவர் ஐ.ஏ.எஸ். அதிகாரி. நல்லவர். ஆனால், அவர் தமிழ் கற்றவர் அல்ல. என்னைப் போல தமிழைப் பாடமாக எடுத்து அவரும் படித்தவர் அல்ல. அவர் வேறு மொழியைப் பாடமாகப் படித்தவர். அவரைக் கொண்டு வந்து வேண்டுமென்றே பழி வாங்கவேண்டுமென்ற நோக்கத்தோடு போட்டு இருந்தார்கள். இப்போது மாற்றிவிட்டார்கள். அவர் நல்லவர். அவரைப் பற்றி நான் குறை சொல்லவேண்டும் என்ற நோக்கத்திலே சொல்லவில்லை.

"In Clause 11, sub-clause (4), the word "Registrar' should be deleted. It should be substituted (குறுக்கீடு) by the words "Board of Management." அதுபோல், 'ப்ரோ-சான்சலருக்கு' அதிகாரம் இல்லை. மற்ற பல்கலைக்கழகங்களுக்கு 'ப்ரோ-சான்சலர்' இருக்கலாம். இச்சூழ்நிலையில், மாநில அரசிற்கு இந்தப் பல்கலைக்கழகத்தில் உண்மையான ஈடுபாடு இருக்க வேண்டும் என்று சொன்னால், அதனால்தான், முதலமைச்சர் வரவேண்டும் என்று சொன்னேன்.

15-40 மணி

செக்ஷன் 11 (4)ல் துணை வேந்தர் இல்லாத நேரத்தில் 'ரிஜிஸ்ட்ரார்' அவருடைய பணிகளை மேற்கொள்ளலாம் என்று இருக்கிறது.

(4) When any temporary vacancy occurs in the office of the Vice-Chancellor or if the Vice-Chancellor is, by reason of illness, absence or for any other reason, unable to exercise the powers and perform the duties of his office, the Registrar shall exercise the powers and perform the duties of the Vice-Chancellor till the Board makes the requisite arrangements for exercising the powers and performing the duties of the Vice-Chancellor. என்று இருக்கிறது. இது எந்த பல்கலைக் கழகத்திலும் இல்லாத புதுமை. காரணம் துணை வேந்தருடைய அதிகாரங்கள் என்ன என்பதை செக்ஷன் 12 (1) தெளிவாகச் சொல்கிறது.

The Vice-Chancellor shall be the academic head and the principal executive officer of the University and shall, in the absence of the Chancellor and the Pro-Chancellor, preside at any convocation of the University and confer degrees, diplomas or other academic distinctions upon persons entitled to receive them. He shall be a member ex-officios and Chairman of the Board, the Academic Council, the Planningt Board and the Finance Committee and shall be entitled to be presen

at, and to address, any meeting of any authority of the University but shall not be entitled to vote there at, unless he is a member of the authority concerned. அப்படிப்பட்ட இடத்திலே ரிஜிஸ்ட்ரார் அந்தப் பணியை மேற்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ரிஜிஸ்ட்ராருக்கு தேவையான தகுதி An officer who is not lower in rank than that of a Deputy Secretary to Government. அரசாங்க செயலாளர் உறுப்பினராக இருக்கும் போர்டின் மீது டெபுட்டி செகரட்டரி எப்படி துணை வேந்தராக இருந்து தலைமை தாங்க முடியும். It appears absurd, unreasonable and impracticable and so it should be deleted.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டத்திற்குள் வரக்கூடிய பிரச்சினையினை விளக்குவார்களானால் அது பொருத்தமாக இருக்கும். எந்த பல்கலைக்கழகமாக இருந்தாலும் துணை வேந்தர் பொறுப்பை அதாவது தனி சிறப்புடைய பொறுப்புக்களை துணை வேந்தர் தான் நிறைவேற்றுவார். ஆனால் அன்றாட நடைமுறை கடமைகளை நிறைவேற்றுவதற்கும் துணை வேந்தருக்கு பொறுப்பு உண்டு. அந்தப் பொறுப்புகளை அவர் இல்லாத போது பதிவாளர் நிறைவேற்றுவார் என்று பொருளே தவிர எல்லா சிறப்புகளுக்கும் உரிய எல்லாப் பணிகளையும் பதிவாளர் நிறைவேற்றுவார் என்பது அதனுடைய கருத்து அல்ல. இது எல்லாப் பல்கலைக் கழகத்திலும் நடைமுறையில் இருப்பது.

இரண்டாவது, ஒரு துணை வேந்தர் இல்லாதபோது ஆட்சிக் குழுவில் இருந்து 2, 3 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து அந்த இடைக்காலத்தில் பல்கலைக் கழகத்தின் மேற்பார்வை பொறுப்பேற்று ஆலோசனைகளை வழங்குவார்கள். அந்தமுறையும் எல்லாப் பல்கலைக்கழகத்திலும் இருக்கிறது. இன்னும் ஒன்று, கவர்னர் பற்றி அவர்கள் பேசினார்கள். வேந்தராக இருப்பது பற்றி, எல்லாப் பல்கலைக்கழகத்திலும் நேரடியாக அரசியலில் ஈடுபடுகிற தலைவர்களுடைய முழுப்பொறுப்பில் பல்கலைக் கழகங்கள் இருப்பதாக செயல்படாமல் ஒரு பொதுத் தன்மை அதனிடத்தில் நிலவுவதற்கு, தனித் தன்மையைக் காட்டுவதற்கு கவர்னர் வேந்தராக இருப்பது என்ற ஒரு வழக்கு இன்று வரையில் இருக்கிறது. திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்ன ஆலோசனையை நாங்கள் நிறைவேற்ற வேண்டுமானால், கவர்னர் இல்லாத ஒரு நல்ல காலம் எதிர்காலத்தில் வரவேண்டும். கவர்னரே தேவையில்லை என்பது ஒரு கொள்கை. அந்தக் கொள்கை வந்தால் அதை நிறைவேற்றலாமே தவிர அக்கடமிக் பாடீஸ், அட்டானமஸ் பாடீஸ் என்ற தகுதிகள் இருக்கிற காரணத்தால் அந்தச் சிறப்பு அவர் மூலமாக அந்த நிறுவனங்களுக்கு உரித்தாக பல்கலைக் கழ

கங்களுக்கு ஏற்புடையதாக அது உருவாக்கப்பட்டிருக்கிறது. வேந்தர் என்ற சொல்லும், இன்றைக்கு அந்தப்பழங்கால வேந்தர் இல்லாத காரணத்தால் வேந்தர் என்றால் தலைமை ஏற்பவர், ஆட்சிக்குத் தலைமை ஏற்பவர் என்று தான் பொருள். பல்கலைக் கழக ஆட்சிக்கு தலைமை ஏற்பவர் என்பது பொருள். தலைமை ஏற்பவர் என்ற காரணத்தால் அவரே வந்து எல்லா நிர்வாகத்தையும் கவனிக்க வேண்டும் என்பது பொருள் அல்ல. ஆனால் அவர் எந்த நேரத்திலும் பல்கலைக்கழக விவகாரங்களில் குறை இருக்குமானால் அதற்குரிய நடவடிக்கையை உரிய அமைப்புகளின் மூலமாக எடுத்துக்கொள்கிற ஒரு வாய்ப்பைப் பெற்றவர். இப்போதும் கூட வேந்தர் மூலமாக பல கருத்துக்கள் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு அவையும் நடைமுறைக்கு வருகின்றன. வேந்தர் என்பது ஆட்சிக் குழுவினுடைய தலைவர் என்ற பொருளில் ஒரு தனிச் சொல்லாக இருக்கவேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டு இப்போது நடைமுறையில் இருக்கிற காரணத்தால் அந்தச் சொல் பற்றியோ அல்லது இப்படிப்பட்ட விவகாரங்களிலோ இந்தச் சட்டத்தின் பெயரால் அதிகமாகப் பேசுவதற்கு இடம் இல்லை என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. நான் பேராசிரியர் துணை புரியவேண்டும் என்று கேட்டேன். அவரே வேந்தர் என்பது தான் சரியான சொல்-பெயர் என்று சொன்னால் நான் விட்டுவிடுகிறேன். அதில் நான் குறிக்கிட விரும்பவில்லை. ஆனால் ரிஜிஸ்ட்ரார்-ஐப் பொறுத்தவரையில் நிச்சயமாக the drafting is much different from the other University Acts என்பதை நான் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். தயவுசெய்து நீங்களும் ஒரு முறை படித்துப் பாருங்கள். ரிஜிஸ்ட்டிரார் என்பது டெபுட்டி செகரட்டரியாக இருக்கலாம் என்று சொல்லிவிட்டு அவருக்குக் கீழே இருக்கிற போர்டு ஆப் மேனேஜ்மெண்டில் உள்ள அத்தனை பேரும் செக்ரட்டரிகள் உட்காரலாம் என்று சொன்னால் அவர்களால் எப்படி உட்கார்ந்து துணை வேந்தருடைய பொறுப்பை கவனிக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, So it should be deleted.

15-45 மணி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பதிவாளர் நிர்வாகப் பொறுப்புகளை கவனிப்பாரே தவிர ஆட்சிக் குழுவைக் கூட்டி தலைமையேற்று நடத்துகிற அந்த இடத்தைப் பதிவாளர் ஏற்கமாட்டார். இது நடைமுறைக்காக, அந்த இடம் இடையீடு இல்லாமல் இருப்பதாகக் கொண்டு வந்திருக்கிற விதி.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : Anyway it is not well drafted. என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். Section 11(4) and 13(2) ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. Sec, 11(4) should be deleted. Sec. 18-Board of Management. என்பதைப் படித்துப் பார்த்தால், அதை படிப்பதற்கு நேரம் இல்லை, ஆகவே விட்டுவிடுகிறேன். பூராவுமே நியமனம் நாமினேஷன். எலக்டட் என்பது ஒரே ஒரு இடத்திலே 18 (2)—Clause II (h) One member elected by the member of the Tamil Nadu Legislative Assembly from among themselves என்று இருக்கிறது. ஒரே மெம்பர் என்று சொன்னால் ஆளுங் கட்சி உறுப்பினர் தான் வரமுடியும். எனவே மற்ற பலகலைக் கழகங்களுக்கு நீங்கள் தேர்ந்தெடுப்பதைப் போலவே 6 பேர், 4 பேர் இன்னும் சொல்லப்போனால், ஒன்றுக்கு பதில் 10 பேர் கூட போடலாம். ஏனென்றால் கவுன்சில் இங்கே கிடையாது. முடிந்த வரையில் அந்தமாதிரி நீங்கள் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி விவசாயிகளுக்கு விவசாயச் சங்கங்கள் மூலமாக பிரதிநிதித்துவம் தரவேண்டும். ஊராட்சி மன்றத் தலைவருடைய பிரதிநிதிகள் அங்கே அங்கம் வகிக்கவேண்டும். பால் உற்பத்தியாளர்களுடைய பிரதிநிதிகள் அங்கே அங்கம் வகிக்க வேண்டும். கோழி வளர்ப்போர் பிரதிநிதி அங்கே இருக்க வேண்டும். கால்நடை வைத்திருப்போர் பிரதிநிதி அங்கே இருக்க வேண்டும். மீனவர் பிரதிநிதி, மாணவர் பிரதிநிதி என்று தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போல, அக்கடமிக் கவுன்சிலை மாற்றியமைக்க வேண்டும். முழுவதும் நியமனம் என்று இருக்கிறது. சட்டங்களை இயற்றியிருக்கிறீர்கள்; மாற்றலாம்; மீறக் கூடாது.

We respect laws more in violation என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவசரக் கோலத்திலே தயாரிக்கப்பட்ட இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு புதியதாகச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தைக் கருதி சுருக்கமாக முடிக்கலாம் என்ற முறையிலே இன்றைக்கு கால்நடை மருத்துவத்திற்கு என்று ஒரு பல்கலைக்கழகத்தை உண்டாக்கி அதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். இதுவரையிலே இல்லாத, குறிப்பாக, கிராமப்புற மக்களைப் பொறுத்மட்டில், இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், விவசாயிகளைப் பொறுத்தமட்டில், கால்நடைச் செல்வங்கள் என்பது பெரிய அளவுக்கு விவசாயிகளுடைய வாழ்க்கையில் ஒரு பிரதான பங்கு ஆற்றக்கூடிய ஒரு பகுதியாக இருக்கிறது.

எப்படி, நிலம் அவர்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கையிலே உதவி செய்கிறதோ அதேபோல கால்நடையும் அவர்களுடைய வாழ்க்கையிலே சிறப்பான ஒரு பங்காற்றுகிறது. அதைப் போலத்தான் வனத்துறையும், வனமும் நிலமும் கால்நடைகளும் சேர்ந்து கிராமப்புற மக்களுடைய வாழ்க்கையிலே ஒரு நலம் சேர்க்கக்கூடிய அந்தப் பகுதியாக அமைந்திருக்கக் கூடிய இந்த நேரத்தில், குறிப்பாக கால்நடைகளுக்கு இது வரையிலே அதனுடைய பராமரிப்பு, கால்நடை சம்பந்தப் பட்ட கல்வி, வேளாண்மைத் துறையோடு இணைக்கப்பட்டு இருந்ததை எடுத்து, தனியாக, ஒரு பல்கலைக்கழகமாகக் கொண்டு வந்து, மாடுகள், பால் மாடுகள், ஆடுகள், கோழிகள், மீன்கள், இதுபோன்ற பகுதிகளைக் கவனித்து, அதை மேலும் வளர்த்து, வளப்படுத்துவதற்கான — ஒரு முயற்சியாக அமையும் முறையில் அதற்கேற்ற ஒரு கல்வியைக் கொண்டு வரக்கூடிய முறையிலே இந்தப் பல்கலைக்கழகம் எதிர் காலத்தில் பணியாற்றவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலத்தான் இன்றைக்கு, இந்தத் துறையிலே இருக்கக்கூடிய கல்லூரிகள், ஆராய்ச்சி மையங்கள், சில நிறுவனங்கள், இவைகளை இணைத்து ஏறத்தாழ 24 அமைப்புகளை இதன்கீழ் கொண்டு வந்து, இந்தப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டிருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில், நீலகிரி மாவட்டத்திலே ஒரு ஆட்டுப் பண்ணை இருப்பதாக எனக்கு நினைவு. அது இதிலே இணைக்கப்படாமல் இருப்பது ஏன் என்று தெரியவில்லை. அது வேறு பெயரிலே இணைக்கப் பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன். இது எதிர்காலத்திலே உரிய வளர்ச்சி பெற, கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு உதவக்கூடிய முறையில் அது மேலும் மேலும் விவசாயிகளுக்கு பலன் அளிக்கக்கூடிய முறையில், பயன்படக்கூடிய முறையிலே, கால்நடை மருத்துவமனைகள் அதிகமாகத் துவக்கப் படவேண்டும். அந்த மருத்துவமனைகள் துவக்கப்படவேண்டும் என்கிறபொழுது அதற்கேற்ற அளவிற்கு உரிய பட்டதாரிகளும் மாணவர்களும் எதிர்காலத்திலே உருவாக்கப்படவேண்டும். அப்படி உருவாக்கும்பொழுது மருத்துவ மனைகள் இல்லாமல் மாணவர்களுக்கு மட்டும் பயிற்சி கொடுத்து பட்டதாரிகளாகக் கொண்டு வந்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத ஒரு நிலை ஏற்படும்பொழுது, இங்கே பயில வருகின்றவர்களுக்கு, மாணவர்களுக்கு விருப்பமற்ற ஒரு நிலை ஏற்படும். எனவேதான் மருத்துவமனைகளை உண்டாக்குவதற்கும், மருத்துவமனைகள் மூலமாக இந்தக் கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கான முறையைப் பெருமளவில் விரிவுபடுத்துவதற்கான முறையிலே உரிய ஏற்பாடுகள் செய்யப் படும்பொழுது, அதற்கேற்ற மாணவர்கள் தேவைப்படும்பொழுது, இன்றைக்கு இருக்கின்ற இரண்டு கல்லூரிகளோடு மேலும் எதிர்காலத்திலே இரண்டு கல்லூரிகளைத் துவக்குவதற்கு முயற்சிக்கவேண்டும்.

15-50 மணி

அப்படி இரண்டு கல்லூரிகள் துவக்கப்பட்டிருப்பதாக இருக்கிறது. இன்றைக்கு சென்னையில் ஒன்றும் நாமக்கல்லில் ஒன்றும் இருப்பதாக அறிகிறேன். எதிர்காலத்தில் தெற்கு மாவட்டங்களுக்கு ஒரு கால்நடைக் கல்லூரியும், அதேபோல தஞ்சாவூர், திருச்சி, தென்னாற்காடு, புதுக்கோட்டை போன்ற கிழக்கு மாவட்டங்களின் மையமாக ஒரு கல்லூரியும் ஆக இரண்டு கால்நடைக் கல்லூரிகளை எதிர்காலத்தில் துவக்குவதற்கு இந்த அரசு முயறசிக்கவேண்டும்.

அதேபோல மீன் வளர்ச்சிக்கு தூத்துக்குடியில் ஒரு கல்லூரி இருக்கிறது. அதேபோல ஒரு கல்லூரி எதிர்காலத்தில் வந்தால் நாகையில் அதைத் துவக்கவேண்டும். அதற்குத் துவக்கமாக அங்கே ஒரு ஆராய்ச்சி மையமாவது மீன் வளர்ச்சித் துறையால் கொண்டு வருவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு கல்லூரி படிப்பைப் பொறுத்தவரையில், சென்னையில் கல்லூரி இருந்தாலும் அதற்கான பயிற்சி ஓசூரில் கொடுக்கப்படுகிறது. சென்னையில் கல்லூரியில் படிக்கும் பி.வி.எஸ்.சி. மாணவர்கள் இங்கே படித்துவிட்டு நேரடிப் பயிற்சிக்காக ஓசூர் போக வேண்டிய நிலை தான் இருக்கிறது. இன்றைக்குப் பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டதற்குப் பிறகு கல்லூரியோடு கால்நடைப் பண்ணையையும் இணைத்து அந்த மாணவர்களுக்கு ஒரே இடத்தில் பயிற்சியையும் கல்வியையும் சேர்த்துக் கொடுப்பதற்கு எதிர்காலத்தில் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, கால்நடைகளை. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆடு, கோழி என்று அடிக்கடி நினைவுபடுத்தி எங்களுக்கெல்லாம் இக்கட்டான சூழ்நிலையை உருவாக்குகிறீர்களே ? (சிரிப்பு).

திரு. கோ. வீரையன் : பசி மறந்து போனதால், அந்த நிலை வராது என்பதால் பேசிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொன்னது இரவு உணவுக்காக.

திரு. கோ. வீரையன் : இரவுக்கு இன்னும் நேரம் இருக்கிறது. ஆகவே அந்த முறையில் கல்லூரிப் படிப்போடு பயிற்சியையும் சேர்த்து சரி செய்து எதிர்காலத்தில் கல்லூரியோடு கால்நடைப் பண்ணையையும் இணைக்க முயற்சி எடுக்கவேண்டும். அதுதான் மாணவர்களுக்கும், அரசுக்கும் கூட உதவியாக இருக்கும் என்று சொல்வதோடு, இன்றைக்குக்

கால்நடைகள் பெருமளவுக்கு தோலுக்காக வெளியில் கடத்திச் செல்லக்கூடிய மிகப் பெரும் நிகழ்ச்சி நடக்கிறது. அப்படியில்லாமல் அதைத் தடுத்து அந்தக் கால்நடை வளங்கள் தமிழக மக்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும் பயன்படக்கூடிய நிலையில் எதிர்காலத்தில் பல்கலைக் கழகம் அதற்கு உதவி செய்யக்கூடிய வகையில் இருக்கவேண்டுமென்று கேட்டு இந்த நல்ல நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற கால்நடைப் பல்கலைக் கழகச் சட்டத்தை வரவேற்கிறேன். நன்றி.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நாங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இந்த கால்நடைப் பல்கலைக் கழக மசோதா மீது பேசத் தயாராக இருக்கிறோம். அமைச்சர் அவர்களின் பதிலுக்கும் காத்திருக்கிறோம், நீங்கள் சொல்வதால்— ஆனால் நேரமாகிவிட்டது என்று சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லும் பேருந்து சென்றுவிட்டால், நாங்களும் 'கால்நடை' யாகவே போகவேண்டி வருமே என்பதற்காகச் சொல்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கால்நடையாகப் போக வேண்டிய அவசியம் ஏற்படாது என்று கருதுகிறேன். (சிரிப்பு)

* பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி இந்த மாமன்றத்தில் பேசுகிறபோது நான் குறிப்பிட்டது எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரிதான் தமிழகத்திலே மட்டுமல்ல. லண்டனில் அது ஏற்படுவதற்கு முன்பு இங்கு ஏற்பட்டதென்ற காரணத்தின் அடிப்படையில், மறைந்த புரட்சித்தலைவர் அவர்கள் இங்கே கால்நடைப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்கவேண்டுமென்ற கருத்துருவை டெல்லிக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லி, இந்த அரசு அதற்காக முயுற்சி எடுத்து நிறைவேற்றவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டது எனக்கு நினைவில் இருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையிலே இந்த அரசு எடுத்த முயற்சிகளின் அடிப்படையில் அந்தக் கருத்துரு முழுமை பெற்று பல்கலைக் கழகம் இங்கே அமைவது உள்ளபடியே மகிழ்ச்சியை அளிக்கிறது.

காலையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறபோது, பெரியாரைப் பற்றி நினைத்தால் சுயமரியாதை நினைவுக்கு வருகிறது. ஆனால் அந்த அடிப்படையில் பல்கலைக் கழகத்தின் செயல்பாடு இருக்கிறதா என்ற கருத்தின் அடிப்படையில் சில செய்திகளைச் சொன்னார்கள். அது மட்டுமல்ல, மேதகு ஆளுநர் அவர்கள் ஒரு விழாவில் பங்கேற்றுப் பேசுகிறபோது சென்னைப் பல்கலைக்

கழகத்தைச் சேர்ந்த 8 கல்லூரிகளில் முதுகலைப் பாடத்தில் கணிதத்தில் ஒருவர் கூட தேறவில்லை என்று நினைக்கிற போது, அதைக் குறிப்பிட்டு கல்வியின் தரம் மிகவும் குறைந்து விட்டது என்று ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்திருக் கிறார்கள். இங்கேயிருக்கிற பல்கலைக் கழகங்களில் கூட விதி முறைகள் மீறப்பட்டுக் கொண்டே இருக்கின்றன என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த நேரத்தில் அரசு நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இங்கே சட்டத்தை உருவாக்கி பல்கலைக் கழகத்தை உருவாக்கிவிடுகிறீர்கள். அதற்குப் பின்னாலே அந்தச் சட்டங்கள் பல்கலைக் கழகத்தாலே மீறப்படுகிற போது நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்தக் கருத்தின் அடிப்படையிலும், ஏறத்தாழ 24 ஆண்டுகள் கல்லூரியிலே பணியாற்றிய அந்த 'எக்ஸ் பீரியன்ஸ்' என்கிற அனுபவத்தின் அடிப்படையிலும் இங்கே சில கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

15.55 மணி

சட்டத்தை இயற்றிக் கொடுத்துவிட்டு அதிலே நடவடிக்கை எடுக்க முடியாமல் இருப்பதை விட சட்டத்தை இயற்றுகிற போதே முன்னெச்சரிக்கையோடும், முன்னேற்பாட்டோடும் இந்த அரசு செயல்பட்டால் நிச்சயமாக அப்படிப்பட்ட சூழ் நிலை வராது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். சான்றாக ஒன்றே ஒன்றை மட்டும் சொல்ல என்னை அனுமதிக்குமாறு நான் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுப்பது என்பதற்கு சில வழிமுறைகள் இருக்கின்றன. விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் குறிப் பிட்ட நாட்களுக்கு முன்பாக அவர் விளக்கம் அளிப்பதற்கு முன்பாகவே விளக்கம் அளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லி ஆட்சிமன்றக் குழுவில் வைத்து..

*மாண்புமிகு **பேராசிரியர் க. அன்பழகன்** : பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகச் சிக்கல் என்பது எல்லா இடத்திலும், எல்லா மட்டத்திலும் எப்போதும் ஏற்படக் கூடியது. சென்னை பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிற செய்தி பற்றிய விவரம் எனக்கே கூட தெரி யாது. ஏனென்றால் எங்களுக்குத் தெரிவிக்கக்கூடிய கட்டாய மான நிலைமை இல்லை. யாரேனும் அதுபற்றிய விளக்கம் தருவார்களேயானால், பல்கலைக் கழகத்தை நம்முடைய துறைச் செயலாளர் மூலமாக உரிய விளக்கத்தைத் தரும்படி

கேட்க முடியும். அதைச் சான்றாகக் காட்டித் தொடங்குவதாக இருந்தால்-- எவ்வளவுதான் கால்நடைகளைக் கவனமாக வளர்த்தாலும் அவைகள் ஒரு காலத்தில் மரித்துப் போவதைத் தடுக்க முடியாது என்ற காரணத்தால் பல்கலைக் கழகமே தேவையில்லை என்ற ஒரு முடிவுக்கு வருவது போலாகிவிடும். இவையெல்லாம் மொத்த முடிவுகளுக்கு காரணமாக ஆகக்கூடாது. ஒவ்வொன்றையும் நடைமுறைப் படுத்தி, ஒழுங்குபடுத்திச் செயல்படுத்த தொடர்ந்து முயற்சிக்கிற கடமை நம் எல்லோருக்கும் இருக்கிற காரணத்தால், ஒன்றிரண்டு இடங்களில் ஏற்படுகிற குறைபாடுகளை இதற்குச் சான்றாகக் காட்டுவது, அதை இந்தச் சட்ட அடிப்படையில் பேசுவது அவ்வளவு தேவைப்படுகிற ஒன்றல்ல என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் சுட்டிக்காட்டி இதை மறுப்பதாக நினைக்கக்கூடாது. அதைச் சொல்வதற்குக் காரணம், சட்டங்கள் மீறப்படுகிறபோது, விதிமுறைகள் மீறப்படுகிறபோது அரசு நேரடியாக தலையிட முடியாத ஒரு சூழ்நிலையும் அமைந்து விடுகிறது. இதைச் சாக்காக வைத்துக் கொண்டு ஒருசில இடங்களில் விதிமுறைகள் வேண்டுமென்றே மீறப்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகள் தோன்றாமல் இருப்பதற்கு சில திருத்தங்களை இங்கே கொடுத்திருக்கிறோம். அந்தத் திருத்தங்களில் ஒருசில சொற்களை மட்டும் சேர்த்து விட்டால் நிச்சயமாக இப்படிப்பட்ட சூழ்நிலை வராது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் அதைச் சொல்ல முனைந்தேன்.

ஒரே ஒரு இடம். ஒருவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாக மேதகு ஆளுநர் அவர்களிடத்தில் அனுமதி பெற வேண்டும் என்ற விதி இருக்கிறபோது அந்த அனுமதியைப் பெறாமல் மீறுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்ட சூழ்நிலை வராமல் இருப்பதற்கு அதையும் அதிலே சேர்த்துவிட வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

முழுமையாக இதைக் குறைசொல்லவில்லை. இன்னும் நன்றாகச் செயல்படவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் நல்ல நோக்கத்தோடு சொல்லப்படுகிற கருத்துதான் இது. இன்னும் சொல்லப்போனால் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற சில திருத்தங்கள் அவற்றைச் சரியாகச் செயல்படுத்த முடியும் என்ற அடிப்படையில் அமைந்தவைதான்.

சில முறைகேடுகள் பற்றிச் சொன்னார்கள். நிர்வாகச் சீர்திருத்தம் என்று சொன்னார்கள். நிர்வாகம் சரியில்லை என்று சொல்வது அந்த விதிகளை மீறுவதால்தான். இந்த

மன்றத்தில் நான் சொல்கிற கருத்தை நிச்சயமாக ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் இதைச் சொல்கிறேன். ஒரு துறையிலே ஒருவரை ஆசிரியராக நியமிக்க ஒரு தேர்வு நடக்கிறது. அதற்கு சில விதிமுறைகள், 'குவாலிஃபிகேஷன்ஸ் ஃபிக்ஸ்' பண்ணி இருக்கிறார்கள். ஆனால் அந்த 'குவாலிஃபிகேஷன்' இல்லாதவர்கள் கூட நியமிக்கப்படுகிறார்கள். அதைக்கூடத் தடுப்பதற்கு அரசால் முடியாத சூழ்நிலை அமைந்துவிடுகிறது. இன்னும் சொல் லப்போனால் 65 வயதைக் கடந்தவர்கள்கூட, அவர்கள் அங்கே பணியாற்ற இயலாது என்ற சூழ்நிலையில் கூட மீண்டும் பணி யமர்த்தப்படுகிற சூழ்நிலை ஒரு சில இடங்களில் வந்து விடுகிறது. ஆகவே இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மேதகு ஆளுநர் அவர்கள் சொல்லியிருப்பதுபோல் ''ஸ்டாண்டர்ட் ஆஃப் எஜுகேஷன்'' இங்கே சரியாக வைக்கப்பட வேண்டு மென்றால் இந்தச் சிறிய செய்திகளை மனதில் கொண்டு செயல்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இதையெல்லாம் சொல்கிறேன். நான் மீண்டும் சொல்வதெல் லாம் இங்கே திருத்தங்கள் சொல்லியிருக்கிறோம். பொதுவாக இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் 'நாமினேட்டட், நாமினேட்டட்,' என்று எல்லா இடங்களிலும் வருகிறது.

16-00 மணி

நாமினேட்டட் பாடியாகவே போர்ட் ஆஃப் மேனேஜ் மெண்ட் இருக்குமானால் அதனுடைய நடைமுறை எப்படி இருக்கும் என்பதை நாம் நன்றாக அறிவோம். எனவே ஒவ்வொரு இடத்திலும், நாமினேட்டட் என்று இருப்பதற்கு பதிலாக எலெக்டட் என்று இருந்தால் சரியாக இருக்கும் என்கிற வகையில் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதுகுறித்து ஆய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வைஸ்சான்சலரின் பதவிக் காலத்தைப் பொறுத்த வரையில் 65 வயது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழக மானியக் குழுவே, யூனிவர்சிட்டி கிரான்ட்ஸ் கமிஷனே ஆசிரியர்களுக்கு 60 வயது என்று சொல்லியிருக்கிறபோது வைஸ்-சான்சலர்களுக்கு மட்டும் இப்படி 65 வயது என்று நீட்டித்துக் கொண்டே போனால் இளைஞர்களுக்கு வாய்ப்பு கிடைக்காது. அதோடுமட்டுமல்லாமல் இப்படி செய்தால் 'ஸ்டாண்டர்ட் ஆப் எஜுகேஷன்' எந்த அளவுக்கு இருக்கும் என்பதையும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இளைஞர்களால்தான் ஸ்டான்டர்ட் ஆஃப் எஜுகேஷனை மெயின்டெயின் பண்ண முடியும் என்று பல்வேறு இடங்களில் கல்வித் துறைச் செயலாளர் முதற்கொண்டு எல்லோரும் பேசிக் கொண்டு வருகி றார்கள். எனவே, வைஸ்-சான்சலருடைய பதவிக் காலத்தைப் பொறுத்தவரையில், ரிட்டயர்மெண்ட் ஏஜ் 65 என்று இருப்ப தற்கு பதிலாக 60 வயது என்று மாற்ற வேண்டுமென்று நான் இங்கே வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

அடுத்து, ஒவ்வொரு இடத்திலும் ஒன்றிரண்டு உறுப்பினர்கள் போர்ட் ஆப் மேனேஜ்மென்டில் இடம் பெறுவார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த எண்ணிக்கையை அதிகப் படுத்த வேண்டும். இந்த விஷயத்தில் எல்லா பல்கலைக் கழகங்களிலும் ஒரே மாதிரியான சட்ட விதிகள் இருந்தால் சரியாக இருக்கும். அதை உடனடியாக நடைமுறைப்படுத்த முடியாது என்பதால் படிப்படியாக அதை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுவாக பல்கலைக் கழகங்களை எடுத்துக் கொண்டால் அக்கடமிக் கவுன்சில்கள் இருக்கின்றன. அதிலே ஒவ்வொரு கல்லூரியினுடைய முதல்வரும் உறுப்பினராக இருப்பார். அதுபோல தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உறுப்பினர் களாக இருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு கல்லூரிக்கும் இரண்டு பேர் இருக்கிறார்கள். இது மிகப் பெரிய அளவிலான அவையாக அமைந்திருந்தால் செலவினம் அதிகமாகும் என்ப தால் நீங்கள் சிறியதாக வைத்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் இது ஒரு நாமினேட்டட் பாடியாக அமைந்து விடக்கூடாது. இது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவாக அமைய வேண்டும். இன்னும் மற்ற கருத்துக்களைப் பற்றி எல்லாம் நான் கொடுத்துள்ள திருத்தங்களில் சொல்லியிருக்கி றேன். அவைகள் எல்லாம் எந்த அளவுக்கு சாத்தியக் கூறா கும் என்பதை ஆய்ந்து முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத்துடன் அமைகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகம் ஒன்றைத் துவக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தமிழக முதல்வர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முதலாக கடந்த 20—9—1989 அன்று துவக்குவதற்கு அனுமதி தந்து, அது துவக்கப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இது குறிப்பிட்ட தொழில் கல்வியின் அடிப்படையில் துவக்கப்பட்டு, பல்கலைக் கழகத்தின் மூலமாக செயல்படுவதன் காரணமாக தொழில் கல்வியின் தரமும் உயர்ந்து அதே நேரத்தில் தொழில் வளர்ச்சியும் நல்லமுறையில் அதிகரிக்கும். அதே நேரத்தில் முன்பு இருந்துவந்த நிலைமை யையும் நாம் பார்த்திருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயல்பட்டு வந்த இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரி களும், மீனளக் கல்லூரியும் சேர்ந்து மற்றும் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களையும் மற்றும் உழவர் பயிற்சி நிலையங் களையும் இணைத்து இன்றைக்கு தமிழ்நாடு கால்நடை மருத்து வம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகம் என்கிற பெயரில் இப்பல்கலைக் கழகம் துவக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக மாணவர்களுக்கு குறிப்பிட்ட கல்வியை நல்ல

முறையில் தருவதோடு மட்டுமின்றி இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல விவசாயிகளுக்கு பலன் அளிக்கின்ற வகையில் இது அமையக் கூடியதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

உழவர் பயிற்சி மையங்களை ஏராளமாகத் துவக்கி, இப்பல்கலைக் கழகத்தில் நடைபெறுகின்ற அறிவியல் ஆராய்ச்சியின் பயன்களை எல்லாம் விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லுகின்ற வகையில் திறம்பட இது செயல்படும். இங்கே இச்சட்ட முன்வடிவிலே பல்வேறு திருத்தங்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியமும், பேராசிரியர் பொன்னுசாமி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். இது மற்றைய பல்கலைக் கழகங்களிலிருந்து சற்று மாறுபட்ட தன்மையுடைய ஒன்றாகும். ஏனென்று சொன்னால் இந்திய வேளாண் அறிவியல் ஆராய்ச்சி கழகத்தினுடைய, [இந்தியன் கவுன்சில் ஆப் அக்ரிகல்சுரல் ரிசர்ச் சென்டரினுடைய] வழி நெறி முறைகளைக் கையாண்டு, மற்றைய பல்கலைக் கழகங்களினுடைய சட்ட திட்டங்களை ஒப்பிட்டு, மற்றும் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி இச்சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறோம். அந்த வகையிலே ஐ.சி.ஏ.ஆர். என்று சொல்லப்படுகின்ற இந்திய வேளாண் அறிவியல் ஆராய்ச்சிக் கழகத்தினுடைய வழி நெறி முறைகளை அடிப்படையாகக் கொண்ட ஒன்றாக இச்சட்ட முன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

16-05 ப.பி

அதைப்போல இங்கே நம்முடைய மதிப்புமிக்க உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் ஒன்றைத் தெரிவித்தார்கள். நீலகிரி மாவட்டத்திலுள்ள ஆட்டுப் பண்ணை ஒன்று இந்த பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள சாண்டிநல்லா ஆட்டுப் பண்ணை இந்தப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மருத்துவமனைகள் ஏராளமாக உருவாக்கப்பட வேண்டும். மாணவர்கள் அதிகமான அளவில் படித்துவிட்டு வெளியே வந்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் வகையிலே மருத்துவ மனைகள் உருவாக்கப்பட வேண்டுமென்று தெரிவித்தார்கள். அதோடு மேலும் பல கல்லூரிகளைத் துவக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். இது நல்ல கருத்து. இருப்பினும் இந்தப் பல்கலைக் கழகத்தின் முதற்கட்ட நோக்கமே, விவசாயிகளுடைய நலன்களைக் காக்கும் வகையிலே, ஏழை எளிய கிராமப்புற மக்களுடைய வருவாயைப் பெருக்கும் வகை

16.05 மணி

யிலே, கல்லூரிகளிலே, ஆராய்ச்சி நிலையங்களிலே கிடைக்கும் ஆராய்ச்சிகளின் முடிவுகளை கிராமப்புற மக்களுக்கும், ஏழை எளிய விவசாயிகளுக்கும் எடுத்துச் சொல்வதுதான் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மீனவக் கல்லூரிகளை மேலும் துவக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். உறுப்பினர்களுடைய கருத்துக்களை எல்லாம் அரசாங்கம் கவனத்தில் கொண்டு, வருங்காலத்தில் நிதி நிலைமைகளுக்கு ஏற்ப கல்லூரிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்து, இங்கே திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அவை தேவை இல்லை; இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தினுடைய அங்கீகாரம் பெறுவதற்கு, அவர்கள் வகுத்துள்ள வழி முறைகள் தேவைப்படுகின்றன என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 8'' சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In Clause 8, omit sub- item *(2)*"

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 8, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 9, சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 9, in Sub-clause (1) for the word 'Governor, *substitute* the word "Chief Minister".

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: தலைவரவர்களே, நல்ல எண்ணத்தோடு இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அரசு ஏற்றுக் கொண்டால் மகிழ்ச்சி. இல்லை என்றால் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 9, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, பிரிவு 9, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி;

''பிரிவு 10, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன்:

''In clause 10, in sub-clause (1), for the word 'Portfolio', substitute the word 'Portfolios''.

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன்:

''In clause 10, omit sub-clauses (1) and (2)''.

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதிலே இரண்டு துறைகள்—Animal Husbandry and Fisheries— சம்பந்தப்பட்டிருப்பதால், portfolio என்று சொல்வது தவறு, எனவே portfolios என்று இருக்க வேண்டும். இதை அரசு ஏற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறை இரண்டும் ஒரே துறையாகத் தான் இப்போது செயல் பட்டுக்கொண்டு வருகிறது. எனவே இதை பெரிய தவறாகக் கருதவில்லை. எனவே திருத்தத்தை அவர் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, நடைமுறையில் கால்நடைத் துறையும், மீன் வளத் துறையும் இரண்டும் சேர்ந்து ஒரே துறையாகத் தான் இயங்குகின்றன. ஆகையால் portfolio என்று இருக்கிற காரணத்தால் ஒன்றும் தவறில்லை. டெக்னிக்கலாக வார்த்தை களில் வரும் தவறு இதைப் பாதிக்காது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் மற்றும் பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோரின் திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 10 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, பிரிவு 10 நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 11

16-10 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 11 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழி கிறேன்:

1. In clause 11, in sub-clause (3), in the proviso to sub-item (b), *for* the words "sixty-five years", *substitute* the words "sixty years".

2. In clause 11, in sub-clause (4), *for* the words "the Registrar" *substitute* the words "the Board of Management".

திருத்தங்கள் முறைப்படி வழிமொழியப் பெற்றன.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன் :

1. In clause 11, *add* the following at the end of sub-clause (1):
 "and the Chancellor shall not appoint another panel unless all the members "recommended by the panel refuse to accept the post of Vice Chancellorship."
2. In clause 11, *add* the following at the end of proviso to sub-clause(2)

" or Vice Chancellor of any other University at the time of appointment."

3. In clause 11, in sub-clause *(3)*, in the proviso to sub-item *(b)* for the words "Sixty-five years", *s*ubstitute the words "*S*ixty years".

4. In clause 11, in sub-clause *(4)*, *for* the words "the Registrar" *substitute* the words "Senior most member of the syndicate."

திருத்தங்கள் முறைப்படி வழிமொழியப் பெற்றன.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்திலே நான் 'அடிஷன்' தான் சொல்லி இருக்கிறேன். அதைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"The Chancellor shall not appoint another panel unless all the members recommended by the panel refuse to accept the post of Vice Chancellorship."

இதிலே முன்னாலேயே இடர்ப்பாடுகள் வந்திருக்கின்றன. நடைமுறைச் சிக்கல் இருந்திருக்கிறது. அதன் காரணமாகத் தான் சொல்லுகிறேன். இனி பின்னாலும் அப்படி வராமல் இருக்க இது ஒரு செக். அவ்வளவுதான். முன்னாலே ஒரு பேனல் போட்டு, பிராப்ளம் வந்து, பிறகு இரண்டாவது பேனல் போட்டு எல்லாம் நடந்திருக்கிறது. இப்படி இனி இடர்ப்பாடு வராமல் இருக்க, ஒரு பேனல் பெறப்படுகிறபோது, அதில் இருக்கிற 3 பேரும் வேண்டாம் என்று ஒதுங்கி விட்டால் அல்லது ஒதுக்கப்பட்டு விட்டால் ஒழிய, மற்றொரு பேனல் தேவையில்லை என்று தான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். எனவே இந்த அவை அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி காரணமாக எதிர்காலத்திலும் அப்படி நடைபெறக் கூடாது என்று முன்கூட்டியே தடை விதிகளைச் சேர்க்க வேண்டும் என்பது முறையல்ல. சட்டம் எதைச் செய்யவேண்டும் என்பதைத் தான் வரையறுக்கும். சட்டத்தை மீறுகிற போது தகுதியுடையவர்கள் தங்கள் உரிமையைக் காப்பாற்றிக் கொள்வார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் மற்றும் பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோரின் திருத்தங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 11 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 11 நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 12, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 13 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"1. In clause 13, *omit* sub-item (b) in sub-clause (2)

2. In clause 13, in sub-clause (5), for the words "the Vice-Chancellor" *substitute* the words the Board of Management."

திருத்தம், முறைப்படி வழிமொழியப் பெற்றது.

பேராசிரியர் க. பொன்னுசாமி : அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 13, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 14

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 14 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

In Clause 14, in sub-clause (4), for ''the words 'the Vice-Chancellor'' substitute the words" the Board of Management"

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெற்றுக்கொள்ள பெற்றது.

பிரிவு 14, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 15 முதல் 17 முடிய, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 18.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 18, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 18, in sub-clause *(2)*, under the heading 'Class II-Other Members' in item (g), for the words 'One nominee' *substitute* the words " three nominees."

திருத்தம், முறைப்படி வழிமொழியப் பெற்றது.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:
''

"1. In clause 18, in sub-clause *(2)*, under the heading 'Class II- Other Members", for item *(b)* *substitute* the following:

"*(b)* Three members representing the live-stock farmers elected from among themselves"

2. In clause 18, in sub-clause *(2)*, under the heading 'Class II-Other Members,' in item *(g)*, for the word "one" *substitute* the word "six"

3. In clause 18, in sub-clause *(2)*, under the heading 'Class II-Other Members, in item *(h)*, *add* the following at the end:

"and three representatives, elected from among the Panchayat Union Chairmen."

4. In clause 18, in sub-clause *(2)*, under the heading clause II-Other Members after sub-item *(h)*, *add* the following as sub-item *(i)* and *(j)*:

" *(i)* Three representatives elected from among the students of this University; and

(j) Three representatives elected from among the Teachers of this University."

5. In clause 18, *omit* sub-clause' (3)."

திருத்தங்கள், முறைப்படி வழிமொழியப் பெற்றன.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் கூறிக் கொள்கிறேன். இந்தத் திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன் என்ற காரணத்திற்காக நிராகரிக்கத் தேவையில்லை. ஒருவருக்குப் பதிலாக மூன்றாக இருக்கலாம் என்று தான் சொல்லியிருக்கிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வெட்டரினரி கவுன்சிலில் மொத்தம் 11 உறுப்பினர்கள் தான் இருக்கிறார்கள். அவர்களிலே ஒருவரை நியமிப்பது போதுமானது என்று தான் அரசு கருதுகிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் மற்றும் பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோரின் திருத்தங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 18, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 18 நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 19 முதல் 54 முடிய, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

16-15மணி

பிரிவு 55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 55 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன்:

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

"1. In clause 55, *add* the following proviso in sub-clause (1) "Provided that no such action shall come into force until approved by the Chancellor."

2. In clause 55, after sub-clause (4) *add* the following as sub-clause (5):

"(5) There shall be no re-appointment to any of the post in the University to those who have retired from service."

திருத்தங்கள், முறைப்படி வழிமொழியப்பெற்றன.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

''In clause 55, *add* the following proviso to sub-clause (1):
"Provided no such action shall have effect until approved by the Chancellor.''

திருத்தம், முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் மற்றும் பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோரின் திருத்தங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

பிரிவு 55, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 56 முதல் 62 முடிய மற்றும் இணைப்புப் பட்டியல் ஆகியவை, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை மற்றும் நெடுந்தலைப்பு ஆகியவை, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

6. அரசினர் தீர்மானம்— தொடர்ச்சி.

(ஆ) மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பேரவை விதி 25(1)-ன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் 16-16 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

183. தமிழ்நாடு 1988 ஆம் ஆண்டு மாநகராட்சி வரி விதிப்பு மேல் முறையீட்டுக் குழு [அலுவல்களை மேற்கொள்ளுதல்] விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் —குடிநீர் வழங்கல் துறையின் 21—6—1989 ஆம் நாளிட்ட 367-ம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

184. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மாநகராட்சி மன்றங்கள் (வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல், விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் — குடிநீர் வழங்கல் துறையின் 28—7—1989 ஆம் நாளிட்ட 472 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம்ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

185. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 17—3—1986 ஆம் நாளிட்ட IX (1)-வ.வ.ச.அ./47 (கே) 86/ஆம்

6. அரசினர் தீர்மானம்— தொடர்ச்சி.

(ஆ) மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பேரவை விதி 25(1)-ன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் 16-16 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

183. தமிழ்நாடு 1988 ஆம் ஆண்டு மாநகராட்சி வரி விதிப்பு மேல் முறையீட்டுக் குழு [அலுவல்களை மேற்கொள்ளுதல்] விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் —குடிநீர் வழங்கல் துறையின் 21—6—1989 ஆம் நாளிட்ட 367-ம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

184. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மாநகராட்சி மன்றங்கள் (வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல், விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் — குடிநீர் வழங்கல் துறையின் 28—7—1989 ஆம் நாளிட்ட 472 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம்ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

185. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 17—3—1986 ஆம் நாளிட்ட IX (1)-வ.வ.ச.அ./47 (கே) 86/ஆம்

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்—தொடர்ச்சி.

எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்— சமய அறக்கட்டளைகள் துறையின் 28—12—1987 ஆம் நாளிட்ட 1398 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

186. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 29—7—1987 ஆம் நாளிட்ட 547 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

187. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் (இரண்டாவது திருத்த) சட்டம் [தமிழ்நாடு சட்டம் 18/1989] நடைமுறைக்கு வரும் நாளினை குறித்து வணிகவரிகள்— சமய அறக்கட்டளைகள் துறையின் 12-7-1989 ஆம் நாளிட்ட 532 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

188. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்— சமய அறக்கட்டளைகள் துறையின் 26—7—1989 ஆம் நாளிட்ட 570 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

189. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்— சமய அறக்கட்டளைகள் துறையின் 29-10-1987 ஆம் நாளிட்ட 1167 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

190. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு பொது விற்பனை் வரி (நான்காம் திருத்த) சட்டம் [தமிழ்நாடு சட்டம் 28/1989] நடைமுறைக்கு வரும் நாளினை குறித்து வணிகவரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 28—7—1989 ஆம் நாளிட்ட 597 ஆம்

எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

191. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது],

192. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1985-86-ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை (தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

193. தமிழ்நாடு மாநில குழாய்க் கிணறுகள் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை (1956 ஆம்ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

194. அரசு இரப்பர் தோட்டக் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான கணக்குகளும், ஆண்டறிக்கையும் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

195. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

196. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 1986-67 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

197. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

198. தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

6. அரசினர் தீர்மானம்— தொடர்ச்சி.

(ஆ) மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பேரவை விதி 25(1)-ன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் 16-16 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

183. தமிழ்நாடு 1988 ஆம் ஆண்டு மாநகராட்சி வரி விதிப்பு மேல் முறையீட்டுக் குழு [அலுவல்களை மேற்கொள்ளுதல்] விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் —குடிநீர் வழங்கல் துறையின் 21—6—1989 ஆம் நாளிட்ட 367-ம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

184. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மாநகராட்சி மன்றங்கள் (வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல், விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் — குடிநீர் வழங்கல் துறையின் 28—7—1989 ஆம் நாளிட்ட 472 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம்ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

185. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 17—3—1986 ஆம் நாளிட்ட IX (1)-வ.வ.ச.அ./47 (கே) 86/ஆம்

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்—தொடர்ச்சி.

எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்— சமய அறக்கட்டளைகள் துறையின் 28—12—1987 ஆம் நாளிட்ட 1398 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

186. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 29—7—1987 ஆம் நாளிட்ட 547 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

187. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் (இரண்டாவது திருத்த) சட்டம் [தமிழ்நாடு சட்டம் 18/1989] நடைமுறைக்கு வரும் நாளினை குறித்து வணிகவரிகள்— சமய அறக்கட்டளைகள் துறையின் 12-7-1989 ஆம் நாளிட்ட 532 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

188. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்— சமய அறக்கட்டளைகள் துறையின் 26—7—1989 ஆம் நாளிட்ட 570 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

189. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்— சமய அறக்கட்டளைகள் துறையின் 29-10-1987 ஆம் நாளிட்ட 1167 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

190. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டம் [தமிழ்நாடு சட்டம் 28/1989] நடைமுறைக்கு வரும் நாளினை குறித்து வணிகவரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 28—7—1989 ஆம் நாளிட்ட 597 ஆம்

எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

191. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது],

192. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1985-86-ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை (தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

193. தமிழ்நாடு மாநில குழாய்க் கிணறுகள் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை (1956 ஆம்ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

194. அரசு இரப்பர் தோட்டக் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான கணக்குகளும், ஆண்டறிக்கையும் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

195. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

196. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 1986-67 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

197. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

198. தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].